# விசிஷ்டாத்வைதம் ஆபஸ்தம்ப

# க்ருஹ்ய ஸூத்ரம் (ஓர் ஆய்வு)

சென்னை பல்கலைக் கழகத்திற்கு முனைவர் (PhD)
பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஒரு ஆய்வேடு



ஆய்வாளர்

**Dr. V. ஸ்ரீநிவாஸன் M.A, M.Phil, Ph.D**

Sincere Thanks to:

Oppiliappan Koil SrI V.Sadagopan SvAmi for hosting this title in his website www.sadagopan.org

## Table of contents


Introduction by Oppiliappan Koil SrI V.Sadagopan in English i

Grhya sUtram - PhD Thesis in Tamil 1- 287



ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவர் - பரகால மடம்

www.sadagopan.org

SrI:

# Foreword

**by**

**Oppiliappan Koil SrI. V. Sadagopan**

* * *

The Vedas have six anga-s (auxiliaries). They are SIkshA (Phonetics), VyAkaraNa (Grammar), Chandas (Metre), nirukta (Etymology), Kalpa (Rituals) and Jyotisha (Astrology). The fifth anga, the Kalpa provides a home for the Srauta and Grhya sUtra-s. The observance of these maxims/codes helps to build up one's Vaidika SrI and firms up one's adherence to the Vedic way of life prescribed for the members of the different ASrams like Brahmacaryam and Grhasta. This observance is a type of nOnpu/Vratam. When successfully concluded, this "nOnpu" ultimately results in receiving the sanmAnam/reward of "saha bhojanam" with Sri VaikuNThanAthAn at His Supreme Abode of Paramapadam as a mukta Jeevan. Veda declares this Ananda anubhavam (*sosnute*) as the Ultimate PurushArtham for a jeevan.

On this auspicious “Koodarai Vellum cIr Govinda" dinam associated with the observance of TiruppAvai nOnpu, as taught by ANDAL, SrI HayagrIva likhita kaimkarya ghoshThI is privileged to release the recently completed Doctoral Thesis of SrimAn N.V. Srinivasan SvAmi of Chennai on ApastambIya Grhya sUtra-s. We thank him for his permission to release this precious thesis in our Portal, www.sadagopan.org.

SrI NVS SvAmi is highly regarded in Astika circles as an erudite Brahaspati and an authority on the performance of many Hindu samskArams in a blemishless manner. With his well researched thesis on "ApastambIya Grhya sUtra-s, Swami has completed a mahA Kaimkaryam to share his vast knowledge on the Grhya sUtra-s assembled by ApAstamba for the benefit of aspiring AstikAs, who desire to learn more about the ancient wisdom enshrined in these source granthams.

The Kalpa sUtra-s contain precious information indeed about Srauta and Grhya Karma-s. The Srauta Karma-s deal with long and short yAgams lasting from a few days to an entire year. Grhya sUtra-s are short Vedic rituals designed for a Grhastan. The Srauta karmAs are done with three kinds of Agni-s (sacrificial fires). The Grhya KarmAs guided by the Grhya sUtra-s are performed with just one Agni. The domestic rituals and rites of a Grhastan are rooted in specific Veda SAkhA-s for the benefit of the observer. Grhya sUtra-s are specifically intended for use by Grhasta-s. These Grhya sUtra-s like the one assembled by Sage Apastamba is for those, who belong to the taittirIya recension of the Krishna Yajur Veda as their Veda SAkhA. The other three Vedas have their own Grhya sUtra-s like ASvalaya Grhya sUtra-s for the Rg Veda and JaiminIya Grhya sUtra-s for sAma Vedin-s and many more.

A gruhastan uses the Grhya sUtra-s to conduct Vedic rituals like conception (garbha dAnam), birth, initiation (upanayanam), marriage et al. There are in all forty samskArams in the pUrva prayogam section. These are described in Sadagopan.org portal link of SrI Hayagrivan. It is a 48 page introduction to the forty Vedic samskAram-

s and is authored by Professor ThyAgarAjan of Madras University. There are many mantram-s from the Kalpa sUtra-s with translations of the mUla mantra-s. This valuable introduction to the Hindu samskAram-s is covered in the 55th e-book in the SrI Hayagrivan series of our portal. The 27th e-book in the Sundarasimham series covers Pradhana Satakam of SvAmi DeSikan, dealing with vedic rites and the 17th e-book of Sri Hayagrivan series has more information on VedopAsana for liberation from the cycles of births and deaths and for enjoying eternal Moksha Sukham of sAyujyam.

The Doctoral thesis on Apastamba Grhya sUtram by Dr. N.V. Srinivasan SvAmi is a very valuable addition to the current literature on Kalpa sUtra-s and provides the links between ViSishTAdvaitam, Bhagavad SAstram-s and Grhya sUtra-s in general and the ApastambIya Grhya sUtram in particular.

In closing, aDiyEn wishes to express my fond hope that Dr. N.V.S Swami would render another mahA Kaimkaryam of creating an English translation of his Doctoral thesis in MaNipravALam. Such a translation has a high potential to reach out to the community of students and scholars across the globe. The expatriate Indians settled down in many countries far away from home will benefit very much from their study of Grhya sUtra-s to enhance the spiritual quality of their lives.

SrImad Azhagiyasingar tiruvaDigaLE SaraNam

dAsan,

Oppiliappan Koil Varadachari Sadagopan

# “விசிஷ்டாத்வைதம்
# ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்”
## -ஓர் ஆய்வு

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற

## ஆய்வேடு


**நெறியாளர்:**

Dr.M.A.வேங்கடக்ருஷ்ணன் M.A, M.Phil, Ph.D, D.Lit.
துறைத்தலைவர், வைணவத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

**ஆய்வாளர்:**

V. ஸ்ரீநிவாஸன் M.A, M.Phil
வைணவத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600005.



***சென்னைப் பல்கலைக்கழகம்***
***சென்னை - 600005.***
மார்ச் - 2014

Dr.M.A. வேங்கடக்ருஷ்ணன் M.A, M.Phil, Ph.D, D.Lit.
வைணவத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600005.

## மேற்பார்வையாளரின் சான்றிதழ்

"விசிஷ்டாத்வைதம் ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்"
-ஓர் ஆய்வு

என்கிற பொருளில் திரு.V. ஸ்ரீநிவாஸன் M.A, M.Phil அவர்களால் ஆய்வு செய்து வழங்கப்பட்டுள்ள இவ்வாய்வு, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்த காலத்தில், ஆய்வாளாரால் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும், இவ்வாய்வின் மீது, வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

(M.A.வேங்கடக்ருஷ்ணன்)
மேற்பார்வையாளர்

V. ஸ்ரீநிவாஸன் M.A, M.Phil
வைணவத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600005.

## ஆய்வாளரின் உறுதிமொழி

வைணத் துறைத் தலைவர் Dr.M.A.வேங்கடக்ருஷ்ணன் M.A, M.Phil, Ph.D, D.Lit. அவர்களின் நெறிகாட்டுதலில் "*விசிஷ்டாத்வைதம் ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்*" -ஓர் ஆய்வு என்னும் தலைப்பில், முனைவர் (பி.எச்.டி) பட்டத்திற்காக, 2009ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல், 2014ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை ஆய்வு செய்து, என்னால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆய்வேடானது, என்னுடைய சொந்த முயற்சியினால் உருவாக்கப்பட்டது என்றும், இதற்குமுன் இந்த ஆய்வேடு வேறு எந்தப் பட்டத்திற்காகவும் அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை-600005.
நாள் :

(V.ஸ்ரீநிவாஸன்)
ஆய்வாளர்

# நன்றி நவிலல்

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது" - எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கு ஒப்ப, ஒவ்வொரு நிகழ்ச்சியும், சிறிதும் பெரிதுமாய், நேரடியாயும் மறைமுகமாயும், சுலபமாயும் கடினமாயும், விரைந்தும் தாமதித்தும் என பல காரணிகளால், பலரது உதவியுடனே நிகழ்த்தப்படுகிறது.

அடியேனுடைய இவ்வாராய்ச்சித் திரட்டை இறுதிசெய்வதில் உதவியோரின் பட்டியல் வெகு நீளமானது. அவர்களனைவரையும் மனத்தின்கண் இறுத்தி, நம் ஸம்ப்ரதாயப்படி நாச்சியார் திருமொழி 5-6ன் படி "தலையல்லால் கைமாறிலேனே" எனும் வாசகத்தால் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

பாமரனாய் உழன்ற அடியேனை, பண்படுத்தி, வைதிக ச்ரத்தையை ஏற்படுத்தி, ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்தை போதித்து, செயல்படவைத்து, செதுக்கிச் சிற்பமாக்கிய அடியேனுடைய வைதிக ஆசார்யன் ஸ்ரீ.உப.வே. வைகுண்டவாஸி திருக்கண்ணமங்கை ராஜகோபாலாசாரியார் ஸ்வாமியின் திருவடிகளை த்யானித்து அடியேனுடைய பெற்றோர் தீவளூர் வெங்கட்டராகவ ஐயங்கார் சீதாலக்ஷ்மி அம்மங்கார் திருவடிகளுக்குச் ஸமர்ப்பிக்கிறேன்.

"ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைமாறு மாயனும் காணகில்லான்" எனும் ஒப்பற்ற வாசகங்களுக்கு இலக்கணமாய்த் திகழ்பவர்களான, அடியேனுடைய மேன்மை நிலைக்கு வித்திட்டு "ஞான தீபத்தை" ஏற்றியவர்களும், சாந்த, சம, தமாதி அனைத்துக் கல்யாண குணங்களும் நிறம்பப்பெற்றவர்களுமான ஞானாசிரியர்கள்

**Dr. V.K.S.N.**ராகவன் (முன்னாள் வைணவத்துறைத் தலைவர்)

**Dr**. பூமா வெங்கடக்ருஷ்ணன் (வைணவத்துறை பேராசிரியர்)

**Dr. S.**பத்மநாபன் (ஸம்ஸ்க்ருதத்துறை பேராசிரியர்)

மற்றும் ***"ஞானாசிரியராய்"*** மட்டுமின்றி பல்வேறு ஊக்கங்களை அளித்து, அடியேனுடைய இந்த ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாகவும் விளங்கி அதனை முழுமையானதாயும், பொருளுள்ளதாயும் வடிவமைத்துப் பேருதவி புரிந்தவருமான **Dr. M.A.வேங்கடக்ருஷ்ணன்** (வைணவத்துறைத் தலைவர்) அவர்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதைகளை மிக்க பணிவோடு தண்டனிட்டுச் ஸமர்பிக்கிறேன்.

## பொருளடக்கம்


| எண் | விளக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 01 | இயல்-1 முகவுரை, | 002 |
| | தோற்றுவாய் | 003 |
| | விசிஷ்டாத்வைதம்-க்ருஹ்யஸூத்ரம் தொடர்பு | 006 |
| | க்ருஹ்ய ஸூத்ரம்-விளக்கம் | 010 |
| | 40 ஸம்ஸ்காரங்கள் விளக்கம் | 012 |
| | சாஸ்த்ரமும் ஸம்ப்ரதாயமும் | 014 |
| 02 | இயல் 2:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -1<br>அக்னி குண்டம் அமைத்தல்-வரன், கன்னிகையின்<br>லக்ஷணங்கள் வரை | 018 |
| 03 | இயல் 3:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -2<br>வரித்தல், விவாஹம், வதுப்ரவேசம் வரை | 043 |
| 04 | இயல் 4:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -3<br>ஸ்தாலீபாகம், கோதானம், அஷ்ட வ்ரதம்,<br>விவாஹ சேஷம், சில பரிஹார கர்மாக்கள் | 093 |
| 05 | இயல் 5:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -4<br>உபநயன, ப்ரஹ்மோபதேச கர்மாக்கள் | 112 |
| 06 | இயல் 6:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -5<br>ஸமாவர்த்தனம், மதுபர்க்க தானம், பசு விடுவித்தல் | 124 |
| 07 | இயல் 7:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -6<br>ஸீமந்தம், பும்ஸவனம், ஜாதகர்மா,<br>நாமகரணம், அன்ன ப்ராசனம் | 137 |
| 08 | இயல் 8:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -7<br>வாஸ்து, க்ருஹ ப்ரவேசம், பிசாச நிவாரணம்,<br>ஸ்தாலீபாகம், ஸர்ப்ப பலி, ஈசான பலி | 152 |
| 09 | இயல் 9:- க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -8<br>மாஸி ச்ராத்தம், அமா ச்ராத்தம், அஷ்டகா, அந்வஷ்டகா<br>வ்யாபார அபிவ்ருத்தி, சத்ருஜெயம் பரிஹாரங்கள் | 171 |
| 10 | இயல் 10:- பொதுவாக அறிந்திருக்கவேண்டிய விஷயங்கள்<br>பவித்ரம்,அநுஜ்ஞை,ஸங்கல்பம்,பூர்வ-உத்தராங்க ஹோமங்கள்<br>புண்யாஹம்,உதகசாந்தி,அங்குரம்,ப்ரதிஸரம்,காலாதீதப்ராயச்சித்தம் | 189 |
| 11 | இயல் 11:- முடிவுரை | 247 |
| 12 | இயல் 12: பின்னிணைப்புகள் | 253 |
| | துணை நூற் பட்டியல் | 254 |
| | ஸூத்ரங்கள் முழுமையாக (ஸம்ஸ்க்ருதத்தில்)<br>ஆயுஷ்யஹோமம், சந்தேஹ விளக்கங்கள்,<br>சீர் ஓதியிடுதல்,வேதஆசீர்வாதம், ஸ்வஸ்தி,<br>பெருமாள்-ஆழ்வார்-ஆசார்ய ஸம்பாவனைகள் (282) | |

# இயல் - 1

## முகவுரை

(இவ்வியலில் ஆய்வேட்டின் அமைப்பு, தோற்றுவாய், விசிஷ்டாத்வைதம்-க்ருஹ்யஸூத்ரம் தொடர்பு, க்ருஹ்யஸூத்ரம் விளக்கம், 40 ஸம்ஸ்காரங்கள், சாஸ்த்ரம் ஸம்ப்ரதாயம் ஆகிய தலைப்புகளில் - ஆய்வேட்டின் அவசியம் மற்றும் ஆய்வு எல்லைக்கு அப்பாற்பட்ட காரணிகளும் விளக்கப்பட்டுள்ளன. )

# தோற்றுவாய்

"லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுன மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்"

ஸ்ரீய:பதியும் அவாப்தஸமஸ்த காமனுமான எம்பெருமான் க்ருபையை முன்னிட்டு, அவனது கருணையால் வழங்கப்பட்ட கர்ண களேபரங்களைக் கொண்டு, அவனது ஆஜ்ஞைகளாகிய சாஸ்த்ரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆஜ்ஞா கைங்கர்யம், அநுஜ்ஞா கைங்கர்யங்களாகிய அனைத்துக் கர்மங்களும் தவறாமல் செய்யப்படவேண்டும் என்பது ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்.

"சாதுர்வர்ணம் மயாச்ருஷ்டம்" என்று ஸ்ரீபகவத் கீதையில் எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளியபடி, அந்த நான்கு வர்ணத்தாரும் பின்பற்ற வேண்டிய கடமைகளையும், அவற்றை அநுஷ்டிக்க வேண்டிய முறைகளையும் 'சாஸ்த்ரம்' என்ற பெயரில் ரிஷிகளால் வறையறை செய்து வழங்கப்பட்டுள்ளன.

சாஸ்த்ரங்கள் எண்ணிறந்தவை. அவற்றில் மிக முக்கியமானது "வர்ணாஶ்ரம தர்மசாஸ்த்ரம்" ஆகும். அதில் கண்டுள்ளபடி;

ருக், யஜுர், ஸாமம், அதர்வம் என வேதங்கள் நான்காகும். ருக் வேதத்திற்கு - ஆஶ்வலாயனம், கௌஷீதகம் என்று இரு ஸூத்ரங்கள். யஜுர் வேதத்தில் க்ருஷ்ண - சுக்ல என இரு பிரிவுகள் உள்ளன. க்ருஷ்ண யஜுர் வேதத்திற்கு போதாயனம், ஆபஸ்தம்பம், பாரத்வாஜம், ஸத்யாஷாடம், வைகானஸம் என்று ஐந்து ஸூத்ரங்கள் உள்ளன. சுக்ல யஜுர் வேதத்திற்கு - காத்யாயனம் என்று ஒரு ஸூத்ரம். ஸாம வேதத்திற்கு - த்ராஹ்யாயனம், ஜைமனீயம் என இரு ஸூத்ரங்கள்.

ஸூத்ரம் என்பதன் பொருள் நூல் என்பதாகும். ஸூத்ரம் என்பது ஒரு வகை இலக்கியம். சுருங்கச் சொல்லி விரிவாக விளக்குவது ஸூத்திரத்தின் தன்மையாகும். ஸூத்திரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது மிகவும் எளிதாகும்.

ஸூத்ரங்கள் இரு வகைப்படும்:

1) கல்ப ஸூத்ரம் - மூன்று அக்நிகளில் செய்யப்படவேண்டிய ச்ரௌத கர்மாக்களான யாக யஜ்ஞங்களைப் பற்றிக் கூறுவது

கல்ப ஸூத்ரம் ஆகும்.

2) க்ருஹ்ய ஸூத்ரம் - ஒரே அக்நியில் செய்யப்படவேண்டிய ஸம்ஸ்கார - ஸ்மார்த்த - கர்மாக்களைப்பற்றி விவரிப்பது க்ருஹ்ய ஸூத்ரம் ஆகும்.

ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்யர்கள் இரு ஜன்மத்தினர் என்று கூறப்படுவர். பிறப்பினால் ஒரு ஜன்மமும், 40 ஸம்ஸ்காரங்களால் மற்றொரு பிறவியும் எடுத்தலால் இவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். ப்ராஹ்மணனே வேத சாஸ்த்ர அப்யாஸத்தால் விப்ரன் ஆகிறான். இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால் அவன் ச்ரோத்ரியன் ஆகிறான். இந்த ச்ரோத்ரியனே மனிதர்களில் சிறந்தவன். அதிலும் அவன் ஆசையற்றவன் ஆனால் மிகமிகச் சிறந்தவன். தைத்ரீய உபநிஷத் கூறும் ஆனந்த சோபாநத்தில் இவனே முதற்படி. வைச்வதேவத்தில் "அகாமோபஹதாய ச்ரோத்ரியாய ஸ்வாஹா" என இப்படிப்பட்டவர்களுக்காக ஒரு ஹோமம் செய்யப்படுகிறது.

"ஸத்யம் வத", "தர்மம் சர" என்று நம்முடைய வேதம் சொல்லுகிறது. தர்மத்தைச் செய்தோமானால் அதனால் லோகத்துக்கே க்ஷேமம், நமக்கும் க்ஷேமம்.

"பகவான் தர்மஸ்ய ப்ரபுரச்யுத:"

"தர்ம ஸம்ஸ்தாபனார்த்தம் ஸம்பவாமி"

"ராமோ விக்ரஹவாந் தர்ம:"

"தர்மயோநி: ஜநார்தன:"

என்றெல்லாம் தர்மத்தோடு ஸம்பந்தப்படுத்தியேதான் பகவானைச் சொல்கின்றன இதிஹாச புராணங்களெல்லாம். தர்மத்தை ஆதாரமாகக் கொண்டுதான் பகவானை அடைய முடியும். தர்மம் இல்லையானால் பக்தி இல்லை, தர்மம் இல்லையானால் ஜ்ஞானம் இல்லை. தர்மத்தை விட்டுவிட்டால் பக்தியினால் மட்டும் பகவான் சந்தோஷப் படமாட்டான்! அப்படிப்பட்டவர்களை "எனக்கு துரோகி" என்கின்றான் பகவான்.

எனவே எம்பெருமானின் பரிபூரண க்ருபைக்குப் பாத்திரர்களாக ஆகவேண்டுமெனில், ஆச்ரமத்துக்குத் தக்க கர்ம, அநுஷ்டானங்கள் அவசியம் என்பது உறுதியாகிறது.

இந்த ஆராய்ச்சியில் ஆபஸ்தம்பிகள் எனப்படும் யஜுர் ஸாகையைச் சேர்ந்த க்ருஹஸ்தனுக்கு, கர்பாதானம் எனப்படும் குழந்தை பிறப்பதற்காக தன் தர்மபத்னியிடத்தில் கருவைச் செலுத்துவதில் துவங்கி, மரணம் வரை ஒருவன் கட்டாயம் செய்யவேண்டிய அனைத்துக் கர்மாக்களையும் விவரித்து, அதற்கான ஸூத்ரம், ஸூத்ரத்திற்கு விளக்கம், செயல்முறை, வேத மந்திரங்கள், வேத மந்திரங்களுக்கான தமிழ் உரை, தாத்பர்ய விளக்கங்கள் என ஒவ்வொரு கர்மாவின் அனைத்துக் கூறுகளையும் பல நூல்களை ஒப்புநோக்கி, விரிவாக அலசி ஆராய்ந்து, ஒருங்கிணைத்து சீர்மையுடன் வழங்குவதே இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும்.

"பகவத் ப்ரீத்யர்த்தம் பாகவத ஸேவா"

"இன்புற்ற சீலத்து இராமாநுச என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோயுடல்தோறும் பிறந்திறந்து எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டு உன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி என்னையங்காட்படுத்தே" - என்னும் இராமாநுச நூற்றந்தாதியின் இந்தப் பாசுரத்தின் பொருள் மனதில் பதிந்த நாள் முதல், பாகவத கைங்கர்யம் செய்வதே இப்பிறவிப்பயன் என்னும் நோக்கம் உறுதியாயிற்று.

"செயல் உருவான அநுஜ்ஞா கைங்கர்யங்களை விட அறிவு வளர்ச்சிக்கான அநுஜ்ஞா கைங்கர்யங்களே முக்கியமானவை" என்று "ப்ரதான சதகத்தில்" ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிச்செயல் அந்த நோக்கத்தை மேலும் தூண்டுவதாக அமைந்தது.

"அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டிக் கொளல்" எனும் குறளுக்கிணங்க

அடியேன் பணியாற்றும் துறையில் எம்பெருமான் க்ருபையினால், பொக்கிஷம் போன்ற, அரும்பெரும் நூல்கள் கிடைக்கப்பெற்றதும், அவற்றுக்கான விளக்கங்களை மஹான்களிடம் உபந்யாஸமாக அறியக் கிடைத்ததும், இந்த ஞான பொக்கிஷத்தை உலகுக்கு உபகரிக்கவேண்டும் என்ற பேரவாவினாலும், துறை சார்ந்த சான்றோர்களின் தயவினாலும் இது ஸாத்தியமாயிற்று.

# விசிஷ்டாத்வைதம் – க்ருஹ்ய ஸூத்ரம் தொடர்பு?

ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிச்செய்துள்ள "ரஹஸ்ய ரத்நாவளி"யில், எம்பெருமானிடத்துச் சரணடைந்தவனான சேதனன் "க்ருதக்ருத்யன்" அதாவது செய்யவேண்டிய அனைத்தையும் செய்து முடித்தவன், இனி அவன் செய்வதற்கு ஒன்றுமில்லை என்கிற தகுதியைப் பெற்ற ப்ரபந்நனைப்பற்றி 11 மற்றும் 12ம் ச்லோகத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

11. இப்படி कृतकृत्यனான ப்ரபந்நனுக்கு वर्ण–आश्रमादि–धर्मங்களாவன கைங்கர்ய விசேஷங்கள்.

12. இவனுக்கு "ஆஜ்ஞா - அநுஜ்ஞா - सिद्धங்களான கைங்கர்யங்கள் எல்லாம் ஸ்வயம் ப்ரயோஜனங்கள்" என்று அருளிச்செய்துள்ளார். இதற்கான வ்யாக்யானமாக அருளிச் செய்யப்பட்டுள்ளதாவது:

இப்படி க்ருருதக்ருத்யனான ப்ரபந்நனுக்கு வர்ணாச்ரமாதி தர்மங்கள் ஸ்வதந்த்ர ஆஜ்ஞா ஸித்தங்களான கைங்கர்ய விசேஷங்கள்.

ப்ரபத்தியைச் செய்தவன் "க்ருதக்ருத்யன்" எனப்படுகின்றான். இச்சொல்லுக்குச் செய்யவேண்டியதைச் செய்து முடித்தவன் என்று பொருள். இவன் ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் என்ற முறையில் உள்ள தன் ஜாதிக்கும் ப்ரஹ்மசர்யம், இல்லறம் போன்ற ஆச்ரமங்களுக்கும் ஏற்றவாறு சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட தர்மங்களைச் செய்தேயாகவேண்டும். சாஸ்த்ரமென்பது என்ன? ஸ்வதந்திரனான எம்பெருமானுடைய கட்டளைகள்தானே! இந்தக் கடமைகளை ப்ரபந்நன் வேறொரு பலனைக் கருதி செய்யவில்லையென்பது உண்மைதான். ஆனால் இவற்றைச் செய்யாவிடில் எம்பெருமானது கட்டளையை மீறிய குற்றத்துக்கு இவன் ஆளாக வேண்டும்.

இந்த ப்ரபந்நனுக்கு சேதன - அசேதந - ஈச்வரர்களாகிய தத்துவங்களைப் பற்றியும், உபாயங்களைப் பற்றியும் நிச்சயமான ஞானம் இருக்கின்றது. வேறு தெய்வத்தைத் தொழுதல்

முதலிய குற்றங்கள் இவனிடம் கிடையா. இவன் தனக்குள்ள சக்தியை ஒளிக்காமல் இயன்றளவுக்கு வர்ணாச்ரம தர்மங்களைச் செய்தேயாகவேண்டும். விடமுடியாது. அவற்றைச் செய்வது எம்பெருமான் உகந்த கைங்கர்யத்தைச் செய்ததாகும்.

எம்பெருமானது கைங்கர்யத்திலேயே சுவைகண்ட ப்ரபந்நன், வர்ணாச்ரம தர்மங்களை எதற்காகச் செய்யவேண்டும்? என்று கேட்கக்கூடாது. இத்தகைய ப்ரபந்நனைக் குறித்தே பல சாஸ்த்ரங்கள் பின்வருமாறு கூறுகின்றன.

ப்ரபந்நன் காம்யங்களான (இம்மைப்பயனுக்குரிய) கர்மங்களைச் செய்யக்கூடாது.

ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மங்களையும், சிராத்தம் முதலிய நைமித்திக கர்மங்களையும் ப்ரபந்நன் செய்தேயாகவேண்டும். தர்மம் குலையாதிருக்கவும், குலத்தின் பெருமையைக் காக்கவும், உலகத்தார் இவனைப்பார்த்து கெடாதிருக்கவும், வர்ணாச்ரம தர்மங்களின் வரையறை அழியாதிருக்கவும், திவ்யதம்பதிகள் உகப்புக்காகவும் புத்திமானாய் உள்ள ப்ரபந்நன் வைதிகமான கடமைகளை மீற மனத்தால்கூட நினைக்கக்கூடாது என்று ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய பெரியோர்கள் அருளிச்செய்துள்ள நித்ய க்ரந்தங்களிலும் கூறப்பட்டுள்ளது.

*இவனுக்கு ஆஜ்ஞா - அநுஜ்ஞா ஸித்தங்களான கைங்கர்யங்களெல்லாம் ஸ்வயம் ப்ரயோஜநங்கள்.*

ப்ரபந்நன் ப்ரபத்திக்குப் பிறகு இங்கு இருக்கும் நாள்வரை செய்யும் கைங்கர்யங்கள் இரு வகைப்படும்:

1)ஆஜ்ஞா கைங்கர்யம் 2)அநுஜ்ஞா கைங்கர்யம்.

1)ஆஜ்ஞா கைங்கர்யங்களாவன: சாஸ்திரத்தில் செய்யக்கூடாது என்று விலக்கப்பட்டவற்றை செய்யாதிருத்தல் மற்றும் செய்யதேயாகவேண்டும் என்பவற்றைச் செய்தல். அதாவது தத்தமது வர்ணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் ஏற்றவாறு சுத்தமான ஆஹாரத்தையே உண்ணல் - ஆசாரங்களில் வரையறை - பாபங்களைச் செய்யாதிருத்தல் முதலியனவாம். இவற்றைச் செய்வதால் தனிப்பட்ட பலன் இல்லை.

செய்யாவிடில் பாபம் உண்டு. ஆதலின் இவை ஆஜ்ஞா கைங்கர்யங்கள் எனப்படும்.

2) அநுஜ்ஞா கைங்கர்யங்களாவன : ஆஜ்ஞா கைங்கர்யங்களுக்குப் போக எஞ்சிய அவகாசங்களில் எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை அநுஸந்தித்தல் - அவனைத் துதித்தல் - அவன் திருநாமங்களைக் கூறுதல் - ஸந்நிதியைப் பெருக்குதல் - மெழுகுதல் - திருமாலை கட்டி ஸமர்ப்பித்தல் - திருவிளக்கு ஏற்றுதல் முதலியன.

மற்றொரு வகை: அறிவு வளர்ச்சிக்காக வேத நூல்கள், இதிஹாச புராணங்கள், ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்கள், ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள் (நூல்கள்) இவைகளைச் ஸேவித்தல் (வாசித்தல்) பயிற்றுவித்தல் முதலியன. செயல் உருவான அநுஜ்ஞா கைங்கர்யங்களை விட அறிவு வளர்ச்சிக்கான அநுஜ்ஞா கைங்கர்யங்களே முக்கியமானவை என்று "ப்ரதான சதகத்தில்" ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளார்.

இவ்வாறான அநுஜ்ஞா கைங்கர்யங்களை இஷ்டமுள்ளபோது செய்யலாம். இஷ்டம் இல்லாதபோது செய்யாதுவிடலாம். இதனால் பாபம் வராது. இப்படி இருப்பதுவே இவற்றுக்கு ஏற்றம். ஆதலின் இவையெல்லாம் அநுஜ்ஞா கைங்கர்யங்கள் எனப்படுகின்றன.

இந்த இருவகைக் கைங்கர்யங்களும் எல்லாவகை பந்துவாய் எல்லோருக்கும் தலைவனான எம்பெருமானுக்கு மிக்க மகிழ்ச்சியை விளைவிப்பன. கணவனிடம் மிக்க அன்பு கொண்ட பதிவிரதையான மனைவி அவனுக்குப் பணிவிடை முதலியனவற்றைச் செய்கின்றாள். ப்ரதிபலனாக அவள், கணவனது மகிழ்ச்சியையன்றி வேறு எப்பயனையும் கருதுவதில்லை. முக்திபெற்றவன் மோக்ஷத்தில் எம்பெருமானுக்குக் கைங்கர்யங்கள் செய்கின்றான். அதற்கு எம்பெருமானது உகப்பன்றி வேறு பயன் இல்லை. இவ்வாறே ப்ரபந்நன் இங்கு இருக்கும் நாள்வரை செய்யும் இந்த இருவகைக் கைங்கர்யங்களுக்கும் எம்பெருமானது உகப்பைத் தவிர வேறு எப்பயனையும் கருதமாட்டான். செய்யும் கைங்கர்யங்களுக்குப் பயன் அக்கைங்கர்யங்களே என்று கருதிச்

செய்வதனால் செய்யும்போதும் அக்கைங்கர்யங்கள் மிக்க இன்பத்தைப் பயக்கும்.

மற்றும் ப்ரஸ்தான த்ரையங்களில் ஒன்றான ஸ்ரீமத் பகவத் கீதையில்

*"ச்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா: யஸ்தாம் உல்லங்க்ய வர்த்ததே*

*ஆஜ்ஞாச்சேதி மம த்ரோஹி மத் பக்தோபி ந வைஷ்ணவ:"*

என்று பகவான் அருளிச்செய்துள்ளான். அதாவது - "பகவத் பக்தி இருக்கின்றது என்ற அகம்பாவத்தினால் எவன் தர்மத்தை விட்டுவிடுகிறானோ அவன் எனக்குத் துரோகி" என்று பகவான் சொல்லுகிறான். தர்மத்தினுடைய அடிப்படையில்தான் பக்தி. தர்மத்தினுடைய அடிப்படையில்தான் ஜ்ஞானம் எனும்பொழுது, அதற்கு அடிப்படை மனிதப் பண்பு! மனிதப் பண்பு இல்லாதவன் எந்தக் கருமமும் செய்ய அருகதையில்லை. மனிதன் மனிதப் பண்புடன் இருப்பதே தர்மம் ஆகும். தர்மம் என்பது ஸ்வபாவம். அதாவது பண்புகெடாத மனித இயல்பு. மனித ஸ்வபாவம் இவை என்று நிர்ணயம் செய்து, ரிஷிகள் எழுதி வைத்திருக்கிறார்கள். மனித ஸ்வபாவம் என்பது ப்ரத்யேகமாக ப்ராஹ்மண சமூகத்துக்கு மட்டுமன்றி, உலகிலுள்ளோர் அனைவருக்கும் உரித்தானதாகும். அவரவர்களுக்குரிய தர்மத்தை அறிந்து அதன்படி நடக்கவேண்டும். தர்மத்துக்கு எது ப்ரமாணம் எனில் வேதம்தான் ப்ரமாணம். "*வேதா: ப்ரமாணம்*" என்று மனு முதலிய பெரியோர்கள் 'தர்மத்துக்கு வேதம்தான் ப்ரமாணம்' என்று சொன்னார்கள். "*வேதாச் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி*" என பல உதாரணங்களைக் கூறலாம். அத்தகைய வேதத்தில் உள்ள தர்மத்தை நமக்கு விளக்குவதற்காகத்தான் ரிஷிகள் ஸ்ம்ருதிகளைத் தோற்றுவித்தார்கள். ச்ருதி, ஸ்ம்ருதி இவை இரண்டும் ப்ரமாணம் ஆகின்றன. எனவே ச்ருதி ஸ்ம்ருதி இவ்விரண்டையும் அநுஷ்டானத்தில் கொண்டு வரவேண்டும் என்பது விசிஷ்டாத்வைதத்தின் தலையாய கோட்பாடுகளில் ஒன்று.

# க்ருஹ்ய ஸூத்ரம் – விளக்கம்

அநுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டியதான *ஶ்ருதி*, ஸ்ம்ருதிகளைச் சுலபமாக மனதில் இருத்த, நினைவில் வைக்க, சுருக்கமான ஸூத்ர வடிவை ரிஷிகள் தேர்ந்தெடுத்தனர். *ஶ்ருதி*, ஸ்ம்ருதி இவை அளவற்றதாய் இருப்பதனால், அவற்றை நிர்ணயம் செய்து மனித வர்கத்திற்கு உபகரிப்பதற்காக தர்மஸூத்திரக்காரர்கள் ஏற்பட்டனர்.

போதாயன, ஆபஸ்தம்ப, ஹிரண்யகேசி, பாரத்வாஜ, ஸாங்க்யாயன, கௌஷீதகீ, பாஸ்கர, மாநவ, காடக, கோபில, காதிர, ஜைமினீய, கௌசிக என்று பல க்ருஹ்ய ஸூத்ரங்கள் உள்ளன. இவர்களில், ஆபஸ்தம்பர் போதாயனர் போன்றோர் ப்ரசித்தமானவர்கள். அந்தந்த வேதங்களுக்குத் தனித் தனி ரிஷிகளால் ஸூத்ரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ருக் வேதத்திற்கு ஆச்வலாயனர் ஸூத்ரகாரர். யஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்பர், போதாயனர், ஸத்யாஷாடர் முதலியோர் ஸூத்ரகாரர்கள். சுக்ல யஜுர்வேதத்திற்கு காத்யாயனர், ஸாம வேதத்திற்கு த்ராஹ்யாயனர் அவர்கள் ஏற்படுத்திய ஸூத்திரங்கள், அவற்றின் அடிப்படையிலேயே தற்பொழுது உள்ள ப்ரயோகங்கள் யாவும் அமைந்திருக்கின்றன. ஸூத்ரகாரர்கள் தர்ம ஸூத்ரம், க்ருஹ்ய ஸூத்ரம், ச்ரௌத ஸூத்ரம், சுல்ப ஸூத்ரம் என்று நான்கு விதமாக கர்ம காண்டத்தை பிரித்துள்ளார்கள். அவற்றில் தர்ம ஸூத்ரம் என்பது வர்ணாச்ரம தர்மங்களையும் அதற்கு வேண்டிய ப்ராயச்சித்தம் முதலியவைகளையும் சொல்கின்றது. "*அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா*" என்று ஆரம்பித்து தர்மங்களைச் சொல்லுகிறது.

ஜைமினி ஸூத்ரம் கூட ச்ரௌத விஷயங்களைச் சொல்லக்கூடியது. இதில் பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்கள் சொல்லப்படுகின்றன. வர்ணாச்ரம தர்மங்களைச் சொல்லக்கூடிய தர்ம ஸூத்ரங்கள், அநுஷ்டானத்தில் ஒரு க்ருஹஸ்தன் செய்ய வேண்டிய, என்னென்ன ஸம்ஸ்காரங்கள் உள்ளனவோ அவற்றையெல்லாம் முறைப்படுத்தி வழங்குவதே "க்ருஹ்ய ஸூத்ரம்" ஆகும். அதாவது - கர்பாதானத்திலிருந்து ஆரம்பித்து கர்பாதானம், ஸீமந்தம், உபநயனம் போன்ற என்னென்ன க்ரியைகள் நாம் அநுஷ்டிக்கிறோமோ அவைகளை சூசிபிக்கிற ஸூத்ரங்கள் க்ருஹ்ய ஸூத்ரங்கள் ஆகும்.

ச்ரௌத ஸூத்ரமாவது - யாகங்கள் எப்படிச் செய்வது

என்பதை சொல்லும்படியான ஸூத்ரங்கள். நாம் செய்யக்கூடிய க்ருஹஸ்த தர்மங்களுக்கெல்லாம் 'ஸ்மார்த்த கர்மா' என்று பெயர். யாகங்கள் ப்ரத்யேகமான விஷயம். மிகச் சிலரே தற்போது யாகங்கள் செய்கின்றனர். ஆனால் உபநயனம், விவாஹம் போன்றவை அனைவரும் அவசியம் கடைப்பிடிக்கவேண்டிய கர்மாக்கள் ஆகும். இதனால் ச்ரௌத ஸூத்ரத்தைக் காட்டிலும் க்ருஹ்ய ஸூத்ரம் முக்யம் என்று தோன்றும். ஆனால் தர்ம சாஸ்த்ரக்காரர்கள் யாகத்தைச் செய்யவதற்கு தகுதியை ஸம்பாதித்துக்கொள்ளவே உபநயனம், விவாஹம் முதலியவைகள் என்று சொல்லியிருப்பதனால் யாகங்களைச் செய்யச் சொல்லுகிற ச்ரௌத ஸூத்ரங்களே முக்யம் என்று கொள்ளலாம்.

இறுதியாகச் சொல்லப்பட்ட சுல்ப ஸூத்ரம் என்பது - யாக சாலைகள் எல்லாம் எப்படி அமைக்கப்படவேண்டும், அக்நி குண்டங்கள் எப்படி அமைக்கவேண்டும் யாக பாத்ரங்கள் எல்லாம் எப்படித் தயார் செய்யவேண்டும் என்பதையெல்லாம் பற்றிய ஒரு தனி சாஸ்த்ரம் சுல்ப ஸூத்ரம். ரிஷிகள் தமக்கு எந்த பலனையும் கருதாது, மிகுந்த சிரமம் மேற்கொண்டு நமக்குத் தர்மங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

கர்பாதானம் என்பது 'எந்த நாளில், எப்போது ஒரு பெண்ணிடம் ஒரு புருஷன் நிஷேகம் செய்கிறானோ அதை வேத மந்த்ரத்தோடு பண்ணவேண்டும்' என்று நிஷேகம் உள்ளிட்டவைகளுக்கும் ரிஷிகள் ஆச்சர்யமாக மந்த்ரங்களையும், ப்ரயோகங்களையும் அமைத்து வழங்கியுள்ளனர். இந்த ஸ்தூலமான சரீரம் தந்தையும் தாயும் சேர்ந்தது. இதற்குள் ஒரு வைதீகமான ஸ்வரூபம் இருக்கின்றது. அந்த வைதீக ஸ்வரூபமே பரப்ரஹ்மத்தின் சேஷமாகிய ஆன்மாவாகும். வேத ஸம்ஸ்காரங்களால் பண்படுத்தப்பட்ட ஆன்மா சேஷியான பரப்ரஹ்மத்தை அடையவேண்டும் என்ற ஜ்ஞானத்தைப் பெறுகின்றது.

கர்பாதானத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட வேதம், அந்த கர்பம் 3 மாதம் ஆகிவிட்டால் பும்ஸவனம், 8 மாதம் ஆகிவிட்டால் ஸீமந்தம், என்று 40 ஸம்ஸ்காரங்களும் தொடர்ந்து வேதத்தாலேயே செய்யப்படவேண்டும் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

# 40 ஸம்ஸ்காரங்கள்

இந்த ஸம்ஸ்காரங்கள் எதற்கு என கேட்கப்படுமானால்; தங்கம் தங்கமாகவே வெட்டி எடுக்கப்பட்டாலும், அதை ப்ரகாசிக்கச் செய்ய, ஸ்புடம் போடவேண்டும். அதுபோல் ஸம்ஸ்காரங்களை முறைப்படி பண்ணப் பண்ண, செய்துகொள்பவனுக்கு ப்ரஹ்ம தேஜஸ் உண்டாகும்.

கௌதம தர்ம ஸூத்ரத்தில் கூறப்பட்டுள்ள 40 ஸம்ஸ்காரங்கள்:

"கர்பாதான, பும்ஸவன, ஸீமந்தோன்னயன, ஜாதகர்ம, நாமகரண, அன்னப்ராசன, சௌள, உபநயன சத்வாரி வேதோ வ்ரதாதிபி: ஸ்நாநம், ஸஹதர்மசாரிணி ஸம்யோக: பஞ்சாநாம் யஜ்ஞானாம் அநுஷ்டானம் தேவ, பித்ரு, மநுஷ்ய, பூத, ப்ரஹ்மணாம் யேதேஷாம் ச அஷ்டகா பார்வண: ச்ராத்தம் ச்ராவணீ, ஆக்ரஹாயணீ ச சைத்ரீ ஆச்வயுஜீ ஸப்த பாக யஜ்ஞ ஸம்ஸ்தாந் அக்நியாதேயம் அக்நிஹோத்ரம் தர்ச பூர்ணமாஸௌ ஆக்ரயணம், சாதுர்மாஸ்யாநி நிரூட பசுபந்த: ஸௌத்ராமணி ஸப்த ஹவிர் யஜ்ஞ ஸம்ஸ்தான் அக்நிஷ்டோம:, அத்யக்நிஷ்டோம:, உக்த்ய:, ஷோடசீ, வாஜபேய:, அதிராத்ர:, ஆப்தோர்யாம இதி ஸப்த ஸோமஸம்ஸ்தா இத்யேதே சத்வாரிம்ச ஸம்ஸ்காரா:"

என்று 40 ஸம்ஸ்காரங்களின் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் பாதி ஸ்மார்த்த கர்மா, பாதி யஜ்ஞங்களான ச்ரௌத கர்மா. இவ்வாறாக 40 ஸம்ஸ்காரங்களாலே பண்படுத்தப்பட்டவன் ஜ்வலிக்கிறான். ஒருவன் ஒரு ஸம்ஸ்காரத்தை செய்யாதுவிட்டால் அடுத்தடுத்த ஸம்ஸ்காரத்துக்கு அவனுக்குத் தகுதி கிடையாது.

40 ஸம்ஸ்காரங்களாவன:

| | |
|---|---|
| 1.கர்பாதானம் | 2.பும்ஸவனம் |
| 3.ஸீமந்த்ம் | 4.ஜாதகர்ம |
| 5.நாமகரணம் | 6.அன்னப்ராசனம் |
| 7.சௌளம் | 8.உபநயனம் |
| 9.ப்ராஜாபத்ய வ்ரதம் | 10.ஸௌம்ய வ்ரதம் |
| 11.ஆக்நேயவ்ரதம் | 12.வைச்வதேவவ்ரதம் |
| 13.ஸமாவர்தனம் | 14.விவாஹம் |
| 15.தேவயஜ்ஞம் | 16.பித்ருயஜ்ஞம் |
| 17.மனுஷ்ய யஜ்ஞம் | 18.பூத யஜ்ஞம் |
| 19.ப்ரும்ம யஜ்ஞம் | 20.அஷ்டகா, அந்வஷ்டகா |
| 21.பார்வணம் | 22.ஸ்தாலீபாகம் |
| 23.ஆக்ரஹாயணீ | 24.ச்ராவணீ |
| 25.சைத்ரீ | 26.ஆச்வயுஜீ |
| 27.அக்நியாதானம் | 28.அக்னிஹோத்ரம் |
| 29.தர்ச, பூர்ணமாசம் | 30.ஆக்ரயணம் |
| 31.சாதுர்மாஸ்யம் | 32.நிரூட பசுபந்தம் |
| 33.ஸௌத்ராமணி | 34.அக்னிஷ்டோமம் |
| 35.அத்யக்னிஷ்டோமம் | 36.உக்த்யம் |
| 37.ஷோடசீ | 38.வாஜபேயம் |
| 39.அதிராத்ரம் | 40.அப்தோர்யாமம். |

ஸ்மார்த்த கர்மாக்கள் யாவும் ஒரே அக்நியில் செய்யப்படவேண்டியவை என்பதால் இவற்றுக்கான மந்திரங்கள் அடங்கிய தைத்ரீய யஜுஸ் சாகையைச் சேர்ந்த தொகுதிக்கு “ஏகாக்நி காண்டம்” என்று பெயர்.

# சாஸ்த்ரமும் ஸம்ப்ரதாயமும்

சாஸநாத் சாஸ்த்ரம் என்பர். இதைச் செய், அதைச் செய் என விதித்து சாஸனம் செய்வதால் இதற்கு சாஸ்த்ரம் என பெயர் வந்தது என்பர். "ஸ்நாத்வா புஞ்ஜீத" (குளித்தபின் சாப்பிடு) என சாஸ்த்ரம் பகர்கிறது. நமக்குத் தெரிந்த விஷயங்களை சாஸ்த்ரம் கூறாது. மற்றும் சாஸ்த்ரத்தில் இப்படித்தான் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுச் சொன்ன விஷயங்கள் தவிர, மற்ற விஷயங்களை அவரவர் விருப்பப்படி செய்து கொள்ளலாம். ஆனால் விருப்பப்படி செய்ய முற்படும்போது, சிலசமயம் சாஸ்த்ரம் இப்படித்தான் செய்யவேண்டும் என்று கூறிய விதியை மீறும்படி ஆகிவிடும். மற்றும் எங்கோ ஓரிடத்தில் வகுத்துச் சொன்ன விஷயம் வேறோர் இடத்திற்குப் பொருந்துமானால் அதை அநுசரிக்கவேண்டும். ஏழை, பணக்காரன், பலவான், சக்தியற்றவன், நோயாளி என வெவ்வேறு தரத்திலுள்ளவருக்குத் தக்கபடி சாஸ்த்ரம் வெவ்வேறு விதிகளையும், விதிவிலக்குகளையும் சொல்லக் கூடியது. ஆகையால் சாஸ்த்ரம் மிகவும் நுட்பமானது. எனவே சாஸ்த்ரத்தை அநுசரித்து கர்மாக்களை ஈடுபாட்டுடன் செய்யவேண்டுமானால், அதில் சாஸ்த்ரத்தை மீறாத, ஐம்புலன்களுக்கும் உற்சாகம் அளிக்கக்கூடிய, கலையம்சம் நிறைந்த பல்வேறு அம்சங்களைப் புகுத்தி, பண்படுத்தி, சாஸ்த்ரம் விதித்ததால் கடமைக்காகச் செய்கிறோம் என்கின்ற எண்ணம் ஏற்படாமல், சோர்வின்றி, உற்சாகத்துடனும், உவகையுடனும் கர்மாவை அநுஷ்டிக்கத் தக்கவகையில் செம்மைப்படுத்திக் கொடுக்கப்பட்டதே ஸம்ப்ரதாயம் ஆகும். ஸம்யக்-ப்ர-தாயம் - ஸம்ப்ரதாயம். தாயம் என்றால் சொத்து. ஸம்யக் என்றால் மிக நன்றாகப் பண்படுத்தப்பட்டது என்று பொருள். எனவே கர்மாக்களை அநுஷ்டிக்கும் விதங்களை, நம்முன்னோர் இப்படி பண்படுத்திக் கொடுத்துள்ளனர்.

உதாரணமாக சாஸ்த்ரம் எந்த ஸம்ஸ்கார கர்மாவை எந்தக் காலத்தில் பண்ணவேண்டும், ஸம்ஸ்காரம் பண்ணிக்கொள்பவனின்

தகுதிகள், பண்ணிவைக்கும் தந்தை அல்லது அந்த ஸ்தானத்துக்குரியவனின் தகுதிகள் போன்ற நிபந்தனைகளை மட்டுமே கூறும். க்ருஹ்ய ஸூத்ரம் அந்தக் கர்மாவில் அடங்கும் க்ரியைகளை சுருக்கமாக அக்நிஸந்தானம், ஔபாஸனம், பூர்வாங்கம், ப்ரதானம், உத்தராங்கம் என என்னென்ன அங்கங்கள் இருக்கவேண்டும் அதற்கு என்னென்ன ப்ரயோகங்கள், மந்த்ரங்கள் அநுஷ்டிக்கப்படவேண்டும் என்பவற்றைக் கூறும்.

ஸம்ப்ரதாயமோ எந்த இஷ்ட தெய்வம், குலதெய்வத்தை முன்னிட்டுத் தொடங்கவேண்டும், யாரை ஆசார்யனாகக் கொள்ளவேண்டும், அக்கர்மாவில் யார் யார் இடம்பெறவேண்டும், யார் யாருக்கு முக்கியத்துவம் தரவேண்டும், என்னென்ன அலங்காரங்கள் செய்யவேண்டும், என்னென்ன வாஸனாதி த்ரவ்யங்கள் உபயோகிக்கவேண்டும், என்னென்ன துணிமணிகள் உடுத்தவேண்டும், எந்தெந்த நிறங்களை உபயோகிக்கவேண்டும், எவ்வெவற்றை விலக்கவேண்டும், எவ்வாறு அணிகலன்கள் அணியவேண்டும், எங்கெங்கு எவ்வெவ்வகைக் கோலங்கள் போடவேண்டும், என்னென்ன வாத்தியக் கருவிகள் இடம்பெறவேண்டும், என்னென்ன கேளிக்கைகள் நிகழ்த்தவேண்டும், என்ன பணியாரக்காய், என்னென்ன தின்பண்டங்கள் எத்தனை எத்தனை சீராக வைக்கப்படவேண்டும், என்னென்ன தளிகை வகைகள் சமைக்கப்படவேண்டும், அவை எவ்விதமாகப் பரிமாறப்படவேண்டும், யார்யாருக்கு என்னென்ன பரிசுப்பொருட்கள் வழங்கப்படவேண்டும் என்பனபோன்ற ஒரு நிகழ்ச்சியைப் பலவாறும் மெருகேற்றி உற்சாகப்படுத்தக்கூடிய அம்சங்களை காலம் காலமாகப் பார்த்துப் பார்த்துப் புனைந்து அளிக்கப்பட்டது ஸம்ப்ரதாயமாகும்.

மேலும் ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் படலம்-1 கண்டம்-2ல் 13, 14, 15ம் ஸூத்ரங்களில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

सर्वाणि पुण्योक्तानि नक्षत्राणि। । १३ ।

तथा मङ्गलानि। । १४ ।

आवृतश्चस्त्रीभ्यः प्रतीयेरन्॥ । १५ ।

13. ஸர்வாணி புண்யோக்தாநி நக்ஷத்ராணி.

ஜ்யோதிஷத்தில் சொல்லப்பட்டுள்ள சுப முஹூர்த்தங்கள் விவாஹத்திற்கு ஏற்றவை.

14. ததா மங்களானி.

சங்கம், துந்துபி, வீணாநாதம், குலஸ்த்ரீகளின் பாட்டு முதலிய மங்கள கார்யங்கள் விவாஹத்தின்போது செய்யத்தக்கதாகும்.

இங்கே ஸ்நாநம், சுத்த வஸ்த்ரம், சந்தனம் பூசிக்கொள்ளுதல், சங்கம், துந்துபி, வீணை முதலிய வாத்தியங்கள், குலஸ்த்ரீகளின் பாட்டு, பல வண்ணமுள்ள அழகான ஆடைகள், குடை, கொடி பிடிப்பது முதலியவைகள் மங்கள கர்மாக்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குலாசாரத்தில் பெண்களின் கருத்தும் அவசியம்

15. ஆவ்தச்சஸ்த்ரீப்ய: ப்ரதீயேரன்.

மந்திரங்களற்ற செயல்களுக்கு "ஆவ்ருத:" என்று பெயர். க்ருஹ்ய ஸூத்ரத்தால் விதிக்கப்படாத சில மந்திரமில்லாத, குல வழக்கம், ஊர், தெரு வழக்கம் போன்ற பரம்பரையாகச் செய்யப்பட்டுவரும் ஸம்ப்ரதாய விஷயங்களில் பெண்களின் அபிப்ராயத்தையும் கேட்டு இருபாலருக்கும் மனத்திருப்தியளிக்கும் விதத்தில் செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

விவாஹத்தின்பொழுது அநேக உள்ளூர் கார்யங்கள் பெண்களுக்கு ஏற்றார்போல் செய்யப்படுகின்றன. அந்த கார்யங்களை பெண்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டு ஊரிலோ, ஊரில் உள்ள வீடுகளிலோ பாரம்பர்ய முறைப்படிச் செய்யவேண்டும்.

குறிப்பு:- உதாரணமாக பந்தல்கால் முஹூர்த்தம், சுமங்கலி ப்ரார்த்தனை, உளுந்து உடைத்தல், புத்துக்கு பால்தெளித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பெண்கள் உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் நன்கு விரும்பிப் பங்கேற்க வேண்டிய நிகழ்ச்சியாக கர்மாக்கள் அமையவேண்டும் என்று சாஸ்த்ரமும் தெரிவிக்கிறது என்பதை மேற்கண்ட சாஸ்த்ர விதிகளால் உறுதிசெய்யலாம்.

எனவே, ஸம்ப்ரதாயமானது, தத்துவம், சாஸ்த்ரம், ஜ்யோதிஷம், பஞ்சாங்கம், குலதர்மம், லௌகீக சௌகர்யம், பகவத் பாகவதாசார்ய, பந்துமித்ர பரிபாலனம் உள்ளிட்ட அனைத்தையும் உள்ளடக்கி ஒன்றுக்கொன்று முரண்படாத வகையிலும், ஆண்டாண்டு காலமாக பெரியோர்களால் மிக மிகக் கவனமாக ஏற்படுத்தப்பட்டவை ஆகும்.

அவசியம் செய்தேயாகவேண்டும் என்கிற நித்ய, நைமித்திக கர்மாக்களைத் தவிர, பந்து மித்ராதி குடும்ப க்ஷேமார்த்தம், லோக க்ஷேமார்த்தம், பகவத், பாகவத, தர்மரக்ஷண கைங்கர்யங்களாக ஆயுஷ்ய ஹோமம், ஷஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், ஸ்ரீஸுதர்சன ஹோமம், தன்வந்தரி ஹோமம் போன்றவையும் ஸம்ப்ரதாயத்தால் ஏற்பட்டவையே ஆகும்.

சாஸ்த்ரத்தை எக்காரணம் கொண்டும் மீறக்கூடாது; மீறினால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதற்கான பாபமும் தோஷமும் நம்மிடம் வந்து சேர்ந்துவிடும்.

***சாஸ்த்ரத்தை மீறினால், தான்மட்டுமே பாபியாவான். ஸம்ப்ரதாயத்தை மீறினால் தன் சந்ததி அனைத்தையும் பாபிகளாக்குகிறவன் ஆவான்.***

ஏனென்றால், ஸம்ப்ரதாயத்தை மீறுவதால் பாபம் ஏற்படாவிட்டாலும், ஸம்ப்ரதாயம் மீறப்படாமல் இருக்கும்வரையே கர்மாக்கள் உற்சாகத்துடன் அநுஷ்டிக்கப்படும். ஸம்ப்ரதாயம் கெடுமானால் கர்மாக்களில் ரசனையற்றுப்போய் ஈடுபாடு குறைந்து படிப்படியாக நசிந்துபோய்விடும். எனவே ஸம்ப்ரதாயத்தையும் எக்காரணம்கொண்டும் மீறாமல் காப்பாற்றினால்தான் பின்வரும் ஸந்ததியர் சாஸ்திரத்தை மீறாமல் கர்மாக்களை அநுஷ்டிக்க முடியும்.

# இயல் - 2

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -1

(இவ்வியலில் கர்மாக்களுக்கான அடிப்படை விஷயங்களான அக்னி குண்டம் அமைத்தல் முதல் விவாஹத்திற்கான வரன், கன்னிகையின் லக்ஷணங்கள் வரை விவிரிக்கப்பட்டுள்ளது)

# ஸ்ரீமதாபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ராணி

## முதல் படலம் – முதல் கண்டம்

## க்ருஹ்ய கர்மாக்கள்

1. "அத கர்மாண்யாசாராத்யாநி க்ருஹ்யந்தே"[1] என்று இந்த க்ருஹ்ய ஸூத்ரத்தின் முதல் ஸூத்ரமானது தொடங்குகின்றது. இதனால் சூசிப்பிக்கப்பட்டுள்ள விஷயங்களாவன...

"அத" என்னும் பதம் அடுத்து அல்லது பிறகு அல்லது தற்பொழுது என்னும் அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. "அத கர்மாணி" என்பதால் கீழே விவரிக்கப்படவுள்ள, கர்மாக்கள் என்பதாகப் பொருள்.

"ஆசாராத்யாநி க்ருஹ்யந்தே"[2] என்பதன் மூலம் விவாஹம் முதலிய கர்மாக்களின் விளக்கம் கொடுக்கப்படுகிறது. அவற்றின் ஜ்ஞானம், ப்ரயோகத்தாலும், நடைமுறைப் பயிற்சியாலும் உண்டாகிறது. இங்கு "அத" எனும் சப்தத்திற்கு ச்ரௌத கர்மாக்களின் விளக்கங்கள் முடிந்தபின் ஸ்மார்த்த கர்மாக்களுக்கு விளக்கம் வழங்கப்படும் என்றும் பொருள் கொள்ளலாம். யஜ்ஞம் என்பது மூவேழு வகைப்படும்.

ஔபாஸனம், வைச்வதேவம், பார்வணம், அஷ்டகா, மாஸிச்ராத்தம், ஸர்பபலி, ஈசானபலி இவை ஏழும் பாக யஜ்ஞங்கள் ஆகும்.[3]

அக்நிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், ஆக்ரயனம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஸௌத்ராமணி, பிண்டபித்ரு யஜ்ஞம் ஆகியவை ஹவிர் யஜ்ஞங்கள்.

அக்நிஷ்டோமம், அத்யக்நிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம் மற்றும் அப்தோர்யாமம் இவை ஏழும் ஸோமஸம்ஸ்தை எனப்படும்.

2. உதகயந பூர்வபக்ஷாஹ: புண்யாஹேஷுகார்யாணி

---

*1 இயல்–12 பிற்சேர்க்கையில் ஸூத்ரங்கள் முழுமையாக ஸம்ஸ்க்ருதத்தில் வழங்கப்பட்டுள்ளன.*

*2 ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா – பக்கம் – 4*

*3 கண்ட பூஷணம் – பக்கம் – 13*

புண்யமான சுப கார்யங்களை உத்தராயணத்திலும், மாதத்தின் சுக்ல பக்ஷமாகிய பூர்வ பக்ஷத்திலும் சுப நாட்களிலும் நிகழ்த்த வேண்டும் என்று பொருள். அதாவது தக்ஷிணாயணத்தை சுபங்களுக்கு விலக்கவேண்டும் என்பது இதன் உட்பொருள்.

*3.* யஜ்ஞோபவீதிநா.

இந்தக் கர்மாக்களை யஜ்ஞோபவீதத்துடன்தான் செய்யவேண்டும் என்பது "ப்ராகபவர்காணி"[4] என்ற ஆபஸ்தம்பரின் ஸூத்திரத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

*4.* ப்ரதக்ஷிணம்

பூர்வ கர்மாக்களை இடது பக்கம் ஆரம்பித்து வலது பக்கம் முடிக்கவேண்டும். உத்தரம் எனப்படும் வடக்கு தேவர்களின் திசையாகும், தக்ஷிணம் எனப்படும் தெற்கு பித்ருக்களின் திசையாகும். கிழக்கு முகமாக அமர்ந்து கர்மாக்களைச் செய்யும்போது, இடது பக்கம் வடக்குதிசை இருக்கும். எனவே அந்த வடக்கு திசைப் பக்கம் ஆரம்பித்து செய்வது உத்தமம்.

*5.*புரஸ்தாதுதக்வோபவர்க:

"இதந்து ப்ராதக்ஷிண்யம் பாகயஜ்ஞேஷு

தத்கோடிஷு ச விவாஹாதிஷு ..."[5] பூர்வ கர்மாக்களின் ஆரம்பம் கிழக்குப்பக்கமாகவோ அல்லது வடக்குப் பக்கமாகவோ ஆரம்பிக்கவேண்டும். உதாரணமாக அக்நிக்கு பரிஸ்தரணமாக தர்பங்களைப் பரப்பும்போது, அக்நிக்குக் கிழக்கிலும், மேற்கிலும் சேர்க்கப்படும் தர்பங்கள் வடக்கு நுனிகளாகவும், அக்நிக்கு வடக்கிலும், தெற்கிலும் சேர்க்கப்படும் தர்பங்கள் கிழக்கு நுனிகளாகவும் சேர்க்கப்படவேண்டும் என்பது விதி.

*6.*ததாபவர்க:

இந்த பூர்வ கர்மாக்களின் முடிவும் கிழக்கு அல்லது வடக்குத் திக்கிலேயே அமையவேண்டும். உதாரணமாக அக்நி குண்டம்

---

*4* ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா – பக்கம் –*6*

*5* ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா – பக்கம் *6*

அமைப்பதற்கு முன்பும், உதகசாந்தி கும்பம் அமைப்பதற்கு முன்பும் உல்லேகனம் செய்யும்போது, கிழக்கு நோக்கிக் கிழிக்கப்படும் கோடுகள் வடக்கில் இறுதியாகவும், வடக்கு நோக்கிக் கிழிக்கப்படும் கோடுகள் கிழக்கில் இறுதியாகவும் கிழிக்கப்படவேண்டும்.

7. அபரபக்ஷே பித்ர்யாணி

பௌர்ணமிக்குப்பின் அடுத்த அமாவாஸை வரையிலான 15 தினங்கள் அபர பக்ஷம் அல்லது க்ருஷ்ண பக்ஷம் எனப்படும். இந்த அபர பக்ஷத்தில் கயா ச்ராத்தம் போன்ற பித்ருக்களின் த்ருப்திக்காகச் செய்யப்படும் காம்ய கர்மாக்கள் செய்யப்படவேண்டும். மஹாளய பக்ஷம், அஷ்டகா, அந்வஷ்டகா போன்ற நித்ய-நிமித்த கர்மாக்களும் அபரபக்ஷங்களிலேயே செய்யப்படுகின்றன.

8. ப்ராசீனாவீதிநா

பித்ருக்களுக்கான நிமித்த, நைமித்திக மற்றும் காம்ய கர்மங்கள் யாவும் வலது தோளில் யஜ்ஞோபவீதம் இருக்கும்படியாக ப்ராசீனாவீதியிலேயே செய்யப்படவேண்டும்.

9. ப்ரஸவ்யம்

பித்ரு கர்மாக்கள் ப்ரஸவ்யமாக வடக்கில் ஆரம்பித்துத் தெற்கில் முடிபவையாகவும், வலது புறமிருந்து இடதுபுறம் நோக்கியதாகவும் செய்யப்படவேண்டும்.

10. தக்ஷிணதோபவர்க:

பித்ரு கர்மாக்களில் பரிஸ்தரணங்கள் போன்ற யாவும் தென்திசையை நோக்கியதாக அமைக்கவேண்டும். உதாரணமாக ச்ராத்தத்தில் "அக்நிம் அப்ரதக்ஷிணம் பரிஸ்தீர்ய" என்று கூறப்பட்டுள்ளது.

11. நிமித்தாவேக்ஷாணி நைமித்திகானி

ஒரு காரணத்தைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்தில் செய்யப்படுபவை நைமித்திக கர்மாக்கள். உதாரணமாக சந்த்ர

க்ரஹணம், சூர்ய க்ரஹணம் போன்றவற்றைச் சொல்லலாம்.

வீட்டுச் சுவர்களில் முளைத்துள்ள செடிகள், முளைகளைக் களைவதற்கு, உத்தராயணத்தை எதிர்பார்க்கத் தேவையில்லை உடனே அந்தக் காரியங்களைச் செய்யலாம்.

“आगारस्थूणाविरोहणे” க்ருஹப்ரவேச கர்மாவை சில பண்டிதர்கள் நைமித்திக கர்மா என்று குறிப்பிடுகிறார்கள்.

*12.* அக்நிமித்வா ப்ராகக்ரைர்தர்பைரக்நிம் பரிஸ்த்ருணாதி

அக்நியில் ஒரு ஸமித்தைச் சேர்த்து அக்நியை ஜ்வலிக்கச் செய்யவும். அக்நியைச் சுற்றி நான்கு புறத்திலும் தர்பங்களைச் சேர்க்கவேண்டும். தர்பங்களின் நுனிகள் கிழக்கையும், வடக்கையும் நோக்கியவைகளாக இருக்கவேண்டும்.

அக்நிஸந்தானம் செய்வதற்கு முன் அந்த இடத்தில் பவித்திர விரல்களால் பிடிக்கப்பட்ட மரத்துண்டினால் அல்லது தர்பத்தினால் தென்புறத்தில் ஆரம்பித்து கிழக்கு முகமாய் மூன்று கோடுகளையும், மேல்புறம் ஆரம்பித்து வடக்கு முகமாய் மூன்று கோடுகளையும் கிழித்து அந்த (கோடு கிழிக்கப்பட்ட) இடத்தில் மேற்படி மரத்துண்டை வைத்து ஜலத்தினால் ப்ரோக்ஷணம் செய்து தென்மேற்கில் எறிந்துவிட்டு, ஜலத்தைத் தொட்டுவிட்டு அக்நியைச் சேர்த்து யாகத்துக்கு உசிதமான விரகுகளால் ஜ்வலிக்கச் செய்யவேணும்.[6]

குறிப்பு:- (पाकयज्ञ परिभाषाः) பாக யஜ்ஞம் பற்றி விளக்கம் இங்கு அவசியமாகிறது: ஜ்வலனம் செய்யச் சொல்லப்பட்ட அக்னி எந்த வகையைச் சேர்ந்தது என்பது பற்றிய அபிப்ராயத்தில் மாறுபாடு காணப்படுகிறது. ஜாதகர்மாவிலிருந்தே அக்னியை பரிஹரித்துக்கொள்ளவேண்டும் என்று சிலரும், உபநயனம் முதல் என்று சிலரும் அபிப்ராயப்படுகிறார்கள். ப்ரஹ்மசர்ய வ்ரதம் முடிந்து ஸமாவர்த்தனத்திலிருந்து என்று சிலர் மதம். ஆனால் யாஜ்ஞவல்க்யர் (பின்வருமாறு) தெளிவாகச்

6 “கண்டபூஷணம்” – பக்கம் –17

சொல்லியிருக்கிறார். ''कर्म स्मार्तं विवाहाग्नौ कुर्वीत प्रत्यहं गृही''[7] என்பதனால் (விவாஹத்தில் ஏற்படுத்தப்படும்) ஔபாஸன அக்நியைத்தான் பயன்படுத்தவேண்டும். இந்த அக்னியில்தான் க்ருஹஸ்தன் தினந்தோறும், ஸ்மார்த்த கர்மாக்களைச் செய்யவேண்டும் இதனால் இது ஸ்மார்த்த அக்னி என்றும் பெயர்பெறும். பாகயஜ்ஞும் மற்றும் ஸீமந்தம் முதலிய ஸ்மார்த்த கர்மாக்களை[8] இவ்விதமாகச் செய்யவேண்டும். ''अग्निमिध्वा'' என ஸூத்ரத்தில் உள்ளதற்கு அக்நி ஜ்வலித்துக்கொண்டிருந்தாலும், அதில் ஸமித்துகளைச் சேர்த்து அதை மேலும் ஜ்வலிக்கச் செய்யவேண்டும் என்பது பொருள்.

தானிமரம், கொன்னை, பருத்தி, அலரி, புங்கை, புளி, வேம்பு, கருங்காலி தவிர முள்ளுள்ள மரங்களை (சுள்ளியாக) உபயோகிக்கக் கூடாது. அக்நியை வாயினால் அல்லது விசிறி முதலானதுகளினாலும் ஊதக்கூடாது. ஊதுகுழல் அல்லது புல்லையாவது, விறகுத் துண்டையாவது நடுவிலே வைத்துக்கொண்டு வாயினால் ஊதலாம்.[9]

### 13. ப்ராகுததக்ரைர்வா

பரிஸ்தரணங்கள் கிழக்கு நுனிகளாக சேர்க்க இயலாத இடங்களில் வடக்கு நுனிகளாகவும் சேர்க்கலாம். இப்படி அக்நியை ஜ்வலிப்பித்துச் சேர்த்து அவோக்ஷணம் செய்து, மிச்சமான ஜலத்தை கிழக்கிலாவது வடக்கிலாவது கொட்டிவிட்டு, கீழ்ப்புறமாய் வேறு பாத்திரத்தில் ஜலத்தை வைத்து, கீழ்ப்பக்கத்திலும் மேல்பக்கத்திலும் வடக்கு நுனிகளாகவும், மற்றப்பக்கங்களில் கிழக்கு நுனிகளாகவும், தர்பங்களினால் கிழக்கு முதல் ப்ரதக்ஷிணமாகப் பரப்பி, தென்புறமாயுள்ள தர்பங்களை உயர்வாகவும், வடபுறமாயுள்ளதை தாழ்வாகவும் செய்யவேண்டும் என்று போதாயனர் சொல்கிறார்.[10] தென்புறமுள்ளதை மேலாகவும்,

---

*7 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா" – பக்கம் –12*

*8 40 ஸம்ஸ்காரங்கள் என்ற தலைப்பில் ஸ்மார்த்த கர்மாக்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது.*

*9 "கண்டபூஷணம்" – பக்கம் –18*

*10 "கண்டபூஷணம்" – பக்கம் –20*

வடபுறமுள்ளதை கீழாகவும் செய்யவேண்டும் என்று பாரத்வாஜர் சொல்லுகிறார்.

*14.* தக்ஷிணாக்ரை: பித்ர்யேஷு

"पित्र्येषु मासिश्राद्धादिषु ..."[11] பித்ரு கர்மாக்களில் அக்நிக்கு கிழக்கிலும் மேற்கிலும் தர்பங்களின் நுனிகள் தெற்கு நோக்கியும், அக்நிக்கு வடக்கிலும், தெற்கிலும் தர்பங்களின் நுனிகள் கிழக்கு நோக்கியதாகவும் சேர்த்து பரிஸ்தரணம் அமைக்கவேண்டும்.

*15.* தக்ஷிணா ப்ராகக்ரைர்வா

தெற்கு நோக்கி அமைக்க வாய்ப்பில்லாத இடங்களில் கிழக்கு நுனிகளாகவும் அமைக்கலாம்.

ச்ராத்தம் முதலிய பித்ரு கர்மாக்கள் செய்யும்போது, அக்நிக்கு இடது மற்றும் வலதுபுறும் சேர்க்கும் பரிஸ்தரணங்கள் கிழக்கு நுனிகளாகவும், அக்நிக்கு கிழக்கு மற்றும் மேற்கில் சேர்க்கப்படும் பரிஸ்தரண தர்பங்கள் தெற்கு நுனிகளாகவும் சேர்க்கப்படுகின்றன.

*16.* உத்தரேணாக்நிம் தர்பாந் ஸம்ஸ்த்ரீர்ய த்வம்த்வம் ந்யஞ்ஜி பாத்ராணி ப்ரயுநக்தி தேவஸம்யுக்தாநி.

அக்நிக்கு வடக்கில்-பரிஸ்தரண தர்பங்களுக்கும் சற்று வடக்கில் சில தர்பங்களை கிழக்கு நுனிகளாகப் பரப்பி, அதன்மேல் "ப்ரதான தர்வீ, ஆஜ்ய ஸ்தாலீ, ப்ரோக்ஷணீ, ப்ரணீதி, இத்மம், ஹவிஷ்பாத்ரம், ஹவிஷ்யபாத்ரம்"[12] என்ற முறையில், ஒன்றன்மேல் ஒன்றாக அதாவது இரண்டிரண்டு பாத்திரங்களாக கவிழ்த்து வைத்து பாத்ர ஸாதனம் செய்வது தேவர்களுக்கு ப்ரீதிகரமானது.

அக்நிக்கு வடபுறமாய் பரிஸ்தரணத்தின் ஸமீபத்தில் கிழக்கு நுனியாக பன்னிரண்டு தர்பங்களைப் பரப்பி அதில் 1.புரசிலை, 2.நெய் பாத்திரம், 3.ப்ரோக்ஷண பாத்ரம் 4.ப்ரணீதி பாத்ரம் இவைகளை மேற்கில் ஆரம்பித்து வைத்து கிழக்கில்

---

*11 ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி – பக்கம் – 14*

*12 சதுஷ் பாத்ர விதி, ஷட்பாத்ர விதி என கர்மாவுக்குத் தக்கபடி வேறுபடும்.*

முடிக்கவேண்டும்.[13] புரசு அல்லது கருங்காலியில் மூன்று ஒட்டையுள்ள (கிட்டத்தட்ட 21 அங்குலங்கள்) பரிதியில் மூன்றும், ஒரு ஒட்டை நீளமான ஸமித்தில் பதினைந்தும், ஆகார ஸமித்தில் இரண்டும் தர்பத்தினால் கட்டி உபதர்வியோடு இத்மத்தை வைக்கவேண்டும். இந்த விதமாகப் பாத்திரங்களை மேற்சொன்ன இடத்தில் வடக்கு முடிவாகவும் இரட்டைகளாகவும் தலை கீழாகவும் வைக்கவேண்டும். மனுஷ்யாதி பாத்திரங்களை (முஞ்சி, மான்தோல்) முதலியவைகளை தேவ பாத்திரத்திற்கு வடபுறமாய் அவைகளோடு கூடவே வைக்கவேண்டியது. இவ்வாறாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

*17. ஸக்ருதேவ மநுஷ்ய ஸம்யுக்தானி*

மனிதர்களுக்குரிய (முஞ்சி, மான்தோல் போன்ற) விஷயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக வைக்கவேண்டும்.

*18. ஏகைகச: பித்ருஸம்யுக்தானி*

பித்ரு கர்மாக்களில் பாத்திரங்கள் தனித்தனியாக ஸாதனம் செய்து வைக்கப்படவேண்டும்.

*19. பாத்ரயோஸ்ஸம்ஸ்கார: ஆயாமத: பரிமாணம் ப்ரோக்ஷணி ஸம்ஸ்கார: பாத்ர ப்ரோக்ஷணம் இதி தர்சபூர்ணமாஸ வத்தூஷ்ணீம்.*

பாத்திரங்கள் ஸம்ஸ்காரம் (சுத்தி) செய்யும்போது, மந்திரம் எதுவுமின்றி, தர்ச பூர்ணமாஸ கர்மாவில் கூறப்பட்டதுபோல, இரண்டு தர்பங்களால் ஆன ஆயாமதம் கொண்டு, ப்ரோக்ஷணி ஜலத்தை ஸம்ஸ்கரித்து, ப்ரோக்ஷணங்களைச் செய்யவேண்டும்.

"புல்லையாவது குச்சியையாவது நடுவில் வைத்து, நகம் தவிர வேறு கத்தி போன்ற கருவியால்"[14] இரண்டு தர்பங்களை துண்டித்து, ஜலத்தைத் தொட்டு, அடி முதல் நுனிவரையில் துடைத்து, சரியான அளவுள்ளதும் நுனி உள்ளதுமான ஒட்டை நீளமுள்ள (20 செ.மீ. நீளம்) இரண்டு தர்பங்களைப் பவித்ரமாகச்

---

*13 "கண்டபூஷணம்" – பக்கம் –21*

*14 "கண்டபூஷணம்" – பக்கம் 22,23*

செய்து, அக்நிக்கு மேற்கே ப்ரோக்ஷணீ பாத்ரத்தை வைத்து, அதில் இந்த பவித்ரத்தை வடக்கு நுனியாக வைத்து, ஜலத்தைச் சேர்த்து கிழக்கு நோக்கியும், கிழக்கு நுனியாயிருக்கிற கைகளுடைய கட்டைவிரல் மற்றும் பவித்ர விரல்களால், மேற்படி பவித்ரத்தை அடியிலும் நுனியிலும் பிடித்துக்கொண்டு, ஜலத்தை மூன்றுதரம் கிழக்கில் நகர்த்தி, ஸாதனம் பண்ணி வைத்துள்ள பாத்திரங்களை நிமிர்த்தி வைத்து, இத்மத்தையும் கட்டவிழ்த்து, அந்த ஜலத்தினால் எல்லா பாத்திரங்களையும் மூன்றுதரம் ப்ரோக்ஷணம் செய்யவேண்டும்.

*20. அபரேணாக்நிம் பவித்ராந்தர்ஹிதே ....... ப்ரச்சாத்ய.*

*21. ப்ராஹ்மணம் தக்ஷிணதோ தர்பேஷு நிஷாத்ய.*

"மற்றொரு பாத்திரத்தை அக்நிக்கு மேற்கே வைத்து முன்போலவே தீர்த்தம் விட்டு, கிழக்கு நோக்கி ஜலத்தை நகர்த்தி, அந்தப் பாத்திரத்தை மூக்குவரையில் தூக்கி அக்நிக்கும், பரிஸ்தரணங்களுக்கும் வடக்குப் பக்கம், கிழக்கு நுனியாகப் பரப்பப்பட்ட தர்பங்களில் வைத்து, அதன் மேல் சில தர்பங்களினால் மூடி வைக்கவேண்டும்."[15] ஒரு ப்ராஹ்மணரை தென்பக்கத்தில் தர்பத்தில் உட்கார்த்தி வைக்கவேண்டும். இந்த ப்ராஹ்மணருக்கு வரணம் முதலியவை கிடையாது.

"தாத்பர்ய தர்சனகாரரின்"[16] மத அநுஸாரப்படி ஜலத்துடன் கூடிய ப்ரணீதி பாத்திரத்தை, முகம், மூக்கு வரை தூக்கி, அக்னிக்கு வடக்கில் உள்ள தர்பங்கள் மீது வைத்து, தர்பங்களால் மூடவேண்டும். अपरेणाग्निं என்பதால் இன்னொரு பாத்ரம் என்று கொள்ளக்கூடாது. ஏனெனில் ஸூத்ரத்தில் மறுபடியும் उत्तरेणाग्निं என்கிற ப்ரயோகம் உள்ளது எனவே "அபரே" என்கிற சப்தம் இங்கே மேற்கு திசையைக் குறிக்கிறது.

இந்த ஸூத்ரத்தில் அக்னியின் தெற்குப் பக்கம் ஒரு ப்ராம்மணரை உட்கார வைக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது.

---

15 "கண்டபூஷணம்" – பக்கம் 23

16 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா" – பக்கம் 14

"தர்சபூர்ணமாஸத்தில் தெற்கில் அமர்த்தும் ப்ராம்மணன் ப்ரஹ்மா என்று சொல்லப்படுகிறான்"[17], இங்கு ப்ராம்மணன் என்று மட்டுமே உள்ளது. இதனால் ப்ரஹ்மாவின் தர்மங்கள் இவருக்கு வராது.

*22. ஆஜ்யம்விலாப்யாபரேணாக்நிம் .... ..... அநுப்ரஹ்ருத்ய.*

"அக்நிக்கு மேற்கில் நெய்பாத்திரத்தின் மேல் ஆயாமதப் பவித்திரத்தை வடக்கு நுனியாக வைத்து, உருக்கிய நெய்யைச் சேர்த்து, அக்நியின் வடக்குப் பக்கத்திலிருந்து தணல் எடுத்து, பரிஸ்தரணத்துக்கு வெளியில் வைத்து, அதன் மீது நெய் பாத்ரத்தை வைத்து, எரிகிற தர்பத்தைக்கொண்டோ, சிறிய தணலாலோ நெய்யை ப்ரகாசம் செய்து அந்த தர்பத்தை எறிந்துவிட்டு, இரண்டு தர்பங்களின் நுனிகளை நகம் தவிர வேறு கத்தி போன்ற கருவியினால் துண்டித்து, ஜலத்தில் அலம்பி (அல்லது ஜலத்தைத் தொட்டு) அந்த நுனிகளை நெய் பாத்ரத்தில் ஒரே தடவையாகப் போட்டு, அந்த அக்நியிலிருந்து சிறு அக்னி துண்டினாலாவது, கொளுத்தப்பட்ட இரண்டு தர்பங்களினாலாவது நெய்ப்பாத்திரத்தை ப்ரதக்ஷிணமாக மூன்றுதரம் சுற்றி அதை (வடபுறம்) எறிந்துவிடவும்".[18] பரிஸ்தரணத்திற்கு வெளியில் ஆஜ்ய ஸம்ஸ்காரத்திற்காகக் எடுத்து வைக்கப்பட்ட அக்நியிலிருந்து கொளுத்தப்பட்டிருந்தால் அந்த தர்பங்களை அந்த அக்நியிலேயே போடவேண்டும். அதை வெளியில் போடக்கூடாது. மூலாக்நியில் போடும்படி விதியிருப்பதனால் மேற்படி அக்நியானது லௌகிகமல்ல. அந்த நெய்பாத்திரத்தை வடபுறமாய் எடுத்து வைத்துக்கொண்டு மேற்படி தணல்களை மூலாக்நியில் போட்டுவிட்டு நெய்பாத்திரத்தை தனக்கு முன்புறத்தில் வைத்து முன்புபோல் பவித்ரங்களினால் கிழக்கிலிருந்து மேல்புறமாகத் தூக்காமல் கொண்டுபோய் கிழக்கில் முடிக்கிறது. இப்படியே இன்னும் இரண்டு தடவைகள் செய்து பவித்திரத்தின் முடிச்சை அவிழ்த்து ஜலத்தைத் தொட்டு அக்நியில் போட்டுவிடவேண்டும்.

---

17 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா" – பக்கம் 15

18 "கண்டபூஷணம்" – பக்கம் – 24

**2வது கண்டம்**

1. யேந ஜுஹோதி ததக்நௌ ப்ரதிதப்ய .... ப்ரஹரதி.

“ச்ருக்-ச்ருவம் அல்லது தர்வி என எதனால் ஹோமம் செய்யப்பட உள்ளதோ அதனை அக்நியில் காய்ச்சி, தர்பங்களினால் துடைத்து, மீண்டும் காய்ச்சி, ப்ரோக்ஷித்து கீழேவைத்து அந்த தர்பங்களை ஜலத்தில் தொட்டு அக்நியில் போடவேண்டும்”.[19]

(दर्शपूर्णमासयोः सम्मार्जने ...)[20] தர்ச பூர்ணமாஸம் எனும் கர்மாவிலும் காய்ச்சுதல் விதிக்கப்பட்டுள்ளது. ‘ஆஹவநீயாக்நி மற்றும் கார்ஹபத்யாக்நி’[21] என இருவகை அக்நிகள் உள்ளன என்பதை குறிக்க அக்நௌ என்ற த்விவசன சப்தம் ப்ரயோகத்தில் வழங்கப்பட்டுள்ளது. பாக யஜ்ஞமும் தர்வியினாலேயே செய்யப்படுகிறது. ஹோமம் செய்வதற்காக ஒன்றும், ஒரு முறைக்கு மேல் நெய் எடுத்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் உதவுவதற்காக ஒன்றும் என இரு தர்விகளின் பயன்பாடு சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு இரு இலைகள் கொண்டு ஹோமம் செய்யப்படும்போது, ‘‘मध्यमेनान्तमेन पलाशपर्णेन’’ என்ற ஸூத்ர விதியை அநுசரித்து அவைகளையும் துடைத்தல், காய்ச்சுதல் போன்ற ஸம்ஸ்காரங்களைச் செய்து பயன்படுத்த வேண்டும். ஜாதகர்மாவில் பலிஹரண ஹோமத்திலும், விவாஹத்தில் பொரி ஹோமத்திலும் கைகளால் ஹோமம் செய்யப்படுகின்றன, அதுபோன்று கைகளால் ஹோமம் செய்யப்படும்போது, கைகளுக்கும் இந்த விதியின்படி ஸம்ஸ்காரம் செய்யப்படவேண்டும்.

---

*19 “ச்ருக்–ச்ருவம்” ஹோமம் செய்ய உதவும் மரக்கரண்டிகள், “தர்வி”–இலை.*

*20 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் –சின்னஸ்வாமி சாஸ்த்ரி” பக்கம் – 22*

*21 கார்ஹபத்யாக்நி என்பது ஔபாஸந அக்நி (வைதிக அக்நி), ஆஹவநீயாக்நி என்பது நித்ய ஔபாஸநாதி கர்மாக்களை இடைவிடாது செய்து வருபவரின் அக்நி.*

2. ஸம்யா: பரித்யர்த்தே ...... ப்ராயச்சித்தேஷு.

"சௌளம், உபநயனம், ஸமாவர்தனம், விவாஹம், ஸீமந்தம், கோதானம் மற்றும் ப்ராயச்சித்த கர்மாக்களின்" ஆரம்பத்தில் அக்னிக்கு தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கமும் வைக்கப்படும் ஸமித்துக்களுக்கு "சமீ" என்று பெயர்.

"विवाहे च हृदय संसर्गार्थे सर्वत्र सम्या:"[22] பரிதி ஸ்தானத்தில் ஸமித்துகள் வைக்கப்படுகின்றன. விவாஹங்களில் இரு மனங்களின் ஒற்றுமையை குறிக்க "சமீ" ப்ரயோகம் (ஸ்தாலீபாகம் தவிர) எல்லாவிடத்திலும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்கிறார் ஹரதத்தர். மற்ற கர்மாக்களிலும் பார்வண கர்மாக்களிலும், பும்ஸவனத்திலும் பரிதிப்ரயோகம் உண்டு.

பரிதிகளை எடுத்து பரிஸ்தரணத்தின்மேல் அக்னிக்கு மேற்கில் தடிமனான ஒன்றை வடக்கு நுனியாக இட்டு, அதைக்காட்டிலும் மெலிந்த நீளமான ஒன்றை அக்நிக்கு தென்புறம் கிழக்கு நுனியாக வைக்கவும். மற்றொரு மெல்லிய குட்டையான பரிதி ஒன்றை அக்நிக்கு வடக்கே வைக்கவும். பரிதிகள் நான்கு மூலையிலும் ஒன்றை ஒன்று தொடும்படியாக வைக்கவும். இரு (ஆகார) ஸமித்துகளை எடுத்துக்கொண்டு, நடு பரிதியை வலது கையினால் தொட்டுவிட்டு, அக்நிக்கு தென்கிழக்கில் ஒன்றையும், வடகிழக்கில் ஒன்றையும் நிற்கும்படியாக வைக்வும். பரிஸ்தரணத்திற்கும் பரிதிக்கும் இடையில் பரிஷேசன ஜலம் விழவேண்டும். அநுயாஜ ஸமித் விதியிருந்தால் மட்டும், ஒரு ஸமித்தை எடுத்து அக்நிக்கு வடக்கே வைக்கவேண்டும்.[23] (நடைமுறையில் 21 ஸமித்துகளில் ஒன்றை வடக்கில் வைத்து, இறுதியில் அக்நி உபஸ்தானத்தின்போது அக்நியில் சேர்க்கப்படுகிறது).

---

*22 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" பக்கம் –23*

*23 "கண்டபூஷணம்" பக்கம் – 26*

3. அக்நிம்பரிஷிஞ்சத்யதிதே......... ப்ரஸவேதி ஸமந்தம்.

இடது கையினால் பாத்திரத்தைத் தொட்டுக்கொண்டு, வலதுகையினால் "அதிதேஅநுமந்யஸ்வ" என்று சொல்லி தென்புறத்தில் கிழக்கு முடிவாகவும், மேல்புறத்தில் "அநுமதே அநுமந்யஸ்வ" என்று வடக்கு முடிவாகவும், வடபுறத்தில் "ஸரஸ்வதே அநுமந்யஸ்வ" என்று கிழக்கு முடிவாகவும் "தேவஸவித:ப்ரஸுவ" என்று கிழக்கில் ஆரம்பித்து அக்நியைச் சுற்றியும் பரிஷேசனம் செய்யவேண்டும்.[24]

பரிஷேசனம் முதலியதில் அக்நியில் ஜலம் தெளித்தால் "புநஸ்த்வா ஆதித்யா:" என்று அக்நியை ஜ்வலிப்பித்து "பூர்புவஸ்ஸுவஸ்வாஹா" என்று ஸர்வ ப்ராயச்சித்த ஹோமம் செய்யவேணும்.[25]

"अग्निमेवोदकेन परिषिञ्चति" அக்நியை மட்டுமே ஜலத்தால் பரிஷேசனம் பண்ணவேண்டும்.[26] (அதாவது பரிஷேசன ஜலம் பரிதியிலோ, பரிதிக்கு வெளியிலோ செல்லக்கூடாது என்பது பொருள்).

4. பைத்ருகேஷு ஸமந்தமேவ தூஷ்ணீம்.

பித்ரு கர்மாக்களில் மந்திரமின்றி, அக்னிக்குத் தென்மேற்கு மூலையில் ஆரம்பித்து அப்ரதக்ஷிணமாக அதாவது வலமிருந்து இடமாக நான்கு பக்கங்களிலும் ஜலம் விழும்படி சுற்றி பரிஷேசனம் பண்ணவேண்டும்.

5. இத்மமாதாயா .... .... தூஷ்ணீம்.

"पञ्चदशसङ्ख्या"[27] 15 ஸமித்துகளைக் கொண்ட கட்டுக்கு 'இத்மம்' என்று பெயர். இத்மம் என்று ஏக வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையால், அனைத்தையும் ஒன்றாக அக்நியில்

---

24 "கண்டபூஷணம்" – பக்கம் – 26

25 "கண்டபூஷணம்" – பக்கம் –27

26 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் –சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 24

27 "ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம் –சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் 17,18

சேர்க்கவேண்டும் என்பது வரையறுக்கப்படுகிறது. தூஷ்ணீம் என்ற பதத்தினால் மந்த்ரமில்லாமல் என்பது உணர்த்தப்படுகிறது.

பிறகு நெய்யினால் நனைக்கப்பட்ட இத்மத்தை, வலது கையினால் எடுத்து, மந்த்ரமில்லாமல் அக்நியில் (கிழக்கு மேற்காகப்) போட்டு, ப்ரதான தர்வியினால் நெய்யை எடுத்து ஜ்வலிக்கிற அக்நியில் வடமேற்கிலுள்ள பரிதிகள் சேரும் இடத்திலிருந்து, தென்கிழக்கில் பரிதிகள் சேரும் இடம் வரையிலும் (குறுக்காக) நெய்விட்டு, "ப்ரஜாபதயே இதம் நமம" என்றும், தென்மேற்கு பரிதியின் சேர்க்கை முதல் வடகிழக்கு பரிதி சேர்க்கைவரை இதர தர்வியினால் நெய் விட்டு "இந்த்ராய இதம் நமம" என்றும் சொல்லவேண்டும்.[28]

*6. அதஆஜ்யபாகௌ ... ..... ஸமம் பூர்வேண.*

அடுத்து ஆஜ்யபாகம் எனும் இரண்டு ஹோமங்கள் பண்ணவேண்டும்.

"அக்நயே ஸ்வாஹா" என்று வடகிழக்குப் பகுதியிலும், "ஸோமாயஸ்வாஹா" என்று தென்கிழக்குப் பகுதியிலும் ஆஜ்யபாகம் என்ற ஹோமங்களைச் செய்யவேணும்.[29]

சருகர்மாவிலும், உபாகர்மா, வ்ரதங்களிலும் ஆகார ஹோமங்கள் கலந்தால் "அக்நயே ஸ்வாஹா" என்கிற முகாஹுதியையும் செய்யவேண்டும். ஸீமந்தம் க்ருஹப்ரவேசங்களில் முகாஹுதி கிடையாது. இந்த ஐந்து கர்மங்களில் பரிதிகள். விவாஹாதிகளான ஏழிலும் ஸம்யைகள்.[30] (விவாஹம், உபநயனம், ஸமாவர்தநம், ஸீமந்தம், சௌளம், கோதாநம், ப்ராயச்சித்தம் - இவை ஏழிலும் ஸம்யை.)

---

*28 "கண்டபூஷணம்" – பக்கம் – 27*

*29 "கண்டபூஷணம்" – பக்கம் – 27, 28*

*30 "கண்டபூஷணம்" – பக்கம் – 28*

7. யதோபதேசம் ப்ரதாநாஹுதிர் ஹுத்வா.... ..... ஸ்வாஹேதி.

"यस्मिन् यसिमिन् कर्मणि याः प्रधानाहुतयः इत्युपदिश्यन्ते ..."[31] எந்தெந்த கர்மாக்களுக்கு எவை எவை ப்ரதான ஆஹூதிகளாகச் சொல்லப்பட்டுள்ளனவோ அவற்றைச் செய்து, உத்தராங்கமாக 'ஜயாதி ஹோமங்கள், ஸ்விஷ்டக்ருத் ஹோமம், ப்ராயச்சித்த ஆஹுதிகள்'[32] என எவை விதிக்கப்பட்டுள்ளனவோ அவற்றையும் செய்யவேண்டும்.

8. பூர்வவத் பரிஷேசனம் .... .... மந்த்ரஸந்நாமः.

"अग्नि परिषेचनं पूर्ववत्"[33] – ஆரம்பத்தில் பரிஷேசனம் செய்ததுபோல மீண்டும் அக்னியைச் சுற்றி பரிஷேசனம், ஆனால் மந்த்ரத்தில் சிறிய மாறுதல். "அநுமந்யஸ்வ" என்பதற்கு பதில் "அந்வமங்ஸ்தா:" என்றும், "ப்ரஸுவ" என்பது "ப்ராஸாவீ:" என்றும் மந்திரம் மாறும். அதிதி அநுக்ரஹம் செய்தார், ஸவிதா என்னைத் தூண்டினார் என்றும் பொருள்படும்.

9. லௌகீகாக்நிம் பாகயஜ்ஞ சப்த:.

"औपासन होमादीनां पाकयज्ञशब्दः"[34] ஔபாஸன ஹோமம் முதலிய தினசரி நடைமுறை ஸம்பந்தமான கர்மாக்களுடன் தொடர்புடையது என்பதை "பாக யஜ்ஞம்" என்ற சப்தம் குறிப்பிடுகிறது.

10. தத்ர ப்ராஹ்மணாவேக்ஷா விதி:. 11. த்விர் ஜுஹோதி

"तत्र तेषु पाकयज्ञेषु मध्ये पार्वणादिषु पञ्चसु ब्राह्मणावेक्षो विधिर्भवति। ... तेन चरुणा प्रधानाहुतिस्विष्टकृत्प्राशनभक्षणेभ्यः ..."[35] இங்கே பாகயஜ்ஞங்களின் இடையில் பார்வணங்களான ஐந்துவிதமான ப்ராஹ்மணர்களுக்கான விதிகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு ஹோமம், ஜலத்தினால் இருமுறை கையைத் துடைப்பது, இரு முறை சாப்பிடுவது, வெளியே

---

31 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் –சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா" – பக்கம் –29

32 "பொதுவாக அறிந்திருக்கவேண்டியவை" – பிற்சேர்க்கையில் தனியாக வழங்கப்பட்டுள்ளது.

33 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா" – பக்கம் 32

34 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி வ்யா" – பக்கம் 33

35 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்தி வ்யா" – பக்கம் – 35, 36

சென்று ஆசமனம் செய்வது, மேலும் ஸ்ருவத்தை சுவைப்பது முதலியவை சொல்லப்பட்டுள்ளன. இவைகளுக்குத் தேவையான அளவுக்குச் சருவை ஒரு இலையில் நிரப்பி அக்னியின் வடபுறம் பரிஸ்தரணங்களுக்கு வெளியில் வைக்கப்படவேண்டும். பின்னர் விதிப்படி அனைத்து ப்ரதான ஹோமங்களையும் செய்யவேண்டும்.

குறிப்பு:- க்ருஹ்ய ஸூத்ரத்தின் அடுத்த ஸூத்ரத்தைத் தொடர்வதற்கு முன்பாக, இங்கு ஹோமம் / யஜ்ஞங்களின் இறுதிப்பகுதி எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கான விதிகளை அறிதல் அவசியமாகிறது.

[சரு கருமங்களில் தர்வியில் நெய்யினால், பரப்பப்பட்ட வரிசையில் பரிதிகளை நனைத்து, லேபகார்யத்தைச் செய்யவேணும். பாத்ர ஸாதநார்த்தமான தர்பங்களை எடுத்து தர்வியில் நுனியையும், இதரதர்வியில் தர்பங்களின் நடுவையும், ஆஜ்யபாத்ரத்தில் (அடியையும்) மூலத்தையும் இப்படி வடக்கு முடிவாக இரண்டு அல்லது மூன்று தடவைகள் நெய்யில் நனைத்து அவைகளில் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு, வலதுகை மேலாக இருக்கும்படி கைகளினால் அவைகளை தர்வியில் வைத்து, இடதுகையை விட்டுவிட்டு, குறுக்காக இடதுகையை வைத்துக்கொண்டு நுனியைக் கொளுத்தி அக்நியில் போட்டு, மிச்சத்தையும் நடுவில் கொளுத்தி நடுவில்போட்டு, கடைசியானதைக் கொளுத்தி அக்நியில் போட்டு, வைக்கப்பட்டிருந்த ஒரு தர்பத்தையும் அக்நியில் போட்டு மந்த்ரமில்லாமல் கட்டைவிரலினால் மூன்றுதடவை அக்நியைச் சுட்டிக்காட்டி, அக்நியை த்யாநம் செய்து வலதுகையினால் பூமியைத் தொட்டு நடுவான பரிதியை அக்நியில் சேர்த்து, மற்ற இரண்டு பரிதிகளை கைகளினால் எடுத்து ஒரே காலத்தில் அக்நியில் போட்டு வடக்கு பக்கத்தில் உள்ளதின் நுனியை நெருப்பில் சொருகவேண்டும்.][36]

---

*36 "கண்டபூஷணம்" – பக்கம் – 28*

[ஆகார ஸமித்துகள் பரிதி இல்லாமையாலும், ஸம்யையும் இல்லாமையாலும் அவற்றை எடுத்து எறிவதோ, அக்நியில் போடுவதோ கூடாது. வலது கையினால் ப்ரதாந தர்வியையும், இடது கையினால் வேறு தர்வியையும் எடுத்து, இரண்டு தர்விகளினாலும் நெய்யை எடுத்து ப்ரதாந தர்வியில் உபதர்வியின் நுனியைச் சேர்த்து மந்திரமில்லாமல் ஸம்ஸ்ராவ ஹோமத்தைச் செய்யவேண்டும். ஆஜ்ய ஹோமங்களில் ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்குப் பிறகு ஸம்யைகளை எறிந்துவிட்டு ப்ராயச்சித்த ஹோமங்களைச் செய்யவேண்டியது. பிறகு உபதர்வியைக் கீழே வைத்து வ்யாஹ்ருதி ஹோமம் செய்து, "அநாஜ்ஞாத" என்கிற மூன்றையும், "த்வந்நோ", "ஸத்வந்நோ" என்கிற இரண்டையும், வ்யாஹ்ருதிகளைப் பிரித்தும், சேர்த்தும் ஹோமம் செய்து விஷ்ணவே ஸ்வாஹா என்று பூர்ணாஹுதியையும் செய்து முன்போல் அக்நியை பரிஷேசநம் செய்யவேண்டியது. மந்திரத்தில் "அந்வமங்ஸ்தா: - ப்ராஸாவீ:" என்று மாறுதலுண்டு.

வ்யாஹ்ருதிகள், அநாஜ்ஞாத த்ரையம், த்வந்நோ, ஸத்வந்நோ ஆஹுதிகள் மற்றும் ப்ராணாயாமம் இவைதான் க்ருஹ்ய கர்மங்களில் ப்ராயச்சித்தாஹுதிகள்.

பிறகு ப்ரணீதி பாத்ரத்தை தன்முன்னே வைத்து, அதில் வேறு பாத்திரத்தினால் ஜலத்தைச் சேர்த்து, அந்த ஜலத்தை கிழக்கு முதல் ப்ரதக்ஷிணமாக வெளியில் போகச் செய்து, உயரவும் தூக்கிவிட்டு கொஞ்சம் பூமியிலும் சேர்த்து அதனால் தன்னை ப்ரோக்ஷித்துக்கொண்டு, தென்புறத்தில் உட்காரச் செய்த ப்ராஹ்மணனை பூஜிக்கவேண்டும்.

குறிப்பு:- ப்ரஹ்மவரணம் இல்லாத கர்மாக்களிலும், ஒரு ப்ராஹ்மணரை அந்த ஸ்தானத்தில் அமர வைத்து, இறுதியில் அவரை தக்ஷிணை, தாம்பூலம் முதலியவற்றால் கௌரவிக்கவேண்டும் என்று தெரிகிறது.

"யத்ரகச்ச" என்று உபக்ரமித்து (ஆரம்பித்து) ஆஜ்யபாக பர்யந்தமானது புரஸ்தாத் தந்த்ரம் என்று சொல்லப்படுகிறது.

ஜயாதியாக பரிஷேசன பர்யந்தமுள்ளவை உபரிஷ்டாத்தந்த்ரம், இந்த இரண்டுக்கும் நடுவில் செய்யப்பட்ட ஹோமங்கள் ப்ரதாந ஹோமங்கள் என்றும் சொல்லப்படுகின்றன.

அனைத்துவிதமான கருமங்களிலும்

| | | |
|---|---|---|
| உல்லேகனம் | -- | (கோடு) கீறுகிறது |
| அவோக்ஷணம் | -- | ப்ரோக்ஷிக்கிறது |
| பரிஸ்தரணம் | -- | தர்பத்தைப்பரப்புகிறது |
| தர்வீஸம்ஸ்கார: | -- | தர்வியை சுத்திகரித்தல் |
| ஆஜ்யஸம்ஸ்கார: | -- | நெய்யை சுத்திகரித்தல் |

இவை செய்யவேண்டியது.

விசேஷவிதியினால் சொல்லப்படாதவரை, வலதுகையைக் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டும்.

கர்பாதானம் முதலியவை சரீர ஸம்ஸ்காரங்கள் ஆகையால் க்ரியா பலம் (கர்மத்தின் பலன்) பிறரை அடையும் பக்ஷத்தில் "பரஸ்மை பத விசிஷ்டமாய்" ஸங்கல்பம் செய்யவேண்டும், க்ரியாபலம் தன்னை அடைந்தால் "ஆத்மநேபத விசிஷ்டமாய்" ஸங்கல்பிக்கவேண்டும். கர்மாவை விதிக்கிற வாக்யத்தின்படியாவது பரஸ்மை பதமும், ஆத்மநே பதமும் வருகின்றன. உதாஹரணம்: "நாமதாஸ்யாவ:", "குமாரமுபநேஷ்யே".

ஸமஸ்த கர்மாரம்பங்களிலும் ஸ்நாநம் செய்தவனாயும், சுத்தனாகவும், புண்ட்ரதாரணம் செய்தவனாயும், தலைமயிரைக் கட்டிக்கொண்டும், இரண்டாவது வஸ்த்ரத்தை இடையில் கட்டியவனாகவும் இருத்தல் அவசியம். கால்களை அலம்பி இரண்டுதரம் ஆசமனம் செய்து கிழக்கு முகமாய் தர்பங்களில் உட்கார்ந்து, பவித்ரம் போட்டுக்கொண்டு ப்ராஹ்மணர்களால் அனுமதி கொடுக்கப்பட்டவனாய், மூன்று ப்ராணாயாமங்களைச் செய்து, 'மஹா ஸங்கல்பம'[37] செய்து, நிகழ்த்தவேண்டிய கர்மாவுக்கான ஸங்கல்பத்தைச் செய்யவேண்டும்.][38]

---

37 "பொதுவாக அறிந்திருக்க வேண்டியவை" என்ற தலைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

38 கண்ட பூஷணம் – பக்கம் – 29

*12.* ஸர்வதோ விவாஹஸ்ய சைசிரௌ மாஸௌ பரிஹாப்யோத்தமம் ச நைதாகம்.

*12* மாதங்களில் சிசிர ருதுவைச் சேர்ந்த மாசி, பங்குனி ஆகிய இரு மாதங்கள், மற்றும் க்ரீஷ்ம ருதுவைச் சேர்ந்த ஆடி மாதம் தவிர மற்ற எல்லா ருதுக்களைச் சேர்ந்த எல்லா மாதங்களும் விவாஹத்திற்கு ஏற்றவை.

*13.* ஸர்வாணி புண்யோக்தாநி நக்ஷத்ராணி.

"यानि ज्यौतिषे पुण्योक्तानि नक्षत्राणि यानि पुण्योक्तानि मुहूर्तानि"[39] எந்தெந்த நக்ஷத்திரங்கள் மற்றும் எந்தெந்த முஹூர்த்தங்கள் ஜ்யௌதிஷ சாஸ்திரத்தில் சுபமானவை என்று குறிப்பிடப்பட்டுள்ளனவோ, அவை விவாஹத்திற்கு ஏற்றவை.

*14.* ததா மங்களானி.

"शङ्खदुन्दुभिवीणातूणववादि वादनानि, कुलस्त्रीगीतानि..."[40] சங்கம், துந்துபி, வீணை போன்ற மங்கள வாத்யங்களும், சுமங்கலிகளின் மங்களப் பாடல்களும் விவாஹத்திற்கு மேலும் மங்களங்களை உண்டாக்கும்.

க்ஷவரம் செய்துகொள்ளல், தைல ஸ்நாநம், சுத்த வஸ்த்ரம், நலங்கிடுதல், சந்தனம் பூசிக்கொள்ளுதல், சங்கம், துந்துபி, வீணை முதலிய வாத்யங்கள், குலஸ்த்ரீகளின் பாட்டு, பல வண்ணமுள்ள அழகான ஆடைகள், குடை, கொடி பிடிப்பது முதலியவைகள் சில மங்கள கர்மாக்கள் ஆகும்.

*15.* ஆவ்ருதச்சா ஸ்த்ரீப்ய: ப்ரதீயேரன்.

"यथा जनपदं यथावर्णं यथाकुलं यथास्त्रीपुंसं व्यवस्थिता एव।"[41] மந்திரங்களற்ற செயல்களுக்கு "ஆவ்ருத:" என்று பெயர். க்ருஹ்ய ஸூத்ரத்தால் விதிக்கப்படாத சில மந்திரமில்லாத, குல வழக்கம், ஊர் வழக்கம் போன்ற பரம்பரையாகச் செய்யப்பட்டுவரும் ஸம்ப்ரதாய விஷயங்களில் பெண்களின் அபிப்ராயத்தையும் கேட்டு, ஆண், பெண் மற்றும் அனைத்து வர்ணத்தினருக்கும்

---

39 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 37

40 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 38

41 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 38

மனத்திருப்தியளிக்கும் விதத்தில் செய்யப்படவேண்டும்.

விவாஹத்தின்பொழுது அநேக உள்ளூர் கார்யங்கள் பெண்களுக்கு ஏற்றாற்போல் செய்யப்படுகின்றன. அந்தக் கார்யங்களை பெண்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டு ஊரிலோ, ஊரில் உள்ள வீடுகளிலோ பாரம்பர்ய முறைப்படி செய்யவேண்டும்.

குறிப்பு:- உதாரணமாக பந்தல்கால் முஹூர்த்தம், சுமங்கலி ப்ரார்த்தனை, உளுந்து உடைத்தல், புத்துக்கு பால்தெளித்தல், பிடிசுற்றுதல், போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

*16.* இந்வகாபி: ப்ரஸ்ருஜ்யந்தே தே வரா: ப்ரதிநந்திதா:.

"ये वराः ... मृगशिरसि प्रसूज्यन्ते ... ते दुहितूमद्भिः प्रतिनन्दिताः"[42] இந்வகா எனும் ம்ருகசீர்ஷ நக்ஷத்திரத்தன்று பெண்ணை வரிக்கச் (தேர்ந்தெடுக்கச்) செல்லும் வரர்கள்(மாப்பிள்ளைகள்), மாமனார் வீட்டிலுள்ளவர்களால் இன்முகத்துடன் வரவேற்கப்படுகிறார்கள்.

## 3வது கண்டம்

*1.* மகாபிர்காவோ க்ருஹ்யந்தே.

பெண்ணின் தகப்பனார் அல்லது பாதுகாவலருக்கு இரு பசுக்களை தானம் செய்வது ஒரு ஸம்ப்ரதாயம். அப்படிச் செய்யும்போது மகம் நக்ஷத்திரத்தன்று பசுக்களைப் பெற்றுக்கொள்வது மரபு.

"आर्षे दुहितृमते मिथुनौ गावौ देयौ"[43] என்று ஆபஸ்தம்ப தர்மஸூத்ரத்தில் கூறப்பட்டுள்ளது. மகா நக்ஷத்திரத்தன்று பசுக்களை வாங்கிக்கொள்ளவேண்டும் என்பதால் ஆர்ஷ முறைப்படி செய்யப்படும் விவாஹம் மகம் நக்ஷத்திரத்தன்று செய்யப்படவேண்டும் என்றும், எட்டு வகை விவாஹங்களில்[44], மற்ற ப்ராஹ்ம முறை விவாஹங்களுக்கு இது பொருந்தாது என்றும் அறியப்படுகிறது.

---

*42* "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – *39*

*43* "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – *22*

*44* "ப்ராஹ்மம்,தைவம்,ஆர்ஷம்,ப்ராஜாபத்யம்,ஆஸுரம்,காந்தர்வம்,ராக்ஷஸம்,பைசாசம்"

2. பல்குனீப்யாம் வ்யூஹ்யதே.

உத்திரம் போன்ற நக்ஷத்திரங்களில் மணப்பெண் தகப்பனார் வீட்டிலிருந்து கணவர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படவேண்டும்.[45] படைகள் வகுக்கப்படுவதும் இந்த நக்ஷத்திரத்தில் செய்யப்படுகிறது.

3. யாம் காமயதே .... ... ... ... ப்ராஹ்மணாவேக்ஷா விதி:.

निष्ट्या எனும் ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஒரு பெண்ணை கன்னிகாதானம் செய்துகொடுத்தால், அந்தப் பெண் தன் கணவனிடம் மிகுந்த ப்ரியமுள்ளவளாக விளங்குவாள், எனவே, தன் பெண் தன்னை மணந்தவனிடம் ப்ரியமாக இருக்கவேண்டும் என விரும்புகிற தகப்பன், அவளை ஸ்வாதி நக்ஷத்திரத்தில் கன்னிகாதானம் செய்துகொடுக்கவேண்டும் என்கிறது இந்த ஸூத்ரம்.

4.இந்வகா சப்தோ ம்ருகசிரஸி.

இன்வகா என்பது ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்தைக் குறிக்கும்.

5. நிஷ்ட்யா சப்த: ஸ்வாதௌ.

நிஷ்ட்யா என்பது ஸ்வாதி நக்ஷத்திரத்தைக் குறிக்கும்.

ம்ருகசீர்ஷத்திற்கான வேதவாக்யம்:

सोमायस्वाहामृगशीर्षायस्वाहा। इन्वकाभ्यस्स्वाहौषधीभ्यस्वाहा।[46]

ஸ்வாதிக்கான வேதவாக்யம்: वायुर्नक्षत्रमभ्येतिनिष्ट्याम्।[47]

6. விவாஹே கௌ:.

பெண் வீட்டுக்காரர்கள் மூலமாக வீட்டிலும் ஒரு பசுமாடு ஆலம்பநம் செய்யப்படுகிறது. சுதர்ஸனாசார்யர் இந்த இடத்தில், பசுவின் ஸாந்நித்யம் சொல்லப்படுகிறது என்கிறார்.

7. க்ருஹே கௌ:.

---

45 பூரம் – பூர்வ பல்குனி, உத்தரம் – உத்தர பல்குனி –பல்குனி நக்ஷத்ரங்கள்.

46 "யாஜுஷ மந்த்ர ரத்னாகரம்" – பக்கம் – 72

47 "யாஜுஷ மந்த்ர ரத்னாகரம்" – பக்கம் – 64

பெண் வீட்டுக்காரர்கள் மூலமாக வீட்டிலும் ஒரு பசு ஆலம்பநம் செய்யவேண்டும் எனத்தெரிகிறது. வீட்டிலும் ஒரு பசுவின் ஸாந்நித்யத்தையே குறிப்பிடுகிறார் ஸுதர்சனாசார்யர்.

*8. தயா வரமதிதிவதர்ஹயேத்.*

மதுபர்கத்தினால் அதிதி பூஜை செய்வதுபோல முதல் பசு மூலமாக வரபூஜை செய்யப்படவேண்டும். ஸாங்க்யாயன ஸூத்ரப்படி முதல் பசு மூலமாக பெண்ணின் தகப்பனார் வரனை வரவேற்கவேண்டும்.

*9. யோஅஸ்யாபசிதரஸ்தமிதரயா*

வரனுடைய மரியாதைக்குரிய தகப்பனாரையோ அல்லது ஆசார்யர்களையோ மதுபர்கத்தினால் வேறொரு பசுவைக்கொண்டு பூஜைசெய்யவேண்டும்.

குறிப்பு:- வரனுடன் வரக்கூடியவர்களான அவனது தகப்பனார் முதலியவர்கள் பூஜிக்கப்படவேண்டியவர்கள். ஆசார்யன், ரித்விஜன், மாமனார், ராஜா, வரன் ஆகியோர் மரியாதைக்கு உரியவர்கள். விவாஹத்தில் அவனுடன் வந்தவர்களுக்காகவும் அக்னியில் தனித்தனி அன்ன ஸம்ஸ்காரங்கள் உள்ளன.[48]

*10. ஏதாவத்கோரா.... ..... பிதரோ விவாஹச்ச.*

பசுவின் ஆலம்பநம் செய்யப்படவேண்டிய சந்தர்ப்பங்களாக, அதிதியின் வருகை, அஷ்டகாச்ராத்தம், விவாஹம் இவை சொல்லப்பட்டுள்ளன.[49] வேறு கர்மாக்களில் கிடையாது.

குறிப்பு:-இங்கு "அதிதி:" என்பது வேத அத்யயனம் செய்த ப்ராஹ்மணனையும் "பிதர:" என்பது அஷ்டகை போன்றவற்றையும் குறிக்கும் என்பதால் ஈசான பலி முதலிய யாகங்களில் ஆபஸ்தம்பர் பசுவின் ஆலம்பநம் தேவையில்லை என அபிப்ராயப்படுகிறார்.

---

48 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் –42

49 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 43

*11.* ஸுப்தாம் ருததிம் நிஷ்க்ராந்தாம் வரணே பரிவர்ஜயேத்.

"वरेषु वरणार्थं प्राप्तेषु ..."[50] வரன் வரும்பொழுது தூங்குபவள், அழுகிறவள், வீட்டை விட்டு வெளியே சென்றவள் போன்ற பெண்களை வரன் மணம் செய்துகொள்வதைத் தவிர்க்கவேண்டும் என்பவற்றை இந்த ஸூத்ரத்தினால் விளக்குகிறார்.

"பரி" என்ற சப்தம் ஒரே அடியாக நிராகரிக்கும்படி வலியுறுத்துகிறது.

*12.* தத்தாம் ... .... .... வர்ஷகாரீம் ச வர்ஜயேத்

தத்தாம் - வேறொரு வரனுக்கு நிச்சயிக்கப்பட்டவள்; குப்தாம் - மற்றவர்களால் பராமரிக்கப்படுபவள்; த்யோதாம் - கண்களில் குறைபாடுடையவள்; ருஷபாம் - காளை போன்ற சரீரம் அல்லது நடையை உடையவள்; சரபாம் - ரத்தசோகையால் பீடிக்கப்பட்டவள், அழகற்றவளும் நீலநிற ரோமங்களும் உடையவள்; விநதாம் - முதுகில் கூனல் உடையவள்; விகடாம்: தொடை பருத்தவள், முண்டாம் - தலையில் வழுக்கை உள்ளவள்; மண்டூஷிகாம் - குள்ளமாக அல்லது தவளைபோன்ற சருமத்தை உடையவள், ஸாங்காரிகாம் - வேறு குலத்தில் பிறந்தவள் அல்லது கர்பத்தில் இருக்கும்போது தந்தையை இழந்தவள்; ராதாம் - போகங்களில் அல்லது விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடுள்ளவள் மற்றும் பூப்பெய்தியவள்; பாலீம் - விலங்கு பராமரிப்பு மற்றும் விவசாயப் பணிபுரிபவள்; மித்ராம் - நிறைய நண்பர்களை உடையவள்; ஸ்வநுஜாம் - தன்னைக் காட்டிலும் அழகான தங்கையை உடையவள்; வர்ஷகாரீம் - சமமான வயதுடையவள் அல்லது தான் பிறந்த ஆண்டிலேயே பிறந்தவள் ஆகிய இப்படிப்பட்ட பெண்களை வரன் வரிக்கக்கூடாது.[51]

*13.* நக்ஷத்ரநாமா ... ... கார்ஹிதா: *14.* ஸர்வாச்ச ... ... பரிவர்ஜயேத்

நக்ஷத்ரம், நதி, மரம் இவற்றைப் பெயராகக் கொண்ட

---

*50* "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" பக்கம் – *43*

*51* "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" பக்கம் – *44*

பெண்களைத் தள்ளவேண்டும். பெயரின் முடிவில் ரகாரம், லகாரம் வந்தால் அந்தப் பெண்ணை விடவேண்டும்.[52]

உதாரணம் - கௌரீ, மாலா.

*15. சக்தி விஷயே ... ... ... ஸ்ப்ருசேதி. 16. நாநா பீஜாநி ... ... ... 17. பூர்வேஷாம் .... 18. உத்தமம் பரிசக்ஷதே.*

(பெண்வீட்டார் அநுமதியுடன்) பெண்ணிடம் கீழ்க்கண்ட சோதனையைச் செய்யலாம்.

1.நெல் 2.மேடை மண் 3.வயல் மண் 4.பசுஞ்சாணி 5.சுடுகாட்டு மண் இவற்றை எதிலாவது மறைவாக வைத்து, பெண்ணிடம் காட்டி ஒன்றைத் தொடச் செய்யவேண்டும். பின்னதிலிருந்து முன்னது சிறந்தது என்ற முறையில் பெண்ணின் அதிர்ஷ்டம் அறியப்படுகிறது.

(1) நெல்லைத் தொட்டால் ப்ரஜா ஸம்ருத்தி உண்டாகும், மேடை மண்ணைத் தொட்டால் யாகங்கள் நிறைய செய்யலாம், வயல் மண்ணைத் தொட்டால் தான்ய ஸம்ருத்தி உண்டாகும், பசுவின் சாணி தொடப்பட்டால் கோ ஸம்ருத்தி உண்டாகும், ச்மசாந மண்ணைத் தொட்டால் விபரீதம் உண்டாகலாம்.

(2) இந்தச் செய்கையானது வருங்கால மங்களத்தையும், தன தான்ய ஸம்ருத்தியையும், ஏற்படப்போகும் கஷ்டத்திற்கு சூசகமாகவும் சுப சகுனம் அல்லது அபசகுனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.[53]

*19. பந்துசீல லக்ஷண .... ..... உபயச்சேத்*

சிறந்த குலம், உயர்ந்த பண்பு நலன்கள், நல்ல நடத்தை, தேஹ ஆரோக்யம் போன்ற நற்குணங்கள் உரிய பெண்ணையே மணக்கவேண்டும்.

*20. பந்துசீல லக்ஷண ... .... .... இதி வரஸம்பத்.*

பெண்ணைப்போலவே, வரனிடத்தும் குலம், சீலம், சரீரம், வயது, வித்தை, தனம் மற்றும் பந்துக்கள் இவற்றில்

52 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 45

53 "ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 47

சிறந்தவனைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

21. யஸ்யாம் ... ... ... .... ... ... யேதேத்யேகே.

ஒரு பெண் வரனின் கண்ணுக்கும், மனதுக்கும் பிடித்தம் உள்ளவளானால் அந்தப் பெண்ணால் அவனுக்கு சுகமும் த்ருப்தியும் உண்டாகும். எனவே வரன் மற்ற விஷயங்கள் மீது கவனம் செலுத்தாமல் அவளை விவாஹம் செய்து கொள்ளவும்.[54] இவ்வாறு சில விற்பன்னர்களுடைய அபிப்ராயம்.

குறிப்பு:- ஒரு பெண் மனதிற்குப் பிடித்தவளானால் அவளிடத்தில் உள்ள தோஷங்கள் பெரிதாகத் தெரியாது. வேறு பொருத்தங்கள் இல்லாவிடினும் மனதுக்குப் பிடித்தமான பெண்ணை மணந்து கொள்வது சிறந்தது. எனவே வரன், தோஷமுள்ள ஒரு பெண்ணை தள்ளவேண்டாம் என்று நினைத்தால் இந்த ஸூத்ரம் அதற்குச் சாதகமாக அமைகிறது.

54 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 47

# இயல் - 3

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் - 2

(இவ்வியலில் கன்னிகையை வரித்தல் தொடங்கி - அவளை விவாஹம் செய்து, தன் க்ருஹத்திற்கு அழைத்துச்செல்லுவது வரை விவரிக்கப்பட்டுள்ளது.)

**2வது படலம் – 4வது கண்டம்**

குறிப்பு:- இவ்விரண்டாம் படலத்தில் மட்டும் ஸூத்ர விளக்கங்களுடன் விவாஹ ப்ரஹரணத்திற்கான மந்த்ரங்களுக்கு பொருள், விளக்கங்கள் மற்றும் தாத்பர்யம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

## கந்யா வரண விதி

1. ஸுக்ருதஸ்ஸமவேதாந் ... .... .... ... ப்ரஹிணுயாத்

மனதிற்குப் பிடித்த பெண்ணை தனக்குக் கன்யாதானம் செய்து தருமாறு, கன்னிகையின் பிதாவிடம் சென்று கோரும்படி வேதத்யயனம் செய்த தன் நலன் விரும்பும் நண்பர்களை அல்லது பெரியோர்களை அனுப்பவேண்டும்.[55]

2. தாநாதிதோ த்வாப்யாமபிமந்த்ரயேத.

கன்னிகையை வரிக்கக் கிளம்பும் பொழுது வரன் அவர்களைப் பார்த்து "ப்ரஸுக்மந்தா" முதலிய இரண்டு மந்த்ரங்களைச் சொல்லவேண்டும்.[56]

## வரப்ரேஷணம்

வரப்ரேஷணம் என்பது, விவாஹம் செய்துகொள்ள விரும்புகிறவன் நல்ல ப்ராஹ்மணர்களை பெண் பார்த்து வரச்சொல்லி, (நல்ல பெண் கிடைத்ததும்) அவள் பெற்றோரிடம் இது விஷயமாகப் பேசி முடித்து வருவதற்காக அனுப்புவதே வரப்ரேஷணம் ஆகும்.

## ப்ரயோகம் :-

வரன் (கந்யையை தானமாகப் பெறப்போகிறவன்) - "தர்மப்ரஜா ஸம்பத்யர்த்தம் ச்ரியம் உத்வோடும் வரான் ப்ரேஷயிஷ்யே" - என்று ஸங்கல்பம் செய்துகொண்டு, "ப்ரஸுக்மந்தா" முதலிய மந்த்ரங்களை ஜபித்து, கந்யையின் பிதாவிடம் தன்னைப்பற்றிச் சொல்லி தனக்காக அந்தப் பெண்ணைக் கேட்கச் சொல்லி ப்ராஹ்மணர்களை வேண்டுகிறான்.

---

55 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 49

56 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 50

**பொது விளக்கம்:**

விவாஹ மந்த்ரங்களை இந்த்ரன் அநுக்ரஹிப்பதன் தாத்பர்யம் இந்த மந்த்ரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

**மந்த்ரமும் பொருளும்:**

"ப்ரஸூக்மந்தா" :- துரிதமாகச் செல்லக் கூடியவர்களும் எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் வல்லவர்களுமான ப்ராஹ்மண உத்தமர்களே! நீங்கள் உடனே புறப்பட்டுச் சென்று கன்யையின் பிதாவைச் சந்தியுங்கள். அந்த கன்யையை நான் மணப்பதை இந்த்ர தேவனும் விரும்பி அநுக்ரஹிக்கிறான். ஏனெனில், கல்யாணமாகி தம்பதிகளாக நாங்கள் நடத்தப் போகும் ஸோம யாகத்தில் இந்த்ரனின் ப்ரீதிக்கான ஆகாரங்களை அளிப்போம் என்பதை அவன் அறிந்துள்ளான்.[57]

**ப்ரயோகம் :**

தனக்காகப் பெண் தேடப்போகும் ப்ராஹ்மணர்களுக்கு வழியில் எவ்விதத் தடங்கலும் ஏற்படாமல் இருக்க கீழ்க்கண்ட மந்த்ரங்களால் தேவதைகளை ப்ரார்த்திக்கவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"அந்ருக்ஷரா:" :- ஓ தேவதைகளே! எனக்காகப் பெண்தேடச் செல்லும் ப்ராஹ்மணர்கள் செல்லும் வழியில் கல், முள் போன்ற தொந்திரவுகள் ஏதுமின்றி நல்ல பாதையாக இருக்கச் செய்யுங்கள். அர்யமா, பகன் போன்ற தேவதைகள் எங்கள் தாம்பத்திய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கட்டும்.

3. ஸ்வயம் த்ருஷ்ட்வா த்ருதீயம் ஜபேத்

வரன், வரிக்கப்பட்ட கன்னிகையை விவாஹம் செய்துகொள்ளும் நோக்கில் அவளை நேரில் பார்க்கின்றபொழுது "அப்ராத்ருக்னீம் .... ஸவிதஸ்ஸுவ" என்கிற மூன்றாவது மந்திரத்தைச் சொல்லவேண்டும்.[58]

---

57 குறிப்பு:– வரிக்கப்போகிறவர்கள், கன்னிகையின் வீட்டிற்குப் போய் "'एवं .. ....गोत्राय ... शर्मणे .... गोत्रां .... नाम्नीं (प्रजा) सहत्व कर्मभ्यः युष्मदीयां कन्यां वृणीमहे'" என்று சொல்வார்கள். அப்பொழுது, பெண்ணைச் சேர்ந்தவர்கள் "'शोभनं तथा दास्यामः'" என்று சொல்லுவார்கள். ப்ராஹ்ம விவாஹத்திலும், ஆர்ஷ விவாஹத்திலும் வரப்ரேஷணம் உண்டு. ஏனென்றால் அதில் பணவ்யவஹாரம் இருக்கிறது.

58 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் – 51

**ப்ரயோகம் :-**

தனக்காக வரிக்கப்பட்ட கன்னிகையை அவள் தகப்பனாரிடமிருந்து தானமாகப் பெற்றுக்கொண்டு, அவளை தன் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் முன், அவளிடமுள்ள தோஷங்களை கீழ்க்கண்ட மந்திரங்களைக் கூறி நிவர்த்தி செய்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது ப்ரயோகம்.

**மந்த்ரமும் பொருளும்:**

அப்ராத்ருக்நீம் :- அப்ராத்ரு, அபதி, அபுத்ர என ஸஹோதரர்களின் நலனுக்காகவும், கணவனாகிய தன்னுடைய நலனுக்காவும், பெறப்போகும் புத்ரர்களின் நலனுக்காகவும் முறையே வருணன், ப்ருஹஸ்பதி, இந்த்ரனாகிய தேவர்களிடம் ப்ரார்த்தித்து இந்தக்கன்னிகையிடம் ஏதேனும் தோஷமிருந்து, மேற்சொன்னவர்களை பாதிக்கக்கூடுமானால் அவற்றை நீக்கி நல்ல சுபலக்ஷணங்களை அளிக்கும்படி வேண்டி, அனைவருக்கும் க்ஷேமத்தை ப்ரார்த்திக்கிறான்.

4. சதுர்த்யா ஸமீக்ஷீதே.

நான்காவது மந்திரமான "அகோர சக்ஷு:" என்கிற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே வதுவையும் அவளது கண்களையும் பார்க்கவேண்டும்.

**ப்ரயோகம் :**

கீழ்க்கண்ட மந்த்ரத்தால் பெண்ணின் ஒவ்வோர் அங்கத்தையும் வரன் பார்க்கவேண்டும்

**மந்த்ரமும் பொருளும்:**

"அகோர சக்ஷு:" :- ஏ பெண்ணே! உன் கண்களால் பார்க்கப்படும் பார்வை தோஷங்களற்றவையாகவும் மங்களகரமாகவும் இருக்கட்டும். உன் கணவனை துன்புறுத்தாதவளாய் இரு. கணவனுக்கும், கணவனின் ஸஹோதரர்களுக்கும் இசைவான கருத்துடையவளாக விளங்குவாயாக. தூய நல்லெண்ணங்கள் கொண்டவளாயிரு. க்ரூரமான பார்வையின்றி சாந்தமான குளிர்ந்த நோக்குடையவளாய், கணவனின் இல்லத்தைச் சேர்ந்தோர்க்கு மங்களங்களைச் சேர்ப்பவளாய், நல்ல மனதும், மஹாலக்ஷ்மி போன்ற வதனமும், நீண்ட ஆயுளுடன் சிறந்த மக்களை பெறும் பாக்யவதியாகவும், தன்புக்ககத்திலுள்ள பசு, பக்ஷி உள்ளிட்ட

அனைவரிடத்தும் பற்றும் பாசமும் உள்ளவளாய் இந்த கன்னிகை திகழவேண்டும் என்று மேலும் ப்ரார்த்திக்கிறான்.

अवयवशः ईक्षणं समीक्षणं. ''अघोरचक्षुः ... ... चतुष्पदे''[59] பிறகு வதூ வரர்கள் தர்பாஸனத்தில் உட்கார்ந்து பவித்ரபாணியாய் ''आवाभ्यां कर्माणि कर्तव्यानि प्रजाश्च उत्पादयितव्याः'' என ஸங்கல்பம் செய்து கொள்ளவேண்டும்.

## கந்யா தோஷ நிவ்ருத்தி

5. அங்குஷ்டேந ... .... .... ப்ரதீசீநம் நிரஸ்யேத்.

கட்டைவிரல் மற்றும் அநாமிகா என்னும் மோதிர விரலாலும் தர்பத்தைப் பிடித்துக்கொண்டு "இமம் ... நிர்திசாமி" என்கிற மந்திரத்தால் இரு புருவங்களுக்கு இடையில் கீறி தர்பத்தை மேற்கே எறியவேண்டும்.[60]

### ப்ரயோகம் :

"ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யானி ப்ரஜாச்ச உத்பாதயிதவ்யா:" என்று ஸங்கல்பம் செய்துகொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரத்தால் பெண்ணின் இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள ப்ரதேசத்தில் தர்பத்தால் துடைத்து, தர்பத்தை பின்புறம் வீசவேண்டும்.

### மந்த்ரமும் பொருளும் :

"இதமஹம்" :- ஏ பெண்ணே! உன்னிடம் என்னைக் கொல்லக்கூடிய அலக்ஷ்மீ எனப்படும் அமங்கலத்தன்மை இருந்தால் அதை இந்த மந்திரத்தை ப்ரயோகித்து, இந்த தர்பத்தால் துடைத்து அதை உன்னைவிட்டு அகலும்படியாகச் செய்கிறேன் (என்று பெண்ணின் இரு புருவங்களுக்கு மத்தியில் தர்ப்பையின் நுனியால் துடைத்து மேற்குப்புறம் எறிகிறான்).

6. ப்ராப்த நிமித்த உத்தராம் ஜபேத்.

பெண்ணோ அல்லது பெண்ணிண் தாயார் போன்ற உறவினர்களோ அழுதால் (मात्रादिभिः कन्यकया वा ....) "ஜீவாம்ருதந்தி" என்னும் மந்த்ரம் சொல்லவேண்டும்.[61]

59 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 51

60 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 51

61 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 52

**ப்ரயோகம் :**

பெண்ணின் பிரிவால் கண்ணீர்விடும் தாய் மற்ற பந்துக்களைப் பார்த்துக் கீழ்க்கண்ட மந்த்ரத்தை ஆறுதலாகச் சொல்லவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"ஜீவாம்ருதந்தி" :- இந்தத் திருமணம் என்னும் சுபகாரியத்தினால் பித்ருக்களும், தேவர்களும் த்ருப்தியடைந்து அநுக்ரஹமும், ஆசீர்வாதமும் செய்கிறார்கள். தம்பதிகளும் ஒருவரை ஒருவர் தழுவி மகிழும் ஆனந்தத்தையும், ஒருவருக்கொருவர் ஆதரவையும் அடைகிறார்கள். எனவே ஆனந்தமான இந்தநேரத்தில் அபசகுனமாக அழுதல் கூடாது. கன்னிகையின் தாய் மற்றும் பந்துக்களே! "இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம் வந்திருந்து எங்களை ஆசீர்வதிக்கின்றனர் என ஆண்டாள் அருளிச்செய்துள்ளதை எண்ணிப்பாருங்கள். இவளை நான் மணந்து கொள்வதால் இந்த்ராதி தேவர்கள் மற்றும் இரு குடும்பத்தின் பித்ருக்களும் ஆனந்தம் அடைந்துள்ளனர், எனவே இந்த சுபமான வேளையில் இவளின் பிரிவுக்காக வருந்துவதை விடுத்து, எங்கள் க்ஷேமத்துக்காக அனைவரும் ப்ரார்த்தனை செய்யுங்கள்.

7. யுக்மாந்.... ப்ரஹிணுயாத்.

தோஷ நிவர்த்திக்காக வதுவை ஸ்நாநம் செய்து வைப்பதற்கு நீர் கொண்டுவர "வ்யுக்ஷத்க்ரூரம்" என்கிற மந்திரத்தால் ப்ராஹ்மணர்களை இரட்டைப்படை எண்ணிக்கையில் அனுப்பவேண்டும்.[62]

அநாகுலா வ்யாக்யானத்தில் ஒவ்வொரு மந்த்ரத்திற்கும் ஒரு ஸ்நாநம் என்றும், தாத்பர்ய தர்சன வ்யாக்யானத்தில் ஒரேமுறை ஸ்நானம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**ப்ரயோகம் :**

கீழ்க்கண்ட மந்த்ரத்தால் மணப்பெண்ணை நன்னீராட்ட நால்திசைத் தீர்த்தங்களைக் கொண்டுவரும்படி பார்ப்பனச் சிட்டர்களை ப்ரார்த்திக்கவேண்டும்.

---

62 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 52

**மந்த்ரமும் பொருளும் :**

"வ்யக்ஷத் க்ரூரம்" :- இந்த ஜலத்தினால் இவளிடம் உள்ள கெடுதல் ஏற்படுத்தக்கூடிய தோஷங்கள் விலகட்டும். அப்படிப்பட்ட பரிசுத்தமான ஜலங்களை ப்ராஹ்மணர்கள் கொண்டு வரட்டும். இந்த ஸ்நாநத்தினால் இவள் ஸந்ததிகளை பாதிக்கக்கூடிய எந்த தோஷங்கள் இருந்தாலும் அவை அனைத்தும் விலகட்டும். ஹே! ப்ராம்மணோத்தமர்களே நீங்கள் நான்கு திசைகளிலும் சென்று கன்னிகையின் தோஷங்களை முற்றிலுமாக நீக்கவல்ல புனித தீர்த்தங்களைச் சேகரித்து வாருங்கள்.

*8. உத்தரேண யஜுஷா ... ... ... ... யோக்த்ரேண ஸந்நஹ்யதி.*

அடுத்து வரும், "அர்யம்ணோ அக்நிம்"[63] என்னும் மந்திரத்தால் கன்யையின் தலைமேல் தர்ப வளையத்தை வைக்கவேண்டும். அந்த தர்ப வளையத்தின்மேல் "கேநஸ:" என்ற மந்த்ரத்தால் தெற்குப் பக்கம் த்வாரம் உள்ளபடி ஒரு நுகத்தடியை வைக்க வேண்டும். "சந்தே ஹிரண்யம்" என்ற மந்த்ரத்தால் அந்த நுகத்தடி துவாரத்தில் தங்க வில்லை ஒன்றை (திருமங்கல்யத்தை) வைத்து "ஹிரண்யவர்ணா:" என்ற அடுத்த ஐந்து மந்த்ரங்களைச் சொல்லி வதுவை ஸ்நாநம் செய்து வைக்கவேண்டும். விடப்படும் ஜலமானது, நுகத்தடியின் துவாரம், தங்கவில்லை வழியாக பெண்ணின் சிரசில் விழவேண்டும்.[64]

"பரித்வா கிர்வணோ" என்கிற மந்திரத்தால் மணப்பெண்ணுக்கு கூறைப்புடவையை அளித்து உடுத்தச் செய்யவேண்டும். "ஆசாசாநா" என்கிற மந்திரத்தால் பெண்ணின் இடுப்பை ப்ரதக்ஷிணமாகச் சுற்றி, 'தொப்புளின் வலது புறம் முடிச்சு இருக்கும்படி'[65] யோக்த்ரம் என்னும் மிஞ்சிக் கயிற்றால் கட்டவேண்டும்.

**ப்ரயோகம் :**

பெண்ணின் தலையில் தர்பத்தால் செய்யப்பட்ட வளையத்தையும், <u>அதன்மீது நுகத்தடியையும்</u> வைத்து, அதன்மீது தங்கத்தை

63 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 53

64 ஜலம் சேர்க்கப்படுவதால் நனைந்த ஆடையை மாற்றிக்கொள்வதற்காகவே புடவை வழங்கப்படுகிறது.

65 "கண்டபூஷணம்" –பக்கம் –179

(திருமங்கல்யத்தை) வைத்து அதன்வழியாக தீர்த்தம்விடும்போது சொல்லப்படும் மந்த்ரம்.

**மந்த்ரமும் பொருளும்:**

"அர்யம்ண:" :- இந்த தர்ப வளையம் சுற்றியிருப்பதுபோல், விவாஹ அக்னியைச்சுற்றி ஆதித்யன் முதலான தேவர்களும் அனைத்து பந்துக்களும் இவளைச் சுற்றியிருந்து இந்த விவாஹ பந்தத்தை கண்டு ஆசீர்வதிக்கட்டும். சூர்யனை க்ரணங்கள் சூழ்ந்திருப்பதுபோல் பந்துக்களும் நண்பர்களுமாகிய இந்த ஸபையில் உள்ளோர் அனைவரும் எங்களைச் சூழ்ந்திருந்து சூர்யாதி தேவர்களின் அநுக்ரஹத்திற்காக ப்ரார்த்திக்கும் இந்த வேளையில் என் கோரிக்கைகளை முழுமையாக அருளவேண்டும்படி தேவதைகளை தாங்களும் ப்ரார்த்தனை செய்யுங்கள்.

**ப்ரயோகம் :**

பெண்ணின் தலையில் கீழ்க்கண்ட மந்திரத்தைக் கூறி நுகத்தடியை வைக்கவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும்:**

"கேநஸ: கேரத:" :- சசீ தேவியின் கணவனான இந்த்ர தேவனே! "அபாலா" என்ற பெண்ணின் சரும நோயை, உமது தேரின் சக்கரம் - தேர்த் தட்டு - நுகத்தடி இவற்றிலுள்ள துவாரங்களின் வழியாக ஜலத்தை விட்டு, அவளை நோயிலிருந்து விடுவித்து, அழகுள்ள சரீரத்தை அடையும்படிச் செய்தாய். அதுபோல் இந்தக் கன்னிகையின் சிரசில் வைக்கப்பட்டுள்ள நுகத்தடி துவாரத்தின் வழியாக சேர்க்கப்படும் புனித நீரால், இவளது தோஷங்களையும் போக்கியருளவேண்டும்.

**நுகத்தடி வைப்பதன் தாத்பர்யம்:**

ரிக் வேதத்தில் கூறப்பட்டிருக்கும் அபாலையின் கதை அல்லது வரலாறு: தொழுநோய், சொரி, சிரங்கு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட அபாலை என்ற பெண்ணை எவரும் மணம்புரிய முன்வரவில்லை. அவள் மணம்புரிந்து கணவனுடன் ஸோமனை வழிபட ஆவலாய் இருந்தாள். இந்நிலையில் ஒரு தினம் அவள் ஒரு நதியின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டாள். அவ்வெள்ள நீரில் ஸோம தேவனுக்கு மிகவும் ப்ரியமான ஸோமரஸத்தைக் கொண்ட ஸோமலதை என்னும் கொடி, அவள் கையில் தற்செயலாகக் கிட்டியது. அவள் அதன் ரஸத்தை பல்லால் கடித்துப் பிழிந்து,

ஸோமனை த்யானித்து அவனுக்குச் ஸமர்ப்பித்தாள். இதனால் த்ருப்தியடைந்த இந்த்ரன், அவளை தன் தேர்ச் சக்கரம், தேர்த்தட்டு, நுகத்தடி இவற்றின் வாயிலாக, மந்திரிக்கப்பட்ட தீர்த்தத்தைச் செலுத்தி அவளை நல்ல அழகுள்ள ரூபவதியாக்கினான்.

**ப்ரயோகம் :**

கீழ்க்கண்ட மந்திரத்தைக் கூறி நுகத்தடியில் ஸ்வர்ணத்தை (தற்போது திருமாங்கல்யம்) வைக்கவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும்:**

*"சந்தே ஹிரண்யம்" :-* ஏ பெண்ணே! மந்திர ஜலத்தின் ஸ்பரிசத்திற்காக, உன் தலையில் வைக்கப்படும் இந்த ஸ்வர்ண மயமான தங்கமானது, உனக்கு எல்லாவித நலன்களையும் அளிக்கட்டும். அபாலையை பரிசுத்தப்படுத்திய அதே மந்திரத்தால் நுகத்தடி வழியாக செலுத்தப்பட்டு, தங்கத்தில் தோய்ந்து உன் அங்கங்களை வந்தடையும் இந்த ப்ராஹ்மணர்களால் கொண்டுவரப்பட்ட பரிசுத்தமான புண்ணிய ஜலம், உன்னை ஸகலவிதமான தோஷங்களிலிருந்தும் விடுவித்து, பரிசுத்தமாக்கட்டும். நாம் இரண்டறக் கலந்து எல்லா மங்கலங்களையும் அநுபவிப்போமாக.

**ப்ரயோகம் :**

கீழ்க்கண்ட ஐந்து மந்த்ரங்களால் பெண்ணை நீராட்ட வேண்டும். தற்காலத்தில் நீராட்டத்திற்குப் பதிலாக ப்ரோக்ஷணம் செய்யப்படுகிறது.

**மந்த்ரமும் பொருளும் :**

*1. "ஹிரண்ய வர்ணா:" :-* "ஹிரண்யவர்ணாம் ஹரிணீம்" என்று பெரிய பிராட்டியாரை வேதம் வர்ணிப்பதுபோல், திருமகளைப்போன்ற ஒளிபொருந்திய, தான் எப்போதும் சுத்தமானதும், அனைவரையும் சுத்தப்படுத்தி அனைத்துவித பாபங்கள் தோஷங்களிலிருந்தும் விடுவிக்க வல்லதுமான, இந்த புண்ணிய தீர்த்தங்களால் ஸவிதா தேவன் உன்னை பரிசுத்தமாக்கட்டும்.

*2. "ஹிரண்யவர்ணா:" :-* இப்படிப்பட்ட தீர்த்தங்களால்தான் கச்யபன் எனும் சூரியன் உண்டானான். அக்நியும் இதிலிருந்துதான் தோன்றினார். எந்த தீர்த்தங்கள் தன்னுள் அக்னியை வைத்துள்ளனவோ, அந்த சுபமான தீர்த்தகங்கள் உனக்கு இம்மையிலும், மறுமையிலும் அனைத்து நலன்களையும் வழங்கட்டும். (அக்நிம் கர்பம் ததிரே

- என்று ஜலம் அக்னியைத் தன் கர்பத்தில் வைத்துள்ளது என வேதம் உத்கோஷிக்கிறது. இதன் பொருள் : ஜலம் என்பது இரண்டு ஹைட்ரஜன், மற்றும் ஒரு ஆக்ஸிஜன் ஆகிய வேதிப்பொருட்களால் ஆனது என விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். ஆக்ஸிஜன் இல்லாமல் அக்னி இல்லை).

3. "யாஸாம் ராஜா" :- தீர்த்தத்திற்கு அதிபதியான எந்த வருண தேவன், ஜல மத்தியில் இருந்து கொண்டு, ஜனங்களின் புண்ய பாபங்களை பரிபாலித்து வருகிறாரோ, அந்த வருணனின் அநுக்ரஹத்தால் உனக்கு நன்மைகள் ஏற்படட்டும்.

4. "யாஸாம் தேவா:" :- எந்த தீர்த்தத்தை தேவர்களும் ஆஹாரமாக ஏற்கிறார்களோ, எந்த தீர்த்தங்கள் ஆகாயத்தில் மேக ரூபமாய்த் தவழ்கின்றனவோ, அந்த புண்ணிய ஜலங்களால் உனக்கு எல்லா சுகங்களும் கிட்டட்டும்.

5. "சிவேநத்வா" :- ஏ பெண்ணே! இந்த ஜலங்கள், மங்கலகரமான சுபப்பார்வையை உன்மேல் செலுத்தட்டும். பரிசுத்தமான, புண்ணியகரமான தன் தேஹங்களால் உன் தேஹத்தை நனைக்கட்டும். நெய் தாரையாய் விழுவதுபோல் உன்மேல் விழும் இந்த தீர்த்தங்கள் உனக்கு எல்லா அநுக்ரஹங்களையும் வழங்கட்டும். ஏ வதுவே! மிகவும் மஹிமையுள்ள மங்களகரமான புனிதமான இந்த தீர்த்தங்கள், என் ப்ரார்த்தனைக்காக இங்கு சூழ்ந்துள்ள தேவதைகள் மற்றும் பெரியோர்களின் அருளாசியுடன் உன் சரீரத்தைச் சேர்ந்தவுடன், நீ இனி இம்மியளவும் தோஷங்களற்றவளாய், மிகவும் புனிதமானவளாய், பரிசுத்தையாய் ஆக்கப்பட்டுவிட்டாய், இனி அனைத்தும் உனக்கு மங்களங்களேயாகும்.

**ப்ரயோகம் :**

பெண்ணிற்காக புதிதாக வாங்கி வைத்துள்ள 'கூறைப்புடவை'[66] மற்றும் திருமாங்கல்யத்தை கீழ்க்கண்ட மந்திரத்தால் அவளிடம் வழங்கவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"பரித்வா கிர்வணோ கிர:" ஏ தேவேந்த்ர தேவனே! எப்படி அனைவரிலும் உயர்ந்தோரான தேவ தேவர்கள் அனைவரும் உம்மைச்

66 குறிப்பு:– கூறை வஸ்த்ரம், கோடி வஸ்த்ரம் என்றால் புதிய துணி என்று பொருள்.

சூழ்ந்திருந்து துதிக்கின்றனரோ, அதுபோல் இந்த புதிய புடவையானது, இவளது மேனியைச் சூழ்ந்திருந்து, இவள் எப்போதும் ஸௌபாக்யம் நிறைந்தவளாக இருக்கவேண்டும் என்று அநுக்ரஹிக்கவேண்டும். பரிசுத்தமான மரகதம் வைரம் போன்றவற்றையும், சாளக்ராம பெருமாளையும் நாம் பட்டு வஸ்திரத்தில் வைத்துப் பாதுகாப்பதுபோல, மிகவும் பரிசுத்தமான மங்களகரமான இந்த வதுவை வரன் ஒரு புதிய பட்டு வஸ்திரத்தை கொடுத்துப் பெற்றுக் கொள்கிறான். அந்த வஸ்திரத்தைக் கொடுக்கும்போது, இவளை பரிசுத்தம் செய்ய அநுக்ரஹித்த தேவதைகளை "இந்த வதுவை இந்த பட்டு வஸ்த்ரம் சூழ்ந்திருப்பதுபோல் என்னுடைய ஸ்தோத்திரங்கள் தேவதைகளான உங்களைச் சூழ்ந்திருக்கட்டும், நாங்கள் எப்போதும் க்ஷேமமாக இருக்க அநுக்ரஹியுங்கள்" என்று வேண்டிக்கொண்டு புடவையை வதுவுக்கு ஆசீர்வதித்துக் கொடுக்கிறான். அவள் அதை அணிந்து வந்ததும் மாங்கல்ய தாரணம்.

## திருமாங்கல்ய தாரணம்

**ப்ரயோகம் :**

திருமாங்கல்யம் புஷ்பம் வகையறாவை தாம்பாளத்தில் வைத்து பெரியவர்களிடம் காண்பித்து, அவர்களது, அருளாசி மிகுந்த திருக்கரங்களால் தொடச்செய்து, அநுக்ரஹம் பெறவேண்டும். பின்னர், பெண்ணின் தகப்பனார் மடியில் மணப்பெண்ணைக் கிழக்கு நோக்கி உட்கார வைத்து, மணமகன் மேற்கு நோக்கி இருந்து, கீழ்க்கண்ட வேதமல்லாத ச்லோகத்தைக் கூறி, தன்ஸஹோதரியின் உதவியுடன் மாங்கல்ய தாரணம் செய்யவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"மாங்கல்யம் தந்துநா அநேந மம ஜீவன ஹேதுநா கண்டே பத்நாமி சுபகே த்வம் ஜீவ சரதஸ்சதம்" என்ற ச்லோகத்தினால் மாங்கல்ய ஸூத்ரம் அணிவிக்கிறான்.

"நான் ஜீவித்திருப்பதற்கு ஹேதுவாக(அடையாளமாக), கயிற்றினால் ஆன இந்த மங்கள சூத்திரத்தை உனது கழுத்தில்

அணிவிக்கிறேன் நீ நூறாண்டுகள் சுமங்கலியாக வாழ்வாயாக”[67] என்று வாழ்த்தி திருமாங்கல்யத்தில் ஒரு முடிச்சுப் போடுகிறான்.[68]

இந்த மங்களத்தை ரக்ஷித்தருளும்படி பகவான் விஷ்ணு, மதுசூதனன், புண்டரீகாக்ஷன், கருடத்வஜன் என்னும் திருநாமங்களால் எம்பெருமானை ப்ரார்த்திக்கிறான்.

**ப்ரயோகம் :**

கீழ்க்கண்ட மந்த்ரத்தால் பெண்ணுக்கு யோக்த்ரம் எனும் தர்பத்தால் ஆன கயிறு கட்டப்படவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

“ஆசாஸாநா” :- (முதல் காண்டம் முதல் ப்ரச்நம்) ஓ அக்னி தேவனே! உம்மை நான் ஆராதிக்கும்போது என்னுடன் இருந்து ஒத்துழைக்கும் இந்தப் பெண்ணுக்கு, மனஅமைதி, நல்ல பிள்ளைச் செல்வங்கள், தேவையான செல்வம், நிறைந்த அழகு, இல்லறம் நடத்த தேவையான அனைத்து வசதிகளையும் இவள் உம்மிடம் வேண்டுகிறாள். இவைகளை நீர் இவளுக்கு அநுக்ரஹிக்கவேண்டும் என்பதற்காகவும், இந்த இல்லற வேள்வியில் இவளை இணைத்து பந்தப்படுத்திக்கொள்வதற்காகவும், இவளை இந்த தர்பக் கயிற்றினால் கட்டுகிறேன். நல்ல மனது, குழந்தைகள், ஐஸ்வர்யம், அழகுள்ள சரீரம் என எண்ணிறந்த ஆசைகளுடன் என்னை அடைந்திருக்கும் இந்த வதுவை, அவற்றை அளிக்கவல்ல தேவதைகளின் ஆராதனமான இந்த விவாஹ ஹோமத்திற்காக இந்த தர்பக் கயிற்றினால் சுபமாகக் கட்டுகிறேன்.

---

*67 குறிப்பு:– இந்த திருமங்கல்ய தாரணம் செய்வதற்கான மந்த்ரங்கள் மற்றும் ப்ரயோகங்கள் வெகு அண்மையிலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டும். நாச்சியார் திருமொழி – வாரணமாயிரத்திலும் “மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்” என்றுதான் உள்ளது. “மாங்கல்யம்” பற்றி எதுவும் இல்லை. அடுத்ததாக வரும் தர்பக் கயிறு கட்டும் ப்ரயோகத்தை அநுஸரித்து, நுகத்தடியின்மீது பரிசுத்திக்காக உபயோகப்படுத்தப்பட்ட தங்க வில்லைகளை கயிற்றில் கோர்த்து கழுத்தில் கட்டும் பழக்கம் பின்னாளில் மாங்கல்யதாரணம் என்ற ஒரு ஸம்ப்ரதாயமாக ஏற்பட்டிருக்கவேண்டும்.*

*68 குறிப்பு:– பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் பொழுது மாப்பிள்ளை ஒரு முடிபோடுவதென்றும், பின்னர் மாப்பிள்ளையின் ஸஹோதரி அதாவது பெண்ணின் நாத்தனார் மேலும் இரு முடிகள் போடுவதென்றும் ஸம்ப்ரதாயம்.*

(க்ருஹஸ்தன் மட்டுமே வேள்விகள் செய்ய அதிகாரம் உள்ளவன் என சாஸ்த்ரம் பகர்வதால், இன்று முதல் என் ஆயுள் உள்ளவரை இவள் என்னுடன் இணைந்து அனைத்து வேள்விகளிலும் பங்கேற்றுப் பெறும் நன்மைகளை இருவரும் சமமாக அநுபவிப்போமாக.)

*9. அதைநாமுத்தரயா .... உத்தரே வர:*

பின்னர் வரன் தன் வலது கையினால் வதுவின் வலது கையைப் பிடித்துக்கொண்டு "பூஷாத்வா" என்னும் மந்த்ரத்தை உச்சரித்தபடி, அக்னிக்குச் ஸமீபமாக பெண்ணை அழைத்துச் செல்லவேண்டும். அக்னிக்கு மேற்குப்புறம், வடக்கு நுனி வரும்படியாக பாயைப் பிரித்துப்போட்டு வரன் வடக்கிலும், வது தெற்கிலும் உட்காரவேண்டும்.[69]

**ப்ரயோகம் :**

கீழ்க்கண்ட மந்த்ரத்தை ஜபித்தவாறு அழைத்துச்செல்லப்படும் பெண், விவாஹ அக்னியின் ஸமீபத்தில், அக்னிக்கு மேற்கே கணவனுக்கு வலது பக்கத்தில் உட்கார வைக்கப்படவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"பூஷாத்வா இதோநயது ...." ஏ பெண்ணே! இன்றைய விவாஹ கர்மா முடிந்ததும், பூஷா என்னும் தேவனின் அருளாசியுடன் நான் உன்னை என் வீட்டிற்கு உன் கையைப்பற்றி அழைத்துச் செல்வேன். அப்போது முதல் நீ என் வீட்டிற்கு 'யஜமானியாக'[70] விளங்குவாயாக. பின்னர் நாம் செய்யவேண்டிய நற்காரியங்கள் அனைத்திலும் எனக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறுவாயாக.

ஏ வதுவே! பூஷா, அச்விநீ முதலிய தேவர்கள் உனக்குத் தேவையான பாதுகாப்பை அளித்து, என் க்ருஹத்திற்கு உன்னைக்

---

*69 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 51*

*70 குறிப்பு:– நிச்சயதார்த்த மந்திரத்திலேயே "மூர்தாநம் பத்யுராரோஹ" என்று என் வீட்டிற்கு யஜமானியாக விளங்குவாய் என்று சொல்லப்பட்டது. இங்கு விவாஹபந்தம் முடிந்ததும் மீண்டும் உறுதி செய்யப்படுகிறது. யஜமானி என்றால் தன் அதிகாரத்தால் அனைவரையும் துன்புறுத்தும் உரிமையைப் பெறுவதல்ல! சொத்தைப் பாதுகாத்து, நன்கு பராமரித்து விரிவுபடுத்துபவனே யஜமானன். அதுபோல் வீட்டிலுள்ள அனைத்துச் சொந்தங்கள், வேலைக்காரர்கள், செல்லப் ப்ராணிகள் அனைவரிடத்தும் கனிவுடன் நடந்து, அவர்கள் நன்மைக்காகவே எப்போதும் சிந்தித்து அவர்களை மேன்மையடையச் செய்து, அன்பினால் அரவணைத்துச் செல்பவளே சிறந்த யஜமானியாகும்.*

கொண்டுவிடுவார்கள். இன்று முதல் அங்கு நீ என் க்ருஹத்திற்கு ஈச்வரியாக, ஸர்வ சுதந்திரத்துடன் இருந்துகொண்டு, என்னுடன் அனைத்து யாக யஜ்ஞுங்களையும் செய்து அனைவருடைய அன்பையும் பெறுவாயாக.

*10.* அக்நேருபஸமாதாநாத்.... அபிமந்த்ரயேத்

ஸ்தண்டிலம் கல்பயித்வா என்பதில் ஆரம்பித்து அக்னி ப்ரதிஷ்டை, பரிஸ்தரணம், ப்ரோக்ஷணி, ப்ரணீதி, ப்ரஹ்மவரணம், தர்வி ஸம்ஸ்காரம், பரிதி, இத்மாதானம் என ஆஜ்யபாக ஆஹுதி வரை உள்ள பூர்வாங்க கர்மாக்களை செய்த பிறகு "ஸோம ப்ரதம:"[71] என்பது முதல் இரண்டு ருக்குகளைச் சொல்லவேண்டும்.[72]

குறிப்பு:- அரணிக்கட்டையால் கடைந்தெடுத்த அக்னியாகவோ அல்லது மூன்று தலைமுறை அத்யயனம் செய்த ச்ரோத்ரியன் வீட்டு அக்னியாகவோ இருக்கலாம்.[73]

**ப்ரயோகம் :**

ப்ரஹ்மாவை வரிப்பது, அக்னி கார்யத்திற்கு தேவையான பாத்திரங்களை சுத்தி செய்வது போன்ற பூர்வாங்க விவாஹ அக்னி கார்யங்கள் ஆனதும் வரன் வதுவைத் தொட்டுக் கொண்டு பின்வரும் மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"ஸோம ப்ரதம: ...." ஏ பெண்ணே! முதலில் உன்னை ஸோமதேவன் அடைந்தான், இரண்டாவதாக விச்வாசு என்னும் கந்தர்வ தேவன் அடைந்தான், மூன்றாவதாக அக்னி உனக்குப் பதியானான். (இம்மூன்று தேவர்களும் முறையே பெண்ணுக்குத் தேவையான குணம், இளமை, அழகு இவற்றை அளித்ததாக வேதம் குறிப்பிடுகிறது).

---

71 सोमःप्रथमो ... विविदउत्तरः। तृतीयो अग्निष्टे...इमाम्। "ஏகாக்நிகாண்டம்" பக்கம்-3,4

72 "*ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா*" – பக்கம் –54

73 "*ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:–சடகோபாச்சார்*" – பக்கம் –33

**மந்திரத்தின் தாத்பர்யம் :**

பிறந்தது முதல் பருவ காலம் வரை ஒரு கன்னிப்பெண்ணுக்கு தேவையான குளிர்ந்த தன்மை, வாளிப்பான யௌவனத் (இளமைத்) தோற்றம், அவயவங்களின் சோபை (கவர்ச்சி), முறையே ஸோமன், கந்தர்வன், அக்னி ஆகிய தேவர்களின் அருளால் கிடைக்கப்பெறுகின்றது என்பதே இம்மந்திரத்தின் பொருளாகும். ஸோமன் (சந்திரன்) குளிர்ந்த மனத்தையும், கந்தர்வன் யௌவனத்தையும் (பருவகால அழகு), அக்னி ஒளிவிடும் ரூபத்தையும் அளித்துவருவதையே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறாள் என்று கூறுகிறோம்.

"ஸோமோதததது கந்தர்வாய ...."[74]

---

*74 குறிப்பு:- இந்த மந்திரம்பற்றி ஒரு ஸ்வாரஸ்யமான சரித்திர ஸம்பவமும், அதை ஒட்டி நாத்திகர்களால் எழுப்பப்படும் அபவாதத்திற்கான ஸமாதானத்தையும் இங்கு காண்போம்.*

*நம் பூர்வாசார்யர்களில் ஒருவரான யாமுனாசாரியர் தன் குருவாகிய மஹாபாஷ்யபட்டருக்காக ஆக்கியாழ்வான் என்பவனை எதிர்த்து வாதிடும்போது, அவன் முன்னே, மறுத்து வாதிட இயலாததான 1. உன் தாய் மலடி அல்லள், 2. மஹாராஜா குற்றமற்றவன், 3. மஹாராணி கற்புக்கரசி என 3 வாதங்களை வைத்து, இவற்றை மறுத்து வாதிட்டால் நீர் வென்றவராவீர் என்றார். ஆக்கியாழ்வானால் முடியாதபோது, மஹாராணியின் உத்தரவுப்படி தானே அவற்றை மறுத்து நிரூபித்தார். 1. "ஒருமரம் தோப்பாகாது ஒன்றைப்பெற்றவள் தாயாகாள்" என்ற ஆதார வசனத்தைக் கூறி முதலாவதையும், 2. "குடிமக்களின் குற்றங்கள் கொற்றவனையே சாரும்" என்ற கூற்றால் இரண்டாவதையும், 3. மேற்படி "ஸோம: ப்ரதம:" என்கிற மந்திரத்தை ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொண்டு மஹாராணி கற்புக்கரசி அல்ல என்று வாதிட முடியும் என்றும் நிரூபித்து "ஆளவந்தார்" என்ற பட்டத்தையும் பாதி ராஜ்யத்தையும் பெற்றார் என்பது சுவையான சரித்திர ஸம்பவம்.*

*இதே வாதத்தை நாத்திகர்கள் முன்வைத்து, மூவர் மணந்த பெண்ணை நான்காவதாக ஒருவனுக்கு மணம் செய்து வைப்பதாய் ஒரு இழுக்கான ஸம்ப்ரதாயத்தை கையாளுகின்றனர் என்று ப்ரசாரம் செய்கின்றனர். ஒரே ஒரு சிறிய நிகழ்ச்சியின் சிறிய பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால் எதிலும் சரியான நிலைப்பாட்டை எட்ட முடியாது.*

*"மாநிலம் சேவடியாக தூநீர் வளைநரல் பௌவம் உடுக்கையாக*
*விசும்பு மெய்யாக, திசைகள் கையாக பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக*
*இயன்ற எல்லாம் பயின்றகத்தடக்கிய வேதமுதல்வன் என்ப தீதறவிளங்கிய திகிரியோனே" -- என்றார் பரம்பொருளைப் பாரதம்பாடிய பெருந்தேவனார் நற்றிணையில்.*

*நாத்திகர் வேதத்தை ஆதாரமாகக் கொள்ளாவிடினும் சங்க இலக்கியத்தை மறுக்கமாட்டார்கள் என்பதால் இதை இங்கு எடுத்துக்கொண்டோம். ஆகாயம், காற்று, தீ, நீர், நிலமாகிய ஐம்பூதங்களும் பரம்பொருளின் அங்கம். மனிதன் உள்ளிட்ட அனைத்து ஜீவராசிகளும் ஐம்பூதங்களின் கலவை. அக்நி எனும் தீயைப்போலவே,*

இவளை முதலில் ஸோமன் அநுக்ரஹித்து கந்தர்வனிடம் கொடுத்தான், கந்தர்வன் பிறகு இவளை அக்னியிடம் ஒப்புவித்தான். இப்போது இந்த அக்னிதேவன் இவளையும், புத்ரஸந்தானத்தையும், பரிபாலிக்கத் தேவையான தனங்களையும் எனக்கு அளிக்கவேண்டுமாய் அக்னிதேவனை ப்ரார்த்திக்கிறேன்.

ஸோமன், கந்தர்வன், அக்னி ஆகிய தேவதைகளை, எங்களுக்குத் தேவையான தனங்கள் மற்றும் புத்ர ஸந்தானங்களை அளித்து ஆசீர்வதிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

## பாணிக்ரஹணம்

*11.* அதாஸ்யை தக்ஷிணே ... க்ருஹ்ணீயாத்

வரன் தன் வலது கை கீழ்நோக்கி இருக்கும்படியும், பெண்ணின் வலது உள்ளங்கை மேல்நோக்கி இருக்கும்படியும் வைத்து, பெண்ணின் கையைப் பற்றவேண்டும்.[75]

இந்த கர்மாவுக்கு "பாணிக்ரஹணம்" என்று பெயர்.

பெண்ணின் வலது கையைப் பற்றுதல்தான் விதி.[76] எங்கெல்லாம் ஒரு கையால் செய்யவேண்டுமோ அப்பொழுது வலது கை என்பது தாத்பர்யம்.

---

*மதியமாகிய ஸோமனும், கந்தர்வனும் பரம்பொருளின் அங்கமே, கந்தர்வ, ஸோமர்களின் கூறுகள் சேர்வதாலேயே இளமங்கை சோபிக்கிறாள் என்ற கருத்தையே அந்த வேத வாக்கியம் புலப்படுத்துகிறதே அன்றி ஸோம, கந்தர்வ, அக்நியாதிகள் விவாஹம் செய்து, பின் விவாஹரத்துச் செய்துவிட்ட பெண் என்பதல்ல அதன் பொருள்.*

*மேலும் இந்த நாத்திகர்கள் கவலைப்படுவதெல்லாம் பெண்ணின் கற்பைக் கொச்சைப்படுத்துகிறார்கள் என்பதுதான். இன்றுவரை சாஸ்த்ரம் கூறுவதும், ப்ரயோகம் கூறுவதும் கந்யை என்றுதான். அதாவது பூப்படையாதவள் என்று. பூப்படையாத சிறுமியைத்தான் மூன்று தேவர்களும் தங்கள் அநுக்ரஹத்தால் பூப்படையச் செய்யும் யௌவனத்தை வழங்குகிறார்கள். இதில் கற்பு பற்றிக் கவலைப்பட ஏதுமில்லை. நாத்திகர்கள் இயற்கையை அஃறிணையாகப் பார்க்கிறார்கள், ஆத்திகர்கள் அவற்றை பல்வேறு தேவதைகளாகப் பார்கிறார்கள். இயற்கையோ – தேவதையோ எதுவாயினும், காரணவஸ்துவுக்கு நன்றி பாராட்டித் துதிப்பது, பொருட்படுத்தாமல் விட்டுவிடுவதைக் காட்டிலும் சாலச்சிறந்ததன்றோ?!*

*75 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 55*

*76 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்–சின்னஸ்வாமி சாஸ்த்ரி" – பக்கம் –55*

குறிப்பு:- இந்தக் கர்மாவை நல்ல (முஹூர்த்த) வேளையில் செய்யவேண்டும். இதற்கு முன்பாக அநுஜ்ஞையும், "க்ருஹப்ரீதி" என்னும் ப்ராயச்சித்தமும் செய்யவேண்டும்.[77]

**பாணிக்ரஹணம் தாத்பர்யம் :**

பாணிக்கிரஹணம் என்பதற்கு, பெண்ணின் கையைப் பிடித்தல் என்பது பொருளாகும். கைப்பற்றி உரிமையாக்கிக்கொள்ளுதல் என்றும் பொருள் கொள்ளலாம். பெண்ணின் வலது கையிலுள்ள ஐந்து விரல்களையும் குவித்த முறையில் சேர்த்து மணமகன் பிடிக்க வேண்டுமென்பது விதியாகும். மணமகனின் கை மேலேயும் பெண்ணின் கை அதில் அடங்கியும் இருக்க வேண்டும். இந்தப் பாணிக்கிரஹணம், நல்ல சத்புத்திரர்களைப் பெறுவதற்கும் அதனால் தேவர்களும், ரிஷிகளும், பித்ருகளும் சந்தோஷம் அடைவதற்கும் ஹேதுவாக விளங்குகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. சூரியன், சந்திரன், தேவேந்திரன் முதலான தேவர்கள் இந்தப் பாணிக்கிரஹணத்தால் சிறப்பு அடைந்திருக்கிறார்கள். ஸரஸ்வதி, லட்சுமி, இந்திராணி முதலான தேவதைகளும் பாணிக்கிரஹணத்தை ரக்ஷித்து, ஸகல ஸௌபாக்கியங்களையும் அளித்து இல்லற வாழ்க்கையை இனிது நடத்தி சத்புத்திரர்களைப்பெற உதவட்டும் என்று ப்ராத்திக்கப்படுகிறார்கள்.

மிகவும் போற்றி வணங்குகின்ற ஸ்ரீராமாயணத்தில், சீதையின் கையை ஸ்ரீராமன் கையால் சேர்த்துப் பிடிக்க வேண்டுமென்று வால்மீகி கூறுகிறார். ஜனகன் வம்சமும் - தசரதன் வம்சமும் தழைத்தோங்க இந்தப் பாணிக்கிரஹணம் உதவட்டும் என்ற கருத்தில் "இயம் சீதா மமசுதா" என்ற ஸ்லோகம் மூலம் குறிப்பிட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

மேலும், மாங்கல்யதாரணத்தைக் காட்டிலும் பலமடங்கு முக்கியமானது இந்த பாணிக்ரஹணமும், ஸப்தபதியும் என்பதைக் காண்போம்.

---

77 "ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:" – பக்கம் –142

*நாச்சியார் திருமொழி - வாரணமாயிரத்தில் ....*

தோரணம் நாட்டக் கனாக்கண்டேன்

காளை புகுதக் கனாக்கண்டேன்

அந்தரிசூட்டக் கனாக்கண்டேன்

காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன்

அதிரப்புகுதக் கனாக்கண்டேன்

கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன்

கைபற்றித் தீவலம்செய்யக் கனாக்கண்டேன்

அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்

பொரிமுகம் தட்டக் கனாக்கண்டேன்

மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன்

என்று விவாஹ காரிகைகளை வரிசையாக எடுத்தியம்பும் ஆண்டாள்,

எங்கும் "மங்கல நாண் சூட்டவென்றோ" "மாங்கல்யம் சூட்டவென்றோ" குறிப்பிடாததால், மாங்கல்ய தாரணம் என்ற, க்ருஹ்ய சூத்திரத்தில் சொல்லப்படாத ஒரு நிகழ்ச்சி, அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஒன்றே என்பது தெளிவாகிறது.

*12.* யதி காமயேத ... க்ருஹ்ணீணாத்,

*13.* யதி காமயதே பும்ஸ .... க்ருஹ்ணாதி

பெண்குழந்தைகளை மட்டுமே பெற விரும்புகிறவன் கட்டைவிரலைத் தவிர்த்து மற்ற விரல்களை மட்டும் பிடிக்கவேண்டும். ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்புகிறவன் மற்ற விரல்களை விடுத்து கட்டைவிரலை மட்டும் பிடிக்கவேண்டும்.[78]

*14.* க்ருப்ணாமிதே .... சதஸ்ருபி:

"க்ருப்ணாமிதே" ஆரம்பித்து நான்கு மந்த்ரங்களால்[79] பாணிக்ரஹணத்தை, மேற்சொன்ன ஏதாவது ஒரு முறையில் செய்யவேண்டும்.

---

*78* *"ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 56*

*79* गृभ्णामिते ...देवाः। तेहपूर्वे ... आऽतपत्। सरस्वति....ग्रतः। यएति...कृणोतु॥ *"ஏகாக்நிகாண்டம்"–பக்–4*

**ப்ரயோகம் :**

"அஸ்யா: வத்வா: பாணிக்ரஹணம் கரிஷ்யே" என்ற ஸங்கல்பத்துடன், கீழ்க்கண்ட நான்கு மந்திரங்களைக் கூறி பெண்ணின் வலது கரத்தை, தன் வலது கரத்தால் பற்றவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும்:**

"க்ருப்ணாமி தே ஸுப்ரஜாஸ்த்வாய" :- ஏ வதுவே! தர்மத்தின் வழி நடக்கும்படியான நல்ல குழந்தைகளைப் பெறுவதற்காக உன் திருக்கரங்களைப் பற்றுகிறேன். கணவனாகிய என்னுடன் கிழத்தன்மை அடையும்வரை சேர்ந்து வாழ்ந்து இல்லற சுகங்களைத் துய்ப்பாயாக. பகன், அர்யமா, ஸவிதா, இந்த்ரன் ஆகிய தேவர்கள் சிறந்த இல்லறத்தை நடத்தும்பொருட்டு, உன்னை எனக்கு மனைவியாகவும், உற்ற தோழியாகவும் அளித்துள்ளார்கள்.

"தேஹ பூர்வே ஜநாஸ:" :- இந்த விவாஹ தர்மத்தை ஏற்படுத்தியவர்களான முன் சொன்ன தேவர்களும், முன்னோர்களும் அந்த தர்மத்தை அநுஷ்டித்து வந்தனர். தேவர்களில் தலையாயவனான அக்நியும், முன்னவனான ஸூர்யனும் இந்த விவாஹ தர்மங்களில் ஸம்பந்தம் உடையவர்களாவர்.

"ஸரஸ்வதி" :- சுபமான அழகுள்ளவளும், அன்னத்தைக்(உணவை) கொடுப்பவளுமான ஏ ஸரஸ்வதி தேவியே! நீயும் இந்த பாணிக்ரஹண வைபவத்தை ரக்ஷித்துக் காப்பாயாக. நாங்கள் இந்த ஸபையிலுள்ளோர் அனைவரின் முன்னிலையில், அனைத்து ஜீவராசிகள் சாட்சியாக உன்னைத் துதிக்கிறோம்.

"ய ஏதி ப்ரதிஶ:" எந்த வாயு தேவன், திக்குகள் - உப திக்குகள் என்று எல்லா திசைகளிலும் தடையின்றிச் ஸஞ்சரிக்கின்றானோ, அன்னத்தைக் கொடுக்கும் அக்நியின் தோழனும், ஹிரண்யத்தைக் (தங்கத்தைக்) கையில் அணிந்திருப்பவனுமான அந்த வாயுதேவன், வதுவே! உன்னை என்னிடம் மாறாத, உறுதியான அன்புள்ளவளாகச் செய்யட்டும்.

**ஸப்தபதி**

*15. அதைநாமுத்தரேணாக்நிம் .... ஏகமிஷே இதி*

அந்த மணப்பெண்ணின் வலது காலை, வரன் தன் இடது கையால் பற்றி, (வலது கையினால் அவள் வலக்கரத்தை பற்றியது விடாதபடி) அக்னிக்கு வடக்கு நோக்கியோ அல்லது கிழக்கு நோக்கியோ "ஏகமிஷே" முதலிய ஏழு மந்த்ரங்களால் ஒவ்வொரு மந்த்ரத்திற்கு ஒவ்வோர் அடியாக எடுத்து வைக்கச் செய்யவேண்டும்.

மேற்குநோக்கிச் செல்வதை தவிர்க்கவேண்டும்[80]

अत्र स्वयमेव पादं गृहीत्वा मन्त्रांश्चोक्त्वा निधापयति என்று ஹரதத்தர் வ்யாக்யானம்.

*16. ஸகேதி ஸப்தமே பதே ஜபதி.*

மேற்சொன்ன ஏழு மந்த்ரங்களால் ஏழு அடி நடந்தபின் "ஸகா ஸப்தபதா" முதல் "ஏஹி ஸூந்ருதே" வரையிலான மந்திரத்தை ஜபித்து, ப்ரதக்ஷிணமாக வந்து, அக்னிக்கு மேற்கில் யதாஸ்தானத்தில் அமரவேண்டும்.[81]

**ப்ரயோகம் :**

பெண்ணின் வலது காலை மாப்பிள்ளை இடது கையால் பிடித்து ஒவ்வொரு அடியாக பின்வரும் ஏழு மந்த்ரங்களைச் சொல்லி ஏழு அடி வடக்கு அல்லது கிழக்கு நோக்கி எடுத்து வைக்கவேண்டும்.[82]

---

*80 "ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:" – பக்கம் –147*

*81 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 57*

*82 பெண்ணின் வலது காலை மாப்பிள்ளை இடது கையால் பிடித்து, ஒவ்வொரு அடியாக ஏழு அடி எடுத்து வைப்பதை ஸப்தபதி என்று குறிப்பிடப்படுகிறது. விவாஹ க்ரியைகளிலேயே இது மிகவும் பொருள்பொதிந்தது. ஒரு பெண்ணும், ஆணும் இல்லற வாழ்க்கையை எப்படிப் பகிர்ந்துகொள்ளவேண்டும், எப்படி ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருக்கவேண்டும் என்பதுபற்றி, வேதம் மிக உயர்ந்த உதாரணங்களைக் கொண்டு அழகாக விளக்கிக் கூறியுள்ளது. வரன் வதுவைப் பார்த்து "ஏ பெண்ணே, உன் கையை வேதமந்திர பூர்வமாகப் பற்றி என் சொத்தாக ஆக்கிக்கொண்டபின், என் தர்ம பத்திநியாக என்னுடன் முதன் முதலாக அடி எடுத்து நடந்து வரப்போகிறாய். உன்னை எனக்கு தர்மபத்தினியாக்கிக் கொடுத்த அந்த தேவர்களின் முன்னிலையில் நான் விஷ்ணு பகவானை, உன்னுடனான இல்லறத்திற்கு எனக்குத் தேவையான ஏழுவிதமான*

**மந்த்ரமும் பொருளும் :**

*1.*"ஏகம் இஷே விஷ்ணுத்வாந்வேது" ... முதலடியால் "அன்னங்கள் குறைவின்றி கிடைக்க விஷ்ணு உடன் வரட்டும்"

*2.*"த்வே ஊர்ஜே ..." இரண்டாமடியால் "நம்தேஹத்தின் ஆரோக்யத்தை ரக்ஷிக்க விஷ்ணு தொடரட்டும்"

*3.*"த்ரீணி வ்ரதாய..." மூன்றாமடியால் "வ்ரதாதி கலாசாரங்களை காக்க விஷ்ணு உடன் வரட்டும்"

*4.*"சத்வாரி மாயோபவாய" நான்காவதால் "ஸகல இன்பங்களும் கிடைக்கச்செய்ய விஷ்ணு உடன் வரட்டும்"

*5.*"பஞ்ச பசுப்பய:" ஐந்தாவதால் "பசுக்கள் போன்ற பயனுள்ள வீட்டுப்ராணிகளை நல்கி ரக்ஷிக்க விஷ்ணு உடன் வரட்டும்"

*6.*"ஷட்ருதுப்ய:" ஆறாவதால் "ஆறு பருவ காலங்களும் நமக்குச் சாதகமாக்கியருள விஷ்ணு உடன் வரட்டும்"

*7.*"ஸப்தஸப்தப்ய:..." ஏழாவதால் ஏழுவிதமான யாகங்களும், அதன்பயன்களும் நல்கிக் காக்க விஷ்ணு தொடர்ந்து வரட்டும்" என்று, விஷ்ணுவை ப்ரார்த்திக்கிறான். ஹோதா, ப்ரசாஸ்தா, ப்ராஹ்மணாச்சம்ஸீ, போதா, நேஷ்டா, அச்சாவாக, ஆக்நீத்ர என்ற 7விதமான ருத்விக்குகளை (யாகத்தில் பங்கேற்போர்) கொண்டு செய்யப்படுகிற ஸோம யாகாதி ஸத்கர்மாக்களை அநுஷ்டிக்கும்படியான பாக்யம் ஏற்பட ஸ்ரீமந்நாராயணன் தொடர்ந்து வந்து அநுக்ரஹிக்கட்டும்.

7ம் அடி முடிந்ததும் தொடர்ந்து ஜபிக்கப்படவேண்டிய மிக உயர்ந்த கருத்துடைய மந்த்ரம்:

"ஸகா ஸப்தபதாபவ..." என்கிற மந்திரத்தால் தன் புதிய இளம் மனைவியிடம், தாம் (இருவரும்) எப்படியெப்படி இருக்கவேண்டும் என்பதை பகிர்ந்துகொள்கிறான்...

---

*பாக்கியங்களை அருளும்படி கோரப்போகிறேன்" என்று அவளுடைய காலைப் பற்றி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் ஒவ்வொரு விண்ணப்பமாக வெளியிடுகிறான்....*

*பாணிக்ரஹணம்போல் இதுவும் முடிந்தால்தான் விவாஹம் முழுமைபெற்றதாகப் பொருள்.*

"ஏ வதுவே! ஏழு காலடி வைத்து என்னுடன் தொடர்ந்த நீ, இன்றுமுதல் எனக்கு வேதப்ரமாணமான ஸகி (ஸம்ஸ்க்ருதத்தில் நண்பனுக்கு "ஸகா" என்றும் அதற்கு பெண்பால் "ஸகி" என்றும் பெயர்) ஆகிவிட்டாய். நாம் பரஸ்பரம் நண்பர்களாகிவிட்டோம். இந்த நட்பிலிருந்து நான் ஒருபோதும் நழுவமாட்டேன். நீயும் நம் நட்பில் இந்தப் பாறாங்கல்லைப்போல் (அம்மியைப் போல்) உறுதியுடன் இருப்பாயாக. நான் விஷ்ணுவிடம் வேண்டிப்பெற்ற அனைத்தையும் நாம் இருவரும் சேர்ந்து அனுபவிப்போம். இவ்வுலகில் ஒன்றை நீங்கினால் மற்றொன்று நிலைக்காததான பல்வேறு தத்துவங்கள் போல், நாம் இருவரும் இணை பிரியாதிருப்போம். நான் ஆகாயமானால் நீ பூமியாக இரு, நான் உயிரணுவானால் நீ உயிரைத் தாங்கும் கர்பக்ருஹமாய் இரு, நான் மனமானால் நீ வாக்கு எனும் சொல்லாக இரு (மனதால் நினைக்காத எதையும் வாயினால் பேச இயலாது), நான் ஸாம கானமானால் அந்த கானத்திற்கு கருப்பொருளான ருக்காக (சந்தங்களாக) விளங்கு, இப்படி அநுஸரணையாய் இருவரும் இருந்து இன்பத்தின் சிகரங்களை எட்டுவோம், ஈடுஇணையில்லா புத்திரர்களையும், மஹாலக்ஷ்மிபோன்ற பெண் மகவையும் பெற்று கிழத்தன்மை அடையும்வரை சுகித்துக்கிடப்போம் வா என் ஸூந்ருதே[83]" என்பதாக மிகஉயரிய தாத்பர்யத்தைக் கொண்டது ஸப்தபதி.

83 ப்ரியமானவளே, ஸுகம், சுபம், சௌக்யம், ஸுகந்தம், ஸுந்தரம், ஸுமங்களம், ஸுப்ரம், இன்பம், இனிமை என 'ஸு' என்ற அடைமொழி பெறும் அனைத்து நற்றன்மைகளுக்கும் இலக்கணமானவள் என்ற பொருளுடைய ஓரே வார்த்தை 'ஸூந்ருதே' என்பதாகும்.

**5வது கண்டம்**

## உத்வாஹ ஹோமம்

1.ப்ராக்கே₃ாமாத் ப்ரதக்ஷிணம் .... ப்ரதிமந்த்ரம்

"ப்ராக்ஹோமம்"[84] என்பதால் ஹோமம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன் அக்னியை ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அக்னிக்கு மேல்புறம் கிழக்குநோக்கி உட்காருவது, 'யதாஸ்தானம்' (உட்காரவேண்டிய இடம்) என்பதால் குறிப்பிடப்படுகிறது. வது, வரனை தன் வலது கையால் தொட்டுக்கொள்ளச்செய்து, வரன் "ஸோமாய ஜநிவிதே" முதலிய 16 உத்வாஹ ஹோமங்களைச் செய்யவேண்டும்.

1.ஸோமாய, 2.கந்தர்வாய, 3.அக்நயே, 4.கந்யலா, 5.ப்ரேதோமுஞ்சாதி, 6.இமாந்த்வம், 7.அக்நிரைது, 8.இமாமக்நி:, 9.மாதேக்ருஹே, 10.த்யௌஸ்தே, 11.அப்ரஜஸ்த்தாம், 12.இமம்மே, 13.தத்வா, 14.த்வந்ந:, 15.ஸத்வந்ந:, 16.த்வமக்நே என்கிற 16 ஹோமங்கள் செய்யவேண்டும். முதல் நான்கு மந்த்ரம் யஜுஸ் ஆகும். மற்ற பன்னிரண்டு மந்த்ரங்கள் ருக்குகள் ஆகும்.[85] ஸோமன் முதலிய தேவதைகள் இதில் உத்தேச்யம்.

### ப்ரயோகம் :

பெண்ணை தன் வலது கையால் தனது வலது தொடைப்பகுதியில் தொட்டுக்கொள்ளச் செய்து, பின்வரும் 16 ஹோமங்களையும் வரன் செய்யவேண்டும்.

### மந்த்ரமும் பொருளும் :

1. "ஸோமாய" :- இந்த கன்னியை முதலில் அடைந்து மென்மை, பெண்மை போன்றவற்றை அநுக்ரஹம் செய்த ஸோமதேவனுக்கு இந்த ஹோமம் செய்கிறேன்.

2. "கந்தர்வாய" :- இப்பெண்ணை இரண்டாவதாக அடைந்து அவளுக்கு இளமை, அழகு போன்றவற்றைக் கொடுத்த கந்தர்வனுக்கு இந்த ஹோமத்தைச் செய்கிறேன்.

84 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 59

85 "ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:" வடுவூர் தேசிகாசார்யார் – பக்கம் –148

3. "அக்நயே" :- இந்தப் பெண்ணை மூன்றாவதாக அடைந்து, அவளுக்கு ஒளிவீசும் ரூபத்தையும், அங்க லாவண்யங்களையும் அருளிச்செய்த அக்நி தேவனுக்கு இந்த ஹோமம் செய்கிறேன்.

4. "கந்யலா" :- இவள் பிறந்த வீட்டை விட்டு கணவனின் இல்லத்தை அடைவதால், இவள் தன் 'கந்யை' என்ற தீக்ஷை அதாவது நியமத்திலிருந்து நீங்கிவிட்டாள்.

5. "ப்ரேதோமுஞ்சாதி" :- இஷ்டங்களை பூர்த்தி செய்து வைக்கும் ஓ இந்த்ர தேவனே! இவளுக்கு அவள் பித்ரு க்ருஹத்திலுள்ள அபிமானங்களை (பற்றுதலை) விடுவிக்கவேண்டும். கணவனாகிய என்னுடைய குலத்தில் பற்றுதல் மிகவேண்டும் (பற்றுதல் இல்லாமல் போய்விடக் கூடாது). இவளுக்கு நல்ல புத்திரர்களும், நல்ல ஸம்பத்துக்களும் வழங்கி இவளை இந்த புக்ககத்தில் மனம் லயித்துப்போகும்படியாகச் செய்வீராக.

6. "இமாந்த்வம்" :- வேண்டியவர்களின் அனைத்து வேண்டுதலையும் மழை போல் பொழிந்து நிறைவேற்றும் இந்த்ரனே! இவளுக்கு நிறைய பிள்ளைச் செல்வங்களை ஆசீர்வதியும். பத்து குழந்தைகளை இவள் பெற்றாலும் 11வதாக (கடைசியாக)ப் பெற்ற குழந்தையிடத்தில் அன்பு செலுத்துவதுபோல் பதியாகிய என்னிடம் எப்பொழுதும் இவள் அன்பு செலுத்தவேண்டும்.

7. "அக்நிரைது" :- ஓ அக்நி மற்றும் வருண தேவர்களே! இந்த பெண்ணிடம் பிறக்கவுள்ள புத்திரர்களுக்கு அபம்ருத்யு எனும் அகால மரணம், துர்மரணம் எதுவும் நேரிட்டுவிடாமல், இவள் எக்காரணம் கொண்டும் புத்ர சோகத்தினால் இவள் கண்ணீர்விட்டு அழும்படியான நிலை இவளுக்கு ஏற்படாமலிருக்க ஆசீர்வதிப்பீர்களாக.

8. "இமாம் அக்நி:" :- விவாஹ அக்னி இவளை ரக்ஷிக்கட்டும். இவளிடம் பிறக்கும் பிள்ளைகள் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக இருக்கட்டும். இவள் மடியில் எப்பொழுதும் ஒரு குழந்தை தவழ்ந்த வண்ணம் இருந்து - அவள் மடியை ஒருபோதும் வெறுமையாக்காமல் இருக்கட்டும். நீண்ட ஆயுளை உடைய அந்தக் குழந்தைகளை, தினமும் காலை உறங்கி எழுந்ததும் கொஞ்சி உறவாடும்படியான பாக்யத்தைக் கொடுப்பீராக.

*9.* "மாதே க்ருஹே" :- ஹே கல்யாணி! உன் வீட்டில் நள்ளிரவில் அழுகுரல் கேட்கவேண்டாம். அழச் செய்யும் அனைத்து துர்தேவதைகளும் உன்னிடமிருந்து விலகி வேறிடத்திற்குச் செல்லட்டும். தலைவிரி கோலமாய் மார்பிலடித்துக்கொண்டு அழவேண்டிய நிலை உனக்கு எப்போதும் வரவேண்டாம். உன் கணவன், குழந்தைகள் நீண்ட ஆயுளுள்ளவர்களாகட்டும். நீ அவர்களுடன் காலமெல்லாம் சந்தோஷமாக இருப்பாயாக.

*10.* "த்யௌஸ்தே ப்ருஷ்டம்" :- உன் ப்ருஷ்டத்தை (முதுகு, ஆஸனம் ஆகிய பின் பகுதிகளை) ஆகாசம் ரக்ஷிக்கட்டும். உன் இரு துடைகளையும் வாயு ரக்ஷிக்கட்டும். அச்விநீ தேவர்கள் உன் ஸ்தனங்களை (மார்பகங்களை) ரக்ஷிக்கட்டும். உன் குழந்தையை ஸவிதா எனும் சூரிய தேவன் காப்பாற்றட்டும். பிறந்த குழந்தை துணி உடுத்தும் காலம் வரும் வரை ப்ருஹஸ்பதி தேவன், அச்விநீ தேவர்களும் காப்பாற்றட்டும்.

*11.* "அப்ரஜஸ்தாம்" :- உன்னிடம் குழந்தை பெறமுடியாத மலட்டுத்தன்மை இருந்தாலும், உனக்கு பிறந்த குழந்தைக்கு கேடுவிளைவிக்கும் புத்ர தோஷம் இருந்தாலும், மற்ற எந்த பாபகரமான தோஷங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் வாடிய பூவை தலையிலிருந்து எடுத்து எறிவதுபோல், உன் சத்ருக்களாகிய பகைவர்களிடம் எறிகிறேன்.

*12.* "இமம்மே வருண" :- ஹே வருண தேவனே! என் வேண்டுகோளைக் கேளும். கேட்டு, எனக்கு இப்பொழுதே சுகத்தைத் தாரும். எனது ரக்ஷணத்திற்காக உம்மை துதிக்கிறேன்.[86]

*13.* "தத்வாயாமி" :- ஓ வருண! அனைவராலும் துதிக்கப்படுபவரே! உம்மை, வேத மந்திரத்தால் துதித்து, ஹவிஸ் - ஆகாரத்தால் த்ருப்தி செய்விப்பவனாக உம்மிடம் எனது நலனுக்காக வேண்டிக்கொள்கிறேன். நீர் கோபம் கொள்ளாது எனது வேண்டுதலைச் செவிமடுக்கவேண்டும். எனது ஆயுளை அபஹரிக்காதீர்.

*86 12. இமம்மே வருண, 13. தத்வாயாமி, 14. தவன்னோ அக்நே, 15. ஸத்வந்நோ அக்நே, 16. துவமக்நே அயாஸி ஆகிய மந்த்ரங்கள் உபநயனம் மற்றும் சில சுப கர்மாக்களிலும் ப்ரயோகிக்கப்படுகின்றன.*

14. “த்வந்நோ அக்நே” :- ஹே அக்நி தேவனே! நீர் அனைத்தும் அறிந்தவர். வருண தேவனுக்கு எம்மீது இருக்கும் கோபத்தைப் போக்கும். நீர் மிகவும் வணங்கத்தக்கவர். அந்தந்த தேவதைகளுக்குரிய ஹவிஸ்ஸுக்களை அவர்களின் ரகசியமான இடங்களை அறிந்து அங்கு கொண்டுபோய்ச் சேர்த்து அவர்களை எளிதில் மனநிறைவு பெறச்செய்யக் கூடியவர் (யத்ரவேத்த வநஸ்பதே - எனும் ஆஹுதி ஸம்ஸர்க்க ப்ராயச்சித்த ஹோம மந்த்ரத்தில் அக்னிபற்றி இவ்வாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது). அதிக தேஜஸ் உள்ளவரே, பகைவர்களினால் எமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் காப்பீராக.

15. “ஸத்வந்நோ அக்நே” :- தேவர்களுள் முதல்வரான அக்னிதேவனே! எங்களைப் பாதுகாக்க விடியற்காலத்திலும் - எப்பொழுதும் எம்முடன் இரும். தன் பாசத்தைவீசி கோபத்தினால் எம்மைத் துன்புறுத்த வரும் வருணனை சாந்தப்படுத்துவீராக. எம்முடைய மனவேட்கையை நிறைவேற்றும். என்னால் அளிக்கப்படும் இந்த சுவையுள்ள ஹவிஸ்ஸை அருந்தும். நாங்கள் எப்போது அழைத்தாலும் வந்து எமது விண்ணப்பத்தை நிறைவேற்றித் தாரும்.

16. “த்வமக்நே” :- ஓ அக்னி தேவனே! நீர் போற்றத்தக்கவர். துதிப்பவர்களின் துதியை ஏற்க வருபவர். மிகவும் எளிமையாக அடையத்தக்கவர். நாங்கள் வழங்கும் தேவ உணவை அந்தந்த தேவதைகளிடம் கொண்டுபோய் சேர்ப்பித்து, அதனால் வரும் பலனை எமக்குத்தாரும். (அயா - எளிதில் நெருங்கத்தக்கவர்). “அக்நிதேவன் மற்ற தேவர்களுக்கு வழங்கப்படும் ஹவிஸ்ஸை சுமந்து செல்பவர், அதனால் அந்த அக்நிதேவன் வருண தேவனை நிர்ப்பந்தித்து என் கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்யவேண்டும். மேலும் அக்நி பகவான் எப்போதும் நாங்கள் அளிக்கும் ஹவிசுகளைப் ஏற்றுக்கொண்டு எங்களுக்கு நல்லாசிகள் வழங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

## அச்மாரோஹணம் - லாஜஹோமம்

2. அதைநாமுத்தரேணாக்நிம் .... ....ஆதிஷ்டேதி

பாத்ர ஸாதனத்தின்போது, அக்னிக்கு வடக்கில், பொரிக்கு கிழக்காக வைக்கப்பட்டுள்ள அம்மியின் (பாறாங்கல்லின்) அருகில், பெண்ணை அழைத்துச் சென்று, "ஆதிஷ்டேமம்" என்கிற மந்திரத்தை ஜபித்து, அவளது வலது காலை, வரன் தன் இடது கையால், அம்மியின் மேல் எடுத்து வைக்கவேண்டும்.[87]

பின்னர், இரு கால்களாலும் பெண் அம்மியின்மேல் ஏறி நிற்கவேண்டும். வலதுகையினால் வதுவின் வலது கரத்தைப் பிடித்தபடி, இடது கையினால் வதுவின் பாதத்தை பிடித்து அம்மியில் எடுத்து வைப்பது ஸம்ப்ரதாயம்.[88]

### ப்ரயோகம் :-

வரன் பெண்ணின் வலது காலை எடுத்து அம்மி அல்லது பாறாங்கல்லின் மீது வைத்து, இந்த மந்த்ரத்தை அவளைப் பார்த்துக் (அவளிடம்) கூறவேண்டும்.

### மந்திரமும் பொருளும் :

"ஆதிஷ்டேமம் அஸ்மாநம் அஸ்மேவத்வம் ஸ்திராபவ. அபிதிஷ்ட ப்ரதந்யத: ஸஹஸ்வ ப்ரதநாயத:".[89]

"ஹே வதுவே! நீ இந்தப் பாறாங்கல்லின் மேல் ஏறி நில். இதனால் அதன் உறுதித்தன்மை உனக்குப் புலனாகும். நீ உறுதியிலும், பொறுமையிலும் இந்தக் கல்லைப்போல் இருந்து, உன்னை எதிர்ப்பவர்களிடத்தும், உன் நற்பண்புகளை குலைத்துக் கெடுவழியில் இட்டுச்செல்பவர்களிடத்தும், குடும்பத்துக்கு கேடுவிளைவிக்கும் சத்ருக்களிடத்தும் உறுதி, பொறுமை காத்து, வெல்வாயாக. நம்மிருவரிடையே இந்த திருமண பந்தத்தால் ஏற்பட்ட நல்ல நட்பிலும் இந்த உறுதித்தன்மையை காத்துவருவாயாக.

---

87 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 60

88 "ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:" – பக்கம் –149

89 "ஆதிஷ்டேமம்" என்ற மந்திரம் உபநயனத்திலும் எடுக்கப்பட்டுள்ளது.

*3. அதாஸ்யா அஞ்சலா.... .... 4. தஸ்யா: ஸோதர்யோ*

வதுவின் கைகளில் நெய்யினால் தடவி/உபஸ்தரணம் செய்து பெண்ணின் ஸஹோதரனைக் கொண்டு நெல்பொரியை இரு முறை அல்லது மும்முறை வதுவின் கைகளில் சேர்க்கச் செய்து, அதன்மேல் சிறிது நெய்விட்டு அபிகாரம் செய்யவேண்டும்.[90]

குறிப்பு:- ஸஹோதரியைக் கொண்டு பொரி சேர்க்கச் சொல்லவேண்டும் என்று "அநாகுலாவில்" - ஹரதத்தரின் அபிப்ராயம்.

ஸ்ரீவத்ஸ கோத்ரத்தைச் சேர்ந்தவர்கள் மூன்றுமுறை பொரி சேர்க்கவேண்டும் என்று தாத்பர்யதர்சனத்தில் கூறப்பட்டுள்ளது.[91]

*5. ஜுஹோதீயந்நாரீதி.*

"वरस्यैव जुहोतिक्रिया। पात्रस्थानीयो वध्वञ्जलिः"[92] என்று வ்யாக்யானம் உள்ளபடியால், வரன் "இயம்நாரீ:" என்ற மந்த்ரத்தால் பொரிஹோமம் செய்யவேண்டும். பெண்ணின் கை பாத்ரமாக பாவிக்கப்படுகிறது.

விவாஹத்திற்கு அங்கமான எல்லா கர்மாக்களும், வரனும், வதுவும் சேர்ந்தே செய்யவேண்டும். இருவரும் ஹோமத்திற்கு யஜமானன் என்ற தகுதியுடையவர்கள். ஆகிலும், வரனே எல்லா க்ரியைகளும் செய்யவேண்டும், பெண் துணையாக இருக்கவேண்டும் என்பது "தாத்பர்யதர்சன" வ்யாக்யானம்.[93]

*6. உத்தராபி.... ....ஸ்தாபயதி ததா புரஸ்தாத்*

"துப்யமக்ரே" எனும் அடுத்த மூன்று மந்த்ரங்களை ஜபித்தபடி அக்னியை வலம் வந்து, முன்போலவே அம்மி மிதிக்கவேண்டும்.[94]

*1.*तुभ्यम्ग्रेपर्यवहन् ....प्रजयासह। *2.*पुनःपत्नीमग्नि.... शरदश्शतम्। *3.*विश्वाउत... महिद्विषः।[95]

---

90 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 61

91 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 61

92 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 61

93 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 61

94 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 62

95 ஏகாக்நிகாண்டம் – பக்கம் – 7

7. ஹோமச்சோத்தரயா

“அர்யமணம்நு” மந்த்ரத்தால் மீண்டும் பொரியினால் ஹோமம்.

8. புந: பரிக்ரமணம் 9. ஆஸ்தாபநம்

“துப்யமக்ரே” எனும் மூன்று மந்த்ரங்களால் முன்போலவே, அக்னியை ப்ரதக்ஷிணம் செய்து முன்போலவே அம்மிமிதித்தல்.

10. ஹோமச்சோத்தரயா 11. புந: பரிக்ரமணம்

அடுத்து “த்வமர்யமாபவஸி” எனும் மந்திரத்தால் மீண்டும் பொரியினால் ஹோமம். மீண்டும் “துப்யமக்ரே” எனும் மந்திரத்துடன் அக்னி ப்ரதக்ஷிணம்.

**ப்ரயோகம் :-**

வரன் வதுவின் கைகளில் நெய்யினால் துடைத்து, மைத்துனன் பொரி சேர்த்தவுடன் அதன்மீது மீண்டும் அபிகாரம் செய்து அவளின் இரு கைகளுக்கு இரு புறமும் தன் கைகளை வைத்துக்கொண்டு, இருவருமாக அக்னியில் பொரியை ஹோமம் செய்யவேண்டும்.

**தாத்பர்யம் :**

இந்தப் பொரி இடுதல் என்னும் வழக்கம், அக்கினியின் முன்னால் தம்பதிகள் உட்கார்ந்திருக்க, பெண்ணின் ஸஹோதரன் நெற்பொரியை எடுத்து இரண்டு தடவை பெண்ணின் இரு கைகளிலும் போடவேண்டும். இரு கைகளிலும் ஏந்தி வாங்கிக் கொண்ட அந்தப் பொரியை, மணமகன் மணமகளின் கையைப் பிடித்து அக்கினியில் சேர்ப்பிக்க வேண்டும். இந்த லாஜஹோமம் என்பது சூரியனை உத்தேசித்துச் செய்யப்படுவதாகும். சூரியன் உலகத்தில் முதல் ப்ரகாசமான கடவுளாகக் கீர்த்தியோடு பிரகாசிப்பதைப் போன்று தன் கணவனும் ஸகல கீர்த்திகளோடு பிரகாசிக்க வேண்டுமென்ற பெண்ணின் பிரார்த்தனையும், சூரியனோடு இணை பிரியாதிருக்கும் சாயாதேவி போன்று தாமும் ஒற்றுமையாகப் பிரியாது எந்தக் காரியத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்ற வரனின் ஸங்கல்பமுமாக இந்த ஹோமத்தின் தத்துவம் கூறப்படுகிறது.

பொரியினால் மூன்று ஹோமம்.

**மந்திரமும் பொருளும் :**

*1. "இயம் நாரி" :* பொரியினால் ஹோமம் செய்யும் இந்த வது, தன் கணவன் நூறு வருடங்கள் ஜீவித்திருக்கும்படி அக்னிதேவனை வேண்டிக்கொள்கிறாள்.

*2. "அர்யமணம் நுதேவம்":* அர்யம தேவனை பொரியினால் பெண்கள் யாகம் செய்து பயனடைந்துள்ளனர். அதுபோல் இந்த-வது அர்யம தேவனுக்கு இந்த பொரிஹோமத்தைக் காணிக்கையாக்கி பித்ருகுலத்திலிருந்து, பதிகுலத்திற்கு வந்துள்ள என்னால் இந்தகுலத்திற்கு எல்லா நன்மைகளும் ஏற்படவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறாள்.

*3. "த்வமர்யமாபவஸி" :* "அக்நி தேவனே! ஸோம, கந்தர்வர்களுக்குப் பின், அக்நியாகிய நீர்தான் இந்த பெண்ணை கடைசீயாக ரக்ஷித்து, ஒரு தந்தைபோல் (தாதா) இந்த வரனுக்கு அளித்துள்ளீர். அதாவது இந்தக் கன்னிகையை நீர்தான் இவனுக்கு தானமாகக் கொடுத்துள்ளீர். ஏனெனில் அவர்களது அனைத்து நலன்களையும் நீரே நிர்வகிக்கிறீர். நட்ட செடிக்கு நீர்வார்த்து வளர்த்தவருக்கு, பிற்காலத்தில் அவை காய், கனிகளை தருவதுபோல் இவர்கள், பசுவின் பால், நெய் போன்றவற்றால் உம்மை துதித்துத் த்ருப்தி ஏற்படுத்துகின்றனர். இனி இவள், இந்த வரனின் குடும்பத்தில் வேரூன்றி, இருவரும் ஒத்த மனதுடையவர்களாய் வாழ்க்கை நடத்திடத் தேவையான அனைத்து க்ஷேமங்களையும் அருள்வீராக".

## அக்னி ப்ரதக்ஷிணம்

**ப்ரயோகம் :**

ஒவ்வொரு முறையும் ஹோமம் செய்தவுடன், வரன் வதுவின் கையைப் பற்றி, அக்நியைச் சுற்றி கீழ் வரும் மந்திரத்தை ஜபித்தபடி வலம் வரவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"துப்யமக்ரே பர்யவஹந் ...." : ஹே அக்நி தேவனே! கல்யாணப் பெண்களுக்கு அபிமானி தேவதையான ஸூர்யனின் புத்ரியான ஸூர்யாவை நீர் மணந்திருப்பதால் உலகிலுள்ள

அனைத்து கல்யாணப்பெண்களுமே, உம்முடைய அநுக்ரஹத்திற்குப் பாத்திரப்பட்டவர்களே! ஆகையால் இந்தக்கன்னிகையை ஸந்ததி அபிவ்ருத்திக்கு ப்ரதிபந்தகமான அதாவது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தோஷமில்லாத பெண்ணாக ஆசீர்வதித்து அநுக்ரஹிப்பீராக.

"புந: பத்நீம்" :- இவள் நீண்ட ஆயுளை உடையவளாகவும், அழகுள்ளவளாகவும் விளங்கும்படி அநுக்ரஹிக்கவேண்டும். இவளது கணவனாகிய என்னையும் நூறாண்டு வாழ ஆசீர்வதிப்பீராக.

விச்வாவுத த்வயாவயம் :- ஜலம் ஓடும் கால்வாயை ஆடு மாடுகள் சுலபமாகத் தாண்டுவதுபோல், எங்கள் பகைவர்களால் ஏற்படுத்தப்படும் அனைத்துத் தடைகளையும் உம் அருளால் நாங்கள் சுலபமாக தாண்ட, அருள்புரியவேண்டும்.

குறிப்பு:- இங்கு செய்யப்படும் நான்கு ப்ரதக்ஷிணங்களின் க்ரமம் பற்றி "கபர்த்தி காரிகையில்"[96] குறிப்பிடப்பட்டுள்ளது.

*12. ஜயாதி ப்ரதிபத்யதே*

இதன்பின் பெண் தன்னைத் தொட்டுக்கொண்டிருப்பதை விலக்கி (தொட்டுக்கொள்ளாமல்), ஜயாதி, பரிஷேசனம் வரையிலான உத்தராங்க கர்மாக்களைச் செய்து, ப்ரணீதாமோக்ஷணம் செய்து, ப்ரஹ்மாவுக்கு தக்ஷிணை அளித்து உத்வாஸனம் செய்யவேண்டும்.[97]

இங்கு "ஸம்யை" ப்ரயோகம் என்பதால் அபோஹனம் என்னும், பரிதிகளை நீரில் நனைத்து, அப்புறப்படுத்துதலைச் செய்யவேண்டும். ஸக்குஸ்ராவ ஹோமம் கிடையாது.[98]

---

96 *"ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:"–பக்கம் 150ல் கண்டுள்ளதாவது:* अत्रापि क्वश्चिद्विचारः विवाहे प्रकरण द्वये अग्नेः प्रदक्षिणं भवति। सप्तपद्याः अनन्तरं प्रधानाज्यहोमात् पूर्वं एकं प्रदक्षिणं भवति। तथा प्रधानाज्यहोमानन्तरं लाजहोमेषु त्रिः परिक्रमणं भवति। अत्र कपर्दी : "सोमायाज्याहुतेः सब्रह्माग्निप्रदक्षिणम्। लाजानामाहुतेः पश्चात् ब्रह्माप्येकोबहिर्भवेत्।" - தம்பதிகளின் ரக்ஷணத்திற்காக, முதல் ப்ரதக்ஷிணத்தில் ப்ரஹ்மாவை உள்ளிருத்தியும், மற்ற லாஜஹோமத்தின் பின்னர் செய்யப்படும் ப்ரதக்ஷிணங்களில், யாரையும் உள்ளே இருத்தாமல், அக்னி, கும்பம் உள்ளிட்டவற்றைமட்டும் ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும் என்று தெளிக.

97 *"கண்டபூஷணம்" – பக்கம்–183*

98 *"ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோக:" – பக்கம் – 151 :* अत्र शम्याः अतः अपोहनं। न सँस्राव होमः।

13. பரிஷேசநாந்தம் .... ப்ரவாஹாரயேத்

பரிஷேசநம் முடித்து, "ப்ரத்வாமுஞ்சாதி" இரு மந்த்ரங்களால் யோக்த்ரத்தை அவிழ்க்கவேண்டும்.

குறிப்பு:- ப்ரணீதா மோக்ஷணத்திற்குப் பிறகு, யோக்த்ர விமோசனம் செய்ய வேண்டும்.[99]

புறப்படும் பொழுது யோக்த்ர விமோசனம் செய்யக்கூடாது.[100]

**ப்ரயோகம் :**

பெண்ணின் இடுப்பில் கட்டப்பட்ட தர்பக் கயிற்றை கீழ்க்கண்ட மந்த்ரத்தை உபயோகித்து அவிழ்க்கவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும் :**

"ப்ரத்வாமுஞ்ஜாமி" :- ஹே வதுவே! சற்று முன், ஸவிதா தேவன் உன்னை வருண பாசத்தால் கட்டினார். அதை நான் அவிழ்த்துவிடுகிறேன். நாமிருவரும் பல ஸத்கர்மாக்களை அநுஷ்டித்து ப்ரஹ்மலோகம் அடைவோம்.

"இமம் விஷ்யாமி" :- நல்லெண்ணத்துடன் ஸவிதா தேவன் உன்னைக் கட்டிய யோக்த்ரம் எனும் தர்பக் கயிற்றை நீக்குகிறேன். என்னோடு உன்னையும் ப்ரஹ்மலோகத்தில் (ப்ரஹ்மானந்தக் கடலில்) ஸுகமாக இருக்கச் செய்கிறேன்.

## அக்னி உபஸ்தானம்

**ப்ரயோகம் :**

ஒவ்வொரு ஹோமத்தின் முடிவிலும், அந்த ஹோமத்தில் ஏற்பட்ட பிழைகளைப் பொருத்தருளும்படியும், ஹோமத்தால் கிடைத்த நன்மைகளுக்குக் காரணமான அக்நி பகவானைப் போற்றி நமஸ்கரிக்கும் மந்த்ரம்:

"அக்நே நய" :- அக்நி பகவானே! பலவித செல்வங்கள் மற்றும்

---

99 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 63

100 இதைப்பற்றி அநாகுலா எனும் வ்யாக்யானத்தில் சொல்லப்பட்டதாவது:

परिषेचनान्त ग्रहणं तदनन्तरमेव योक्त्र विमोको यथा स्यात् प्रयाण काले मा भूत् इति योक्त्रं அவிழ்ப்பது இரண்டு மந்த்ரங்களால் செய்யப்படுகிறது. "प्रत्वामुञ्जामि, इमंविष्यामि"

நற்கதி அடைதலுக்காக எங்களால் செய்யப்படும் வேள்விகளில் ஸமர்ப்பிக்கப்படும் பொருட்களை, உரிய தேவதைகளிடத்தில் கொண்டு சேர்த்து, எங்களின் மேன்மைக்குக் காரணமாக விளங்கி நல்வழியில் கொண்டு செல்பவரே! நீர் அனைத்து வழிகளையும் அறிந்தவர். மேலும், மேலும் எங்களை நல்வழியிலேயே செலுத்துவீராக! யாம் பெறும் அனைத்து பாக்கியங்களுக்கும் காரணமாக விளங்கும் உமக்கு, ப்ரதி உபகாரமாக-கைம்மாறாக, எம்மிடம் உள்ள எதை அளித்து உம்மை கௌரவிக்க இயலும்?! எனவே எம்மிடம் உள்ளவற்றிலேயே மிகச் சிறந்ததானது "நம:" என்று சொல்லி உம்மை நமஸ்கரித்தல்தான் என்று அறிந்து, உம்மை நமஸ்கரிக்கிறேன். ஆகையால் நீர் எம்முடைய நமஸ்காரத்தை மனமுவந்து ஏற்று, எம் குற்றங் குறைகளைப் பொறுத்து, எம்மை ஆசீர்வதிக்கவேண்டும்.

இதன்பிறகு, வதுவை ரதம் அல்லது பல்லக்கில் ஏற்றி, வரன் தன் க்ருஹத்தை நோக்கி அழைத்துச் செல்லவேண்டும்.[101]

''तत इति वचनं योक्त्र विमोचनस्य प्रस्थान कालनियमो मा भूत् यथोपपद्यते श्वो वा सद्यो वा तदा प्रतिष्ठितेत्येवमर्थम्'' प्रवा वाहयेत् प्रवाहारयेत्। என்பதன் பொருள் ரதம் குதிரை அல்லது எருதின் மூலமாகவோ அல்லது பல்லக்கில் ஏற்றி மனுஷ்யர்களால் சுமக்கப்பட்டு அழைத்துச் செல்லவேண்டும். वा என்னும் சொல் உள்ளதால், இரண்டு விதிகளும் மேற்கொள்ளத் தக்கவை என்பது தெரிகிறது.

**ப்ரயோகம்:**

மணமகன் மணமகளை தன் இல்லத்திற்கு அழைத்துச்செல்ல மாட்டு வண்டியைத் தயார் செய்ய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும் :**

"ஸத்யேநோத்தபிதா பூமி:" :- பூமி ஸத்யத்திற்குக் கட்டுப்பட்டு நிற்கிறது. ஆகாசம் ஸூர்யனால் ஈர்க்கப்பட்டு நிலைத்திருக்கிறது. 12 ஆதித்யர்களும் யாகத்தால் உறுதியாக நிற்கிறார்கள். ஸோமலதை (கொடி) ஸ்வர்கத்தை அண்டியிருக்கிறது. (இவைகளைப்போல் இவ்வண்டியானது, நமக்குக் கட்டுப்பட்டு நிற்கவேண்டும்.)

---

101 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 64

14. ஸமோப்யைதமக்நிமநுஹரந்தி

புது மணத் தம்பதிகளை முன்னால் செல்லவிட்டு, வரனின் பந்துக்கள் விவாஹ அக்னியை ஔபாஸன பாத்திரத்தில் (மண்பானையில்) சேர்த்து எடுத்துச் செல்லவேண்டும்.

குறிப்பு:- अनुशब्दः पुरस्तान्नय ..." 'அநு' என்ற சப்தம், விவாஹாக்னி தம்பதிகளுக்கு முன்னால் செல்லக்கூடாது என்பதைக் குறிக்கிறது. தம்பதிகள் முன்னால் போகப்போக யாராவது ஒரு நபர் பின்னால் எடுத்துப்போகவேண்டும்.[102]

15. நித்ய: 16. தார்ய:

விவாஹ அக்னியை அணையவிடாமல் பாதுகாக்கவேண்டும்.

குறிப்பு:- இந்த விவாஹ அக்னியைப் பாணிக்ரஹணம் ஆனது முதல், வாழ்நாள் வரை காத்து வரவேண்டும். ஹிரண்யகேசீ க்ருஹ்ய ஸூத்ரத்தின்படி பாணிக்ரஹண ஸமயத்திலிருந்தே அக்னி பாதுகாக்கப்படவேண்டும்.[103]

पाणिग्रहणादिरग्निस्तमौपासनमित्याचक्षते तस्मिन् गार्ह्याणि कर्मणि।

மனைவி ஸம்பந்தமான க்ருஹ்ய கார்யங்களுக்கு இந்த அக்னி சாஸ்வதமாக இருக்கவேண்டும்.

17. அநுகதோ மந்த்ய:

அக்னி அணைந்துவிடும் பக்ஷத்தில் இரண்டு அரணிக் கட்டைகளை கடைந்து புதிதாக அக்னியை ஏற்படுத்தவேண்டும் என்பது "மந்த்ய:" என்பதால் உணர்த்தப்படுகிறது.

18. ச்ரோத்ரியாகாராத்வாஆஹார்ய:

அல்லது ச்ரௌத ஸ்மார்த்த அக்நிஹோத்ராதிகளை விடாமல் அநுஷ்டிக்கும் ச்ரோத்ரிய ப்ராம்மணன் இல்லத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அக்னியை உபயோகிக்கலாம் என்பது "ஆஹார்ய:" என்பதால் அறியப்படுகிறது.

19. உபவாஸச்சாந்யதரஸ்ய பார்யாயா பத்யுர்வா

102 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 65

103 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 65

அக்னி நஷ்டமானால் கணவனோ அல்லது மனைவியோ இருவரில் ஒருவர் உபவாஸம் இருக்கலாம்.

குறிப்பு:- உபவாஸம் இருப்பவர், காலை, மாலை இருவேளை உணவருந்தாமல் அக்னி ஆதானம் செய்யவேண்டும். மேலும் ஸர்வ ப்ராயச்சித்த ஹோமம் செய்ய வேண்டும். இந்த அக்னியின் நித்ய ஸம்பந்தமானது மனைவியுடன்தான் உள்ளது. எனவே இந்த உபவாஸம் மனைவியுடையது என்று ஹரதத்தர் அபிப்ராயம். இதற்கு நிரூபணமாக ''सपत्नी बाधनादौ च'' என்கிற ஸூத்ரம் உள்ளது. ஆனால் உபவாஸ விஷயத்தில் ஸுதர்சநாச்சாரியார் தன் வ்யாக்யானத்தில், ஏதாவது ஒரு வேளையில் உபவாஸம் இருந்தால் போதும் என்கிறார். சாப்பிடுவதற்குமுன் அக்னி அணைந்துவிடுமாகில் மதனம் செய்து ஸர்வப்ராயச்சித்த ஹோமமும் செய்யவேண்டும். மீதி உள்ள நேரத்தில் உபவாஸம் இருக்கலாம். ஒருக்கால் சாப்பிட்டபிறகு அக்னி நஷ்டமானால் அந்தச் ஸமயத்திலிருந்து மீதி ஸமயத்திலும், அடுத்த போஜன காலத்திலும் உபவாஸம் இருக்கவேண்டும். இதில் விகல்பமே கிடையாது என எண்ணுகிறார்கள். ஆனால் தாத்பர்ய தர்சனக்காரரான ஸுதர்சனாசார்யர் "அந்யதரஸ்ய" என்பதற்கு உபவாஸம் ராத்ரியிலாவது அல்லது பகலிலாவது இருக்கலாம் என்கிறார்.[104]

இந்த ஸூத்ரத்தின் வெவ்வேறு வ்யாக்யானங்களாலும், கஷ்டமான ஸூத்ர நடையினாலும் தாத்பர்யம் சொல்வதில் வேறுபாடுகள் உண்டாகின்றன.

*20. அநுகதோபி வோத்தரயா ஜுஹுயாந்நோபவஸேத்*

விவாஹ அக்னி அணைந்தாலும் உபவாஸம் தேவையில்லை, "அயாஸ்ச அக்நேஸி" என்கிற மந்த்ரங்களைக்கூறி ஹோமம் செய்வது பரிஹாரமாகக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பு:- இதில் உபவாஸத்தை தவிர்த்து "அயாச்ச" என்னும் மந்த்ரத்தால் ஹோமம் செய்யுமாறு ஒரு வேறுபாடு

---

*104 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 67*

சொல்லப்பட்டுள்ளது. அக்னியை அலட்சியப்படுத்தி அணையவிட்டு 12 நாள் வரை அக்னிகார்யம் செய்யாது விட்டால் ப்ராயச்சித்தம் வழங்கப்பட்டுள்ளது.[105]

21. உத்தரயாபிரதஸ்யோத்தம்பநீ

வரன் ரதத்தில் மனைவியை அழைத்துச் செல்லும் விஷயங்கள் "ஸத்யேநோத்தபிதா" முதலிய மந்த்ரங்களால் தெரிவிக்கப்படுகிறது.

22. வாஹாவுத்தராப்யாம் யுநக்தி தக்ஷிணமக்ரே

எருதுகளையோ, குதிரைகளையோ ரதத்தில் புணைவதற்கான மந்த்ரங்கள் அடுத்தடுத்துக் கூறப்பட்டுள்ளன.

குறிப்பு:- வலது காளையை பூட்ட "யுஞ்ஜந்தி" எனும் மந்த்ரமும், இடது காளைக்கு "யோகே யோகே" என்னும் மந்த்ரமும் உபயோகிக்க வேண்டும் என்பது ஹரதத்தர் அபிப்ராயம். ஆனால் ஸுதர்சனாச்சாரியர் காளையோ, குதிரையோ எதுவானாலும், இரு மந்த்ரங்களையும் சொல்லியே இரு பக்கமும் பூட்டவேண்டும் என்று அபிப்ராயப்படுகிறார்.[106] இவ்விரு மந்த்ரங்களும் ஒன்றாகவே சொல்லப்பட்டிருப்பதால் एकमन्त्राणि कर्माणि என்பது புலனாகிறது.

**ப்ரயோகம் :**

வண்டியில் மாடுகளைப் பூட்ட மந்த்ரம் (7ம் கண்டம்) :-

**மந்த்ரமும் பொருளும் :**

"யுஞ்ஜந்திப்ரத்நம்" :- நன்கு செல்லக்கூடியதும், ஸ்தாவர வஸ்துக்களான சாலைகள், பாதைகளைக் கடந்து செல்லக்கூடியதுமான பெரிய குதிரையையோ, காளையையோ ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் தெரியும்வரை வண்டியில் கட்டி ஓட்டுகின்றனர்.

"யோகே யோகே" :- (இது 4ம் கண்டத்தைச் சேர்ந்தது) வண்டியில் காளையையோ, குதிரையையோ பூட்டும் ஒவ்வொரு ஸமயத்திலும், செல்லவேண்டிய இடத்திற்கு துரிதமாகச்செல்ல, இந்த்ரனின் அநுக்ரஹத்திற்கு ப்ரார்த்திக்கிறோம். (எந்த காரியத்திலும் இடையூறு ஏற்படாமல் இருக்க இந்த்ரனை ப்ரார்த்தித்து அவரது அநுமதியைப் பெற்றே ஆரம்பிக்கிறோம்.)

105 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 69

106 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 70

23. ஆரோஹதீமுத்தராபிரபிமந்த்ரயதே

வது, ரதத்தில் ஏறும்பொழுது "ஸுகிகும்சுகம்" முதலிய நான்கு மந்த்ரங்களால் ரதத்தை இழுத்துச்செல்கிற விலங்கையோ அல்லது பல்லக்குச் சுமக்கும் மனிதர்களையோ அபிமந்த்ரணம் செய்வது என்பது பொருள் அல்ல. மாறாக ரதத்தில் ஏறும் வதுவை அபிமந்த்ரணம் செய்யவேண்டும் என்பது பொருளாகும்.

**ப்ரயோகம் :**

மணப்பெண் வண்டியில் ஏறும்போது, வரன் கீழ்வரும் 4 மந்த்ரங்களைச் சொல்லவேண்டும்:

**மந்த்ரமும் பொருளும் :**

1. "ஸுகிகும்ஸுகம்" :- ஹே கல்யாணி! இலவமரம், கிம்சுக மரங்களால் ஆனதும், பலவித வண்ணங்களை உடையதும், தங்கமயமாய் ப்ரகாசிப்பதும், வேகமாய்ப்போகக்கூடியதுமான, நல்ல சக்ரங்களையுடையதுமான இவ்வண்டியில் நீ ஏறுவாயாக. தீர்காயுளுடன் விளங்கும்படி உன் தந்தையினால், நம்மை ஆசீர்வதித்துக் கொடுக்கப்பட்ட சீர் பொருட்களையும் இவ்வண்டியில் ஏற்றுக.

2. "உதுத்தரம் ஆரோஹந்தி"[107] :- ஏ பெண்ணே! நீ இந்த வண்டியில் ஏறி உன் பகைவர்களை துவம்சம் செய். உன் பதியான என் தலையில் அதாவது சிந்தையில், ஒழிவில்காலமெல்லாம் உடனிரு. விராட் சந்தஸ் பத்து எழுத்துக்களை உடையது, அதுபோல் நீயும் பத்து குழந்தைகளுக்குத் தாயாய் விளங்கு.

3. "ஸம்ராஜ்ஞீ" :- மாமனார், மாமியார், நாத்தனார் மற்றும் மைத்துனர்களுக்கு யஜமானியாக விளங்கு. (அவர்கள் அனைத்துத் தேவைகளையும் நீ பூர்த்திசெய்து அவர்களை உன் பாசவலையில் கட்டிப்போடு.)

4. "ஸ்நுஷாணாம்" :- என்வீட்டிலுள்ள மற்ற 'மாட்டுப் பெண்கள்'[108]

---

107 இந்த மந்த்ரம் கன்னிப்பெண் புகுந்தவீட்டில் எப்படி இருக்கவேண்டும் என்று சொல்வதால் இது நிச்சயதார்த்தத்தில் ப்ரதானமாக கையாளப்படுகிறது.

108 சொல் ஆராய்ச்சி :- மாட்டுப்பெண், நாட்டுப்பெண், மறுமகள் என பல பெயர்களில் அழைக்கிறார்கள். இவைகளில் மறுமகள்

(மாற்றுப் பெண்கள்), மாமனாரின் ஸஹோதரர்கள், மற்றவர்கள், வீட்டின் செல்வம், கணவன், மைத்துனர், மற்றும் அனைவருக்கும் யஜமானியாக விளங்குவாயாக.

**தாத்பர்யம்:**

புதிதாக ஒரு வீட்டிற்குச் செல்லும் பெண்ணுக்கு, அங்கு நம்முடைய நிலை எப்படி இருக்குமோ என்ற ஒரு பயமும், கவலையும் இருக்கும். நிச்சயதார்த்தத்திலேயே அந்தக் கவலை நீங்கும்படியாக வேதத்தாலேயே உறுதியளிக்கப்படுகிறது. "நீதான் அங்கு எல்லாம், உன்னிஷ்டம்தான், நீ வைத்ததுதான் சட்டம்" என்றெல்லாம் புதுப்பெண்ணிற்கு தைரியம் வழங்கப்படுகிறது.

*24.* ஸூத்ரேவர்த்மநோ .... .... லோஹிதமுத்ரஸ்யாம்

"நீலலோஹிதே பவத:" என்னும் மந்த்திரத்தால் ரதத்தின் வலது சக்கரத்தில் நீல நிற நூலாலும், இடது சக்கரத்தில் சிவப்புநிற நூலாலும் குறுக்காகக் கட்டவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**ப்ரயோகம் :**

வண்டிப்பாதையில் வர்ண நூல்களைப் பரப்ப மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும் :**

"நீலலோஹிதே" :- வண்டி செல்லும் பாதையில் விரிக்கப்பட்ட நூல்களில் ஒன்று நீல வண்ணத்திலும், மற்றொன்று சிவப்பு வண்ணமாயும் இருக்கின்றன. நம்மிருவருக்கும் நமது நெருங்கிய உறவினர்களுக்கும் இடையே வேற்றுமையை, பகைமையை ஏற்படும்படியாக நம் பகைவர்களால் ஏவப்பட்ட துர்தேவதைகள் இதனால் நாசமாகட்டும்.

---

என்பதே சரியானதாகும். மகள் ஸ்தானத்திற்கு மாறி வந்தவள் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டவள் என்பது பொருள். இதே பொருளில்தான் "மாற்றுப் பெண்" - "பெண்ணுக்கு மாற்று" என்ற பொருளில் சொல்லப்பட்டு வந்தது, பின்னாளில் மறுவி "மாட்டுப்பெண்" என்றாகியுள்ளது. "மாடு" என்ற வார்த்தை இடம் பெறுவதால் அது சற்று தரம் தாழ்ந்ததாகக் கருதப்படட்டு அதை "நாட்டுப் பெண்" என திரித்துக் கூறியிருக்கவேண்டும். "மாடு" என்ற சொல்லுக்குச் "செல்வம்" என்ற பொருளும் உண்டு. "வேதத்தை அந்தணர் மாடு" என்பர். எனவே செல்வமாக வந்த பெண், மாட்டுப் பெண் என்றும் கொள்ளலாம்.

**தாத்பர்யம் :**

இந்த மந்திரத்தால் ஜபிக்கப்பட்டு பரப்பப்பட்டுள்ள வண்ண நூல்களைத் தாண்டி, துர்தேவதைகளால் இவர்களைத் தொடர இயலாது.

25. தே உத்தராபிரபியாதி

அடுத்த மூன்று மந்த்ரங்கள் வண்டியை தொடர்ந்து செலுத்தும்போது உபயோகிக்கப்படுகிறது.

குறிப்பு:- வாகனத்தை சுமப்பவர்கள் நன்கு செல்லவேண்டும் என்பதற்காக இந்த மந்த்ரங்கள் உச்சரிக்கப்படுவதாக சிலரது கருத்து. மந்த்ரங்களை உச்சரித்த பின்பே செல்வதான காரியம் ஆரம்பிக்கப்படுகிறது என்பது மற்றையோர் கருத்து.[109]

**ப்ரயோகம்:**

மணமகனும், மணப்பெண்ணும் மணமகன் இல்லத்தை நோக்கி வண்டியில் பயணம் செய்ய 3 மந்த்ரங்கள்:

**மந்த்ரமும் பொருளும் :**

1. "யேவத்வத்சந்த்ரம்" :- இந்த வதுவின் தந்தையினால் அளிக்கப்பட்ட சீர் தனங்களை திருடிச் செல்ல முயலும் யக்ஷ்மரோகம் போன்ற திருடர்களை, தேவதைகள் அவர்களின் இருப்பிடத்திற்கே திருப்பி விரட்டியடிக்கட்டும்.

2. "மாவிதந்" :- வழியில் பகைவர்களோ, திருடர்களோ வந்து துன்பம் தராமல், இயல்பாகக் கொடிய பாதையாக இருந்தாலும் இன்று அவை நல்ல பாதையாக எங்களுக்கு அமையவேண்டும்.

3. "ஸுகம்பந்தாநம்" :- எவ்வழியில் சென்றால் திருடர்களாலும், பகைவர்களாலும் துன்பம் நேராதோ, என்னுடைய வாகனத்திற்கும் எந்தக் கேடும் விளையாதோ, அந்த நல்ல வழியை தேவதைகளின் அருளினால் இன்று நான் அடையப்பெற்றேன்.

26. தீர்த்தஸ்தாணு .... ... உத்தராம் ஜபேத்

ஸ்நானம் செய்யும் நீர் நிலைகள், தூண்கள், நாற்சந்தி

---

109 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 71

போன்றவற்றை இவர்கள் கடக்க வேண்டியதிருந்தால், அப்போது “தாமந்தஸாநா” முதலிய மந்த்ரங்களைச் சொல்லவேண்டும்.

**ப்ரயோகம் :**

வண்டியில் பயணம் செய்யும்போது புண்ணிய தீர்த்தம் மற்றும் நாற்சந்திகளைத் தாண்டும்போது சொல்லவேண்டிய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும் :**

“தாமந்த ஸாநா” :- அச்விநீ தேவர்களே! எல்லோராலும் துதிக்கப்பெறுபவரான உம்மை நானும் துதிக்கிறேன். என் துதியினால் உள்ளம் உவந்து, இந்த பாதையில் எங்களுக்கு நல்ல தீர்த்தத்தை வழங்கி, பத்து புத்திரர்களையும் ஆசீர்வதியுங்கள். இந்த வழியில் எங்களைத் துன்புறுத்தும் திருடர்கள் மற்றும் வழியை அடைக்கும்படியாகக் கிடக்கும் மரங்கள் போன்றவைகளையும் விலக்கி அருளுங்கள்.

**வேது கண்டம்**

1. நாவமுத்தரயானுமந்த்ரயதே

“அயம்நோமஹ்யா” என்னும் மந்த்ரத்தை படகில் ஏறவேண்டிய ஸந்தர்பத்தில் உபயோகிக்கவேண்டும்.

2. ந ச நாவ்யாம்ஸ்தரதி வதூ: பச்யேத்

படகில்செல்ல நேரிட்டால் மனைவி படகோட்டியை பார்க்கக் கூடாது.

3. தீர்த்வோத்தராம் ஜபேத்

“அஸ்யபாரே” எனும் மந்த்ரத்தை நதியைக் கடந்தபின் வரன் சொல்லவேண்டும்.

**ப்ரயோகம் :**

பயண வழியில் நதி போன்றவற்றைக் கடக்க ஓடத்தில் ஏறவேண்டியிருந்தால் அதைத் தொட்டுக்கொண்டு ஜபிக்க வேண்டிய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும் :**

"அயந்நோ மஹ்யா:" :- இந்த மர ஓடம் எங்களை நல்லபடியாக அக்கரை சேரும்படிச் செய்யவேண்டும். ஏ நதி தேவதையே! நீயும் எங்களுக்கு உதவிகரமாக இருந்து எங்களுக்கு, ஆயுளும், நல்ல தோற்றமும் கிடைக்கும்படிச் செய்வாயாக.

"அஸ்யபாரே" :- நல்லபடியாக அக்கரை வந்து சேர்ந்த நமக்கு இந்த்ரன் எல்லா நன்மைகளும் கிட்டும்படி ஆசீர்வதிக்கட்டும்.

*4. ச்மசாநாதிவ்யதிக்ரமே பாண்டே ரதே வாரிஷ்டேக்நேருபஸ மாதாநாத்யாஜ்யபாகாந்தே ... கரோதி*

ச்மசானம் போன்றவற்றைக் கடக்க நேரிட்டாலோ, வாகனங்களுக்கோ, வஸ்துக்களுக்கோ சேதம் ஏற்பட்டாலோ "அக்னி ப்ரதிஷ்டை" முதல் ஆஜ்யபாகம் வரை செய்து, மனைவி தொட்டுக்கொள்ள "யத்ருதேசித்" என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்யவேண்டும். பின் ஜயாதி, பரிஷேசனாதிகள்.

குறிப்பு:- வாகனங்கள் உடைதல், சேதமாதல், ச்மாசானத்தைக் கடத்தல், நீர்நிலைகளை கடத்தல் மற்றும் எந்தவித துயர ஸம்பவம் நேரிட்டாலும் யத்ருதேசித் எனும் ஏழு ஆஹுதிகளைக் கொண்ட ஹோமத்தைச் செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ச்மசாநாதி என்பதில் உள்ள "ஆதி"எனும் சப்தம் சுடுகாடு மற்றும் அதுபோன்ற பல சூழ்நிலைகள் என்பதாக ஊகிக்க இடமளிக்கிறது.[110]

**ப்ரயோகம்:**

ஸ்மாஸனம் (இடு/சுடு காடு) இவைகளைக் கடக்க நேர்ந்தால் செய்யவேண்டிய 7 ஹோம மந்த்ரங்கள்:

**மந்த்ரமும் பொருளும்:**

*1.* "யத்ருதேசித்" :- அரக்கு, பிசின்களைக் கொண்டு உடைந்த பொருட்களை ஒட்டவைக்கும் ஸாமர்த்தியம் உள்ள இந்த்ரன் அவையின்றியே விரைவாக அந்தக் காரியத்தைச் செய்ய அவருக்கு இந்த ஹோமம்.

110 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 74

2. "இடாமக்நே" :- (இது 4ம் காண்டத்தைச் சேர்ந்த மந்த்ரம்) ஏ அக்நி தேவனே! அன்னம், பசுக்கள் இவற்றை வெகுகாலம் இருக்கும்படியாக அநுக்ரஹியும். என்மீது இரக்கம் வைத்து, நிறைய புத்திரர்கள் ஏற்படும்படியாகச் செய்யவேண்டும்.

3. "இமம்மே வருண, 4. தத்வாயாமி, 5. துவந்நோ அக்நே, 6. ஸத்வந்நோ அக்நே, 7. துவமக்நே" இவைகளுக்கான அர்த்தம் முன்பே (உத்வாஹ ஹோமத்தில்) சொல்லப்பட்டுள்ளது.

5. க்ஷீரிணாமந்யேஷாம் வா லக்ஷ்மண்யாநாம் வ்ருக்ஷாணாம்
நதீநாம் தந்வாநாம் ச

"யேகந்தர்வா" எனும் இரு மந்த்ரங்களை பால்சுரக்கும் மரங்கள், நதி, பாலைவனம் போன்றவற்றை கடக்க நேரிடும்போது சொல்லவேண்டும்.

குறிப்பு:- நீரிருந்தாலும் இல்லாவிடிலும் மந்திரத்தை ஜபிக்கவேண்டும் என்பது விதியாகும். "யதாலிங்கம்" என்பதால், புலப்படும் பொருளுக்குண்டான பாலினத்தைக் குறிக்கும் சொல்லை உபயோகிக்கவேண்டும் என்பது தாத்பர்யம். மரங்களைக் கடக்கும்போது "யே கந்தர்வா:", நதிகளைக் கடக்கும்போது "யா ஓஷதயோ", பாலைவனத்தைக் கடக்கும்போது "யாநி தந்வாநி" என்னும் மந்த்ரங்களைச் சொல்லவேண்டும் என்பது பொருள். "தந்வாநி" என்பதற்கு "நீண்ட காடுகள்" என ஸுதர்சனாச்சாரியர் அபிப்ராயப்படுகிறார். அவற்றில் க்ராம்ய பசுக்கள் இருக்காது.[111]

**ப்ரயோகம் :**

பாலுள்ள மற்றும் புனிதமான மரங்களைக் கடக்கும்போது சொல்லவேண்டிய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"யே கந்தர்வா" :- எந்த கந்தர்வர்களும், தேவலோகத்து கன்னிகைகளும் இந்த வனங்களில் வஸிக்கின்றனரோ, அவர்கள் இவளை மங்களகரமானவளாக விளங்கச் செய்யவேண்டும். இவளுக்கும், இவளால் எடுத்துச்செல்லப்படும் ஸ்த்ரீதனம் எனப்படும் பிறந்தவீட்டுச் சீருக்கும்

111 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 75

எந்தக் கேடும் ஏற்படாதிருக்கவேண்டும்.

"யா ஓஷதயோ" :- ஏ புதுமணப் பெண்ணே! மூலிகைகள், நதி, பாலைவனம் மற்றும் அவைகளுக்கான தேவதைகள் எவை உண்டோ, அவைகள் உனக்கு ஸந்ததிகளை அநுக்ரஹித்து பாபங்களைப் போக்கட்டும்.

6. க்ரஹாநுத்தரயா

"சங்காசயாமி" என்னும் மந்த்ரத்தால் வரன் வதுவிற்கு தன் க்ருஹத்தைக் காட்டவேண்டும்.

குறிப்பு:- ज्ञाति धन संयुक्तान् वधूं संकाशयामि எனும் ருக்கினால், தன் க்ருஹத்தை அடைந்த கணவன், மனைவிக்கு அனைத்தையும் காண்பிக்கவேண்டும் என்று, தாத்பர்யதர்சனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.[112]

**ப்ரயோகம்:**

தன் வீட்டை புது மனைவிக்குக் காட்டும்போது சொல்லவேண்டிய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"ஸங்காசயாமி" :- இவளால் கொண்டுவரப்பட்ட சீரும், என் வீட்டில் முன்பே உள்ள தனமும் சேர்ந்துள்ள இந்த என் வீட்டை, இவள் பார்க்கும் முன், இவளது பார்வையில் ஸ்ரீமஹாலக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகட்டும். இவளால் பார்க்கப்படும் அனைத்துச் செல்வங்களும் மென்மேலும் பல்கிப் பெருகவேண்டும். திருமணத்தின்போது, உறவினர்களாலும், நண்பர்களாலும் கொடுக்கப்பட்ட நகைகள், உடைகள், பரிசுப்பொருட்கள் யாவும், ஸவிதா தேவனின் அருளால் என் ஸஹோதரர்கள் உள்ளிட்ட என் வீட்டில் உள்ள அனைவருக்கும் நன்மையை மட்டும் விளைவிப்பவையாக விளங்கட்டும்.

7. வாஹாவுத்தராப்யாம் விமுஞ்சதி தக்ஷிணமக்ரே

வீட்டை அடைந்ததும், ரதத்திலிருந்து முதலில் வலது பக்க எருதையும், பின் இடது பக்க எருதையும் "ஆவாமகந், அயந்நோ தேவ:" என்கிற மந்திரங்களால் அவிழ்த்துவிடவேண்டும்.

112 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 75

**ப்ரயோகம்:**

ப்ரயாணம் செய்து வந்த வண்டி மாடுகளை அவிழ்த்துவிட மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"ஆவாமகந்" :- ஹவிஸ்ஸாலும், ஸ்தோத்ரங்களாலும் பூஜிக்கப்படும் அச்விநீ தேவர்களே! நாங்கள் வந்து சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்துவிட்டபடியால், உங்களுடைய அநுக்ரஹம் எங்கள்பால் நிறைவாக இருப்பதை உணர்கிறோம். இதுபோலவே நாங்கள் அக்நிதேவனுடைய முழுமையான அருளுக்குப் பாத்திரர்களாகி என்றும் நலமுடன் வாழ்ந்திருக்க அருளவேண்டும்.

"அயந்நோ தேவ: :- இந்த வண்டியை இழுத்து வந்த காளைகளே! ஸூர்யன், ப்ருஹஸ்பதி, இந்த்ரன், அக்நி, மித்ரன், வருணன், த்வஷ்டா, விஷ்ணு ஆகிய தேவர்கள் உங்களை நல்லவிதமாக விடுவிக்கவேண்டும். அந்த தேவதைகளின் அநுக்ரஹத்தால் நீங்கள் ஸந்ததிகளுடன் வாழ்வாங்கு வாழவேண்டும்.

**ப்ரவேச ஹோமம்**

8. லோஹிதம் சர்மாநடுஹம் ... ... ... தக்ஷிணேந பதா

வஸிக்கவிருக்கும் வீட்டினுள் முதன்முறையாக தம்பதிகள் நுழையும்போது "க்ருஹான் பத்ரான்" என்கிற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு வலதுகால் எடுத்து வைத்து நுழையவேண்டும். அவ்வீட்டின் நடுவில் சிவப்பு எருதின் தோலை, கிழக்கு நோக்கியதாக, அடர்ந்த ரோமங்கள் மேல்புறம் இருக்கும்படியாக விரிக்கும்போது "சர்மவர்ம" எனும் மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

குறிப்பு:- குதிரைகள் அல்லது எருதுகளை அவிழ்த்துவிட்டு, கணவன் முதலில் வீட்டினுள் நுழையவேண்டும். எந்தவீட்டில் தம்பதிகள் வஸிக்கவேண்டுமோ, அதன்நடுவில் தோலை விரித்துப் போடவும். பிறகு வதுவை உள்ளே ப்ரவேசிக்கச் செய்யவும்.[113]

113 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 76

**ப்ரயோகம் :**

காளை மாட்டுத் தோலைப் பரப்பி, அதன்மீது, வது அவள் வலது காலை வைத்து ப்ரவேசிக்கச் செய்யும்போது சொல்லவேண்டிய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

1. "சர்மவர்மாதமாஹர" :- சுகத்தைத் தரவல்ல இந்தத் தோலை இவளுக்காக விரிக்கக் கொண்டுவாருங்கள். சதுர்தசீயோடு ஸம்பந்தமுள்ள அமாவாசை திதிக்கு அபிமானி தேவதையே! இவளுக்கு ஸந்ததிகள் உண்டாகட்டும். இவளுக்கு பகதேவனின் அநுக்ரஹமும் இருக்கட்டும்.

2. "க்ருஹான் பத்ரான்" :- நான் என் கணவரின் வீட்டிற்குள் முதன் முதலாக நுழைகிறேன். இது மனதைக் கவர்வதாயும், மங்களகரமாகவும் இருக்கின்றது. இதில் வஸிப்பவர்கள் நல்லிதயம் கொண்டவர்களாய் திகழ்கின்றனர். இவ்வீடு, வாரிசுகளை துன்புறுத்தாததாயும், மைத்துனர்கள் அவர்களது வாரிசுகளோடும் நிறைந்து கலகலப்பாய் இருக்கின்றது. நன்கு கவனித்துக் காப்பாற்றுபவர்களைக் கொண்டிருக்கிறது. அன்னங்கள் நிறைந்திருக்கின்றன. விருந்தினர்களுக்கு மிக உயர்ந்த நெய் தாராளமாகச் சொரியும்படியாக இருக்கின்றது. இப்படிப்பட்ட நல்ல வீட்டில் நானும் நல்ல மனம் உள்ளவளாக இன்று ப்ரவேசித்து அமருகிறேன்.

9. ந ச தேஹளீமபிதிஷ்டதி

வீட்டில் நுழைந்து தம்பதிகள் வழியில் நிற்காமல் செல்லவேண்டும்.

குறிப்பு:- நிலைவாசலின் கீழ் உள்ள பகுதிக்கோ அல்லது அதை ஒட்டிய மேடைபோன்ற பகுதிக்கோ "தேஹளீ" என்று பெயர். அதைக் கடக்கும்பொழுது வதூ வரர்கள் அதன்மீது கால் பதிக்காமல் செல்லவேண்டும். தோல் விரிக்கப்பட்டுள்ளதற்கு வடகிழக்கில் விவாஹாக்னியை வைக்கவேண்டும்.[114]

---

114 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 76

*10. உத்தரபூர்வ தேசே .... ... சர்மண்யுபவிசத உத்தரே வர:*

வீட்டின் வடகிழக்குப் பாகத்தில் அமர்ந்து அக்னிப்ரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் வரை செய்து, மனைவி தொட்டுக்கொண்டிருக்க "ஆகன்கோஷ்டம்" முதல் 12 ஹோமங்கள், ஜயாதி, பரிஷேசனம் வரை செய்யவும். "இஹகாவ:" என்ற மந்திரத்துடன் முன்பு விரித்த தோலில் வடக்குப் பக்கம் உட்காரவும்.

**ப்ரயோகம்:**

மனைவி தொட்டுக்கொண்டிருக்க செய்யப்படும், ப்ரவேச ஹோம மந்த்ரங்கள்:

**மந்த்ரமும் பொருளும்:**

*1. "ஆகந்கோஷ்டம்" :* எனது மனைவி சீர் வரிசை, பசு, குதிரைகளுடன் என்வீட்டை அடைந்துவிட்டாள். அவள் தீர்க்க ஸுமங்கலியாகவும், ஸ்வர்கத்துக்கு காரணர்களாக விளங்கும் ஸந்ததிகளை உண்டுபண்ணக் கூடியவளாகவும், ஸ்ரீமதி (கணவனைப் பிரியாதவளாயும்) ஆகவும், இந்த ஔபாஸன அக்நியை ஆராதிக்கவேண்டும். ஹே அக்நி தேவனே! இந்தப் பலன்களுக்காக நான் இந்த ஆஜ்யத்தை உமக்கு ஆஹாரமாக (ஹோமமாகத்) தருகிறேன்.

*2. "அயமக்நி:"* க்ருஹத்தின் பாதுகாவலரும், நன்மையை விளைவிப்பவரும், தனங்கள், தான்யங்களை பெருக்குகின்றவருமான, இந்த ஔபாஸந அக்நி பகவானைப் போல், எங்களுக்கும் எல்லா செல்வங்களும் பெருகட்டும். (பகன் மட்டுமல்ல எல்லா தேவதைகளுமே அக்நி உபாஸனையால் நன்மையை அடைந்தனர்).

*3. "ப்ரஜாயாஆப்யாம்" :-* ஓ ப்ரஜாபதியே! இந்திர, அக்நி தேவதைகளே! இந்த தம்பதிகளின் ஸந்திப்பின் பொருட்டு நாங்கள் அகால மரணத்துக்கு ஆளாகி துன்பப்படாமல் இருக்கும்படி அநுக்ரஹியுங்கள்.

*4. "தேநபூதேந" :* ஓ இந்த்ரனே! அக்நி தேவதைகளே! என்னுடைய இந்த ஆஹுதியைப் பெற்றுக்கொண்டு, என்னைப் பலவகையிலும் வளர்ச்சியடையச் செய்யுங்கள். எனக்கு, எந்தப் பெண்ணை மனைவியாக அருளினீர்களோ, இந்த ஹோமத்தால்

த்ருப்தியடைந்தவர்களான நீங்கள், அவளையும் அநுக்ரஹித்து வளர்ச்சியடையச்செய்யுங்கள்.

5. "அபிவர்த்ததாம்" :- ஓ அக்நி தேவனே! எல்லா வகையிலும் இவளும் நானும் முழுமை பெற்றவர்களாக விளங்கவேண்டும். நாங்கள் பலரை பாதுகாப்பவர்கள் என்ற நிலையில் இருக்கவேண்டுமே அல்லாது, எதற்காகவும் பிறர் தயவை எதிர்பார்க்கும் நிலை எங்களுக்கு ஒருபோதும் ஏற்படக்கூடாது.

6. "இஹைவஸ்தம்" :- இந்த தம்பதிகள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாதவர்களாக, பரமஆயுசு எனப்படும் 116 ஆண்டுகள் வாழவேண்டும். இந்த்ரன் இந்த தம்பதிகளின் க்ஷேமத்திற்கு பொறுப்பேற்கவேண்டும். (நம்மைக் காப்பதில் இந்த்ரன் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.)

7. "த்ருவைதி" :- ஹே வதுவே! நீ என்னுடன் திடமான, மாறாத பற்றுள்ளவளாக இருக்கவேண்டும். ப்ருஹஸ்பதி தேவன் உன்னை எனக்குக் கொடுத்திருக்கிறார். நீ என்னுடன் புத்திர பாக்யத்துடன் 100 வருடங்கள் ஜீவித்திருக்கவேண்டும்.

8. "த்வஷ்டா ஜாயாம்" :- த்வஷ்டா தேவன் இவளை எனக்குத் தந்தார், அவரே என்னை உன் கணவனாக்கினார். அவரே நம் இருவருக்கும் தனத்தையும், தீர்க்காயுளையும் ஏற்படுத்தட்டும்.

குறிப்பு:- 9 முதல் 13 வரையான இமம்மே, தத்வாயாமி, த்வந்நோ, ஸத்வந்நோ, த்வமக்நே ஆகிய மந்த்ரங்கள், உத்வாஹ ஹோமத்தில் விளக்கப்பட்டுள்ளன.

**ப்ரயோகம் :**

விரிக்கப்பட்ட காளைத்தோலின் மேல், தம்பதிகள் உட்காருவதற்கான மந்த்ரம். கணவன் வடபுறமும், மனைவி தென்புறமுமாய் அமரவேண்டும்.

**மந்த்ரமும் பொருளும்:**

"இஹகாவ:" - ஓ பசுக்களே! நீங்கள் எங்கள் வீட்டில் வாழவேண்டும்! குதிரைகளே! நீங்களும் எங்கள் வீட்டில் வாழவேண்டும். ஓ பணியாளர்களே! நீங்கள் எங்கள் வீட்டில் பணிபுரிவீர்களாக. இந்த வீட்டில் விசேஷமான தானங்கள் செய்வதன் மூலம், செல்வங்கள்

நன்கு பெருகட்டும். அதற்கு எல்லா தேவதைகளும் ஆசீர்வதிக்கட்டும்.

*11. அதாஸ்யா: ... ... ... ஆநக்ஷத்ரேப்ய:*

புத்ரர்களை மட்டுமே பெற்ற பெண்ணின் புத்ரனை வதுவின் மடியில் "ஸோமேநாதித்யா" எனும் மந்த்ரத்தால் உட்காரச்செய்து, "ப்ரஸ்வஸ்த:" எனும் மந்த்ரத்தால் பழங்களைக் கொடுக்கவும். வரனும் வதுவும் நக்ஷத்திரம் உதயமாகும்வரை அந்த மாட்டுத் தோலில் மௌனமாக அமர்ந்திருக்கவேண்டும்.

**ப்ரயோகம் :**

பெண்ணின் மடியில் ஒரு சிறுவனை உட்காரச் செய்ய மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"ஸோமேநாதித்யா:" :- தேவர்கள் சந்த்ரனால் பலன் பெற்றிருக்கின்றனர். (ஸோமன் ஓஷதிகள் எனும் மருத்துவ குணமுள்ள தாவரங்களுக்கு அதிபதி. ஓஷதிகளால் யாகங்கள் நடந்து, அதனால் தேவர்கள் த்ருப்தி அடைகின்றனர்). சந்த்ரனால் (மரங்களுக்கு ஸோமன் எனும் சந்த்ரனே காரணமாய் இருப்பதால்) பூமி உறுதியாயிருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்புக்களை உடைய சந்த்ரன் எப்படி நக்ஷத்ர மண்டலத்தின் மத்தியில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறானோ, அப்படியாக இந்தச் சிறுவன் உன் மடியில் அமரச் செய்யப்பட்டிருக்கிறான்.

**ப்ரயோகம் :**

சிறுவனுக்கு பழம் அளிப்பதற்கான மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"ப்ரஸ்வஸ்த்த:" ஏ பழங்களே! நீங்கள் ஸந்ததி வ்ருத்திக்கு காரகர்கள். (பழங்களின் கொட்டைகள் நடப்படுவதால் பயிர்கள், தாவரங்கள் பெருகுகின்றன). இந்தப் பெண்ணும் நல்ல புத்திரர்களை பெறவேண்டும்.

**ப்ரயோகம் :**

பெண்ணிடம் கணவனானவன், மனைவி தன்னிடம் எப்படி இருக்கவேண்டும் என்றும், தான் எப்படி அவளிடம் இருக்கப்போகிறான் என்றும் கூறும் மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"இஹப்ரியம்" :- அன்புக்குரியவளே! உனக்கு இங்கு நல்ல வாரிசுகள் ஏற்பட்டு, அதனால் ஏற்படும் ஆனந்தத்தை அநுபவிக்க உனக்கு தேவதைகளின் ப்ரஸாதம் கிட்டட்டும். (நிச்சயதார்த்தத்தில் கூறப்பட்டதுபோல்) இந்த வீட்டிற்கு எஜமானியாக ஜாக்கிரதையாக இரு. நாமிருவரும் வெகு காலம் - ஸுகங்களை அநுபவித்துக்கொண்டு, உன் ஸந்ததிகளுக்கும் நாம் செய்த யாகாதி தர்மகாரியங்களை போதிப்பாயாக.

"ஸுமங்கலீரியம்" :- பெரியோர்களே! நீங்கள் தத்தம் இல்லங்களுக்குச் செல்வதற்கு முன், இவளிடம் வந்து தனம், தான்யம், ஸந்தானம், தீர்காயுள் போன்றவற்றை ஆசீர்வதித்துச் செல்வீர்களாக.

**த்ருவா அருந்ததி தர்சனம்**

*12. உதிதேஷு ... ... ... தர்சயதி*

நக்ஷத்திரங்கள் புலப்பட ஆரம்பித்ததும், கிழக்கு அல்லது வடக்கில் சென்று "ஸப்தருஷய:, யத்ருவதாம்" மந்த்ரங்களால் முறையே அருந்ததி, த்ருவனை தரிசிக்கவேண்டும்.

குறிப்பு:- अत्र वधूः वरं ध्रुवं दर्शयति, तथा वरः पत्नीं अरुन्धतीं दर्शयति என அபிப்ராயங்கள் பேதப்படுகின்றன. அதாவது, வது வரனுக்கும், வரன் வதுவுக்கும் லிங்கத்தின் அடிப்படையிலான மந்த்ரங்களால் காண்பிப்பதாக ஒரு அபிப்ராயமும், அனைத்து மந்த்ரங்களாலும் ஸப்த ரிஷிகளையும், க்ருத்திகையையும், அருந்ததியையும் ஸமகாலத்தில் இருவரும் தரிசிப்பதாக ஒரு அபிப்ரயாமும் காணப்படுகிறது.[115]

**ப்ரயோகம் :**

கணவன் மனைவிக்கு துருவ நக்ஷத்திரத்தைக் காட்டும் மந்த்ரம்:

**மந்த்ரமும் பொருளும்:**

"த்ருவக்ஷிதி:" :- ஓ த்ருவனே! நீர் அழிவற்ற சிரஞ்ஜீவித் தன்மையை அடைந்து, இதர நக்ஷத்திரங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறீர். மற்ற நக்ஷத்திரங்களுக்கு நீர் அச்சாணி போல் திகழ்கிறீர். பூமியில் பதித்த முளைக்கொம்பில் கட்டப்பட்ட

115 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 79

ஒரு மாடு, ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிச் செல்ல இயலாததுபோல, நக்ஷத்திரங்களும் விபரீதமான எல்லைகளுக்கு விலகிச் சென்றுவிடாமல் வழிநடத்துகிறீர் அப்படிப்பட்ட மஹிமை வாய்ந்தவரான நீர் என் பகைவர்களிடமிருந்து எம்மைக் காப்பாற்றுவீராக.

**ப்ரயோகம் :**

அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்ட மந்த்ரம்:

**தாத்பர்யம் :**

கச்யபர், அத்ரி, பாரத்வாஜர், விச்வாமித்ரர், கௌதமர், ஜமதக்நி, வஸிஷ்டர் ஆகிய ஏழு பேரும் ஸப்த ரிஷிகள் என்று போற்றப்படுகின்றனர். இவர்களுடைய மனைவிமார்கள் எழுவருக்குமாகச் சேர்ந்து "க்ருத்திகைகள்" என்று பெயர். அவர்களில் வசிஷ்டரின் தர்மபத்நியான அருந்ததீ தேவி, பதிவிரதை தன்மையில் சிறந்தவர். (ஸப்தபதியில் "மநோஹமஸ்மி வாக்த்வம்" என்ற மந்த்ரம் நான் மனம் - நீ வாக்கு என்கிறது. மனம் எதை நினைக்கிறதோ, அந்த நினைக்கும் நேரத்திலேயே வாக்கு அதைப் பேசுகிறது. அதுபோல் கணவனின் எண்ண ஓட்டத்திற்கு மாறுதல் இன்றி சிந்தனை, செயல்பாடு இரண்டும் ஒன்றான தம்பதிகளாய் விளங்கும் பத்நிக்கு பதிவ்ரதை என்ற அடைமொழி பொருந்தும்). அப்படிப்பட்ட மனமொருமித்த தம்பதியராய் இவர்கள் விளங்கவேண்டும் என்று தாத்பர்யம்.

**மந்த்ரமும் பொருளும்:**

"ஸப்தருஷய: ப்ரதமாம்" :- க்ருத்திகை தேவிகளுக்குள் முக்யமானவளாக அருந்ததி தேவி எப்படிப் புகழ் அடைந்திருக்கிறாளோ, அப்படி இந்த என் மனைவியும் விசேஷமாக, பதிவ்ரதை என்று பெயரெடுத்து, எட்டாவது க்ருத்திகா தேவி ஸ்தானத்தைப் பெற்று, அதனால் நானும் எட்டாவது ருஷியாக உயர்வடைய வேண்டும்.

# இயல் - 4

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -3

(இவ்வியலில் ஸ்தாலீபாகம், கோதானம், அஷ்ட வ்ரதம், விவாஹத்தின எஞ்சிய பகுதி மற்றும் சில பரிஹார கர்மாக்கள் விளக்கப்பட்டுள்ளன.)

**3வது படலம் – 7வது கண்டம்**

1. *அதைநாமாக்நேயேந ஸ்தாலீபாகேந யாஜயதி*

பத்னியின் துணையுடன் வரன் அக்னி தேவதையின் பொருட்டு ஸ்தாலீபாக ஹோமம் செய்யவேண்டும்.

“अथेति वचनादेतस्यामेव रात्र्यां स्थालीपाको भवति”[116] – *“அத”* என்னும் வார்த்தையால், அன்றைய இரவே ஸ்தாலீபாக ஹோமம் செய்யவேண்டும் எனத் தெரிகிறது. இது பத்னியால் செய்யப்படவேண்டிய கர்மா, வரன் உபகாரியாக மட்டுமே இருக்கவேண்டும் என்பது அநாகுலாவில் ஹரதத்தரின் அபிப்ராயம். ஆனால், “ஏநாம் யாஜயந்தி” என்பதைக் கொண்டு ஸுதர்சநாச்சார்யர் பத்னியும் உடனிருக்கிறாள் என்று பொருள் கூறுகிறார். இந்த ஸ்தாலீபாக கர்மா விவாஹத்தின் ஒரு அங்கமானபடியால் வரனே இதற்கும் கர்த்தா என்கிறார். ஸ்தாலீபாக கர்மா பத்னியால் செய்யப்படவேண்டும் என்பதை ஏற்கவில்லை.

2. *பத்ந்யவஹந்தி*

ஸ்தாலீபாக கர்மாவுக்கு பத்நி நெல்லையோ அல்லது யவத்தையோ நன்கு குத்தி செம்மைப்படுத்தி ஸ்தாலீபாக ஹோமத்தின் ப்ரயோஜனத்திற்காகத் தரவேண்டும்.

குறிப்பு:- தான்யத்தை பண்படுத்தி தருவது மட்டுமே பத்னியின் வேலை. ச்ரபணம் போன்ற ஹோம விஷயங்கள் வரன் செய்யவேண்டியவை என்பது ஸுதர்சனாச்சார்யர் அபிப்ராயம்.[117]

3. *ச்ரபயித்வா ... ... ஸ்தாலீபாகாஜ்ஜுஹோதி*

பத்னி தொட்டுக்கொண்டிருக்க, தான்யத்தை அக்னியில் ச்ரபணம் செய்து, கிழக்கு அல்லது வடக்கில் இறக்கி வைத்து, நெய்யினால் அபிகரணம் செய்து, ஸ்தண்டிலம் தொடங்கி ஆஜ்யபாகம் என்பதுவரை செய்து, பின் ஸ்தாலீபாக ஹோமம் செய்யவேண்டும்.

---

*116 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 80*

*117 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 81*

குறிப்பு:- அபிகரணமானது, ஸம்ஸ்காரம் செய்யாத, வேறு நெய்யிலிருந்து செய்யவேண்டும். ச்ரபணத்தை வரன் செய்யவேண்டும். பாத்ரப்ரயோகம் இங்கு ஒருமுறைதான் செய்யப்படுகிறது.[118]

(விவாஹத்தின் தொடர்ச்சியாகையால் பரிதியின் இடத்தில் சமீப்ரயோகம் உள்ளது என்று ஹரதத்தர் அபிப்ராயப்படுகிறார். ஆனால் "கண்டபூஷணம்", "ப்ரயோக சந்திரிகா" இத்யாதி க்ரந்தங்களில், இது சரு ஹோமம் ஆனபடியால் முகாந்தம் விதித்து, பரிதி ப்ரஹரணம் சொல்லப்பட்டிருக்கிறது.)

நெய்யால் ஹோமம் செய்யப்படவேண்டும். மற்றவர்களின் உணவுக்காகச் சமைக்கப்பட்ட அன்னத்திலிருந்து அல்ல. எப்போது இரண்டு அல்லது அதிக விதமான ஹவிஸ்ஸிற்கு வாய்ப்பு ஏற்படுகிறதோ, அப்போது ஸூத்ரகாரர் ஒரு விசேஷணச் சொல்லை உபயோகிக்கிறார். அதாவது स्थालीपाकात् अन्नात् अपूपात् आज्यात् முதலியவை. எங்கு விசேஷணச் சொல் பயன்படுத்தப்படவில்லையோ, அங்கு ஒரே ஹவிஸ்ஸினுடைய ஹோமம் என்பது நிரூபணமாகிறது.

4. ஸக்ருதுபஸ்தரணாபிகாரணே த்விரவதானம்

உபஸ்தரணம் மற்றும் அபிகரணம் இவை ஒரு முறைதான் செய்யப்படுகிறது. சரு இரு முறை எடுக்கப்படுகிறது. சருவின்மீது மீண்டும் ப்ரத்யபிகாரமாக நெய் சேர்க்கப்படுகிறது.

ஹோமத்திற்கு பயன்படும் இலையில் (தர்வியில்), நெய் தடவுவது "உபஸ்தரணம்" ஆகும். அன்னத்தை (சருவை) எடுப்பது "அவதானம்" ஆகும். சருவின்மேல் நெய் விடுவது "அபிகரணம்" ஆகும். ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்காக சருவில் நெய் மீண்டும் சேர்ப்பது "ப்ரத்யபிகரணம்" ஆகும்.

5. அக்நிர்தேவதா ஸ்வாஹாகாரப்ரதான:

"अग्नये स्वाहा" என்ற முதல் ஆஹுதிக்கு தேவதை அக்னி. இவ்வாஹுதி "ஸ்வாஹா" சப்தத்துடன் செய்யப்படுகிறது.[119]

---

*118 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 82*

*119 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 83*

6. அபி வா ஸக்ருதுபஹ்ருத்ய ஜுஹுயாத்

“अथवा दर्व्या सकृत् ... जुहुयात्” என்பதால் தர்வியினால் ஒரு முறை ஸ்தாலீபாக சருவைக்கொண்டு ஹோமம் செய்யவும்.[120]

7. அக்நி: ஸ்விஷ்டக்ருத் த்விதீய:

ஸ்தாலீபாக சருவிலிருந்து இரண்டாவது முறை “அக்னி ஸ்விஷ்டக்ருத்” எனும் வேறொரு தேவதைக்கு ஹோமம் செய்யப்படவேண்டும். இந்த ஹோமத்திற்கு ஸ்விஷ்டக்ருத் ஹோமம் என்று பெயர்.

8. ஸக்ருதுபஸ்தரணாவதாநே த்விரபிகரணம்

இந்த ஸூத்ரம், ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தில் துடைப்பதும், எடுத்துக்கொள்வதும் ஒரே ஒரு முறை என்றும், நெய் சேர்த்துக்கொள்வது இருமுறை என்றும் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பு:- जमदग्नीनां तु त्रिरवदानं ஸ்ரீவத்ஸ கோத்ரத்திரக்காரர்களுக்கு மட்டும் மூன்று முறை சரு அவதானம் செய்யப்படவேண்டும்.[121]

9. மத்யாத்பூர்வஸ்யாவதாநம்

ஸ்தாலீபாக சருவின் மத்தியிலிருந்து முதல் தேவதைக்கு சரு எடுக்கப்படவேண்டும்.

10. மத்யே ஹோம:

அதுபோல் இந்த ஹோமமும் அக்னியின் மத்ய பாகத்தில் செய்யப்படவேண்டும்.

11. உத்தரார்தாதுத்தரஸ்ய

ஸ்தாலீபாக சருவின் வடக்குப் பகுதியிலிருந்து அடுத்த தேவதைக்குச் சரு எடுக்கப்படவேண்டும்.

12. உத்தரார்த்தபூர்வார்த்தே ஹோம:

அடுத்த தேவதைக்கான ஹோமமும் அக்னியின் வடகிழக்குப் பகுதியில் செய்யப்படவேண்டும்.

---

*120 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 84*

*121 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 84*

13. லேபயோ: ... .... அக்நௌ ப்ரஹரதி

'லேபகார்யம்'[122] விஷயமாக ச்ரௌத கர்மாக்களில் பயன்படுத்தப்படும் விதியிலேயே இங்கும், பாத்ரஸாதனத்திலிருந்து எடுக்கப்பட்ட தர்பங்களின் ஒரு பாகத்தை மந்த்ரமில்லாமல், ஸ்தாலீபாக சரு, மற்றும் நெய் பாத்திரத்தில் மிகுந்திருக்கும் நெய்யில் நனைத்து அக்னியில் போடவேண்டும். ச்ரௌத கர்மாவில் இது மந்த்ரத்துடன் செய்யப்படுகிறது.

14. ஸித்தமுத்தரம் பரிஷேசநம்.

ஸித்தி காரியத்திற்குப் பின் பரிஷேசன கர்மா செய்யவேண்டும்.

குறிப்பு:- "ஸித்தம் உத்தரம்"[123] என்பதனால், கர்ம ஸம்ருத்திக்காகச் செய்யப்படவேண்டிய ஜயாதி முதலியவற்றை இங்கும் செய்யவேண்டும் என்று புலனாகிறது. ஆனால், இவ்விடத்தில் உபஹோமத்தைத்தான் "ஸித்தம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் சிலரது கருத்து. 'तथा वचनाभावादिह जयाद्येव नास्ति' என்று ஸுதர்சனாசார்யர் - ஜயாதி மற்றும் பரிஷேசனத்திற்குப் பிறகு ப்ராம்மண போஜனத்தையும் மறுக்கிறார்.

15. தேந ஸர்பிஷ்மதா ப்ராஹ்மணம் போஜயேத்

ஸ்தாலீபாக ஹோமம் செய்த மிகுதி அன்னத்திலிருந்து ப்ராம்மணனுக்கு போஜநம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு:- ஸ்தாலீபாக ஹோமம் செய்து மிகுந்த அன்னத்திலிருந்து ப்ராஹ்மணருக்கு போஜனம் செய்து வைக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளமையால், ஹோமம், மற்றும் போஜனத்திற்கும் தேவையான அளவு அன்னத்தைத் தயாரிக்கவேண்டும் என்று கருத்து.[124]

16. யோஸ்யாபசிதஸ்தஸ்மா ருஷபம் ததாதி

ஸ்தாலீபாக கர்மாவுக்கு தக்ஷிணையாக, ஒரு ஆசார்யன் அல்லது, தகுதியுள்ள ப்ராஹ்மணனுக்கோ, ஒரு பசுமாட்டை தானமாக வழங்கவேண்டும்.

122 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 87

123 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 88

124 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 89

குறிப்பு:- இந்த தக்ஷிணையை வது கொடுக்கிறாள் 'एनां याजयति' என்பதால் இந்த தக்ஷிணையை வது ஆசார்யனுக்கு வழங்குகிறாள் என்பது தெரிகிறது.[125]

न पिता याजयेत् पुत्रं न पितृयजमानम्। இந்த தக்ஷிணையை வதூ தன் பிறந்தகத்திலிருந்து கொண்டுவந்த சீர் பணத்திலிருந்து வழங்குகிறாள். எனவே இந்த தானம் வரனுக்குக் கொடுக்க வாய்ப்பில்லை.

*17.* ஏவமத ஊர்த்வம் ... .... பர்வஸு கார்ய:

ஸ்தாலீபாகம் ஒவ்வொரு பௌர்ணமி மற்றும் அமாவாஸ்யையிலும் செய்யப்படவேண்டிய கர்மா. அடுத்தடுத்த முறைகளிலிருந்து தக்ஷிணை வழங்குவதும், பத்னியின் அந்வாரம்பமும் தேவையில்லை.

*18.* பூர்ணபாத்ரஸ்து தக்ஷிணேத்யேகே

தான்யத்தால் நிரப்பப்பட்ட பாத்திரத்தை தக்ஷிணைக்குப் பதிலாக வழங்கலாம் என்பது சில பெரியோர்களின் கருத்து.

குறிப்பு:-''धान्यादेः पूर्णं यत्किञ्चित् पात्रं पूर्णपात्रम्। अष्टमुष्टी भवेत् किञ्चत् किञ्चत्वारि पुष्कलम्। पुष्कलानि च चत्वारि पूर्णपात्रं प्रचक्षते।''[126]

*108*முஷ்டி தான்யம் கொண்டது ஒரு பூர்ண பாத்ரம், இதனை ஒரு கலசத்திலோ அல்லது பாத்திரத்திலோ இட்டு ஒரு ப்ராஹ்மணனுக்கு தக்ஷிணையாக வழங்கவேண்டும் என்பது தாத்பர்யதர்சனக்காரரின் அபிப்ராயம்.

*19.* ஸாயம்ப்ராதரத .... .... .... தண்டுலைர்யவைர் வா ஜுஹுயாத்

விவாஹத்தின் போது ஔபாஸனம் ஆரம்பிக்கப்பட்டு, அந்த அக்னியைக் வாழ்நாள் முழுவதும் காத்து, கணவன் மனைவி இருவரும் ஒவ்வொரு நாளும், காலையிலும், மாலையிலும் கணவன், தன் கையாலேயே தண்டுலம் அல்லது யவத்தால் இரண்டு ஹோமங்களை செய்யவேண்டும். முதல் ஹோமம்

125 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 89

126 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 92

அக்னிக்கும், இரண்டாவது ஹோமம் ஸ்விஷ்டக்ருத் தேவதைக்கும் உரியது.

குறிப்பு:- ஸ்தாலீபாக கர்மாவை அடுத்து, மாலையிலும் காலையிலும் இரண்டிரண்டு ஆஹுதிகள் செய்யவேண்டும் (இதற்கு ஔபாஸனம் என்று பெயர்). இவை தர்வியினால் செய்யப்படாமல், கைகளாலேயே செய்யப்படுகின்றன. இதில் பரிஸ்தரணமும் மற்றும் பரிஷேசனமும் உண்டு. இவ்விரு ஆஹுதிகளும் ச்ரௌத கர்மாவில் உள்ள அக்னிஹோத்ரத்திற்குச் சமமானது.[127]

*20. ஸ்தாலீபாகவத்தைவதம்*

ஔபாஸனத்திற்கான தேவதையும், ஸ்தாலீபாக தேவதையும் ஒன்றாகும்.

*21. ஸௌரீபூர்வாஹுதி: ப்ராதரித்யேகே*

காலையில் முதல் ஆஹுதி ஸூர்யனுக்குரியது. அடுத்த ஹோமம் ஸ்விஷ்டக்ருத் தேவதைக்கு என்பது சிலரது அபிப்ராயம்.

''पूर्वाहुतिः अग्नये स्वाहेति। अग्नये स्विष्टकृते स्वाहेत्युत्तरा।

*22. உபயத: பரிஷேசநம் யதா புரஸ்தாத்*

இந்த ஔபாஸன ஹோமங்கள் இரண்டும் ஆரம்பிப்பதற்கு முன்பும், செய்து முடித்த பின்பும் பரிஷேசனம் செய்யவேண்டும்.

*23. பார்வணேநாதோ அந்யாநி கர்மாணி வ்யாக்யாதாந் யாசாராத்யாநி க்ருஹ்யந்தே*

'पार्वणेन वैवाहिकेन स्थालीपाकेन। अतोऽन्यानि अस्मादन्यानि सर्पबल्यादीनि ....'[128]

பார்வண, விவாஹ, ஸ்தாலீபாக போன்ற கர்மாக்கள் அனைத்திற்கும் தேவையான வ்யாக்யானங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான ஞானம் அநுஷ்டானத்தினால் பெறப்படவேண்டும்.

*24. யதோபதேசம் தேவதா:*

---

*127 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 93*

*128 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 95*

*25.* அக்னிம் ஸ்விஷ்டக்ருதம்சாந்தரேண

அக்னியைக் குறித்துச் செய்யப்படும் ஹோமத்திற்கும், ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்கும் இடையில், அந்தந்த கர்மாவுக்கு உரிய ப்ரயோகத்தின்படி குறிப்பிட்ட விசேஷ தேவதைகளுக்கு ஆஹுதிகள் வழங்கப்படவேண்டும்.

குறிப்பு:- அக்னிமுகமாகச் செய்யப்படும் அனைத்து கர்மாக்களிலும் முதலில் அக்னியை முன்னிட்டு ஹோமம் செய்யவேண்டும். ஸ்விஷ்டக்ருத் தேவதையும் முக்கியமான தேவதை என்பதாலும், ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தை ப்ரதான ஹோமங்களுக்குப் பிறகு இறுதியாகச் செய்யப்படவேண்டும் என்பதாலும், ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்கான ஹவிஸ்ஸை முன்னதாகவே தனியாக எடுத்து வைத்துவிட்டு மற்ற ப்ரதான ஆஹுதிகளைச் செய்யவேண்டும். यथोपदेशं देवताः अग्निं स्विष्टकृतं चान्तरेण। என்பதைச் சிலர் ஒரே ஸூத்ரமாகக் கருதுகிறார்கள். ஆனால் ஸுதர்சனாச்சார்யர் இதற்கு உடன்படவில்லை.[129]

*26.* அவிக்ருதமாதித்யம்

அதிதிக்காக "பசு ஆலம்பனம்" மூலமாக விருந்து உபசார க்ரியையில் எந்த வேறுபாடும் வரவிடக்கூடாது.

*27.* வைச்வதேவே விச்வேதேவா:

வைச்வதேவம் என்ற கர்மாவிற்கு தேவதை விச்வேதேவர்.

குறிப்பு:- ஸுதர்சனாச்சாரியர் வைச்வதேவத்தை பஞ்சமஹா யஜ்ஞத்திலிருந்து தனியாகக் கருதுகிறார்.[130] (இங்கு ஸ்தாலீபாக ஹவிஸ்ஸே "श्रावण्यै पौर्णमास्यै स्वाहा" என்கிற மந்த்ரத்தினால்தான்).

கர்த்தா அன்னம் தயார் செய்யும்போது, ஹோமத்தில் இடம்பெறும் அனைத்துத் தேவதைகளையும் உத்தேசித்து அன்னத்தை தயார் செய்யவேண்டும். தேவதைகளைக் குறித்துச் செய்யப்படும் ஹோமங்களுக்கு தேவயஜ்ஞும் என்று பெயர். பலிஹரண கர்மா, பூத யஜ்ஞும் ஆகும்.

*129* "*ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா*" – *பக்கம் – 100*

*130* "*ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா*" – *பக்கம் – 104*

பித்ருக்களுக்காக தெற்கே வழங்கப்படும் பலியானது பித்ரு யஜ்ஞும் ஆகும்.

காத்யாயன யஜ்ஞத்தில் பிண்டதானமே ப்ரதானமாகும். ஆனால் பொதுவாக பிண்ட பித்ரு யஜ்ஞத்தில் பிண்ட தானமும் ஹோமமும் ப்ரதானமாகும்.

ஸர்ப்பபலி, ஈசானபலி கர்மாக்களில் ஹோமம் ப்ரதானமாகும்.

அவப்ருத கர்மாவில் அக்னி ஹோமம் ப்ராதானமாகும்.

ச்ராத்தத்தில் ப்ராஹ்மண போஜனம் ப்ரதானம் ஆகும். இதுபோல் அநேக கர்மாக்களில் அக்னியில் செய்யப்படாதவையும் ப்ரதானங்களாக உள்ளன.

''अग्नये स्विष्टकृते स्वाहा'' என்று வைச்வதேவ ஹோமத்தில் உள்ளபடியால் அக்னியும், ஸ்விஷ்டக்ருத் இரண்டும் ப்ரதானம் என்பது புலனாகிறது. வைச்வதேவத்தில் உள்ள அனைத்துத் தேவர்களையும், தேவதைகளாகவே சிலர் கருதுகின்றனர்.

*28.* பௌர்ணமாஸ்யாம் பௌர்ணமாஸி யஸ்யாம் க்ரியதே

பௌர்ணமியில் செய்யப்படும் கர்மாவின் தேவதை பௌர்ணமாஸியாகும்.

குறிப்பு:- ''श्रावण्यै पौर्णमास्यै स्वहा'' என்ற ஹோமத்துடன், ஸர்ப்பபலி கர்மாவில் ஸ்தாலீபாக ஹோமமும் உண்டு.

ஹரதத்தர் - 'ततो यथोपदेशं किंशुकानि समिध आज्याहुतयश्च' என்று கிம்சுகம், ஸமித், மற்றும் நெய் ஹோமங்கள் அவரவர் உபதேசப்படிச் செய்துவிட்டு, ஸ்தாலீபாகத்தின் ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தையும் செய்யவேண்டும் என்கிறார்.[131]

## 8வது கண்டம்

*1.* உபாகரணே ஸமாபநே ச ருஷிர்ய: ப்ரஜ்ஞாயதே

*2.* ஸதஸஸ்பதிர்த்விதீய:

உபாகரணம் என்பது ஆரம்பம். ஸமாபநம் என்பது முடிவு. ப்ரஜாபதி, ஸோமன், அக்னி மற்றும் விச்வேதேவர் ஆகியோர், வேதத்தின் காண்ட ருஷிகளாகும். வேதத்தை அத்யயனம் செய்பவன், உபாகரணத்திலும் ஸமாபனத்திலும், ப்ராஜாபத்யாதி

131 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 108

தேவதைகளுக்கும், ஸதஸஸ்பதி எனும் மற்றொரு தேவதைக்கும் ஆஹுதிகளைச் ஸமர்ப்பிக்கவேண்டும்.

குறிப்பு:- ஆரம்பத்தில் செய்யப்படும் உபாகரணம் மற்றும் முடிவில் செய்யப்படும் ஸமாபந கர்மாக்கள் இருவிதமானவை. ''काण्डोपाकरणे चामातृकस्य काण्ड समापने चापितृकस्य'' என்று ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[132]

உபாகரணம் எனும் அத்யயன ஆரம்பம், ச்ராவண பௌர்ணமியில் (ஆவணிமாத பௌர்ணமியில்) செய்யப்பட வேண்டும்.

ஸமாபநம் என்னும் உத்ஸர்ஜன கர்மா, தை மாதத்தில் பூசம் அல்லது ரோஹிணி நக்ஷத்திரத்துடன் கூடிய, பௌர்ணமி அன்று செய்யப்படும்.

காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரிஷியே காண்டரிஷியும், கர்மாவுக்கான தேவதையும் ஆவார். காண்டரிஷிக்கும் ஸதஸஸ்பதிக்கும் ஹோமங்கள் செய்யவேண்டும்.

"ப்ராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்நேயம், வைச்வதேவம்" என காண்டங்கள் நான்காகும்.

ப்ரஜாபதி, ஸோமன், அக்னி, விச்வேதேவர் ஆகியோர் முறையே இந்த காண்டங்களுக்கு ருஷிகளாகும்.

அந்தந்தக் காண்ட முடிவில் அதற்குரிய ரிஷிக்கு ஹோமம் விதிக்கப்பட்டுள்ளது. பிறகு ஜயாதி ஹோமம் உண்டு என்று சிலரும், இல்லை என்று சிலரும் கருதுகின்றனர்.

இவ்வாறு உபாகரண, ஸமாபந காலங்களில் செய்யப்படும் ஹோமங்கள் ப்ரஹ்மச்சரிய வ்ரதங்கள் ஆகும்.

வேறு சில க்ருஹ்ய ஸூத்ரங்களில் ஸாவித்ரீம், ஸம்மிதம் என மேலும் இரு வேத வ்ரதங்கள் கூறப்பட்டுள்ளன. ஸாவித்ரீ, ஸம்மிதம் என்ற பெயரில் காண்டங்கள் எதுவும் இன்மையால் வேத வ்ரதங்கள் முன் சொன்ன நான்கு தவிர வேறில்லை என்பது ஸுதர்சனாச்சார்யர் தீர்மானம்.

---

132 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 112

ஆசார்யன், சிஷ்யர்களுடன் ச்ராவண பௌர்ணமியன்று நதிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளுக்குச் சென்று விதிப்படி ஸ்நாநம் செய்து 9 காண்ட ருஷிகளுக்கும் மற்றும் ஸதஸஸ்பதிக்கும் உரிய ஹோமத்தைச் செய்து, நான்கு அநுவாகங்கள் வேதாரம்பம் மற்றும் ஜயாதியையும் செய்யவேண்டும்.

உத்ஸர்ஜனத்தையும் விதிப்படி அநுஷ்டிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. ஸ்த்ரீயாநுபேதேந ... ....ஹோமம் பரிசக்ஷதே

உபநயனம் போன்ற உரிய ஸம்ஸ்காரங்கள் இல்லாத ஒருவனாலோ அல்லது பெண்களாலோ செய்யப்படும் யாக-யஜ்ஞ கர்மாக்கள், மற்றும் உப்பு போன்று கரிப்புத் தன்மை கொண்ட பொருட்கள், தரமற்ற பொருட்களால் செய்யப்படும் ஹோமங்களும் ஏற்புடையவை அல்ல.

குறிப்பு:-"पाणिग्रहणादि गृह्यं परिचरेत् स्वयं पत्न्यपि वा पुत्रः कुमार्यन्तेवासी..." என்று ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் வழங்கப்பட்டுள்ளது.[133]

'न स्त्री जुहुयान्नानुपेतः' என ஆபஸ்தம்பர் தர்மஸூத்ரத்தில் வழங்கியுள்ளார்.

எனவே, பெண்கள் மற்றும் உபநயன ஸம்ஸ்காரமற்றோர் யாக, யஜ்ஞங்கள் செய்யத் தகுதியற்றவர்கள் என்பது, தெளிவாகப் புலப்படுகிறது.

4. யதோபதேசம் காம்யாநி பலயச்ச

ஒரு பலனை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மா காம்ய கர்மாவாகும். பலிகர்மா மற்றும் காம்ய கர்மாக்கள், அந்தந்த விதிகளின்படி செய்யப்படவேண்டும். யாக, யஜ்ஞாதி கர்மாக்களில் பெண்கள் மற்றும் உபநயன ஸம்ஸ்காரம் அற்றோருக்கு விதிக்கப்பட்ட தடை காம்ய கர்மாக்களுக்குப் பொருந்தாது.

குறிப்பு:- காம்ய கர்மாக்கள், பெண்கள் மற்றும் உபநயன ஸம்ஸ்காரமற்றோரின் பயன்பாட்டிற்காகவே வழங்கப்பட்டுள்ளமையால், அவர்களுக்கான தடை, காம்ய

133 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 115

கர்மாவில் விலக்கப்பட்டுள்ளது. அதுபோல், உப்புக் காரம் போன்ற பொருட்களையும் உபயோகித்து காம்ய கர்மாக்களை அநுஷ்டிக்கலாம் என்பது, ஸுதர்சனாசார்யருடைய அபிப்ராயம்.[134]

5. ஸர்வத்ர ... .... ஸமிதாவாதத்யாத்

எப்பொழுதெல்லாம் அக்னியில் ஜ்வாலை தானாகவே பெரிதாக எழுகின்றதோ, அப்போது "உத்தீப்யஸ்வ" மற்றும் "மாநோ மஹாந்தம்" ஆகிய இரு மந்த்ரங்களை ஜபித்து, ஸமித்தை அக்னியில் இடவேண்டும்.

குறிப்பு:- அதாவது, அக்னி சற்று தணியும் சமயத்தில், விசிறியைக் கொண்டோ, வாயால் ஊதியோ ஜ்வலிக்கச் செய்யாமல், தானாக ஜ்வலனமாகும் பொருட்டு மேற்படி மந்த்ரங்களை உபயோகித்து ஸ்வாஹாகாரம் இல்லாமல் அக்னியில் ஸமித்தைச் சேர்க்கவேண்டும்.[135]

6. ஆபந்மா ஸ்ரீ: ஸ்ரீர்மாகாதிதி வா

மேற்படி மந்த்ரங்கள் தவிர, "ஆபந்மா ஸ்ரீ:" மற்றும் "ஸ்ரீர்மாகாத்" ஆகிய மந்த்ரங்களையும் உபயோகித்து ஸமித்துக்களைச் சேர்த்து அக்னியை ஜ்வலிப்பிக்கலாம்.

7. ஏததஹாவிஜாநீயாத்யதஹர்பார்யாமாவஹே

விவாஹம் செய்துகொண்டவன், முதன் முதலாகத் தன் பத்நியை, எந்த தினத்தில் தன் க்ருஹத்திற்கு அழைத்து வந்தானோ, அந்த தினத்தை (விவாஹ தின நக்ஷத்திரத்தை) நினைவில் கொள்ளவேண்டும்.

'श्वो भूते स्थालीपाकः'[136] என்பதால் ஒவ்வொரு வருடமும் விவாஹ தின நக்ஷத்திரத்தன்று விசேஷமாக ஸ்தாலீபாகம் செய்யவேண்டும் என அறியப்படுகிறது.

8. திரிராத்ரமுபயோரதச்சய்யா ப்ரஹ்மசர்யம் க்ஷாரலவணவர்ஜநம் ச

134 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 115

135 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 116

136 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 116

விவாஹத்தில், ஸ்தாலீபாக கர்மா ஆரம்பித்த அன்று முதல், மூன்று இரவுகள் உப்புக்காரம் உள்ள உணவை தவிர்க்கவேண்டும். ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடன் தரையில் படுத்து உறங்கவேண்டும்.

குறிப்பு:- स्मरणं कीर्तनं केळिः प्रेक्षणं गुह्यभाषणम्।

संकल्पोऽध्यवसायश्च क्रियानिष्पत्तिरेव च। एतन्मैथुनमष्टांगं प्रवदन्ति मनीषिणः॥[137]

என்று மைதுனம் எட்டு விதம். இந்த எட்டுவித செயல்களையும் செய்யாதொழியவேண்டும். च என்ற ப்ரயோகம் ஸூத்திரத்தில் காணப்படுவதால் அனைத்தையும் தவிர்க்கவேண்டும் என்பது தெரியவருகிறது. இவற்றுடன், உப்பு, துவர்ப்பு தவிர மது, மாம்ஸம், பல்துலக்குதல், மையிட்டுக் கொள்ளுதல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், மாலை அணிந்து கொள்ளுதல் போன்றவற்றையும் 3 இரவுகளுக்குத் தவிர்க்கவேண்டும் என்பது ஸுதர்சனாசார்யர் கருத்து.

9. தயோச்சய்யாமந்த்ரேண ... .... ... ஸூத்ரேண வா பரிவீதஸ்திஷ்டதி

ஹரதத்தரின் வ்யாக்யானப்படி, படுக்கையில் இருவருக்கும் இடையில் ஏதாவது ஒரு பால் சுரக்கும் மரத்தின் கொம்பில் (குச்சியில்), சந்தனம் தடவி, வஸ்த்ரம் அல்லது நூலினால் வைத்துக்கொள்ளவேண்டும்.

10. தம் சதுர்த்யா...... ..... .... சேஷம் ஸமாவேசநே ஜபேத்

விவாஹ தினத்திலிருந்து நான்காம் நாள் பின்னிரவில் "உதீர்ஷ்வாதோ" எனும் இரு மந்த்ரங்களைக் கூறி, இருவருக்கும் இடையில் வைத்திருந்த தண்டத்தை எடுத்து, அலம்பி வேறிடத்தில் வைக்கவேண்டும்.[138]

சேஷ ஹோமத்திற்கு அக்நிப்ரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம்வரை செய்து, மனைவி தொட்டுக்கொண்டிருக்க "அக்நே ப்ரயச்சித்தே", "வாயோ ப்ராயச்சித்தே", "ஆதித்ய ப்ராயச்சித்தே", "ப்ரஜாபதே ப்ராயச்சித்தே", "ப்ரஸவஸ்ச்ச", "மதுச்ச", "சித்தஞ்ச" ஆகிய

137 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 118

138 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 120

ஏழு ஹோமங்களைச் செய்து, ஜயாதி, ப்ராயச்சித்த ஆஹுதி, பரிஷேசநம் வரை செய்யவேண்டும்.

மனைவியை, அக்நிக்கு மேற்கில் கிழக்கு முகமாக அமரச்செய்து, மேற்படி ஹோமத்தில் மீந்த நெய்யிலிருந்து பெண்ணின் தலைமேல் மூன்று வ்யாஹ்ருதிகள், நான்காவதாக ஓம் என்றும் ஸ்வாஹாகாரத்துடன் சொல்லிச் சேர்க்கவும்.

"அபச்யந்த்வா" எனும் மந்திரத்தால் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கணவன் ஹோம நெய் சிறிது எடுத்து, மனைவியினுடைய மற்றும் தன்னுடைய, இதயப்ரதேசத்தில் "ஸமஞ்சந்து" என்ற மந்த்ரத்தால் தடவவேண்டும்.

"ப்ரஜாபதே" முதலிய மூன்று மந்த்ரங்களை ஜபித்து, அவளுடன் தாம்பத்ய உறவில் ஈடுபடும்போது அடுத்த அநுவாகத்தில் உள்ள, "ஆரோஹ ஊரும்" முதலியவைகளை ஜபிக்கவும்.

*11.* அந்யோவைநாமபிமந்த்ரயேத.

மிகுதியுள்ள மந்த்ரங்கள், தம்பதிகள் உறவில் ஈடுபடும்போது வேறொருவரால் ஜபிக்கப்படவேண்டும்.

குறிப்பு:- மந்த்ரங்களை வரன் தானே ஜபிக்காமல், வேறொருவரைக் கொண்டு ஜபிக்கச்செய்யவேண்டும். காரணம், வரன் ஸம்போகம் செய்யும் நிலையில், வைதிக அநுஷ்டானத்திற்குத் தகுதியற்றவன் ஆகிறான்.[139]

வது, தான் அணிந்திருந்த வஸ்திரத்தை மாற்றிக்கொண்டு, (ஸம்போகத்துக்குரிய) வஸ்திரத்தை அணிந்து வந்தபின், வரன் அவளைத் தொடவேண்டும். வது அணிந்திருந்த வஸ்திரத்தை வேதமறிந்த ப்ராஹ்மணனுக்கு வரன் கொடுத்துவிடவேண்டும்.

*12.* யதா மலவத்வாஸா: ... .... யாம்மலவத்வாஸஸாமித்யேதாநி

விவாஹத்திற்குப் பிறகு மனைவியானவள் முதல் முறையாக ரஜஸ்வலை ஆகும்போது, வரன் அவளுக்கு "யாம்

---

*139* "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – *121*

மலவத்வாஸஸம்” முதலிய மந்த்ரங்களால், ஸ்த்ரீதர்மம், ரஜஸ்வலா தர்மம், மற்ற செய்யக்கூடிய, செய்யக்கூடாத விஷயங்களை உபதேசிக்கவேண்டும்.

குறிப்பு:- உபநயனத்தில் ப்ரஹ்மசாரிக்கு நியமங்கள் எவ்வாறு ஒரே ஒருமுறை மட்டும் போதிக்கப்படுகிறதோ, அதுபோல் ஒரு முறை மட்டுமே மாஸ தர்மம் மற்றும் மற்றைய நியமங்களையும் வரன் வதுவுக்கு, ஒருமுறைதான் உபதேசிக்கவேண்டும். ''तिस्रो रात्रीर्व्रतं चरेदञ्जलिना वा पिबेत्'' போன்ற தர்மங்கள் இதில் அடங்கும்.[140]

ரஜஸ்வலா காலத்தில் நூல் நூற்பது, கண்களுக்கு மை தீட்டிக் கொள்வது, பல் துலக்குதல், நகம் நறுக்குதல், உறவில் ஈடுபடுவது, தலை முழுகுதல், தைல ஸ்நாநம் முதலியவை தவிர்க்கப்படவேண்டும்.

*13. ரஜஸ: ப்ராதுர்பாவ ... ... ... உத்தராபிரபிமந்த்ரயேத்*

ரஜஸ்வலை முடிந்து ஸ்நாநம் செய்தபிறகு, பத்னியுடன் தாம்பத்யத்தில் ஈடுபடவேண்டும். அப்போது, “விஷ்ணுர்யோநிம்” என்கிற 13 மந்த்ரங்களால் பத்நியை அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

குறிப்பு:- ருது ஸ்நாநம் ஆனவளுடன் கலவியில் ஈடுபடும்போது, “விஷ்ணுர்யோநிம்” முதலிய 13 மந்த்ரங்களை ஜபித்து அபிமந்த்ரணம் செய்வது மிகவும் அவசியம். “ஸ்நாதாம்” எனும் சொல் ஸ்நாநத்தை மட்டுமன்றி எண்ணைக் குளியல், மை தீட்டிக் கொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்கவேண்டும் என்பதையும் குறிக்கிறது. ‘ऋतुस्स्वाभाविकः स्त्रीणां रात्रयष्षोडश स्मृताः’ என்று ரஜஸ்வலை ஆன நாளிலிருந்து, 16ம் நாள் ருது காலம் என மனு தர்மத்தில் கூறப்பட்டுள்ளது.[141]

---

*140 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 122*

*141 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 123*

**9வது கண்டம்**

*1. சதுர்த்தீம் ... ... இத்யுபதிசந்தி*

ஸத்புத்ரர்களைப் பெற விரும்புபவன், மனைவி ரஜஸ்வலை ஆகி நான்காம் நாள் ஸ்நானம் செய்ததிலிருந்து, 16ம் நாள் வரையிலான நாட்களே ருது காலம் ஆகும். இந்த ருது காலத்தில் மனைவியுடன் உறவு கொண்டால் நல்ல குணங்களுடன் கூடிய ப்ரஜைகளைப் பெறலாம். மேலும், ருது காலத்தில் மனைவியுடன் கலவியில் ஈடுபடாமல் இருப்பதும் தர்ம விரோதமாகச் சாஸ்த்ரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவாஹத்திற்குப் பிறகு வரும் முதல் ருது காலத்திற்கும், இந்த நியமம் பொருந்தும் என, மனு தர்மத்தில் அறியப்படுகிறது.[142]

*2. அர்தப்ராத்வஸ்ய ... ... ... யதாலிங்கம் ஜபேத்*

தும்மல் இருமல் போன்ற துர்நிமித்தப் பரிஹாரம் சொல்லப்படுகிறது.

குறிப்பு:- துர்நிமித்தங்களாவன: தும்மல், இருமல், புறப்படும்பொழுது பின்னாலிருந்து கூப்பிடுவது, எதிர்வரும் யாருடனாவது மோதுவது, கெட்ட ஸ்வப்நம், அமங்கலமான வார்த்தைகள், பறவைகளின் அபாயகரமான அலறல், பூனை, நரி முதலியவை பாதையின் குறுக்கே ஓடுவது ஆகியவை.

ஒரு நல்ல காரியத்திற்காகப் புறப்பட்டுச் செல்லும்போது இவைகளில் ஏதாவது ஒன்று ஏற்பட்டாலும் "அநுஹவம் அநுஹூதம்" என்கிற இரண்டு மந்த்ரங்களையும் ஜபிக்கவேண்டும். விவாஹத்தின்பொழுது ஏற்படும் துர்நிமித்தங்களுக்குப் ப்ராயச்சித்தம் தனியாக வழங்கப்பட்டுள்ளது.[143]

*3. ஏவமுத்தரை ... .... .... ஸிக்வாதம் சகுநமிதி*

சாணி - மலக் குவியல், அமங்கலமான பறவை போன்ற துர்நிமித்தத்தை ஏற்படுத்தும் காரணிக்குரிய லிங்கத்தைப் பொறுத்து, 'आरात्ते अग्निरस्तिव' முதலிய மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும்.

---

*142 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 125*

*143 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 125*

4. உபயோர் ஹ்ருதயம் .... .... ஸித்விம் வாசயதி

மணாளனுடைய மனது, மனைவியிடம் ஈடுபாடற்று இருக்குமானால் செய்யவேண்டிய பரிஹாரம்.

அன்பற்றிருக்கும் கணவனுடைய மாமனார், தன்பெண்ணிடத்தில், அவள் கணவன் அன்புடன் இருக்கச்செய்யவேண்டும் என்று விரும்பினால், கீழ்க்கண்டவற்றை அநுஷ்டிக்கவேண்டும். ஒரு நல்ல புனர்வஸு நக்ஷத்திரம் உள்ள தினத்தில், இந்த வசீகரண கர்மா அநுஷ்டிக்கப்படவேண்டும்.[144]

1. கணவனை 3 இரவுகள் ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அநுஷ்டிக்கச்செய்யவும்.

2. 4ம் நாள் அக்னி ப்ரதிஷ்டை முதல் ஆஜ்யபாகாந்தம் வரை செய்து, மனைவி தொட்டுக்கொண்டிருக்க "ப்ராதரக்னிம் ..." என்கிற பாக்ய ஸூக்தத்தில் உள்ள 7 மந்த்ரங்களால் ப்ரதான ஆஹுதிகளைச் செய்யவேண்டும்.

3. ஜயாதி ஹோமங்களைச் செய்து, பரிஷேசநம் வரை செய்யவேண்டும்.

4. மீதியுள்ள அன்னத்தில் நெய் சேர்த்து, குறைந்த பக்ஷம் இரு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்வித்து ஆசீர்வாதம் பெறவேண்டும்.

குறிப்பு:- 5, 6 ஸூத்திரங்களில் 'श्वस्तिष्येण' என்று காணப்படுகிறது. இதுவே ஸ்தாலீபாக கர்மாவாகும். அனைத்துக் கர்மாக்களும் பார்வணம் போலவே உள்ளன. ஏனெனில் இது விவாஹ படலத்தில் வந்துள்ளது. ஒரேமுறை பாத்ர ப்ரயோகம். கால நிர்ணயம் எதுவும் விதிக்கப்படவில்லை. "ப்ராதரக்நிம்" எனத் தொடங்கும் ஏழு மந்த்ரங்கள் ப்ரதான ஆஹுதிகளாகும். பொதுவாக பார்வண கர்மாக்களில் ஒரு ப்ராம்மணன் எனக் குறிப்பிட்டிருப்பினும், குறைந்தது இரு ப்ராம்மணர்களை வைக்கவும் விதி இருக்கின்றது. 'द्वयवरान् इति'.[145]

---

144 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 127

145 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 127

5. ச்வஸ்திஷ்யே ... .... நிஷ்க்ரீணாமிதி

பூச நக்ஷத்திரத்திற்கு முந்தைய தினம், வது, பாடா எனும் மருத்துவ குணமுள்ள செடியைச் சுற்றிலும், ஏழு எண்ணிக்கையில் யவம் எனப்படும் ஒரு வகைத் தான்யத்தை, நாலா புறமும் இடவேண்டும்.

குறிப்பு:- புனர்வஸு நக்ஷத்திரத்தன்று, यदि वारुण्यसि वरुणा त्वा निष्क्रीणामि। यदि सौम्यसि सोमाय त्वा निष्क्रीणामि என்கிற மந்திரத்தைச் சொல்லி பாடா என்னும் ஓஷதிச்செடியின் நான்கு புறமும் யவதான்யத்தை ஏழு, ஏழு எண்ணிக்கையில் சேர்க்கவேண்டும்.[146]

6. ச்வோபூத ... .... பரிக்ரூணீயாதுபதாநலிங்கயா

பூச நக்ஷத்திர தினத்தன்று, 'इमां खनामि' என்னும் மந்த்ரத்தைச் சொல்லி, யவதான்யம் இடப்பட்ட அந்த பாடா என்னும் செடியை வேருடன் தோண்டி, அதன் வேரை 'उत्तान पर्णे' எனும் மந்த்ரங்களால் இரு துண்டுகளாகச் செய்து, (ऋचा) अहमस्मि என்கிற மந்த்ரத்தைச் ஜபித்து, கணவன் அறியாதவாறு தன் உடலில் கட்டிக்கொண்டு, இரவு மஞ்சத்தில் பின்வரும் 'उपतेऽधां' என்கிற மந்த்ரம் சொல்லி, இரு கைகளாலும் கணவனை அணைத்துக்கொள்ள வேண்டும். அப்போது பாடா செடி கணவனின் மேனியில் படும்படியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு:- கணவனுக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பிருந்தால், இந்தக் கர்மா பரிஹாரம் ஆகும். அந்த வேறொரு பெண்ணின் கவனத்திற்கு எட்டாமல், வதுவின் விவாஹ அக்னியிலேயே, இது செய்யப்படவேண்டும். விவாஹ அக்னி வேறுபட்டால், வேறாக அக்னி ப்ரதிஷ்டை செய்யப்படவேண்டும் என்பது சிலர் கருத்து.[147]

7. வச்யோ பவதி

மேற்சொன்னவாறு பரிஹாரம் செய்தால் மனைவியிடம் கணவனுக்கு ப்ரியம் உண்டாகும்.

8. ஸமந்த்நீபாதநம் ச.

இக்கர்மாவை அநுஷ்டிப்பதன் மூலம், கணவன் தொடர்பு

146 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 127

147 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 128

வைத்துள்ள, மற்றொரு பெண்ணின் வசிய சக்தியை முறியடிக்கலாம்.

*9. ஏதைநைவ .... ஆதித்யமுபதிஷ்டதி*

இக்கர்மாவானது, தொடர்ந்து பலன் அளிக்க, 'उदसौ आगात्' என்கிற, ஸூர்யனைக் குறித்த மந்திரத்தை ஜபித்து, ஸூர்யனின் ப்ரீதியைப் பெறவேண்டும்.

*10. யக்ஷ்மக்ருஹீதாமந்யாம் .... .... ப்ரதீசீநம் நிரஸ்யேத்*

குஷ்டம் எனப்படும் க்ஷயரோகம் (ராஜயக்ஷ்மா) போன்ற வ்யாதிகளால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமாக, 'अक्षिभ्याम्' என்னும், ஆறு மந்த்ரங்களைக் கூறியபடி, வேருடன் கூடிய தாமரை மலரின் இதழ்கள் மற்றும் வேர்களைக் கொண்டு, ரோகத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் தடவித் தடவி ரோகத்தைத் தணிக்கலாம்.

*11. வதூவாஸ உத்தராபிரேதத்விதே தத்யாத்*

விவாஹத்தில் வது உடுத்திய வஸ்திரத்தை "பராதேஹி" முதலிய நான்கு மந்த்ரங்களால் மந்திரம் அறிந்த ப்ராம்மணனுக்குக் கொடுக்கவேண்டும்.

[148]குறிப்பு:- விவாஹத்தில் வது உடுத்தியிருந்த வஸ்த்ரம் மிகவும் தோஷம் உள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, வேத மந்த்ரங்களை அறிந்த ப்ராஹ்மணன் ஒருவனுக்கு, அந்த வஸ்த்ரத்தை, பராதேஹி என்னும் மந்திரத்தைச் சொல்லி, தானமாக வழங்கவேண்டும்.

ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் 'चरितव्रतः सूर्यविदे वधूवस्त्रं दद्यात्' எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஸுதர்சனாச்சார்யர் இதுவிஷயத்தில் வஸ்த்ரத்தைத் தொடாமலேயே கொடுக்கவேண்டும் எனத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

---

*148 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 130*

# இயல் - 5

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் - 4

(இவ்வியலில் உபநயன ப்ரஹ்மோபதேச கர்மாக்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.)

**4வது படலம் – 10வது கண்டம்**

*1. உபநயனம் வ்யாக்யாஸ்யாம:*

உபநயன விதிகள் சொல்லப்படுகின்றன.

க்ருஹ்ய ஸூத்ரத்தில் உள்ள கர்மாக்களை அநுஷ்டிக்க க்ருஹஸ்தனுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. ப்ரஹ்மசாரிக்குக் கிடையாது. எனவே, விவாஹ விதிகள் முன்னதாகத் தெரிவிக்கப்பட்டு, உபநயன விதிகள் பின்னதாக வழங்கப்படுகின்றன. அதாவது, க்ருஹஸ்தன் தன் குமாரனுக்கு உபநயனம் செய்துவைக்க அறியவேண்டியவையாக உபதேசிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- உபநயன சப்தம் ஏற்படும் விதம்.

'येन आचार्य कुलं उपनीयते कुमारः तत् उपनयनं नाम कर्म'।[149]

உபநயனம் ஆகாதவன், ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களைச் செய்யத் தகுதியற்றவன் ஆவான். அதுபோல் உபநயன ஸம்ஸ்காரத்திற்கு முன் செய்யப்படவேண்டியதான, கர்பாதானம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம் இவைகள் முறைப்படி செய்யப்பட்டவனே, உபநயன கர்மாவுக்குத் தகுதியுடையவன் ஆவான்.

कुमारस्य आचार्य समीप नयनं अस्मिन् कर्मणि என உபநயன சப்தத்திற்கு, ஸுதர்சனாசார்யர் வ்யுத்பத்தி செய்துள்ளார்.

விதிவசத்தால் உபநயன கர்மாவிற்கு முன் செய்யப்படவேண்டிய கர்மாக்கள், செய்யாது விடுபட்டிருந்தாலும், உபநயன கர்மா செய்யலாம் என்பது, சில ஆசார்யர்களின் அபிப்ராயம்.

குறிப்பு:- தற்காலத்தில், காலம் தவறினாலும் உபநயனத்திற்கு முன்னதாக ஜாதகர்மாதி கர்மாக்கள், ஒரே நாளில் அநுஷ்டிக்கப்படுகின்றன.

*2. கர்பாஷ்டமேஷு ப்ராஹ்மணமுபநயீத*

கர்பம் தரித்தலிருந்து 8ம் வருடத்தில், ப்ராஹ்மணனுக்கு உபநயனம் செய்யவேண்டும்.

---

*149 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 132*

குறிப்பு:- குமாரன் கர்பத்தில் இருந்த வருடத்தையும் சேர்த்து எட்டாவது வருடத்தில் (அதாவது ஏழாவது வயதில்), ப்ராஹ்மண குமாரனுக்கு உபநயன ஸம்ஸ்காரம் செய்யப்படவேண்டும்.[150]

நான்கு வயது வரை குழந்தைத்தனம் மாறாது, ஆகையால், 5 முதல் 7 வயதிற்குள், உபநயன ஸம்ஸ்காரத்தைச் செய்யலாம் என்பது சிலர் கருத்து. கர்பாஷ்டமம் என்று சாஸ்த்ர வாக்யம் இருப்பினும், குமாரனுக்கு வாக்கு ஸ்பஷ்டம் போன்ற தகுதிகள் காணப்பட்டால் 5 - 6ம் வயதிலேயே, உபநயனம் செய்யவதற்கு நியமம் இருப்பதாக ஸுதர்சனாசார்யர் அபிப்ராயம்.

3. கர்பைகேதசேஷு ராஜந்யம் கர்பத்வாதசேஷு வைச்யம்
4. வஸந்தோ க்ரீஷ்மச்சரதித்யுருதவோ வர்ணாநுபூர்யேண

11ம் வயதில் க்ஷத்ரியனுக்கும், 12ல் வைச்யனுக்கும் செய்யவேண்டும்.

வர்ணத்துக்குத் தக்கவாறு வஸந்த, க்ரீஷ்ம, சரத் ருதுக்களில் உபநயன ஸம்ஸ்காரம் பண்ணவேண்டும். வஸந்த, க்ரீஷ்ம, சரத் ருதுக்கள் 3 வர்ணத்தாருக்கும் உகந்தது.

[151]குறிப்பு:- 'शिशिरे च सर्वान्' என்று பரத்வாஜ க்ருஹ்ய ஸூத்ரத்தில் உள்ள வசனம், 'वसन्ते ब्राह्मणम्' என்கிற, ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்தில் உள்ள வசனத்தால் நிராகரிக்கப்படுகிறது. எனவே, உத்தராயணம்தான், உபநயன கர்மாவுக்கான காலம் ஆகும்.

5. ப்ராஹ்மணான் ... .... சிர உநத்தி

ப்ராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்து, ஆசீர்வாதம் பெற்று, குமாரனுக்கு போஜனம் செய்வித்து, அநுவாகத்தின் முதல் மந்த்ரமான "ஆபஉந்தந்து" என்பதால் குமாரனின் தலையை நனைக்கவேண்டும்.

[152]குறிப்பு:- முதல்நாள் நாந்தீ ச்ராத்தம் செய்து, ப்ராம்மண போஜநம் செய்துவைத்து, அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று,

150 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 133

151 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 134

152 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 135

அடுத்த நாள் உபநயனம் செய்யவேண்டும்.

உபநயன தினத்தில் "யஜ்ஞோபவீதம்" மந்திரத்தைச் சொல்லி, குமாரனுக்கு பூணல் போட்டு வைக்கவேண்டும். அடுத்து ஆசமனம் செய்து வைத்து, உப்பு, இனிப்பு இல்லாத உணவைக் குமாரனுக்கு இட்டு போஜனம் செய்து வைத்து, சாப்பிட்ட பின், மீண்டும் ஆசமனம் செய்து வைக்கவும்.

உபநயனம் வரை உள்ள கர்மாக்களை, தாய் தந்தை செய்யவேண்டும் என்றும், அதன் பிறகு உள்ள கர்மாக்கள் குமாரன் தானாகவே செய்து கொள்ளலாம் என்பது ஆசார்யர்களின் கருத்து.

"ஆப உந்தந்து" மந்திரங்களைக் கூறி, ஆசார்யன் குமாரனின் தலையை நீரினால் ஈரப்படுத்தவேண்டும். பிறகு நாபிதனால் நனைக்கப்படவேண்டும்.

6. த்ரீன் த்ரீன் தர்பான் ... ... ப்ரவபதி

நான்கு திக்குகளிலும் மும்மூன்று தர்பங்களைக்கொண்டு, "யேநாவபது" முதலிய நான்கு மந்த்ரங்களால், அந்தந்த திக்கிலுள்ள கேசங்களை நறுக்கவேண்டும்.

''प्रशब्दात् कुशली करणमप्याचार्यस्यैव''[153]

குறிப்பு:- "ப்ரவபதி" என்பதற்கான தாத்பர்யம் பொருந்தவேண்டுமானால், அனைத்தையும் ஆசார்யனே செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி, 'முதலில் ஆசார்யன், பின்னர் நாபிதன் செய்யவேண்டும்' என்கிற, மற்ற சிலரின் கருத்தை ஸுதர்சனாசார்யர் மறுக்கிறார்.

7. வபந்தமுத்தரயா .... ..... மாதா ப்ரஹ்மசாரீவா

வபநம் செய்யும்போது, குமாரனின் தாயார் அல்லது ப்ரஹ்மச்சாரி, தென்புறம் இருந்து, "யத்க்ஷுரேண" மந்த்ரம் சொல்லவேண்டும்.

குறிப்பு:- 'वपन्तमुत्तरयाऽनुमन्त्रयते', 'दक्षिणतो माता ब्रह्मचारी वा'। என்று ஹரதத்தர், இந்த ஸூத்திரத்தை இரு கூறாகப் பிரித்துப் பொருள் கொள்வதால், "யத்க்ஷுரேண" எனும் மந்திரம், அருகில் உள்ள தாயார் அல்லது ப்ரஹ்மசாரியால் சொல்லப்படவேண்டும்

153 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 136

என்று கருதுகிறார்.[154]

வபநம் செய்வதில் அனைத்து கர்மாக்களும் ஆசார்யனுடையதே என்றும், "யத்க்ஷுரேண" மந்திரத்தில், "மா ப்ரமோஷீ:" என்று 'மத்யம புருஷ க்ரியா ப்ரயோகம்' காணப்படுவதால், இம்மந்திரத்தைச் சொல்லவேண்டியவர், மாதாவாக இருக்கவேண்டும் என்பதும் ஸுதர்சனாசார்யரின் அபிப்ராயம்.

ஹரதத்தர் இதிலிருந்து மாறுபட்டு, சிலவற்றை ஆசார்யனும், மற்றவற்றை நாபிதனும் செய்யவேண்டும் என்கிறார். ஸுதர்சனாச்சார்யர் இதை நிராகரித்து [155]''एतद्वपनं नापितस्समापयतीत्यत्र वचनाभावात् तत्कल्पनायां च अनुपपत्त्यभावात्'' என்று வ்யாக்யானம் அருளிச்செய்துள்ளார்.

8. ஆநடுஹே... .... ... வா நிததாதி

தென்புறம் உள்ளவர் (தாயார் அல்லது ப்ரஹ்மசாரி) காளை மாட்டுச் சாணி மீது நெல்லைச் சேர்த்து, அதன்மேல் நறுக்கிய கேசங்களை வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும். பின் இறுதியில் அத்தி மரத்தின் வேரில் அல்லது தர்பங்கள் உள்ள ப்ரதேசத்திலோ சேர்க்கவேண்டும்.

9. ஸ்நாதமக்நேருப... ... ... ஸ்தாபயதி

வபனத்திற்குப் பிறகு, குமாரனுக்கு ஸ்நாநம் செய்வித்து, வேறு உடை அணிவித்து, அக்னி ப்ரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் வரை செய்து, குமாரனிடத்தில் ஒரு ஸமித்தைக் கொடுத்து, "ஆயுர்தாதேவ" மந்திரத்தால் அக்னியில் சேர்க்கச் செய்து, வடக்கில் போடப்பட்டுள்ள, ஒரு அம்மி அல்லது பாராங்கல்லின் மேல், "ஆதிஷ்டேமம்" என்கிற மந்திரத்துடன் குமாரனை ஏற்றி நிறுத்தவேண்டும்.

குறிப்பு:- உபநயன கர்மாவிலும் விவாஹத்தைப் போலவே, அக்னி ப்ரதிஷ்டை முதல், ஆஜ்ய பாகம் வரையிலும் செய்யப்படுகிறது. தர்வி, ஆஜ்ய ஸ்தாலீ, ப்ரோக்ஷணி, ப்ரணீதி, இத்மம், அச்மாநம், வஸ்த்ரம், மேகலை முதலிய அனைத்தும் ஒரே வரிசையில் இட்டு, பாத்ர ப்ரயோகமும், பரிதியின்

154 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 137

155 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 137

ஸ்தானத்தில் ஸமீ ப்ரயோகம் இடம் பெறுகிறது. "ஆதிஷ்டேமம்" என்கிற மந்திரத்தை ஆசார்யன் சொல்லிக்கொண்டு, குமாரனின் வலது காலை அம்மியின்மேல் எடுத்து வைக்கிறான்.[156]

10. வாஸஸ்ஸத்ய: ... ... பரிஹிதமுத்தரயாஅநுமந்த்ரிதே

குமாரன் உடுத்தவேண்டிய வஸ்த்ரத்தை, "ரேவதீஸ்த்வா" எனும் இரு மந்த்ரங்களால் அபிமந்திரித்து, ஆசார்யன் "யாஅக்ருந்தந்" என்கிற மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு குமாரனுக்கு உடுத்திவிடவேண்டும்.

11. மௌஞ்ஜீம் ... ... ப்ரதக்ஷிணமுத்தராப்யாம் பரிவீயாஜிந முத்தரமுத்தரயா

மௌஞ்ஜி அல்லது மேகலையை, குமாரனின் இடுப்பைச் சுற்றி ப்ரதக்ஷிணமாகக் கட்டும்போது, "இயம் துருக்தாத்" என்கிற மந்திரத்தைச் சொல்லவேண்டும். மான் தோலை அணிவிக்கும்போது, "மித்ரஸ்ய" என்கிற மந்திரத்தைக் கூறவேண்டும்.

குறிப்பு:- ப்ராஹ்மணனுக்கு மேகலையாக க்ருஷ்ண ம்ருகம் எனும் மான்தோல் குறிப்பிடப்பட்டுள்ளது. க்ஷத்ரிய, வைச்யர்களுக்கு வேறு சர்மம் (தோல்) உபயோகிக்கவேண்டும் என்பது சிலர் கருத்து. "இயம் துருக்தாத்" எனகிற மந்த்ரத்தைக் கூறி குமாரனுக்கு அணிவித்துவிட்டு, அம்மந்திரத்தை ஆசார்யன் குமாரனுக்கும் சொல்லிவைக்கவேண்டும்.[157]

12. உத்தரேணாக்நிம் ... .... இதி தக்ஷிணே கர்ணே ஜபதி

அக்நிக்கு வடக்கே தர்பங்கள் பரப்பப்படவேண்டும். ஆசார்யன் அதன் மேல் குமாரனை நிறுத்தி, "ஆகந்த்ரா" என்கிற மந்திரத்தை ஜபிக்கவேண்டும். "ஸமுத்ராத்" என்கிற மந்த்ரத்தால் ஆசார்யன் குமாரன் கையில் ஜலத்தை விட்டு, அந்த ஜலத்தால் குமாரனை மும்முறை ப்ரோக்ஷிக்கவேண்டும்.

"அக்நிஷ்டே, ஸோமஸ்தே, ஸவிதாதே, ஸரஸ்வதீதே, பூஷாதே, அர்யமாதே, பகஸ்தே, அகும்ஸஸ்தே, மித்ரஸ்தே, மித்ரத்வமஸி" ஆகிய 10 மந்த்ரங்களால், குமாரன் கையைப் பற்றவேண்டும். "அக்நயேத்வா, ஸோமாயத்வா, ஸவித்ரேத்வா, ஸரஸ்வத்யேத்வா,

156 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 138

157 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 138

ம்ருத்யவேத்வா, யமாயத்வா, கதாயத்வா, அந்தகாயத்வா, அத்ப்யஸ்த்வா, ஓஷதீப்யஸ்த்வா, ப்ருதிவ்யைத்வா" ஆகிய 11 மந்த்ரங்களைக் கூறி, அந்தந்த தேவதைகளிடம் குமாரனை ஒப்புவிக்கவேண்டும்.

"தேவஸ்யத்வா" என்கிற மந்த்ரத்தால் குமாரனை தன் நெஞ்சோடு அணைத்துக்கொள்ளவேண்டும். உபநயனம் செய்யவேண்டும். பின் அக்னிக்கு மேற்கில் வந்து அமர்ந்து, "ஸுப்ரஜா" எனும் மந்திரத்தை குமாரனின் வலது காதில் ஓதவேண்டும். கபர்த்திகாரிகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"मौञ्ज्यजिनावस्थापनप्रोक्षणोत्थापनानि तु। समन्त्रमेतान्याचार्यः पूर्वकृत्वाऽथ वाचयेत्॥"[158]

**11வது கண்டம்**

1. ப்ரஹ்மசர்யம்... ...... குமார ஆஹ

ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை ஏற்கிறேன் எனப்பொருள்படும், "ப்ரஹ்மசர்யம்" என்கிற மந்திரத்தைக் குமாரன் சொல்லவேண்டும்.

2. ப்ருஷ்டம் ... குமாரஸ்ய

"கோ நாமாஸி" முதலிய 4 கேள்விகளை ஆசார்யன் குமாரனிடத்தில் கேட்க, குமாரன் அதற்கு பதில் கூறவேண்டும்.

3. சேஷம் பரோ ஜபதி.

மேற்படி மந்த்ரங்கள் அடங்கிய வேதஅநுவாகத்தில், பாக்கியுள்ள மந்த்ரங்களை ஆசார்யன் சொல்லவேண்டும்.

4. ப்ரத்யகாசிஷம் சைநம் வாசயதி

"அத்வநாம்" மந்திரத்தை ஆசார்யன் குமாரனை சொல்ல வைக்கவும்.

5. உக்தமாஜ்யபாகாந்தம்

ஆஜ்யபாகம்வரை முந்தைய படலங்களில் கூறப்பட்டபடிச் செய்யவும்.

6. அதைநமுத்தரா ... ஜயாதி ப்ரதிபத்யதே

உபநயன ஹோமத்தின் ப்ரதான ஆஹுதிகள், "யோகே

158 "கபர்தி காரிகா" – 4வது படலம், 4வது ச்லோகம் – பக்கம் –10

யோகே, இமமக்நே, சதமிந்நு, அக்நிஷ்டே, மேதாம் மஹ்யம், அப்ஸராஸு, இமம்மே, தத்வாயாமி, த்வந்நோ, ஸத்வந்நோ, த்வமக்நே" ஆகிய 11 மந்த்ரங்கள் ஆகும்.[159]

''योगादीन् वाचयन्नेव कुमारं हावयते खलु। द्वितीय चतुर्थौ ब्रूयादाचार्यः, जुहुयात् वटुः॥''

மேற்சொன்ன யோகாதி 11 ஹோமங்களையும் குமாரன்தான் செய்யவேண்டும். குமாரனின் கையைப்பிடித்துக்கொண்டு ஆசார்யன் செய்யலாம்.[160]

மேற்கொண்டு ஜயாதி ஹோமங்களை ஆசார்யன் செய்யவேண்டும்.

7. பரிஷேசநாந்தம் ... ... யஜுஷோபநீதோபவிசதி

பரிஷேசநம் வரை செய்து, "ராஷ்ட்ரப்ரதஸி" எனும் மந்த்ரத்தால் கூர்சத்தை வடக்கு நுனியாய் போட்டு, ஆசார்யனை உட்காரச் செய்யவும்.

குறிப்பு:- ஹரதத்தர் சொல்கிறார். சிலர் இந்த ஸமயத்தில் ஸாவித்ரம் என்று பெயருள்ள ஒரு விதியைச் சொல்லுகிறார்கள். மேலும் சிலர் மூன்று இரவுகளுக்குப் பிறகு ஸாவித்ர மந்த்ரத்தை விதிக்கிறார்கள். உபநேதா என்கிற ஆசார்யனின் வலது காலைப் பையன் தனது வலது கையால் பிடித்துக்கொள்ளவேண்டும்.

8. புரஸ்தாத் ... ... போ அநுப்ரூஹிதி

உபநயனம் செய்துவைக்கும் ஆசார்யனுக்கு எதிரில், குமாரன் மேற்கு முகமாய் அமர்ந்து, தன் கரங்களால் ஆசார்யனின் கால்களைப் பற்றி, "ஹே குரோ! ஸாவித்ரீம் போ அநுப்ரூஹி" (காயத்ரியை உபதேசித்து அருள்வீராக) என்று கேட்கவேண்டும்.

9. தஸ்மா அந்வாஹ தத்ஸவிதுரிதி

ஆசார்யன் "தத்ஸவிது:" எனும் ஸாவித்ரி மந்த்ரத்தை குமாரனுக்கு உபதேசிக்கவேண்டும்.

10. பஞ்சோர்த்தர்சசஸ்தத: ஸர்வாம்

காயத்ரியின் ஐந்து பாதங்களையும், உபதேச முறைப்படி

---

159 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 142

160 "ஸ்ரீமதாபஸ்தம்பீய: பூர்வ ப்ரயோக: – வடுவூர் தேசிகாசார்யார்" – பக்கம் – 80

குமாரனுக்குச் சொல்லிவைக்கவேண்டும்.

*11.* வ்யாஹ்ருதீர் .... .... க்ருத்ஸ்நயாம்

"பூ:, புவ:, ஸுவ:" இவை வ்யாஹ்ருதிகளாகும். "தத்ஸவிதுர் வரேண்யம்", "பர்கோதேவஸ்ய தீமஹி", "தியோயோந:ப்ரசோதயாத்" இவை ஸாவித்ரியின் *3* பாதங்களாகும். முதல் வ்யாஹ்ருதியை முதல் பாதத்தின் முன்பும், இரண்டாவது வ்யாஹ்ருதியை இரண்டாம் பாதத்தின் முன்பும், மூன்றாம் வ்யாஹ்ருதியை மூன்றாம் பாதத்தின் முன்பும் கூறி உபதேசிக்கவேண்டும்.

பின்னர், முதல் வ்யாஹ்ருதியுடன் முதல் இரண்டு பாதங்களையும், இரண்டாம் வ்யாஹ்ருதியுடன் மூன்றாம் பாதத்தையும் சேர்த்துச் சொல்லி வைக்கவேண்டும்.

பின்னர் மூன்றாம் வ்யாஹ்ருதியுடன் மூன்று பாதங்களையும் சேர்த்துச் சொல்லி வைக்கவேண்டும்.

இறுதியாக ப்ரணவத்துடன் கூடிய ஸமஸ்த வ்யாஹ்ருதியான "ஓம் பூர்புவஸ்ஸுவ:" உடன், ஸாவித்ரியின் *3* பாதங்களையும் சேர்த்துச் சொல்லி வைக்கவேண்டும். இதுவே காயத்ரி மந்த்ர உபதேச முறையாகும்.

ஸுதர்சனாச்சார்யர் வ்யாக்யானத்தில் மேற்படி உபதேசம் செய்யும் முறை, தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.[161]

*12.* குமார முத்தரேண மந்த்ரேணோத்தரமோஷ்டமுபஸ்ப்ருசதே

"அவ்ருதமஸௌ" என்கிற மந்திரத்தை ஆசார்யன் சொல்ல, குமாரனைத் தன் உதட்டைத் தொடும்படி செய்யவேண்டும்.

*13.* கர்ணாமுத்தரேண.

"ப்ராண ஸ்வம்மே கோபாய" எனும் மந்திரத்தை ஆசார்யன் சொல்லும்போது, குமாரன் தன் இரு காதுகளையும் தொடவேண்டும்.

*14.* தண்டமுத்தரேணாதத்தே

அடுத்து "ஸுச்ரவ:" என்பதால் பலாச தண்டம் தரவும்.

*15.* பலாச தண்டோ ... ... ஔதம்பரோ வா வைச்யஸ்ய

---

*161* "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – *145*

ப்ராம்மணன் - பலாசத்தையும், க்ஷத்ரியன் ஆலமர தண்டமும், வைச்யன் இலந்தை அல்லது அத்தி தண்டமும் வைத்துக்கொள்ளலாம்.

குறிப்பு:- வர்ணத்துக்குத் தக்க தண்டத்தை தரிக்கவேண்டும். எந்த மரத்தினுடைய தண்டையும் ப்ராஹ்மணன் தரிக்கலாம் எனத் தெரிகிறது. वार्क्षो दण्डः என்றிருப்பதால் நியமத்தில் விகல்பம் உள்ளதாகக் கருத்து.[162]

*16. வார்க்ஷோ தண்ட ... ... ... உபதிசந்தி*

தண்டவிஷயத்தில் வர்ண விசேஷம் கருதவேண்டாம் என்று சிலர்.

குறிப்பு:- வ்ருக்ஷ தண்டம், யாகத்திற்கு ஏற்ற தண்டமாக இருக்க வேண்டும். இதில் எந்த வர்ணத்தின் அடிப்படையும் இல்லை. மூங்கில், பிரம்பு போன்றவை விலக்கத்தக்கவை. ''यदि वर्णसंयुक्त कल्पः प्रक्रान्तः स एवासमावर्तनात् कर्तव्यः''என்று இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.[163]

*17. ஸ்ம்ருதஞ்சமே ... ... ... ... ஆதித்யமுபதிஷ்டதே*

இந்த மந்த்ரத்தால் ஆசார்யன் குமாரனுக்கு சொல்லி வைக்கவும். "உதாயுஷா" மந்திரத்தால் எழுப்பி, "தச்சக்ஷு:" எனும் மந்த்ரத்தால் ஸூர்ய உபஸ்தானம்.

குறிப்பு:- தண்டத்தை எடுத்துக்கொண்டு குமாரன் அதே ஆஸநத்தில் உட்கார்ந்து "ஸ்ம்ருதஞ்சமே" முதலிய மந்த்ரங்களைச் சொல்லவேண்டும். குமாரன் "தச்சக்ஷு:" முதலிய மந்த்ரங்களை ஆசார்யன் சொல்லச் சொல்ல கூடச் சொல்லவேண்டும்.[164]

*18. யம் காமயேத .... ஹஸ்தே க்ருஹ்ணீயாத்*

ஆசார்யன் மாணவனைப் பிரியாதிருக்க எண்ணினால், "யஸ்மின்" என்ற மந்த்ரம் ஜபிக்கவும்.

குறிப்பு:- ஆசார்யன் விரும்பினால் இந்த மந்த்ரத்தைச்

---

162 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 147

163 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 148

164 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் – சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 148

சொல்லலாம், கட்டாயமில்லை என்பது வ்யாக்யாதாக்களின் அபிப்ராயம்.[165]

*19.* த்ரயஹமேதமக்நிம் ... ...

உபநயன அக்னியை *3* நாட்கள் பாதுகாக்கவேண்டும்.

*20.* க்ஷாரலவண வர்ஜநம் ச

*3* நாளும் உப்பு மற்றும் அதிகக் காரமில்லாத அன்னத்தை உண்ணவேண்டும்.

குறிப்பு:- உப்புக் காரம் தவிர்க்கும்படி கூறப்பட்ட நியமம் மூன்று நாட்களுக்கு மட்டுமே என்று சிலரும், ப்ரஹமசர்யம் முடியும் வரை இந்த நியமம் உண்டு என்று சிலரும் கருதுகின்றனர். ஆனால், மது, லாகிரி வஸ்துக்கள், வாசனாதி திரவியங்கள் போன்றவை ப்ரஹ்மசர்யம் முடியும்வரை தவிர்க்கவேண்டும் என்பது பெரும்பான்மையோரின் அபிப்ராயம்.[166]

*21.* பரித்வேதி பரிம்ருஜ்ய .. ..... ஆதத்யாத்

"பரித்வா அக்நே" என்கிற மந்திரத்தால் அக்னியை ஜ்வலிக்கச் செய்து, அதில் ஒவ்வொருநாளும் காலை, மாலை இருவேளையும் ஸமிதாதானம் செய்யவேண்டும்.

குறிப்பு:- ''सायं प्रातः, सायमेवाग्निपूजेत्येके'' என, ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்தில் விதிக்கப்பட்டுள்ளது. எனவே தினமும் காலையிலும் மாலையிலும் அக்னியை ஜ்வலிக்கச் செய்து, *12* மந்த்ரங்களால் ஸமிதாதானம் செய்து வரவேண்டும் என்பது தெளிவாகிறது.[167]

*22.* ஏவமந்யஸ்மிந் .... ..... ஆஹ்ருத்ய

ஒருவேளை உபநயந அக்னி அணைந்துவிடுமானால், அடுத்து வரும் விதியினால் ஆதானம் செய்யவேண்டும்.

குறிப்பு:- உபநயன அக்னி நஷ்டமானால், போதாயன ஸூத்ரப்படி அக்னி நஷ்ட ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும்.

---

*165 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 149*

*166 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 149*

*167 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 150*

ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும், பிறரால் எடுத்துவரப்படாத, தன்னாலேயே க்ரஹிக்கப்பட்ட, பழம்தரும் உபயோகமான மரங்களின் ஸமித்தைத் தவிர்த்து, மற்ற காட்டு மரங்களின் ஸமித்துகளைக் கொண்டு ஸமிதானம் ஸமாவர்த்தனம் ஆகும்வரை தினமும் செய்து வரப்படவேண்டும்.[168]

*23.* உத்தரயா ஸம்சாஸ்தி .

"ப்ரஹ்மசார்யஸி" என்பது முதல் சில கட்டளைகளை குமாரனுக்கு ஆசார்யன் விதிக்கிறார்.

குறிப்பு:- ஆசார்யன் சிஷ்யனுக்குக் கூறும் அறிவுரைகள்:

"ப்ரஹ்மசார்யஸி" - நீ ப்ரம்மச்சாரி என்பதை எப்போதும் நினைவில் கொள்.

"அபோசாநா" - என் அநுமதியின்றி நீரை மட்டுமே பருகலாம்.

"மாசுஷுப்தா:" - பகலில் உறங்கக்கூடாது.

"பிக்ஷாசர்யம்சர" - தினமும் பிக்ஷை க்ரஹித்து வரவேண்டும்.

"ஆசார்யதீநோபவ" - ஆசார்யனாகிய என் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்". மேற்படி ஆசார்யன் அறிவுரைகளை - குமாரன் சரியென அங்கீகரிக்கவேண்டும்.[169]

*24.* வாஸச்ச ... .... பரிதாப்ய

"யஸ்யதே..." என்கிற மந்திரத்தால் உபநயன வஸ்திரத்தை ஆசார்யன் பெற்றுக்கொண்டு, குமாரனுக்கு வேறு வஸ்திரத்தை தரிக்கச் செய்யவேண்டும்.

குறிப்பு:- "ஹே குரோ, வாஸஸ்தே ததாமி" என்று குமாரன் உபநயன வஸ்த்ரத்தை ஆசார்யனுக்குக் கொடுக்கவேண்டும் என்கிறார் ஸுதர்சனாசார்யர்.[170]

---

*168 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 151*

*169 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 151*

*170 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 152*

# இயல் - 6

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் - 5

(இவ்வியலில் ஸமாவர்த்தனம் எனப்படும் ஸ்நாத கர்மா, மதுபர்க்க தானம், பசு விடுவித்தல், ஸ்நாதகன், ராஜா, ஸ்தபதி ஆகியோரை கௌரவிக்கும் கர்மாக்கள் வழங்கப்பட்டுள்ளன.)

**5வது படலம் – 12வது கண்டம்**

1. வேதமதீத்ய ... ... த்வாரமபிதாயாஸ்தே

ஸமாவர்த்தன கர்மாவானது, வேதாத்யயனத்தை முடித்து, அஷ்டவ்ரதங்களையும் முடித்தவனான ப்ரஹ்மசாரி, அடுத்த ஆச்ரமத்திற்கு செல்லும் முன் செய்யவேண்டிய கர்மாவாகும்.[171]

ஸ்நானம் எனப்படும் இந்த ஸமாவர்த்தன கர்மாவைச் செய்ய, சூரிய உதயத்திற்கு முன், மாட்டுக்கொட்டிலில் வாசலின் அருகில், வாசற்கதவை மூடியபின், மான்தோலை கீழ்நோக்கி இருக்கும்படி விரித்து அதன்மேல் அமரவேண்டும்.

மாட்டுக்கொட்டிலில் செய்ய முடியாத சில கர்மாக்களைத் தவிர, மற்ற ஸந்தர்ப்பங்களில் ஸூர்ய கிரணங்கள் மேலே படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு:- ஸமாவர்த்தன விஷயமாக, ''वेदव्रतानि वा पारं नीत्वा ह्युभयमेव वा''[172] யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. இந்த கர்மாவை ஸ்நான கர்மா என்றும் சொல்லப்படுகிறது. 'यस्मिन् कर्मणि नियमेन विशिष्टं स्नानं विधिवत् भवति तदेतत् स्नानमित्युच्यते''

''वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम्'' इति मनुस्मृतिः। ஒரு வேதமோ பல வேதமோ அத்யயனம் செய்தவனாக இருக்கலாம்.

'स्नास्यन्' இந்த நியமம் நைஷ்டிக ப்ரம்மசாரிக்குக் கிடையாது.

2. நைநமேதத் ... .... தபேத்

ஸமாவர்த்தன தினத்தன்று ஸூர்ய கிரணங்கள் அவன்மீது படக்கூடாது.

குறிப்பு:- மல மூத்ராதி விசர்ஜநங்களை மாட்டுக்கொட்டிலிலேயே முடித்துக்கொள்ளவேண்டும். ஸூர்யனுடைய கிரணங்களுக்குத்தான் தடையே தவிர, அக்னியின் வெப்பத்திற்கு தோஷமில்லை.[173]

---

171 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 161

172 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 161

173 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 164

3. மத்யந்திநே ... .... நிதாநாத்ஸமாநம்

மதியம் அக்நி ப்ரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் வரை செய்து "இமம்ஸ்தோமம்" என்ற மந்த்ரத்தால் ஸமித்தை அக்நியில் சேர்க்கவும். 'ஏரகா' எனும் புல் அல்லது 'கடம்' என்னும் நார்களைக் கொண்டு பின்னப்பட்ட பாயின்மேல் உட்காரவும். "சிவோநாமாஸி" என்ற மந்திரம் சொல்லி அபிமந்த்ரணம் செய்த கத்தியை, நாபிதனிடம் தரவும். பின் உஷ்ண சீத ஜலத்தைத் தடவும் கர்மாவைச் செய்யவேண்டும்.[174] (சௌள, உபநயன கர்மாவில் பிதா செய்ததைப்போல் இங்கு, பிதாவோ ஆசார்யனோ இக்கர்மாவைச் செய்ய யோக்யதை உள்ளவர்).

குறிப்பு:- இக்கர்மாவை ப்ரஹ்மசாரி தானே அநுஷ்டிக்கவேண்டும், பரிதி ஸ்தானத்தில் சமீ ப்ரயோகம், "ஜுஹோதி" என குறிப்பிடாமையால் ஸ்வாஹா சப்த ப்ரயோகம் இல்லை என்பவை கவனிக்கத்தக்கது.

4. ஜகநார்த்த ... ... ப்ரயச்சதி

மாட்டுக்கொட்டிலின் பின்புறம் அமர்ந்து, மேகலையை களைந்து ஒரு ப்ரும்மசாரியிடம் கொடுக்கவேண்டும்.

5. தாம் ஸ உத்தரேண ... ... தர்பஸ்தம்பே வோபகூஹதி

அடுத்து "இதமஹம்" என்பதால் ப்ரம்மச்சாரி அந்த மேகலையை அத்திமரம் அல்லது தர்பப்புதரில் சேர்க்கவேண்டும்.

6. ஏவம் விஹிதா.... ..... ததோ தாவதே

"ஆபோஹிஷ்டா" மந்திரத்தால் உஷ்ணசீத ஜலம்கொண்டு ஸ்நாநம் செய்யவும். "அந்நாத்யாய" என்ற மந்திரத்தால் அத்திக்குச்சியால் பல்துலக்க வேண்டும்.

குறிப்பு:- உபநயனத்தில் திக்வபனம் செய்ததுபோல, குளிர்ந்த நீரில் வெந்நீரைக் கலந்து, அந்த ஜலத்தினால் ஸ்நாநமும் செய்யவேண்டும்.[175] இதற்குரிய 6 மந்த்ரங்களையும் சொல்லி

---

174 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 164

175 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 164

முடிவில் ஸ்நாநம் செய்வதே சிறந்தது.

*7. ஸ்நாநீயோச்சாதித: ஸ்நாத:*

வாஸனாதி த்ரவ்யங்களை நீரில் கலந்து, அதில் ஸ்நாநம் செய்யவேண்டும்.

*8. உத்தரேண யஜுஷா ... .... ரேவதீஸ்த்வேதி ஸமாநம்.*

"ஸோமஸ்ய" எனும் மந்த்ரத்தால் இடுப்பு வஸ்த்ரம் உடுத்தவும். "நமோ க்ரஹாய" எனும் மந்த்ரத்தால் சந்தனம் அல்லது வாஸனை த்ரவ்யத்தை தேவதைக்கு நிவேதித்து, "அப்ஸரஸ்" என்னும் மந்த்ரத்தால் தரித்துக்கொள்ளவேண்டும்.

தங்கத்தால் ஆன மணியை "இயமோஷதே" எனும் மந்த்ரத்தால் நூலில் கோர்த்து, 3 முறை நீரில் அலசி, "அபாசோஸ்யுரோ" என்னும் மந்த்ரத்தால் கழுத்தில் அணிந்துகொள்ளவேண்டும்.

மந்திரமின்றி இலந்தை மணியை இடது மணிக்கட்டில் கட்டிக்கொள்ளவேண்டும். "ரேவதீஸ்த்வா" என்கிற மந்த்ரத்தால் புதிய வஸ்த்ரத்தைத் தரிக்கவும்.

குறிப்பு:- உபநயனத்தில் கூறப்பட்ட रेवतीस्त्वा अभिमंत्रणं, या अकृन्तन् ... संव्ययस्व। परिधानं, परीदं वासः। परिहितस्य अभिमन्त्रणं மந்த்ரங்களால் வஸ்த்ரத்தை ப்ரஹ்மசாரி தானே உடுத்திக்கொள்ள வேண்டும்.[176]

नित्यमुत्तरं என்பதால் உத்தரீயம் தரிப்பது அவசியம் என்பது புலனாகிறது. உத்தரீயந்தான் குறிப்பிடப்படுகிறது, அணியும் வஸ்த்ரத்தை அல்ல என்ற, சிலரின் கூற்றை ஸுதர்சனாசார்யர் நிராகரிக்கிறார். परिधाप्य परिहितं என்பதால் உடுத்தும் வஸ்த்ரம் என்பது நிதர்சனமாகிறது.

*9. தஸ்ய தசாயாம் ... .... ஜயாதி ப்ரதிபத்யதே*

"ஆயுஷ்யம்" முதலிய எட்டு ஹோமங்கள் பண்ணும்போது, நெய் படும்படியாக தங்கமணியை தர்வியில் வைத்துப் பண்ணவேண்டும். இவையே ப்ரதான ஆஹுதிகள். இதன்பின் ஜயாதிகளைச் செய்யவும்.

---

*176 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 166*

*10.* பரிஷேசநாந்தம் ... ... ...

பரிஷேசனம் வரை வழக்கமான விஷயங்களைச் செய்து, முன் கூறிய மந்த்ரங்களால் முதலில் வலது காதிலும், பிறகு இடது காதிலும் காதணிகளை அணிந்து கொள்ளவேண்டும்.

*11.* ஏவமுத்தரைர் .... ..... ஆபத்நீதைதாபிஸ்ஸவயே

"சுபிகேசிர" இரு மந்த்ரங்களால் கண்ணுக்கு மை இடவும். "யந்மேவர்ச:" மந்த்ரங்களைச் சொல்லி, கண்ணாடி பாாக்கவும். "ப்ரதிஷ்டே" மந்திரத்தால், காலணி அணியவும். "ப்ரஜாபதே:" மந்திரத்தால் குடை பிடிக்கவும். "தேவஸ்யத்வா" என்பதால் கைத்தடி எடுத்துக்கொள்ளவும்.

'शुभिके शिर, यामाहरत्' இவ்விரு மந்த்ரங்களால் மாலையைச் சூட்டிக் கொள்ளவும்.[177]

'यदाञ्जनं, मयिपर्वतपूरुषं' இரு மந்த்ரங்களால் (ஏதாவதொன்றால்), கண்களுக்கு மை தீட்டிக்கொள்ளவும்.

'यन्मे वर्चः' சொல்லி கண்ணாடி பார்க்கவும்.

प्रतिष्ठे स्थो மந்திரத்தால் பாதரக்ஷையை அணியவும்.

प्रजापतेः என்பதால் குடையைப் எடுத்துக்கொள்ளவும்.

देवस्य त्वा என்பதால் கைத்தடியை எடுத்துக்கொள்ளவும்.

*12.* வாசம் யச்சத்யாநக்ஷத்ரேப்ய:

*13.* உதிதேஷு ... .... சந்த்ரமஸமிதி

மேற்சொன்ன கர்மாக்கள் முடிந்தபின், வானில் நக்ஷத்திரங்கள் உதிக்கும்வரை, மௌனமாக அமர்ந்திருக்கவேண்டும். பின் देवीषड्वीः மந்த்ரத்தால் வடக்கு, கிழக்கு முதலான திக்குகளுக்கு உபஸ்தானம் செய்யவேண்டும்.

அடுத்து माहास्महि என்பதால் சந்த்ரன் மற்றும் நக்ஷத்ரங்களையும் நமஸ்கரிக்கவேண்டும்.

குறிப்பு:- கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மேல், கீழ்

---

177 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 168

ஆகியவை ஆறு திக்குகள் ஆகும்.[178]

*14. ராதிநா ஸம்பாஷ்ய யதார்த்தம் கச்சதி*

அடுத்து மேற்கொள்ளவேண்டிய ஆச்ரமத்தின் ஸாதக பாதகங்களைப் பற்றி நண்பனுடன் விவாதித்து, ஒரு முடிவுக்கு வந்து, பின் விரும்பிய ஆச்ரமத்தை மேற்கொள்ளலாம்.

## 13வது கண்டம்

*1. அதைதத்பரம் .... ... ஸமிதமாததாதி*

ஸமாவர்தன கர்மாவிற்கு சுருக்கமான முறையில் மற்றொரு விதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு சுத்தமான நீர்நிலையில் மந்த்ரம் இல்லாமல் ஸ்நாநம் செய்து, "தூஷ்ணீம் ஸ்நாஸ்யே" என்று ஸங்கல்பம் செய்துகொண்டு, மந்த்ரமெதுவுமின்றி அக்னியில் ஒரு ஸமித்தைச் சேர்த்து, அக்னி உபஸ்தானம் பண்ணவேண்டும்.

குறிப்பு:- மந்திரங்களுடன் கூடிய, முறைப்படி செய்யவேண்டிய ஸ்நாந கர்ம விதியானது, முன்னர் வழங்கப்பட்டது. இந்த இரண்டாவது முறைப்படி செய்யப்படும் ஸ்நாந கர்மா, சுருக்கமானதும், முறைப்படி அநுஷ்டிக்கச் சக்தி, சாமர்த்தியம் அற்றவருக்கான, கௌணபக்ஷ விதி ஆகும். லௌகீக ரீதியில் வபநம், மந்த்ரமின்றி நீர்நிலைக்குச் சென்று ஸ்நாநம், மாலை அணிதல், சந்தனம் பூசுதல், இலந்தை மணி அணிதல், தங்கமணி அணிதல் போன்ற கர்மாக்கள் கிடையாது. மந்திரமின்றி ஸமித்தை அக்னியில் சேர்த்தல் என்பவை, இந்தக் குறைந்தபக்ஷ ஸ்நாந விதியின் ப்ரகாரம் ஆகும்.[179]

*2. யத்ராஸ்மா ... .... யதா புரஸ்தாத்*

முன்பு போல் "ராஷ்ட்ரப்ரதஸி"களால் கூர்ச்சம் சேர்த்து, அதன்மேல் உட்காரவும். அர்க்யம் முதலியவை செய்யவும்.

குறிப்பு:- உபநயனத்தில் ஆசார்யன் அமருவதற்குக் கூறப்பட்ட राष्ट्रभृदसि आचार्यासन्दी என்னும் மந்த்ரத்தால், கூர்ச்சத்தை நுனி

---

*178 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 170*

*179 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 172*

மேல்நோக்கி இருக்கும்படி, ஆஸனமாகச் சேர்த்துக்கொண்டு, அதன்மேல் அமரவேண்டும். மதுபர்க தானம் எனும் இந்தக் கர்மா, 'ஸ்நாதகனு'[180]க்காகச் செய்யப்படுகிறது.[181]

*3. ஏவமுத்தராப்யாம் யதாலிங்கம் ராஜா ஸ்தபதிச்ச*

ராஜாவும் ஸ்தபதியும் அந்தந்த மந்த்ரங்களால் ஆஸநம் பெறவேண்டும்.

குறிப்பு:- आचार्यासन्दी என்னும் மந்திரத்தால் ப்ராஹ்மண அதிதியையும்,

राष्ट्रभृदसि सम्राडासन्दी என்று ராஜாவையும்

राष्ट्रभृदसि अधिपत्यासन्दी என்று ஸ்தபதியையும்

உட்காரவைக்கவேண்டும். ஸ்தபதி வைச்யனாவான்.[182]

*4. ஆப: பாத்யா: இதி ப்ராஹ*

மதுபர்க்கம் அளிப்பவன் "ஆப: பாத்யா:" என்று சொல்லவேண்டும். அதாவது, 'பாத ப்ரக்ஷாளனத்திற்காக ஜலத்தை ஏற்கவும்' என்று சொல்லவேண்டும்.

*5. உத்தரயாபி... ..... ப்ரயச்சேத்ஸவ்யம் சூத்ராய*

பூஜையை ஏற்பவன் "ஆப: பாதாவநே..." என்பதால் ஜலத்தைத் தொடவேண்டும். பிறகு ப்ரக்ஷாளனம் செய்வதற்காக வலது காலைக் காண்பிக்க வேண்டும். (இதர வர்ணத்தனாக இருந்தால் இடது காலை நீட்டவேண்டும்.)

குறிப்பு:- இந்த நியமம் க்ஷத்ரிய, வைச்யர்களுக்குப் பொருந்தாது. போதாயன க்ருஹ்ய ஸூத்ரத்தின்படி, பெண்களே பாதப்ரக்ஷாளனம் செய்யவேண்டும்.[183]

அபிஷேகம் போன்றவை ஆண்களால் செய்யப்படவேண்டும். இதற்கு மாறான கருத்துடையோரும் உண்டு. விசேஷமான யாகங்களில் கர்த்தாவும், பத்நியும் முழங்காலை அலம்புகிறார்கள்.

---

180 வேதவ்ரதத்தை முடித்து, ஸ்நாதகர்மாவையும் முடித்தவனுக்கு 'ஸ்நாதகன்' என்று பெயர்.

181 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் –173

182 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 174

183 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 175

ப்ராம்மணர் மற்றும் இதரவர்ணத்தவர் அலம்பிவிடும் கர்மாவைச் செய்கின்றனர். க்ஷத்ரிய, வைச்யர்களுக்கு இது விதிக்கப்படவில்லை.

*6. ப்ரக்ஷாளயிதார ... .... ப்ரத்யபிம்ருசேத்*

அதிதியைத் தொட்டுவிட்டு "மயிமஹ:" எனும் மந்திரத்தால் தன்மார்பைத் தொடவேண்டும்.

குறிப்பு:- அதிதியானவன் அலம்புகிறவனைத் தொட்டு, "மயி மஹ:" மந்திரத்தைச் சொல்லித் தன் மார்பைத் தொடவேண்டும் என்று, போதாயனரின் அபிப்ராயம். 'मयि महो मयि यशो ... वीर्यम्।'[184]

7. கூர்சாப்யாம் ... ... ஆப இதி ப்ராஹ

விருந்தளிப்பவன் மண் பாத்ரத்தில் ஜலத்தை எடுத்து, அந்தப் பாத்ரத்தை கீழேயும் மேலேயும் கூர்ச்சத்தினால் பிடித்துக்கொண்டு, அதிதியிடம் अर्हणीयाः आपः அதாவது, 'இது அர்க்யத்திற்காக உள்ள தீர்த்தம்' என்று சொல்லவும்.

குறிப்பு:- மேலும் கீழும் கூர்ச்சங்களால் சேர்த்துப் பிடிக்கப்பட்ட மண் பாத்திரத்தில், புஷ்பம் அக்ஷதையுடன் கூடிய ஜலத்தை வைத்துக்கொண்டு, "அர்ஹணீயா: ஆப:" எனும் மந்திரத்தால், அதிதிக்கு அர்க்யம் வழங்கவேண்டும்.[185]

*8. உத்தரயாபி ... .... உத்தரம் யஜுர்ஜபேத்*

அர்க்ய ஜலத்தை आमागन् என்கிற மந்த்ரத்தால் அதிதி அபிமந்த்ரணம் செய்யவேண்டும். தன் கையில் ஜலம் சேர்க்கப்படும்போது அதிதி, विराजो दोहोऽसि எனும் மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

*9. சேஷம் ... ... அநுமந்த்ரயதே*

அர்க்யம் அளிப்பவன் மிகுதியாய் உள்ள ஜலத்தை கிழக்கே சென்று சேர்க்கும்போது, அர்க்யம் பெறுபவன், "ஸமுத்ரம்வ:" எனும் மந்த்ரத்தால் அநுமந்த்ரணம் செய்யவேண்டும்.

---

*184 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 175*

*185 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 175*

குறிப்பு:- 'अस्मिन् काले ... पूज्याय वस्त्र कुण्डलयुगाद्यलङ्करणं दातव्यम्' **என்று,** தாத்பர்ய தர்சன வ்யாக்யானம். எனவே இந்த வேளையில் அதிதிக்கு, இரண்டு வஸ்த்ரங்கள், இரண்டு குண்டலங்கள், பசு (गौः), மாலை, மற்றும் அலங்காரங்களை வழங்கவேண்டும். இவற்றை வழங்காமல் செய்யப்படும் பூஜை முழுமையடையாது என்பது, சிலர் கருத்து.[186]

*10.* ததிமத்விதி .. .... .... "மதுபர்க" இதி ப்ராஹ

ஒரு வெண்கல பாத்திரத்தில் தயிரையும், தேனையும் கலந்து, அதன்மேல், மற்றொரு வெங்கல பாத்திரத்தினால் மூடி, அதன் மேலும் கீழும் ஒவ்வொரு கூர்ச்சத்தை வைத்துப் பிடித்துக்கொண்டு, "மதுபர்க: மதுபர்க: மதுபர்க:" என அதிதியிடம் கூறவேண்டும்.

*11.* த்ரிவ்ருதமேகே க்ருதம் ச

தயிர், தேன் இவற்றுடன் மூன்றாவதாக நெய்யையும் சேர்க்கவேண்டும் என்பது சில ஆசார்யர்களின் கருத்து.

*12.* பாங்க்தமேகே தாநாஸ்ஸக்தூம்ச

அவலையும், சத்துமாவையும் சேர்த்து, முன்சொன்ன தயிர், தேன், நெய்யுடன், ஐந்து பொருட்களைக் கலந்து மதுபர்கம் அளிக்கவேண்டும் என்பது, வேறு சிலர் அபிப்ராயம்.

*13.* உத்தராப்யா... .... ப்ராச்யாநுகம்ப்யாய ப்ரயச்சதே

வழங்கப்பட்ட மதுபர்கத்தை அதிதி, "த்ரையை வித்யாயை" என்னும் மந்த்ரங்களால் அபிமந்த்ரிக்கவும்.[187]

தாதா "அம்ருதோபஸ்தரணமஸி" என, சிறிது தீர்த்தத்தை அதிதியின் கையில் விடவேண்டும். அதிதி அதை அருந்தவேண்டும்.

"யந்மதுந:" என்கிற மந்த்ரங்களைக் கூறி, அதிதி மதுபர்கத்தை உட்கொள்ளவேண்டும். மீண்டும் தாதா சிறிது தீர்த்தத்தை அதிதியின் கையில், "அம்ருதாபிதாநமஸி" என்று விடவேண்டும்.

---

*186 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 176*

*187 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 177*

அதிதி அதையும் அருந்திவிட்டு, ஆசமனம் செய்யவேண்டும். இவ்வாறு மூன்று முறை மதுபர்க ப்ராசனம் செய்து, மிகுந்ததை ப்ரியமானவர்களுக்குக் கொடுக்கலாம்.

மதுபர்கத்தில் ஆசமனம் தேவையில்லை என்கிற கருத்தும் உண்டு.

குறிப்பு:- सोमभक्षणे मधुपर्कप्राशने भोजने च मध्ये नोच्छिष्टतेति शिष्टाः स्मरन्ति। என்பது ஹரதத்தரின் அபிப்ராயம். மதுபர்க்க ப்ராசனத்தின் இடையில் ஆசமனம் தேவையில்லை என்பதை, பல ஆதாரங்களுடன் வ்யாக்யானம் அருளியுள்ளனர்.[188]

*14. ப்ரதிக்ருஹ்யைவ ராஜா ஸ்தபதிர் வா புரோஹிதாய*

ராஜா அல்லது ஸ்தபதி விஷயத்தில், மதுபர்கத்தை தங்கள் ப்ரோஹிதரால் அபிமந்த்ரணாதி க்ரியைகள் செய்யப்படவேண்டும் என்று அறியப்படுகிறது.

குறிப்பு:- மதுபர்கத்தை அபிமந்த்ரணம் செய்வது, மந்த்ரத்துடன் ப்ராசனம் செய்வது இவற்றை, ப்ரோஹிதனானவன், ராஜா அல்லது ஸ்தபதிக்காக, அவர்களின் அநுமதியின் பேரில் முறைப்படி நடத்துகிறான்.[189]

*15. கௌரிதி காம் ப்ராஹ.*

பசுவை வைத்துக்கொண்டு, "கௌ:" என்று சொல்லவேண்டும்.

குறிப்பு:- அதிதிக்கு எதிரில் பசுவை நிறுத்தி, "கௌ:" என்று தாதா கூறவேண்டும்.[190]

गौः என்று பெண்பால் ப்ரயோகம் உள்ளது, "तद्यथैवादो मनुष्य राज आगतेऽन्यस्मिन् वाऽर्हति उक्षणं वेहतं वा क्षदन्ते" என்று, ஐதரேய ப்ராஹ்மணத்தில் கண்டுள்ளபடியால், எருதுவாகவும் இருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

---

*188 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 177*

*189 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 179*

*190 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 109*

'गौर्धेनुभव्या ... ओमुत्सृजत' என்கிற மந்த்ரத்தால், இந்தப் பசுவின் வபைக்காக இதைக் கொல்லலாமா, அல்லது விட்டுவிடலாமா என வினவப்படுகிறது.

அதிதி "ஓம் உத்ஸ்ருஜத" என விட்டுவிடலாம் என்கிற தன் விருப்பத்தை வெளியிடுகிறான்.

16. உத்தரயாபி ... ....ஜுஹோதி

அதிதி பசுவின் ஆலம்பனத்தை விரும்பினால், 'गौरस्यपहतपाप्मा' என்னும் மந்த்ரத்தால் ஆலம்பனம் செய்து, அதன் வபையை எடுத்துச் சமைத்து, பலாச இலையில் வைத்து நெய் சேர்த்து, 'अग्निः प्राश्नातु' என்கிற மந்த்ரத்துடன், அக்னியில் ஹோமம் செய்யவேண்டும்.

குறிப்பு:- பசுவை ஆலம்பனம் செய்வதற்கான உத்தரவை அதிதியிடம் பெற்றபின், அதன் வபையை வெளியே எடுத்து, அதை வைதிக, அல்லது, லௌகீக அக்னியில் சமைக்கவேண்டும். அதில் ஒரு சிறு பகுதியை எடுத்து, "அக்னி: ப்ராச்நாத்" எனும் மந்திரத்தால் ஹோமம் செய்து, மிகுந்ததை அன்னத்துடன் அதிதியிடம் வழங்கவேண்டும்.[191]

முன்னதாக गौरस्यपहतपाप्मा எனும் மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்யும்போது, இடையில் अमूष्य என்கிற இடத்தில் அதிதியின் பெயரைக் கூறவேண்டும். கலியுகத்தில் இது த்யஜிக்கத்தக்கது என்பதை ஸுதர்சனாசார்யர் अयं च संज्ञपनपक्षः कलियुगानाचारेषु पठितत्वादिदानीं त्याज्य एव, गौरस्यपहत अमुष्य च अग्निः ब्राह्मणेभ्यः। இவ்வாறு குறிப்பிடுகிறார்.

17. யத்யுத்... .....உத்ஸ்ருஜதேத்யுச்சை:

அதிதி பசுவை விடுவிக்க விரும்பினால் "யஞ்ஞோ" முதலிய 4 மந்த்ரங்களை, மெல்லிய குரலில் ஜபித்து, பிறகு உரக்க ओमुत्सृजत எனச் சொல்லவேண்டும். அதாவது இந்தப் பசுவை விட்டுவிடு என்று.

குறிப்பு:- பசுவை விடுவிக்க விரும்பும் அதிதி यज्ञोवर्धतां என்கிற

191 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 180

மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும். தாதா அப்பசுவை விட்டு விட்டு, வேறு ஒரு விலங்கின் வபையைக் கொடுக்கவும். ஏனெனில் மாம்ஸம் இன்றி மதுபர்கம் இல்லை. ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் नामांसो मधुपर्को भवती எனக் கூறப்பட்டுள்ளது.[192]

*18. அந்நம் ... .... கல்பயதேத்யுச்சை:*

பசுவிற்கு பதிலாக கொடுக்கப்படும் உணவை भूतं முதலிய ஐந்து மந்த்ரங்களால் மெல்லிய குரலில் கூறி அபிமந்திரிக்கவும். ओं कल्पयत என்பதை மட்டும் உரத்த குரலில் சொல்லவேண்டும்.

குறிப்பு:- மாமிஸத்துடன் கூடியதாக இந்த அன்னம் கூறப்பட்டுள்ளது.[193]

सिद्धेन्नं तिष्ठन् भूतमिति स्वामिने प्रब्रूयात् என ஆபஸ்தம்ப தர்மஸூத்ரத்தில் வழங்கப்பட்டுள்ளது. வெவ்வேறு கோத்ரங்களையுடைய, நான்கு ப்ராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்தபின், அதிதிக்கு போஜனம் படைக்கப்படவேண்டும் என்று, போதாயன ஸூத்ரத்தில் காணப்படுகிறது.

*19. ஆசார்யா... .... ஏதத் கார்யம்*

ஆசார்யன், ருத்விக், மாமனார், அரசன் ஆகியோர் ஒரு வருட காலத்திற்குப் பின் எப்போது வந்தாலும், இந்த மதுபர்க்க பூஜை செய்யப்படவேண்டும்.

குறிப்பு:- மதுபர்கமானது வருடம் ஒருமுறை, ஆசார்யன், ரித்விக், மாமனார் மற்றும் ராஜாவிற்காக வழங்கப்படுகிறது. இந்த கர்மாவில் 'அயம் கூர்ச்ச:' தொடங்கி போஜனம் வழங்குவது வரை நடக்கிறது.[194]

இந்த விதியின்படி விவாஹமான ஒருவன், ஆசார்யன், மாமனார் இவர்களை அழைத்து, மதுபர்க்கம் கொடுக்கவேண்டும். வேதாத்யனம் மற்றும் ஸ்நாதகர்மாவை முடித்த ப்ராஹ்மணனே, மதுபர்க பூஜைக்குத் தகுதியானவன் என்று, தர்ம சாஸ்த்ரத்தில்

192 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 180

193 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 181

194 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 181

கூறப்பட்டுள்ளது. गो – मधुपर्कार्हो वेदाध्यायी.

தயிர்-தேன் கலந்தோ, பால்-தேன் கலந்தோ, இவைகள் கிடைக்காதபோது, வெறும் ஜலத்தினாலாவது, மதுபர்க்கம் தயாரிக்கலாம்.

வேதாத்யனம் செய்த அதிதிக்காக, ஒரு முறை மட்டும் மதுபர்க்கம் செய்யப்படும். ஆசார்யன், ப்ராம்மணன், வேதாத்யாயி, மாமனார், மற்றும் ராஜா ஆகியோருக்காக மட்டுமே பசுவை முன்னிலைப்படுத்தவேண்டும்.

*20.* ஸக்ருத் ப்ரவக்த்ரே சித்ராய

வேத வித்வானுக்காகச் செய்யப்படும் இந்தக் கர்மா, ஒவ்வொரு முறையும் செய்யத் தேவையில்லை. ஒரே ஒருமுறை மட்டுமே செய்யவேண்டும்.

# இயல் - 7

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் - 6

(இவ்வியலில் ஸீமந்தம், பும்ஸவனம், ஜாதகர்மா, நாமகரணம், அன்ன ப்ராசனம் ஆகிய கர்மாக்கள் விவரிக்கப்பட்டுள்ளன.)

**வேது படலம் – 14வது கண்டம்**

*1.* ஸீமந்தோந்நயனம் ... .... சதுர்த்தே மாஸி

முதன் முதலாக ஒரு பெண் கர்பந்தரித்தது முதல், நான்காவது மாதத்தில், ஸீமந்தோந்நயனம் என்னும் ஸம்ஸ்காரம் செய்யப்படவேண்டும்.

குறிப்பு:- यस्मिन् कर्मणि गर्भिण्याः सीमन्त उन्नीयते तत् सीमन्तोन्नयनम्। எந்தக் கர்மாவினால் கர்பிணிக்கு ஸீமந்தம் எனப்படும் ரேகை இடப்படுகிறதோ, அது ஸீமந்தோந்நயனம் ஆகும். இது கர்பத்திற்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரம் ஆகும். இந்தக் கர்மாவை முதல் கர்பத்தின்போது ஒருமுறை செய்தால் போதுமானது. அதுவே பின்னாளில் ஏற்படும் கர்பத்திற்கும் செய்யப்பட்டதாகும். ஒவ்வொரு கர்பத்திற்கும் செய்யத் தேவையில்லை.[195]

*2. ப்ராஹ்மணான் ... .... ஜயாதி ப்ரதிபத்யதே*

ஸீமந்தம் செய்ய உத்தேசித்த நாளுக்கு முதல்நாள், நாந்தீ ச்ராத்தம், ப்ராஹ்மண போஜனம் செய்துவைத்து, அவர்களிடம் ஆசீர்வாதம் பெறவும். அக்னிப்ரதிஷ்டை முதல், ஆஜ்யபாகம் வரை செய்து, மனைவி தொட்டுக்கொண்டிருக்க, "தாதா ததாது" என்பது முதல் *8* ப்ரதான ஹோமங்கள் செய்யப்படவேண்டும்.

*3.* பரிஷேசநம் .... வ்யாஹ்ருதிபிருத்தராப்யாம் ச

பரிஷேசநம் வரை செய்து, பத்நியின் தலை முடிகளை கீழிருந்து மேல்நோக்கி, வ்யாஹ்ருதியுடன் राकामहम्, यास्ते राके என்னும் இரு மந்த்ரங்களைச் சொல்லி, மூன்று முஷ்டி தர்பங்களுடன், பேயத்திக் கொத்துடன், மூன்று இடங்களில் வெளுப்பான முள்ளம்பன்றியின் முள்ளையும் சேர்த்துக் கட்டி, அவளுடைய தலையில் வகுடு எடுக்கவேண்டும்.

குறிப்பு:- भूः, भुवः, सुवः राकामहम् என்கிற மந்திரம் மற்றும் यास्ते राके என்னும் மந்த்ரங்களால் ஸீமந்தோந்நயனம் எனும் வகுடு எடுக்கும் கர்மா செய்யவேண்டும்.[196] தாத்பர்யதர்சனப்படி

*195* "*ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா*" – *பக்கம் – 184*

*196* "*ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா*" – *பக்கம் – 184*

ஸூத்ரத்தின் முடிவில் च இருப்பது, மேலும் பல மந்த்ரங்களையும் உள்ளடக்கியது என கருதத்தோன்றுகிறது.

4. காயதமிதி ... .... ஸம்சாஸ்தி

அங்கு வந்திருப்பவர்களில் இரு நபர்களை, பாடுங்கள் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. वीणया गाथां गाथत इति वीणा गाथिनौ संशास्ति. வீணை வாசித்தல், பாட்டுப்பாடுதல் இவற்றைச் செய்யும்படி, இந்த ஸூத்ரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. உத்தரயோ: .... .... ப்ராம்மணாநாமிதரா

ஸுதர்சனாசாரியர் மூன்று வர்ணத்தினருடைய ஸீமந்த காலத்தில்: 'यौगन्धरि' என்னும் மந்த்ரம், ஸால்வ தேசத்தில் பாட்டு வடிவில் பாடப்படுகிறது என்கிறார்.[197] सोम एव नो என்கிற பாட்டு, மற்ற தேசங்களில், ப்ராஹ்மணர்களுடைய ஸீமந்த காலத்தில் பாடப்படுகிறது. सोम नो राजाऽवतु मानुषी प्रजाः என்று, க்ஷத்திரிய வைச்யர்களின் ஸீமந்தங்களில் பாடப்படுகிறது. ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் இதுபற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

6. நதீநிர்தேசச்ச யஸ்யாம் வஸந்தி

"ஸோம ஏவநோ" எனும் மந்த்ரத்தில், असौ என்கிறவிடத்தில், ஸீமந்தம் செய்துகொள்ளும் பெண்ணின், பிறந்தகத்துக்கு அருகிலுள்ள நதியின் பெயரைக் கூறவேண்டும்.

7. யவாந்நிரூடா ... ... யச்சத்யா நக்ஷத்ரேப்ய:

[198]ஸீமந்தமானதும், அந்தப் பெண்ணின் தலையில், நெல் அல்லது யவதான்யத்தின், முளைத்துச் சில தினங்களான பயிர்களைக் கட்டவேண்டும். ஸீமந்தத்திற்காக ப்ரத்யேகமாக, இந்தப் பயிர்களை, முன்பே விதைத்திருத்தல் வேண்டும். ஸீமந்தமான தம்பதிகள், வானில் நக்ஷத்திரங்கள் தோன்றும் வரை, மௌனமாக இருத்தல் வேண்டும்.

---

197 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 186

198 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 187

*8. உதிதேஷு ... ... வாசம் விஸ்ருஜேத்*

நக்ஷத்ர உதய நேரத்தில், கிழக்கு அல்லது வடக்கு நோக்கிச் செல்வது, காளைக் கன்றுக்குட்டியை பிடித்துக்கொண்டு வ்யாஹ்ருதிகளை ஜபிப்பது ஆகிய செயல்களை, மௌனத்தைக் கைவிடும்வரை கணவன், மனைவி இருவருமே செய்யவேண்டும் என்று சிலர் கருத்து. ஆனால் 7 மற்றும் 8ம் ஸூத்ரங்களில் "யச்சதி", "விச்ருஜேத்" என ஒருமையில் உள்ளது. "யச்சத:", "விச்ருஜத:" என, இருமையில் இருந்திருந்தால்தான் இருவரும் செய்யவேண்டும் என்பது மற்றவர்களது கருத்து.[199]

*9. பும்ஸவநம் வ்யக்தே கர்பே திஷ்யேண*

கர்பம் தரிக்கப்பட்டது என, எப்போது உறுதியாகிறதோ அப்போது, ஆண்குழந்தை பிறப்பதற்காக பும்ஸுவந கர்மா செய்யவும். இந்தக் கர்மாவை, புஷ்யம் எனும் பூச நக்ஷத்திரத்தில் செய்வது உத்தமம்.

குறிப்பு:- पुमान् येन सूयते तत् पुंसुवनं नाम कर्म। ஆண் குழந்தையைப் பெறுவதற்காக, எந்தக் கர்மா செய்யப்படுகிறதோ, அதற்குப் "பும்ஸுவனம்" என்பது பெயர். கர்பம் உறுதியானவுடன் இந்தக் கர்மா செய்யப்படுகிறது.[200]

பொதுவாக 90லிருந்து 120 நாளைக்குள் கர்ப்பம் உறுதியாகிவிடும். நான்காவது மாதத்தில் செய்யப்படவேண்டிய ஸீமந்தோந்நயன கர்மாவுக்கு முன்பே, பும்ஸுவந கர்மா செய்யப்படவேண்டும். ஸீமந்தம் போலவே பும்ஸுவநமும், முதல் கர்பத்திற்கு மட்டும் செய்தால் போதும் என்பது சிலரது கருத்து.

*10. ந்யக்ரோதஸ்ய ... ... ஸீமந்தவதக்ரேருபஸமாதாநாதி*

கிழக்கு அல்லது வடக்கு நோக்கி நீண்டிருக்கும், ஆலமரக் கிளையிலிருந்து மொக்குப்போல உள்ள பகுதியை, அதைச் சுற்றியுள்ள காய்களுடன் எடுத்துவரவேண்டும்.

---

*199 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 188*

*200 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 189*

குறிப்பு:- பும்ஸவன கர்மாவில், நாந்தீ ச்ராத்தம், ப்ராஹ்மண போஜனம், ஸ்வஸ்தி தேவையில்லை. ஆனால் शुचीन्मन्त्रवतसर्वकृत्येषु भोजयेत्। என்று, ஆபஸ்தம்ப தர்மஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அக்னிப்ரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் வரைச் செய்யவேண்டும். இதில் பரிதி ப்ரயோகம் செய்யவேண்டும் (சமீ கிடையாது). பரிஷேசநம், ப்ரஹ்ம உத்வாஸனம் செய்து, பும்ஸவநம் செய்யவேண்டும்.[201]

*11.* அநவஸ்நாதயா ... ... நாசிகாசித்ரேஅபிநயதி

பூப்பெய்தாத கன்யையால், முளைகளோடு கூடிய ஆலம் பழங்களை, அம்மியில்வைத்து நசுக்கி எடுக்கப்பட்ட ரஸத்தை, வஸ்த்திரத்தில் தோய்த்து, மேற்கு நோக்கியிருக்கும் பத்நியின் தலையைக் கிழக்குப்புறம் நிமிர்த்தி, வலதுமூக்கில் पुँसुवनमसि என்று பிழியவேண்டும்.

*12.* புமாம்ஸம் ஜநயதி.

அவள் புத்ரனைப் பெறுவாள்.

குறிப்பு:- முதல் கர்பத்திற்கு மட்டும் இந்தக் கர்மாவைச் செய்தாகவேண்டும். அடுத்தடுத்த கர்பத்தில் பெண் பிறக்கவேண்டும் என்று விரும்பினால், இந்தக் கர்மாவைச் செய்யத் தேவையில்லை.[202]

*13.* க்ஷிப்ரம் ஸுவநம்.

சீக்ரமாக புத்ரோத்பத்தி உண்டாகும்.

*14.* அநாப்ரீதேந ..... ....ராபிரவோக்ஷேத்

நதி ஜலத்தை வெறும் பாத்திரத்தில், நதி ஓடுகிற ப்ரவாஹத்தை அநுஸரித்து ஜலத்தை எடுத்து, பெண்ணின் கால்களுக்கருகில் தூர்யந்தி என்னும் செடியை வைத்து, आभिष्ट्वाहं என்பதால், அவள் தலையைத் தொட்டு, यथैव सोमः पवते என்னும் யஜுஸ்ஸால், ஒவ்வொரு மந்த்ரத்துடனும் அவள்மீது ஜலத்தை ப்ரோக்ஷிக்கவும்.

---

*201 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 188*

*202 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 190*

குறிப்பு:- அக்னியின் ஜ்வாலையைப்போல் மிகவும் சிவந்த நிறத்தை உடைய, மதிய நேரத்தில் மலரக்கூடிய, "தூர்யந்தி அக்னிசிகா அத: புஷ்பிதா" என்ற பெயருடைய புஷ்பத்தையோ, "சோஷ்யந்தி" என்னும் காட்டுப் பூவையோ, பெண்ணின் தலையில் சூட்ட வேண்டும். இதனால் ப்ரஸவம் சிரமம் இன்றி, துரிதமாக நிகழும் என்பது கருத்து.[203]

*15. யதி ஜராயு ... .... உத்தராப்யமவோக்ஷேத்*

கர்பத்தைச் சுற்றியுள்ள जरायु எனும் நஞ்சு விழாதபோது, "तिलदेऽवपद्यस्व, निरैतु पृश्नि शेवलम्" மந்த்ரங்களால், ஜலம் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

## 15வது கண்டம்

*1. ஜாதம் ... ....கர்ணே ஜாப:*

குழந்தை பிறந்ததும், ஆண் குழந்தையாகில் தகப்பனார் "திவஸ்பரி" எனும் மந்திரத்தால் குழந்தையைத் தொடவேண்டும். "அஸ்மிந்நஹம்" என்பதால் மடியில் எடுத்துக்கொண்டு, "அங்காதங்காத்" எனும் மந்திரம் மும்முறை ஜபித்து அபிமந்த்ரணம், நக்ஷத்ர நாமாவைக் கூறுதல், உச்சிமுகர்தலைச் செய்யவேண்டும்.

குறிப்பு:- ஸூத்ரத்தில் जात என்று ஆண்பால் குறிப்பிட்டுள்ளமையால், இக்கர்மாவானது ஆண்குழந்தைக்கு மட்டுமே, பெண் குழந்தைக்கு அல்ல என அறியப்படுகிறது. दिवस्परि மந்திரத்தின் மந்த்ரத்ரஷ்டா "வத்ஸப்ரீ:" என்னும் ரிஷியாகும். குழந்தையை अभिमर्शनं செய்வதில், கருத்து பேதங்கள் உள்ளன. ஸுதர்சனாசார்யர் முழு அநுவாகமும் முடிந்தவுடன்தான் ஸ்பர்ச நியமத்தை ஏற்றுக் கொள்கிறார்.[204]

203 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 191

204 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 193

*2. நக்ஷத்ர நாம நிர்திசதி*

अभिजिघ्राम्यसौ **என்னும் மந்திரத்தில்,** असौ **என்று வரும் இடத்தில் குழந்தையின் ஜனன நக்ஷத்ரத்தை, ஸம்போதனமாகச் சொல்லவேண்டும்.**[205]

**உதாரணமாக** अश्विनी **நக்ஷத்திரத்தில் ஜனித்த குழந்தையை** आश्वयुज **என்று அழைக்கவேண்டும். மற்ற அனைத்து நக்ஷத்திரங்களும் அழைக்கவேண்டிய முறையாவது:**

"रेरेममृज्येचिषु वृद्धिरादौष्ठात्ये च वान्त्यश्रवशाश्वयुक्षु।

शेषेषु नाम्वोः कपरस्वरोन्त्यः, स्वाप्वोरदीर्घस्सविसर्ग इष्टः॥"

**ரோஹிணீ முதலிய சப்தங்களில் முதல் எழுத்து வ்ருத்தியாக வரும்.** रोहिणि **...** रौहिण, रेवती **...** रैवत, मघाः **...** माघ, मृगशिरः **...** मार्गशीर्ष, ज्येष्ठा **...** ज्यैष्ठ, चित्रा **...** चैत्र ष्ठ **என்கிற எழுத்திற்குப் பிறகு** प **வந்தால் வ்ருத்தியடையும்.**

प्रोष्ठपदा **...** प्रोष्ठपाद

अपभरण, श्रवण, शतभिषगश्विनीषु वृद्धिः विकल्पेन भवति।

अपभरण **...** आपभरण, श्रवण **...** श्रावण, शतभिषज **...** शातभिषज, अश्वयुज **...** आश्वयुज **மற்றவற்றில் விகல்பம் இல்லை.** कृत्तिक, तिष्य, आश्लेष, फल्गुन, हस्त, विशाख, अनूराध, अषाढ, श्रविष्ठ, **–** जातकर्मणि **–** अवृद्धिः। आम्वोः**–**आद्रा मूलयोः अन्तयस्वरः कशब्द परो वाच्यः। आर्द्रकः, मूलकः। स्वाप्वोः**–**स्वाती पुनर्वस्वोः। **ஸ்வாதீ, புநர்வஸூ இவ்விரண்டு சப்தங்களின் முடிவில் விஸர்கம் சேர்க்கவேண்டும்.** सवाती **–** स्वातिः, पुनर्वसु **–** पुनर्वसुः **இரண்டும் ப்ரதமாந்தம். இவைகளில் ஸம்புத்தி** स्वाते, पुनर्वसो।

*3. தத் ரஹஸ்யம் பவதி.*

**நக்ஷத்திரத்தின் பெயரை ரகஸியமாக வைக்கவேண்டும்.**

*4. மதுக்ருதமிதி ... .... ... கோஷ்டே நிநயேத்*

**தேன், நெய்கலந்து, தங்கத்துண்டில் தர்பம்கட்டி, "த்வயிமேதாம்" எனும் 3 மந்த்ரத்தால் ப்ராசனம். "க்ஷேத்ரியைத்வா" என்ற 5 மந்திரங்களால் ஸ்நானம். தயிர், நெய் கலந்து வ்யாஹ்ருதிகளால்**

205 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 195

ப்ராசனம் செய்து, மீதியை கோசாலையில் சேர்க்கவேண்டும்.

குறிப்பு:- ஸம அளவில் தேனையும், நெய்யையும் ஒரு வெண்கலத்தில் கலந்து, ஒரு சிறு வில்லையை (தங்கக் காசு) தர்பத்தினால் முடிந்து, निष्टर्क्यं बध्वावताय என்பதால் இப்படி முடிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். त्वयि मेधाम् முதலிய ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு முறை, ப்ராசனம் செய்விக்கவேண்டும் என்று ஹரதத்தர் அபிப்ராயம். मेधां ते மந்த்ரம், மற்றும் त्वयि मेधाम् என்கிற நான்கு மந்த்ரங்களின் முடிவில், ஒரே முறை ப்ராசனம் செய்விக்கவேண்டும் என்று, ஸுதர்சனாசார்யர் கருதுகிறார். ஸ்நாந விஷயத்திலும், ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஸ்நாநம் என்று ஹரதத்தரும், அனைத்து மந்த்ரங்களின் முடிவில் ஸ்நாநம் என்று ஸுதர்சனாசார்யரும் வேறுபடுகின்றனர்.[206]

*5. உத்தரயா மாதுருபஸ்த .... .... யஜுஷா ஸம்விஷ்டம்*

"மாதே குமாரம்" எனும் மந்த்ரத்தால், தாயார் மடியில் வைத்து, "அயம் குமார:" என்பதால் வலது ஸ்தனத்தில் பால் கொடுக்கவேண்டும். "யத்பூமே:" என்பதால் பூமியில் குழந்தையைச் சேர்த்து, "நாமயதி" என்பதால் குழந்தையைத் தொடவும்.

குறிப்பு:- குழந்தையின் தாயார் குழந்தையைத் தன் மடியில் வைத்து, अयं कुमारः என்னும் மந்த்ரத்தை பிதா ஜபிக்க, தன் வலது ஸ்தனத்தில் பால் புகட்டவேண்டும். இம்மந்த்ரமானது, பிறந்த குழந்தை முதன்முறை ஸ்தன்யபானம் செய்யும்போது மட்டுமே சொல்லப்படும். இதன் பின் தாயார் குழந்தையை பூமியில் கிடத்த, தகப்பனார் அக்குழந்தையை नामयति எனும் மந்த்ரத்தால் தொடுகிறான். குழந்தை பிறந்த உடன் இந்தக் கர்மாவை அநுஷ்டிப்பதே உசிதமாகும்.[207]

*6. உத்தரேண .... ... தூஷ்ணீமக்நாவாவபதேதி*

"ஆபஸ்ஸுப்தேஷு" எனும் மந்த்ரத்தால் குழந்தை தலையில், தீர்த்த கும்பம் வைக்கவும். "அயம் கலிம்" முதலிய எட்டு

---

*206 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 196*

*207 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 197*

மந்த்ரங்களால் உமி, கடுகு கலந்து பலிகரண ஹோமம் செய்யவும்.

குறிப்பு:- பலீகரணம் எனும் கர்மாவில், குழந்தையின் ரக்ஷணத்திற்காக, கடுகு கலந்த மாவினால் அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஹோமமும், மந்திரத்துடன் ஒருமுறையும், மேலும் இருமுறை மந்த்ரமின்றியும் செய்யவேண்டும்.[208]

7. ஏவமஹரஹரஹராநிர்தசதாயா:

இவ்வாறு குழந்தை பிறந்தது முதல், பத்து நாள்வரை ஹோமம் மந்த்ரமின்றிச் செய்யவும்.

8. தசம்யா... பிதா மாதேதி

குழந்தை பிறந்த பத்தாவது நாள் தாயார் ஸ்நாநம் செய்தபிறகு, புத்ரனுக்குப் பெயரிடவேண்டும். பிதா, மாதா இருவரும் புத்ரன் பெயரைச்சொல்லி முதலில் அழைக்கவேண்டும்.

குறிப்பு:- उत्थानं என்னும் வார்த்தை, ப்ரஸவத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட கும்பம், அக்னி போன்றவற்றை அகற்றவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இவற்றை குழந்தையின் தந்தையோ அல்லது நாபிதனோ செய்யலாம்.[209]

दशमी என்னும் சப்தத்திற்கு, ராத்ரி என்னும் பொருளை விடுத்து, இங்கு பத்தாம் நாள் என்று, பொருள்கொள்ளவேண்டும். தைத்ரீய ஸம்ஹிதையில், पिता माता च दधतुर्यदग्रे என்று சொல்லப்பட்டுள்ளபடியால், குழந்தையின் பெயரை பிதா, மாதா இருவரும் சொல்லவேண்டும் எனத் தெரிகிறது.

9. த்வயக்ஷரம் வா .... கோஷவாத்யந்தரந்தஸ்தம்

ஆண் குழந்தையின் பெயர் இரண்டு அக்ஷரம், நான்கு அக்ஷரங்களை உடையதாக இருக்கவேண்டும். முதல்பகுதி ஸம்ஜ்ஞா சப்தமும், முடிவுப்பகுதி க்ரியாபதமாகவும் இருக்கவேண்டும். அதில் ஒன்று தீர்க்க ஸ்வரமோ, முடிவில் விஸர்கமோ இருக்கவேண்டும்.

208 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 198

209 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 200

ஆரம்பத்தில் கோஷவர்ணம் இருக்கும்படியும், பெயரின் நடுவில் அந்தஸ்தா எழுத்து இருக்கும்படியும் இருக்கவேண்டும்.

குறிப்பு:- ப்ராதிசாக்யத்தில் கோஷவர்ணம் பற்றி ऊष्मविसर्जनीय प्रथम द्वितीया अघोषाः नहकारः व्यञ्जन शेषो घोषवान् य, र, ल, वाः अन्तस्थाः। இவ்வாறு கூறப்பட்டுள்ளது.[210]

*இரண்டு அக்ஷர பெயர்களுக்குச் சில உதாரணங்கள்:*

वार्दाः – वा उदकं ददातीति वार्दाः।

गीर्दाः – गिरं ददातीति गीर्दाः।

*நான்கு அக்ஷர பெயர்களுக்கு சில உதாரணங்கள்:*

द्रविणं ददातीति द्रविणोदाः।

हिरण्यं ददातीति हिरण्यदाः।

*முன்னோரின் பெயர்களையும் சூட்டலாம்:* यज्ञशर्मा, सोमशर्मा.

*ரிஷிகளின் பெயர்களையும் சூட்டலாம்:* भारद्वाजः, परासरः.

*தேவதைகளின் பெயர்களையும் வைக்கலாம்:* रुद्रः, विष्णुः।

*10. அபி வா ... .... ஹி ப்ராஹ்மணம்*

ஸு என்னும், உபஸர்கம் சேர்க்கப்படுவது விசேஷமாகும். ஏனெனில், பெரும்பான்மையான மங்களகரமான, மேன்மை பொருந்திய, கௌரவம் வாய்ந்த பெயர்களும் सु என்னும் எழுத்தில் ஆரம்பிப்பவையாக உள்ளன என ப்ராம்மண க்ரந்தத்தில் கண்டுள்ளது. *உதாரணம்:* सुलोचनः, सुदर्शनः[211]

தாத்பர்ய தர்சன வ்யாக்யாதாவான ஸுதர்சனாசார்யரும், தம் பெயரையே உதாஹரித்துள்ளார். தெய்வத்தின் பெயர், ரிஷிகளின் பெயர், முன்னோர்களின் பெயரும் வைக்கலாம் என்பது போதாயனரின் அபிப்ராயம்.

*தெய்வத்தின் பெயர்:* विष्णुः, शिवः

*ரிஷிகளின் பெயர்:* नारदः, वसिष्ठः

*முன்னோர்களின் பெயர்:* यज्ञ शर्मा, सोम शर्मा।

---

210 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 201

211 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 202

*11.* அயுஜாக்ஷரம் குமார்யா:

பெண்களின் பெயர், ஒற்றைப்படையில் இருக்கவேண்டும். இரட்டைப்படையாக இருக்கக்கூடாது. உதாரணம்: भारती, कमला, कमलेक्षणा முதலியவை ஒற்றைப்படை.

குறிப்பு:-ஸுதர்சனாசார்யர் ஜாதகர்மா ஆரம்பித்து அன்னப்ராசனம் முடிய, அனைத்துக் கர்மாக்களும் பெண்களுக்கும் உண்டு என்கிறார். ஆனால் இந்தக்கர்மாக்கள் மந்த்ரமில்லாமல் செய்யப்படுகின்றன.[212]

*12.* ப்ரவாஸாதேத்ய ... ..... ஜபேத்

தூர தேசத்திலிருந்து திரும்பிய தகப்பனார் புத்ரனை அழைத்து, அங்காதங்காத், அச்மாபவ மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும். அக்னிராயுஷ்மான் முதலிய ஐந்து மந்த்ரங்களை அவன் வலது காதில் கூறவேண்டும்.

குறிப்பு:- அபிமந்த்ரணம், உச்சி முகர்தல், காதில் மந்திரம் கூறுதல் இவை, ஆண் குழந்தைகளுக்கு மட்டுமே செய்யப்படுகிறது. பெண் குழந்தைகளுக்கு இவை செய்வதில்லை.[213]

*13.* குமாரிமுத்தரேண யஜுஷா அபிமந்த்ரயதே

பெண் குழந்தையை, "ஸர்வஸ்மாத்" என்னும் மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்யவும்.

குறிப்பு:- ஸூத்ரத்தில் कुमारी சப்தம் ப்ரயோகம் உள்ளபடியால், பெண் குழந்தையையும் அபிமந்த்ரணம் செய்யவேண்டும் எனத்தெரிகிறது. ஒவ்வொருமுறை பிதா யாத்திரையிலிருந்து திரும்பியதும், புத்ரனுக்கு அபிமந்ரணம் செய்யவேண்டும்.[214]

(இக்கர்மாவுக்கு உபநிஷ்க்ராமண கர்மா என்று பெயர். பெண் குழந்தைகளுக்கு அனைத்தும் மந்திரமின்றிச் செய்யப்பட்டாலும்

*212 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 202*

*213 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 203*

*214 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 204*

सर्वस्मादात्मनः என்று இருப்பதால் நாமகரணத்தின் பின்பும், அன்னப்ராசனத்திற்கு முன்பும், உபநிஷ்க்ராமண கர்மாவுக்கான ஸங்கல்பத்தின் பிறகு இம்மந்த்ரத்தை வாசிப்பது உசிதம் என்று கருதப்படுகிறது.)

**16வது கண்டம்**

1. ஜந்மநோதி ஷஷ்டே .... .... குமாரம் ப்ராசயேத்

ஆறாம் மாதத்தில் ப்ராம்மணபோஜநம், ஆசீர்வாதம் பெற்று தயிர், தேன், நெய், அன்னம் கலந்து "பூரபாம் ..." முதலிய நான்கு மந்த்ரங்களால் குழந்தைக்கு ப்ராசனம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு:- பிறந்த ஆறாவது மாதத்தில், குழந்தைக்கு, அன்னப்ராசன கர்மா செய்யவேண்டும். ஸூத்திரத்தில் "குமாரம்" என்கிற சப்தம் தெளிவாகக் காணப்படுவதால், இந்தக்கர்மா, ஆண் குழந்தைக்கு மட்டுமே என்பது திண்ணம்.[215]

பெண் குழந்தைக்கு மந்திரமின்றிச் செய்யப்படவேண்டும் என்பதும், அறியப்படவேண்டும். ப்ராஹ்மணர்களை இரட்டைப்படையில் வருவித்து, போஜனம் செய்வித்து, ஆசீர்வாதம் பெறவேண்டும்.

புண்யாஹவாசனத்தில் असौ என்னும் இடங்களில் குழந்தையின் பெயரைச் ஸம்போதனமாகச் சொல்லவேண்டும்.

இக்கர்மாவிலும், 'ஒவ்வொரு மந்திரத்திற்கும் ப்ராசனம்', 'இறுதியில் ஒரே முறைதான் ப்ராசனம்' என வ்யாக்யாதாக்களிடம் கருத்துவேறுபாடு நிலவுகிறது.

2. தைத்ரியேண மாம்ஸேநேத்யேகே

தித்ரி பக்ஷியின் மாமிஸத்தால் அன்னப்ராசனம், என்று சிலர் கருத்து. ஆனால் இது கலியுகத்திற்குப் பொருந்தாது.

3. ஜந்மநோதி த்ருதீயே வர்ஷே சௌளம் புநர்வஸ்வோ:

மூன்றாம் வயதில், புநர்வஸூ நக்ஷத்திரத்தில் குமாரனுக்குச் சௌள கர்மா செய்யவேண்டும்.

குறிப்பு:- ஆண் குழந்தையின் மூன்றாம் வயதில், சாஸ்த்ரப்படி

215 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 205

தலைமுடியை வெட்டி, சீர்மைப்படுத்தும் கர்மாவுக்குச் சௌள கர்மா என்று பெயர். சௌள கர்மாவை ஆண்களுக்கு மட்டுமே மந்திரத்துடன் செய்யவேண்டும். பெண் குழந்தைக்கு மந்திரமின்றி 'சூடாகர்மா' என்ற பெயரில் செய்யப்படும். जन्मनः என்கிற சப்தத்தைக் கொண்டு, கர்பத்திலிருந்து 3ம் வருடம் எனப் பொருள்கொள்ளக்கூடாது.[216]

4. ப்ராஹ்மணாநாம் போஜநமுபாயநவத்

உபநயன கர்மாவைப்போல் (நாந்தி ஸ்தானத்தில்), ப்ராம்மணர்களுக்கு போஜனம் செய்துவைக்கவேண்டும்.

குறிப்பு:- சௌள கர்மாவிலும் உபநயனம்போல, (நாந்தி) ப்ராஹ்மண போஜனம் செய்வித்து, ஆசீர்வாதமும் பெறவேண்டும்.[217]

5. ஸீமந்தவதக்நேருபஸமாதாநாதி

அக்னி ப்ரதிஷ்டை முதல், பரிஷேசனம் வரை உள்ள கர்மாக்களை, ஸீமந்தத்தில் செய்தபடியே செய்யவும்.

குறிப்பு:- பாத்ர ப்ரயோகம் செய்யும்போது, 'சலலீ' என்னும் மூன்று இடங்களில் வெண்மையுள்ள பன்றி முள்ளையும் சேர்த்து வைக்கவேண்டும். பரிதி ஸ்தானத்தில் சமீ ப்ரயோகம். ப்ரதான ஹோமம் செய்யும்போது, குமாரன் பிதாவை வலது கையால் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும்.[218]

6.அபரேணாக்நிம் .... ... நிததாதி

அக்னிக்கு மேற்கே குமாரனை கிழக்கு முகமாய் உட்காரவைத்து, மும்மூன்று தர்பங்கள், அத்திக் கொத்து, பன்றிமுள் இவற்றுடன், குமாரனின் முடியை வெட்டிக் குடுமி வைக்கவேண்டும்.

குறிப்பு:- குமாரனின் கோத்ர ப்ரவரத்தில் கண்டுள்ள ரிஷிகளின் எண்ணிக்கை அளவிற்குக் குடுமிகள் அமைக்கவேண்டும். மூன்று ரிஷிகள் கோத்திரத்திற்கு மூன்று குடுமிகளும், ஐந்து ரிஷிகள்

---

216 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 206

217 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 206

218 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 206

உள்ள கோத்திரத்திற்கு ஐந்து குடுமிகளும் வைக்கவேண்டும்.[219]

7. யதாவைஷாம் குலதர்ம: ஸ்யாத்

தத்தமது குல வழக்கப்படியும் சிகை வைத்துக்கொள்ளலாம்.

குறிப்பு:- கர்தாவின் குலவழக்கப்படி சிகை வைத்துக் கொள்ளவேண்டும். கர்த்தாவின் முன்னோர்கள் எப்படி சிகை வைத்துக்கொண்டிருந்தனரோ, அதே முறையில் சிகை வைத்துக்கொள்வதும் உசிதம், என வேறுபாட்டை இந்த ஸூத்ரத்தில் காட்டியுள்ளனர்.[220]

"யத்ரபாணா: ஸம்பதந்தி குமாராவிசிகா இவ"[221] என வேதத்தில் உள்ளபடியால், சிகை இல்லாமல் செய்யப்படும் அனைத்து வைதிக கர்மாக்களும் வ்யர்தமாகும் எனத் தெளிவாகத் தெரிகிறபடியால், சிகை இல்லாமல் இருக்கக்கூடாது என்பதும் அறியப்படவேண்டும்.

8. ஸம்ஸர்ஜநாத்யாகேசநிதாநாத்ஸமாநம்

குளிர்ந்த நீரில் வெந்நீரைச் சேர்க்க, அபாம் ஸம்ஸர்ஜனம் எனக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து சௌள கர்மா முன்போலவே செய்யவேண்டும்.

9. க்ஷுரம் ப்ரக்ஷாள்ய நிததாதி

சௌளத்திற்கு உபயோகித்த கத்தியை அலம்பி வைக்கவேண்டும்.

10. தேந த்ரயஹம் கர்ம நிவ்ருத்தி:

சௌளத்திற்கு உபயோகித்த கத்தியை 3 நாட்கள்வரை, வேறு விஷயத்திற்கு உபயோகிக்கக் கூடாது.

11. வரம் ததாதி.

சௌள கர்மாவில் உதவியாக இருந்த ப்ராம்மணனுக்கு, தக்ஷிணை கொடுக்கவேண்டும்.

குறிப்பு:- गौर्वै वरः எனச் சொல்லப்பட்டிருப்பதால், இங்கு வரம்

---

219 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 207

220 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 207

221 "யாஜுஷமந்த்ர ரத்னாகரே" – உதகசாந்தி மந்த்ரபாட: – பக்கம் – 39

என்ற சொல்லுக்கு கௌ: என்ற பொருள் ஆகும்.[222]

*12. ஏவம் கோதாநமந்யஸ்மிந்நபி நக்ஷத்ரே ஷோடசே வர்ஷ:*

கோதானம் என்ற கர்மாவை 16ம் வயதில் அநுஷ்டிக்கவேண்டும்.

குறிப்பு:- கோதானம் என்ற கர்மாவும் சௌள கர்மாவைப் போலவே செய்யவேண்டும். ப்ராஹ்மணர்களை அழைத்து போஜனம் செய்து வைத்து ஆசீர்வாதம் பெறவேண்டும். 16வது வயதில் ஒரு நல்லநாளில் புனர்வஸு அல்லது வேறொரு நக்ஷத்திரத்தில், இந்தக் கர்மா செய்யப்படவேண்டும். புனர்வஸு நக்ஷத்திரத்தில்தான் செய்யவேண்டும் என்பதல்ல. சிகையை விட்டு விட்டு மற்ற முடிகளை மழிக்க வேண்டும்.[223]

*13. அக்னிகோதாநோ வா ஸ்யாத்*

கோதானம் என்கிற கர்மாவை, அக்னி தேவதைக்காகச் செய்யவேண்டும்.

குறிப்பு:- போதாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் இந்தக் கர்மாவுக்கான நியமங்கள் சொல்லப்பட்டுள்ளன. இக்கர்மாவின் ஆரம்பம் மற்றும் முடிவிலுமாக இருமுறை ப்ராம்மண போஜனம் என்கிற கருத்து வேறுபாடு உள்ளது.[224]

குறிப்பு:- अग्नये काण्डर्षये स्वाहा என்று ஆஜ்ய பாகத்திற்குப் பிறகு ஒரு ப்ரதான ஆஹுதி உண்டு. அதன் பிறகு ஜயாதி. க்ஷுர ப்ரக்ஷாளனத்துடன் கர்மா முடிகிறது என்று ஸுதர்சனாசார்யர் வ்யாக்யானம். அக்னிதேவதையின் பொருட்டு செய்யப்படுவதால் இக்கர்மாவுக்கு, 'அக்னி கோதானம்' என்று பெயர்.[225]

*14. ஸம்வத்ஸரம் கோதானவ்ரதமேக உபதிசந்தி*

சிலர் வருட முழுவதும் கோதான வ்ரதத்தைச் சொல்வது வைகல்பிதம்.

---

*222 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 208*

*223 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 208*

*224 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 209*

*225 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 209*

குறிப்பு:- ப்ரஹ்மசாரி, வேத அத்யயனம் முடித்த வருடத்தில் கோதான வ்ரதம் அநுஷ்டிப்பது உத்தமம் என்று, உபதேசிக்கிறார்கள்.[226]

*15. ஏதாவந்நாநா ஸர்வாந்கேசாந்வாபயதே*

அக்னி கோதானத்தில் சிகையுடன் எல்லா மயிர்களையும் வபநம் செய்யப்படுவதால், சௌளத்திற்கும் இதற்கும் வேறுபாடு உள்ளது.

குறிப்பு:- சௌள கர்மாவில், ரிஷிகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவோ, குலதர்மப்படியோ, சிகைகள் வைக்கப்படுகின்றன. ஆனால் கோதான கர்மாவில், சிகைகளைவிட்டு மற்ற கேசங்களை நீக்குவது விசேஷமானதாகும்.[227]

केशश्मश्रु लोम नखाद्युदक् संस्थानि संप्रेष्यति என ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லப்பட்டுள்ளது. கோதான கர்மாவிற்குக் ஆசார்யனே கர்த்தா என்பது वापयते என்கிற ப்ரேரணார்த்தக் க்ரியையால் தெளிவாகிறது.

*16. உதகோபஸ்பர்சனமிதி சந்தோகா:*

இந்த கோதான வ்ரதத்தில் ஒவ்வொரு நாளும் ஸ்நாநம் செய்யவேண்டும் என்று ஸாமவேதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

---

*226 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 209*

*227 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 210*

# இயல் - 8

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -7

(இவ்வியலில் வீடு கட்ட வாஸ்து கர்மா, ப்ரவேசம், பிசாசத்தால் பீடித்தவனுக்கு நிவாரணம், ஸ்தாலீபாகம், ஸர்ப்ப பலி, ஈசான பலி முதலியவை விளக்கப்பட்டுள்ளன.)

**7வது படலம் – 17வது கண்டம்**

1. தக்ஷிணாப்ரத்யக் ... ...திசமுத்தரயோதூஹதி

தென்மேற்கிலுள்ள இடத்தை, வீடுகட்டத் தேர்ந்தெடுக்கவேண்டும். பூமியைத் தோண்டி, பின் பலாச அல்லது சமீ கொத்தால் வெட்டி எடுத்த தூசியை, "யத்பூமே:" என்னும் மந்த்ரத்தால் பெருக்கி, வடக்கில் அல்லது கிழக்கில் தள்ளவேண்டும்.

குறிப்பு:- இது க்ருஹ ஸம்பந்தமான கர்மா ஆயினும், நித்ய, நைமித்திக கர்மாக்களில் சேராது. இந்தக் கர்மாவை அநுஷ்டிக்காவிடில் எந்த தோஷமும் கிடையாது. ஒருவேளை செய்யப்படுமாகில், उदगयन पूर्वपक्षाहः என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று ஹரதத்தர் அபிப்ராயம். ஆயினும் இதற்கு சிஷ்டர்கள் உடன்படுவதில்லை.[228]

2. ஏவம் த்ரி:

உதூஹனத்தை மூன்றுமுறை, ஒவ்வொன்றையும் மந்த்ராவர்தியுடன் செய்யவேண்டும்.

3. க்லுப்தமுத்தரயா ... ... ஸ்தூணமவததாதி

வீடுகட்டத் தயார் செய்த இடத்தை, "ஸ்யோநா ப்ருத்வி" எனும் மந்த்ரத்தால் தொடவேண்டும். தூண்களுக்காகக் குழி தோண்டும்போது, இடமிருந்து வலமாக (ப்ரதக்ஷிணமாகத்) தோண்டவேண்டும். தோண்டி எடுத்த மண்ணை, வீடுகட்டவேண்டிய பூமியில் போடவும்.

குறிப்பு:- இந்த ஸூத்திரத்தின்படி மண்ணைத் தோண்டி, நிரவி சதுரமாகவும், சமதளமாகவும் செய்யவேண்டும். வெளியிலிருந்து ஆரம்பித்து, அதாவது முதலில் வாசல் தூண்கள், பின்பு உட்புற தூண்கள், என்ற முறையில் தூண்களுக்குப் பள்ளம் தோண்டவேண்டும்.[229]

---

228 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 211

229 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 212

4. ஏவமிதராம்.

“ஸ்யோநாப்ருதிவீ” முதலிய இரு மந்த்ரங்களால், வாசலில் இடது பக்கத் தூணை நடவேண்டும்.

5. யதாஸ்தா... .....யஜுஷாபிமந்த்ரயதே

பள்ளம் தோண்டப்பட்ட க்ரமத்திலேயே, தூண்கள் நடப்படவேண்டும். தூண்களின் மீது மூங்கிலை வைத்து, “ருதேநஸ்தூணௌ” என்று மந்த்ரம் சொல்லி, அபிமந்த்ரணம்.

குறிப்பு:- மற்றவர்கள் தூண்களில் மூங்கில் முதலியவற்றை வைத்துக் கட்டும்பொழுது, வீடு கட்டுபவன் (யஜமானன்) ऋतेनस्थूणौ என்கிற மந்திரத்தால் அபிமந்த்ரணம் பண்ணவேண்டும்.[230]

6. ஸம்மிதமுத்தரைர்யதாலிங்கம்

தூண்களை நட்டு வீட்டை நிர்மாணித்தபின், “ப்ரஹ்ம ச தே” முதலிய ஐந்து மந்த்ரங்களால் அந்தந்த வஸ்துக்களை அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

குறிப்பு:- धर्मस्ते स्थूणाराज श्रीस्ते स्तूपः என்பதில் धर्मस्ते स्थूणाराज என்பதைத் தனியாகப் பிரித்தும், ஒன்றாகவே எடுத்துக்கொண்டும் பார்க்கப்படுவதால், ஹரதத்தருக்கும், ஸுதர்சனாசார்யருக்கும் அபிப்ராய பேதம் நிலவுகிறது. இதை அநுஷங்கம் உள்ள மந்த்ரமாகக் கருதுவோரும் உண்டு. எனவே “ப்ரஹ்மசதே, யஜ்ஞச்ச, இஷஸ்ச்ச, மித்ரச்ச, தர்மஸ்தே” என ஐந்து மந்த்ரங்களாகக் கொண்டு, ஐந்து இடங்களில் அபிமந்த்ரணம் பண்ணுவது நெடுநாளாக வழக்கத்தில் இருந்துவருகிறது.[231]

7. பாளாசம் ... .... ப்ரதிஷ்டாபயதி

“உத்ரியமாண:” என்கிற மந்த்ரத்துடன், வைதிக அல்லது லௌகீக அக்னியை, பலாச சமித்துக்களால் தயாரித்துக்கொள்ளவேண்டும். “இந்த்ரஸ்ய க்ருஹா:” என்னும் மந்த்ரத்துடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டினுள் ப்ரவேசிக்கவேண்டும்.

---

230 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 213

231 “ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா” – பக்கம் – 214

"அம்ருதாஹுதிம்" என்னும் மந்திரத்தால், புதிய வீட்டின் வடகிழக்கு மூலையில் அக்னியை ப்ரதிஷ்டை செய்யவேண்டும்.

குறிப்பு:- க்ருஹப்ரவேசம் செய்யும் விதிமுறைகள் இந்த ஸூத்ரத்தால் சொல்லப்படுகிறது. இங்கு உபயோகிக்கவேண்டிய அக்நியைப்பற்றி ஆசார்யர்களிடத்தே மிகுந்த சர்ச்சையும், தெளிவின்மையும் காணப்படுகிறது.[232]

ஹரதத்த மிச்சரர், அநேக தர்கங்களுக்குப் பிறகு, எந்த அக்னியை आगारस्याग्निं என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அது, ஸாதாரண போஜனம் தயார்செய்வதற்கு ஏற்பட்ட அக்னியென்று, தீர்மானமாகச் சொல்லுகிறார்.

ஆனால் ஸுதர்சனாசார்யாரோ, ச்ரௌதாக்னியையும் கூட, இந்த ஸமயத்தில், விதிப்படி புதிய வீட்டில் ஆதானம் செய்யப்பட வேண்டும் என்கிறார். ஏனென்றால், சிஷ்டர்களால் இந்தக் கர்மாவானது, ராத்ரியில் செய்யப்படுகிறது. ஹரதத்தருடைய மதத்திற்கு ஸுதர்சனாசார்யர், आगारस्य அக்னியை ஔபாஸனாக்னிதான் என்று ஸாதிக்கிறார். "आगाराग्निः, शालाग्निः, गृह्याग्निः, औपासनाग्निरित्येकार्थ तया याज्ञिकानां प्रयोगात् औपासन एव प्रतिष्ठाप्यः, न पचनाग्निः।"[233] என்கிற யாஜ்ஞுவல்க்ய ஸ்ம்ருதியை ஆதாரமாகக் கொண்டு.

*8. தஸ்மாத்தக்ஷி.... ....பவதி*

उदकं धीयते यत्र तत् उदधानं मणिकाख्यम्। ப்ரதிஷ்டை செய்யப்பட்ட அக்னிக்குத் தென்புறம், உதககும்பத்தை ஸ்தாபிதம் செய்ய, இடம் (சுத்தி) செய்யவேண்டும்.

*9. தஸ்மிந் .. ...ப்ரதிஷ்டாபயதி*

யவம் முதலிய தான்யங்களை சேர்த்து, அதன்மீது தர்பங்கள் எல்லா திசைகளிலும் நுனிகள் இருக்கும்படியாகச் சேர்த்து, அதன்மீது கும்பத்தை வைக்கவேண்டும்.

अन्नपतऽन्नस्यनोधेहि என்கிற மந்த்ரத்தைச் சொல்லவேண்டும்.

*10. தஸ்மிந்நுத்தரேண ... ...உபகும்பாநாநயதி*

---

*232 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 215*

*233 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 216*

ப்ரதான கும்பத்திற்கு நான்கு திக்கிலும் வைக்கப்பட்டுள்ள, கும்பங்களில் உள்ள ஜலத்தை "அரிஷ்டா அஸ்மாகம்" என்கிற மந்த்ரத்தினால் மத்திய கும்பத்தில் சேர்க்கவேண்டும்.

குறிப்பு:- ப்ரதான கும்பத்தைச் சுற்றி வைக்கப்படும் கலசங்களை ப்ரதிஷ்டை செய்யும்போது, பலமுறை மந்த்ரங்கள் கூறப்படும். ஆனால் ஸுதர்சனாசார்யரின் அப்பிராயப்படி, இங்கேயும் ஒரு முறை மட்டுமே மந்திரம் ஜபிக்கப்படவேண்டும்.[234]

*11.* தீர்ணமுத்தரயாநுமந்த்ரயதே

ப்ரதான கலசத்தில் ஓட்டை விழுந்து, நீர்க்கசிவு ஏற்படுமானால் "பூமிர்பூமிமகாத்" என்கிற மந்த்ரத்தைச் சொல்லவேண்டும்.

*12.*அக்நேருபஸமாதாய .... ....ஆஹுதீர்ஹுத்வா ஜயாதி ப்ரதிபத்யதே

ஆஜ்யபாகம் வரை செய்து, "வாஸ்தோஷ்பதே" முதலிய நான்கு மந்த்ரங்களால் ப்ரதான ஹோமம். பின் ஜயாதி ஹோமங்கள்.

குறிப்பு:- ஆரம்பத்தில் கூறியதுபோலவே, இந்த வாஸ்து ஹோம அக்னியை, पचनाग्नि என்று ஹரதத்தர் சொல்லிவருகிறார். ஸுதர்சனாசார்யரும் யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியை உதாஹரித்து, இந்த அக்னியானது ஔபாஸன அக்னிதான் என்று, தன் நிலைப்பாட்டை உறுதிசெய்கிறார். ப்ரதான ஆஹுதிகளுக்குப் பின் ஜயாதி ஹோமங்கள். ஸ்விஷ்டக்ருத் ஹோமமும், ஸ்தாலீபாகமும் நிஷேதம் செய்யப்பட்டுள்ளது.[235]

*13.* பரிஷேசநாந்தம் .... ... நேநேதி

பரிஷேசநம் வரை செய்து, ப்ரதான கும்பத்திலிருந்து நீரை வீட்டின் நான்குபுறமும், "சிவகும்சிவம்" என்று தாரையாக விடவேண்டும்.

குறிப்பு:- கர்மாவின் முடிவில் கலச நீரைக்கொண்டு, வீடு முழுவதும் பரிஷேசனம் செய்யப்படுகிறது. பரிஷேசன ஜலத்தை

234 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 217

235 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 217

அவிச்சின்னமாகச் சேர்க்கவேண்டும். अन्तरतः என்கிற சப்தத்தால் பரிஷேசனம் (நீர் தெளிப்பது), வீட்டிற்கு வெளியே என்பது உறுதியாகிறது. வீட்டின் உள்ளேயும் பரிஷேசனம் உண்டு. நாந்தி போஜனத்தில், இரட்டைப்படையில் ப்ராம்மணர்களை வரிக்கவேண்டும். ஸத்துமாவு உபயோகம் போஜனத்தின் இடையில் இல்லை, அதற்கு முன்பே என்றே இரு வ்யாக்யாதாக்களும் கருதுகிறார்கள். ப்ரதக்ஷிணம் மூன்றுமுறை செய்யவேண்டும்.[236]

## 18வது கண்டம்

*1. ச்வக்ருஹக்ருஹீதம் ... .... ப்ராதர் மத்யந்திநே ஸாயம்*

இந்தக் கர்மாவை காலை, மதியம் அல்லது மாலையில் செய்யலாம். தகப்பனார் அல்லது கர்மா செய்பவர் உபவாஸம் முதலிய வ்ரதங்களைச் செய்து, பிசாசத்தால் பீடிக்கப்பட்டவனை வலையினால் மூடிவைக்கவும். பிறகு இரும்பு மணியை அடித்துச் சப்தம் எழுப்பவும். பின்னர் பையனை முக்ய வாசல் மற்றும் வெவ்வேறு வாசல்கள் வழியாகவும், சூதாட்ட களத்திற்கு அழைத்துச் சென்று, விளையாடுமிடத்தின் நடுவே, மண்ணை மேடாக்கி, அதன்மீது ஜலம் தெளித்து, அங்கு சொக்கட்டான் காய்களைப் போடவும். பிறகு அந்தப் பையனை காய்கள் மீது மல்லாக்கப் படுக்கவைக்கவும். कूर्कुरस्सुकूर्कुरः ஆரம்பித்து,

श्वानमिच्छ्वाऽदन्नपुरुषंछत् வரை உள்ள மந்த்ரங்களைச் சொல்லி உப்பு கலந்த தயிரை கையினால் எடுத்து, அவன் மீது தெளிக்கவேண்டும்.[237]

*2. அகதோ பவதி.*

இந்தக் கர்மா மூன்று வேளைகளிலும் செய்யப்படுகிறது. இக்கர்மாவினைச் செய்தால், ரோகம் உள்ளவன் குணமாகிவிடுவான். ஒருவேளை குணமாகாவிடில், மீண்டும் இந்தக் கர்மாவைச் செய்யவேண்டும். ஆனால் ஸுதர்சனாசார்யர் அபிப்ராயப்படி மீண்டும் செய்யத் தேவையில்லை.

---

*236 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 218*

*237 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 220*

*3. சங்கிநம் குமாரம் ... .... ப்ராதர் மத்யந்திநே ஸாயம்*

சங்கம் என்கிற நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவனை, ''एते ते प्रतिदृश्येते'' என்கிற இரு மந்த்ரங்களால், வ்ரதம், ப்ரம்மசர்யம் இவற்றை மேற்கொண்ட பிறகு, தகப்பனார் அல்லது வேறொருவர் அபிமந்த்ரணம் செய்யவும். ऋषिर्बोधः प्रबोधः என்னும் மந்த்ரத்தைச் சொல்லி, ஜலபாத்திரத்திலிருந்து ஜலத்தை அவன் மீது சேர்க்கவும். இவ்வாறு காலை, மதியம், மாலை மூன்று வேளையும் செய்யவேண்டும்.[238]

குறிப்பு:-शङ्खोऽपि ग्रहः येन गृहीतः शङ्खवत् नदति तद्गृहीतश्शङ्खी। இந்த நோயினால் பாதிக்கப்பட்டவன், சங்கம்போல் கத்துவான். எனவே அவனை மூன்று காலங்களிலும் அபிமந்திரிக்கவேண்டும்.

*4. அகதோ பவதி*

இக்கர்மாவை அநுஷ்டித்தால் வ்யாதி நீங்கிவிடும்.

*5. ச்ராவண்யாம் ... .... ஸ்தாலீபாக:*

ஆவணி பௌர்ணமியன்று, ஸூர்யாஸ்தமனத்தில் ஸ்தாலீபாகம் செய்யவேண்டும்.

குறிப்பு:- ஸர்ப்பபலி எனும் கர்மா நித்ய கர்மாவாகும். ஒவ்வொரு வருடமும் இதைச் செய்யவேண்டும். ஆவணி பௌர்ணமியன்று ஆரம்பித்து, மார்கழி பௌர்ணமியன்று உத்ஸர்ஜனம் செய்யப்படுகிறது. ஸ்தாலீபாகம் ஸூர்ய அஸ்தமனத்திற்கு பிறகு நடக்கிறது.[239]

*6. பார்வணவதாஜ்ய .... ...கிம்சுகாநி ஜுஹோதி*

குறிப்பு:- பார்வண ஹோமம்போல முகாந்தம் வரை செய்து, ஸ்தாலீபாகம்போல் உபஸ்தரணங்களைச் செய்து, "ச்ராவண்யை பௌர்ணமாஸ்யை ஸ்வாஹா" என்று ஹோமம் செய்தபிறகு, அஞ்ஜலியினால் கிம்சுக ஹோமம். जग्धो मशको முதலிய மூன்று மந்த்ரங்களால், பலாசப் பூவை ஹோமம் செய்யவும். கிம்சுகம்

---

*238 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 221*

*239 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 222*

என்பது பலாசத்தின் முட்கள் உள்ள பூக்களாகும்.[240]

7. உத்தராபி: ....மத்யஸ்ஸமித:

கொன்றை மரத்தின் ஸமித்தை "இந்த்ரஜஹி தந்தசூகம்" என்கிற மந்திரத்தால் ஆதானம் செய்யவேண்டும்.

குறிப்பு:- தங்க நிறத்தில் பூக்களை உடைய, கொன்றை அல்லது ஆரக்வதம் எனப்படும் மரம், ஒரு ராஜவ்ருக்ஷம் ஆகும்.[241]

8. ஆஜ்யாஹுதிருத்தரா:

பின் "தத்ஸத்யம்" முதலியவற்றால் ஆஜ்யாஹுதிகளைச் செய்யவும்.

9. ஜயாதி ப்ரதிபத்யதே

பின் ஜயாதி ஹோமங்களைச் செய்யவும்.

10. பரிஷேசநாந்தம் ... ....நிவபதி

பரிஷேசநம் வரை செய்து, மந்த்ரமேதுமின்றி மௌனமாக, அவல், பொரி, மை, எண்ணெய், உசீரம், உதபாத்ரம் முதலிய பொருட்களை எடுத்துக்கொண்டு கிழக்கு, வடக்கு நோக்கிச்சென்று, தரையை மேடைபோல் செய்து, கிழக்கு நோக்கி மூன்று கோடுகளும், வடக்கு நோக்கி மூன்று கோடுகளும் வரைந்து, அந்தக் கோடுகளின்மீது ஜலத்தைத் தெளிக்கவேண்டும். கை அல்லது தர்வியினால் "நமோ அஸ்து" எனும் மந்திரத்தைச் சொல்லி, ஸத்து மாவை பலிஹரணம் செய்யவேண்டும்.

11. தூஷ்ணீம் ... ....ஸ்தகரோசிரமிதி

குறிப்பு:- அரிசி, பொரி, மை, எண்ணெய், स्थगरम्, उशीरम् முதலிய வாஸனை த்ரவ்யங்களாகிய, ஆறு பொருட்களையும், கிழக்கு-வடக்கு நோக்கிக் கிழிக்கப்பட்ட கோடுகள் மீது, மந்த்ர ப்ரயோகம் எதுவுமின்றி ஒன்றாகவே சேர்க்கவேண்டும். இக்கர்மாவிலும் ப்ராம்மணர்களுக்குப் போஜனம் செய்வித்து,

240 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 223

241 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 223

ஆசீர்வாதம் பெறவேண்டும்.[242]

*12. உத்தரை .... ... ப்ராஹ்மணான் போஜயேத்*

ஸர்ப்ப பூஜையானது, "தக்ஷக வைசாலேய" என்னும் 18 மந்த்ரங்களால் செய்யப்படவேண்டும். ஸர்ப்பபலிகளைப் பரிஷேசனம் செய்யவேண்டும். ஸர்ப்பபலி முடித்துத் திரும்பி வரும்போது, பலிசேர்த்ததை திரும்பிப் பார்க்கக்கூடாது. வீட்டைச் சுற்றி अपश्वेत पदा என்னும் இரண்டு மந்த்ரங்களால், தீர்த்த குடத்திலிருந்து தீர்த்தத்தால் பரிஷேசனம் செய்யவேண்டும்.[243]

நாந்தி விதாயத்தில், ப்ராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்கவேண்டும்.

**19வது கண்டம்**

*1. தாநா: குமாராந் ப்ராசயந்தி*

சாப்பிட சக்தியுள்ள குழந்தைகளுக்கு, பலிஹரணத்தில் மிகுதியான ப்ரசாதங்களை கொடுக்கவும்.

குறிப்பு:- सर्पदेवजनेभ्यः स्वाहेति सायं प्रातर्बलिं हरेदाप्रत्यवरोहणात् என்று ஆச்வலாயநர், காலை மாலை இருவேளையும் செய்யவேண்டும் என்று கூறியிருக்கிறார். குறிப்பிட்ட த்ரவ்யங்களை மட்டுமே முதல் பலிஹரணத்தில் உபயோகிக்கவேண்டும். ''कालयोर्भोजनम्'' என்று ஆபஸ்தம்ப தர்மஸூத்ரத்தில் சொல்லப்பட்டுள்ளது. எனவே அடுத்தடுத்த பலிஹரணங்களில், வேறு த்ரவ்யங்களைக் கொண்டு செய்யலாம் எனத் தெரிகிறது.[244]

*2. ஏவமத ஊர்த்வம் ... .... ஹரேதா மார்கசீர்ஷா:*

இதன் பின் இதுபோன்ற பலியை, விதிப்படி மார்கழி மாதம் வரை செய்யவேண்டும். (கார்த்திகை அமாவாசையின் மறுதினம் முதல் மார்கழி அமாவாசை வரை)

---

*242 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 225*

*243 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 226*

*244 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 227*

*3. மார்கசீர்ஷாம் .. .... ... ஸ்தாலீபாக:*

மார்கழி பௌர்ணமியன்று, அஸ்தமித்ததும் முன்போல ஸ்தாலீபாகம்.

குறிப்பு:- ஆவணி பௌர்ணமியன்று செய்யப்பட்டது போலவே, மார்கழி பௌர்ணமியன்றும் இந்தக்கர்மா செய்யப்படவேண்டும். 'अस्तमिते' என்று ஸ்பஷ்டமாக ஸூத்ரத்தில் குறிப்பிட்டுள்ளதால் இந்தக் கர்மாவை பகலில் செய்யக்கூடாது என்பது தெளிவாகிறது.[245]

*4. அஹார்ஷமிதி ... ....ஸந்நாம:*

பலிஹரண மந்த்ரத்தில், "ஹரிஷ்யாமி" என்கிற இடத்தில் "அஹார்ஷம்" எனச் சொல்லவேண்டும்.[246]

குறிப்பு:- ஒவ்வொரு வருடமும் செய்யபடவேண்டியது பலிஹரண கர்மா. இதன் ஆரம்பத்தில் "ஹரிஷ்யாமி" மந்திரத்துடன் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் உத்ஸர்கத்தின் பொழுது अहार्षम् என்று ப்ரயோகிக்கப்படுகிறது.

*5. அத்ரைநமுத்ச்ருஜாமி.*

ஆவணி பௌர்ணமியில் ஆரம்பிக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் செய்துவரப்பட்ட இந்த பலிஹரண கர்மா, மார்கழி பலிஹரணத்திற்குப் பிறகு விடப்படுகிறது. இதைப்பற்றி **ஸுதர்சனாசார்யர்** न चायमात्यन्तिकः उत्सर्गः नित्यत्वेन सर्पबलेः संवत्सरे संवत्सरे कर्तव्यत्वात् எனக் குறிப்பிடுகிறார். अस्मिन् कर्मणि उत्तरस्य यजुषो विनियोगमाह।

*6. அநாஹிதாக்நேராக்ரயணம்*

ச்ரௌதாக்னியில் ஆதானம் செய்யாதவர்களுக்காக ஆக்ரயண கர்மாவை விதிக்கிறார்.

குறிப்பு:- यत्कर्म कृत्वैवाग्रयाणं प्रथमायने नवान्नप्राशन प्राप्तिर्भवति। आग्रयाणमिति कर्म नामधेयम्, येन कर्मणा अग्रे नवद्रव्यं ददन् प्रापयतीति। **ஆக்ரயண** கர்மா என்று இதற்குப் பெயர். இந்தக் கர்மாவைச் செய்தபிறகே புதிய அன்னம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. புதிய அன்னத்தைச்

*245 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 229*

*246 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 229*

சுவைக்கும் வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது.[247]

7. நவாநாம் ... .... யஜுஷாகாரஸ்தூப உத்வித்தேத்

ஆக்ரயண யாகத்தில் தேவதைகளுக்காக, புதிய அரிசியில் ஸ்தாலீபாகம் செய்து, 4வது இடத்தில் ஸ்விஷ்டக்ருத் ஹோமத்திற்காக வைத்துவிட்டு, ஆக்ரயண ஹோமம் செய்யவும். மீதியிலிருந்து வாய்நிறைய அன்னத்தைப்போட்டு விழுங்கி, ஆசமனம் பண்ணவும். சமைக்கப்பட்ட ஸ்தாலீபாக அன்னத்தை உருண்டையாக்கி, "பரமேஷ்டியஸி" என்று மேட்டுவளையில் எறியவும்.

குறிப்பு:- तण्डुलानां मुखं पूरयति என்றால் அரிசியினால் சமைக்கப்பட்ட சோற்றுப்பருக்கை என்பது தாத்பர்யம். இதற்கு மாறாக அரிசி என்றும் சிலர் கருத்து. ஆக்ரயண ஹோமத்தில் மிகுந்த உணவை எடுத்து, வாயை நிரப்பவேண்டும் என்று தெரிகிறது. சிலர் சுத்தமான சாதம் என கருதுகிறார்கள். ஓதனப் பிண்டம் ஒன்று செய்யவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர். இந்தக் கர்மாவில் அக்னிக்கு முக்கியத்துவம் இல்லை. செய்யவேண்டிய நான்கு ஹோமங்களில் 'इन्द्राग्निभ्या॑स्वाहा' அல்லது अग्नीन्द्राग्निभ्या॑स्वाहा என்பது முதல் ஆஹுதியாகும். विश्वेभ्योदेवेभ्य स्वाहा என்பது இரண்டாவது, द्यावापृथिवीभ्या॑स्वाहा என்பது மூன்றாவது ஆஹுதியாகும். (நான்காவது ஸ்விஷ்ட்க்ருத்).[248]

8. ஹேமந்த ப்ரத்யவரோஹணம்

9. உத்தரேண ..... ஸம்விசந்தி

ஹேமந்த ருதுவில், பலாசத்தால் ஏற்படுத்தப்பட்ட படுக்கையில், தரையில் தூங்குவதற்கான விதி. கட்டிலைவிட்டிறங்கி, பலாச படுக்கையில் வலது புறம் புரண்டு படுக்க, प्रति क्षत्रे முதலிய ஐந்து மந்த்ரங்களைச் சொல்லவேண்டும்.

247 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 230

248 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 231

குறிப்பு:- "ஹேமந்த ப்ரத்யவரோஹணம்" என்பது இக்கர்மாவின் பெயராகும். கட்டிலைவிட்டு தரையில், பலாச படுக்கையில் தூங்குவதற்காக விதிக்கப்பட்ட கர்மாவாகும். சரத்ருது முடிந்து ஹேமந்த ருது ஆரம்பமாகிற தினத்தில், இந்தக் கர்மா செய்யவேண்டும். மார்கழி பௌர்ணமியன்று ஸூர்ய அஸ்த்தமனத்தின் பிறகு, இக்கர்மாவைச் செய்யவேண்டும் என்பது சிலர் கருத்து. இந்தக் கர்மாவும் ஒவ்வொரு வருடமும் செய்யப்படவேண்டும்.[249]

*10. தக்ஷிணத: ... ஜ்யேஷ்டோஜ்யேஷ்டோநந்தர:*

ஒரு குடும்பத்தில் தகப்பனார் தெற்கேயும், தாய் வடக்கேயும் படுத்து உறங்கவேண்டும். பிள்ளைகளில் மூத்தவன் தெற்கிலும், இளையவன் வடக்கிலும் தூங்கச் செல்லவேண்டும்.

குறிப்பு:- பிள்ளைகள் நிறையப்பேர் இருந்தால், அனைவரையும்விட மூத்தவன், தெற்குக் கோடியிலும், அவனுக்கு அடுத்தவன் அம்மாவின் அருகிலும் படுக்கவும். தாயின் வலதுபுறம், புத்ரியோ அல்லது மூன்றாம் புதல்வனோ படுக்கவேண்டும். நான்காவது குழந்தை இடது புறம் படுக்கவேண்டும். தந்தைக்கு வடக்கே ஆரம்பித்து, புத்திரர்கள் க்ரமமாகப் படுக்கவேண்டும். அனைவருக்கும் கடைசியாக வடக்கில் தாயாரின் படுக்கை அமையவேண்டும்.[250]

*11. ஸம்ஹாயோத்தராப்யாம் ... .ப்ருத்வீமபிம்ருசதி*

துயிலெழுந்ததும் "ஸ்யோநாப்ருத்வீ" முதலிய இருமந்த்ரங்களால், பூமியை ஸ்பர்சிக்கவேண்டும்.

*12. ஏவம் ஸம்வேசநாதி த்ரி:*

இந்த அபிமர்சனமானது மூன்றுமுறை செய்யப்படவேண்டும்.

குறிப்பு:- மூன்றுமுறை மந்த்ரங்களுடன் இந்தக் கர்மாவை அநுஷ்டிக்கவும். அடுத்த நாள் எழுந்ததும் ஸூர்யன் விஷயமான மந்த்ரங்களை ஜபித்து, நாந்தீ ரூபமாக ப்ராம்மணர்களுக்குப்

---

249 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 233

250 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 234

போஜனம் செய்து வைத்து, ஆசீர்வாதம் பெறவேண்டும்.[251]

(उदित आदित्ये सौर्याणि स्वस्त्ययनानि च जपित्वान्नं संस्कृत्य ब्राह्मणान् भोजयित्वा स्वस्त्ययनं वाचयित्वा। என்று ஆச்வலாயன விஷயமாகச் சொல்லப்பட்டுள்ளது.)

'உதகயந' விதிப்படி உத்தராயணத்தில் வளர்பிறையில் ஒரு சுப நாளில் இக்கர்மா அநுஷ்டிக்கப்படுகிறது. ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்திலும் இந்தக் கர்மாவின் முடிவில் ப்ராம்மண போஜனமும் स्वस्तिवाचनமும் விதிக்கப்படுகிறது.

13. ஈசாநாய ஸ்தாலீபாகம் .... .... உபஸமாதாநாதி

லௌகிகாக்நியில் ஸ்தாலீபாகம், ஈசானபலிக்காகத் தயார் செய்து, க்ஷேத்ர பலிக்காக ஸ்தாலீபாகம் செய்துவிட்டு, கிழக்கு அல்லது வடக்கு நோக்கிச் சென்று, தரையில் உயரமாக ஒரு பலிபீடத்தை ஏற்படுத்தி, அதில் அக்னி ப்ரதிஷ்டை மற்றும் உபஸமாதானம் இவைகளைச் செய்யவும்.

குறிப்பு:-ஈசானபலி கர்மாவும் உத்தராயணத்தில் செய்யவேண்டும். ஆனால் இதற்காக எந்தக் கால நிர்ணயமும் விதிக்கப்படவில்லை. ईशे ऐश्वर्यं इति धात्वर्थस्मृतेः निरतिशय ऐश्वर्यं यस्य सः ईशानः, तस्मै ईशानाय क्रियमाणं कर्म ईशानबलिरित्युच्यते। ஈசான பலி என்பது, பாகயஜ்ஞ கர்மாவாகும். இந்தக் கர்மாவும் ஒவ்வொரு வருடமும் செய்யவேண்டும் எனத் தெரிகிறது. ஆயினும், ஒரே ஒருமுறை மட்டும் செய்யலாம், விரும்பினால் வருடந்தோறும் செய்யலாம் என்ற விகல்பமும் காணப்படுகிறது.[252]

14. அபரேணாக்நிம் ... ... குடீக்ருத்வா

அக்னிக்கு மேற்கில் இரண்டு குடிசைகள் அமைக்க வேண்டும்.

குறிப்பு:-ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரத்தின்படி, இக்கர்மாவில் ஸ்தாலீபாகம் மட்டும் செய்யவேண்டும். இது நித்யகர்மா மற்றும் புருஷ ஸம்ஸ்காரம் ஆகும். நைமித்திக காம்ய கர்மா வகையில் இது சேராது. சரத் அல்லது வஸந்த ருது காலத்தில் இக்கர்மாவை அநுஷ்டிக்கவேண்டும் என்று

251 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 235

252 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 236

சொல்லப்பட்டிருக்கிறது. பங்குனி மாதத்தில், சுக்ல பக்ஷத்தில், அஷ்டமியன்று ஆர்த்ரா நக்ஷத்ரத்தில் இந்தக் கர்மாவை செய்யும்படி விதிக்கப்பட்டுள்ளது. ஔபாஸன அக்னியில் ஒரு ஸ்தாலீபாகம், ஈசான தேவதைக்காகவும் மற்றொன்று க்ஷேத்ரபதிக்காகவும் செய்யவும். ஸாதன பாத்ரங்களை ஜோடியாக வைக்கவும். பரிதிப்ரயோகம் உண்டு. சில ஆசார்யர்களின் கருத்துப்படி க்ஷேத்ரபதிக்காக ஸ்தாலீபாகத்தை லௌகீகாக்னியில் செய்யப்படுகிறது.[253]

ஈசான பலியை 'ஶூலகவம்' என்று சொல்லுகிறோம். மற்ற க்ருஹ்ய ஸூத்ரத்தில், இந்த ஸந்தர்பத்தின்பொழுது गवालंभनं விதிக்கப்பட்டுள்ளது.

**20வது கண்டம்**

1. உத்தரயா ... .... ஆவாஹயதி

தெற்குப்பக்கம் இருக்கும் குடிசையில், ஈசான தேவதையை, "ஆத்வா வஹந்து" எனும் அடுத்த மந்த்ரத்தால், ஆவாஹனம் செய்யவேண்டும்.

2. லௌகிக்யா ... .... மீடுஷீம்

மீடுஷீ தேவியை மந்திரமெதுவுமின்றி அல்லது லௌகீக வார்த்தைகளால் வடக்குப் பக்கக் குடிசையில் ஆவாஹனம் செய்யவேண்டும்.

3. மத்யே ஜயந்தம்.

இரு குடிசைகளுக்கு நடுவில், ஜயந்தனை ஆவாஹனம் செய்யவேண்டும்.

குறிப்பு:- லௌகிக வாசா आयाहिजयन्ता जयन्तमावाहयामि इति वा। आयाहि मीढुषि। मीढुषीं आवाहयामि। ஜயந்தன் என்பது இந்த்ரனுடைய பிள்ளை ஸ்கந்தனைக் குறிப்பதாகும் என்கிறார் ஹரதத்தர்.[254]

---

253 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 237

254 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 238

4. யதோதகமுதகாநி … ….

ஆவாஹனம் செய்த முறைப்படி, உபசாரங்கள் செய்யவும்.

குறிப்பு:- புஷ்ப அக்ஷதையுடன் அர்க்யம் தயாரிக்கவேண்டும். गन्ध, पुष्प, धूप, दीपं என முறைப்படி உபசாரம்செய்யவேண்டும். ஸ்தாலீபாகத்தை மூன்றுபாகமாகப் பிரித்து, ஈசானபத்னீ மீடுஷிக்கும், ஜயந்தனுக்கும், ஈசானனுக்கும் வைத்துக்கொள்ளவும். ப்ராஹ்மண போஜனத்திற்காக, ஸ்தாலீபாக அன்னத்திலிருந்து நிறைய எடுத்து வைத்துக்கொண்டு, 'भवाय देवाय', 'भवस्य देवस्य पत्न्यै' முதலிய எட்டு மந்த்ரங்களால், ஓதனங்களைச் செய்து, ஈசான தேவதைக்கும், மீடுஷீ தேவதைக்கும் जयन्ताय स्वाहा என்று ஜயந்தனுக்கும், ஹோமம் செய்யவும். இறுதியாக अग्नये स्विष्टकृते सुहुतहुत आहुतीनां என்று ஸ்விஷ்டக்ருத் தேவதையான ருத்ரனுக்கும் (रुद्रोग्निस्स्विष्टकृत् என்கிறது வேதம்) ஹோமம் செய்யவும்.[255]

5. உத்தரேண யஜுஷா … ….தசோத்தராப்ய:

ஈசானனை "ஸ்வஸ்திந:" என்கிற மந்த்ரத்தால் உபஸ்தானம் செய்து, ப்ரஸாதத்துடன் இரண்டிரண்டு இலைகளைச் சேர்த்து, "க்ருஹபோபஸ்ப்ருச" முதலிய 7 மந்த்ரங்களைச் சொல்லவும். "யா ஆக்யாதா" மந்த்ரங்களால் அந்தந்த தேவர்களுக்குப் போடவும்.

குறிப்பு:- தெற்குக் குடிசையில் பத்து இலைகளையும், வடக்குக் குடிசையில் பத்து இலைகளையும், தேவஸேனா அதாவது தேவதைகளுடன் கூட இருக்கிற கூட்டத்திற்காக போடப்படவேண்டும். ஈசான தேவதையினுடைய ஸேனையே தேவதையாகும். எனவே ஈசானன் தேவதையாவதில் எந்த விரோதமும் வருவதில்லை.[256]

6. பூர்வதுத்தரை:

முன்பு போலவே ப்ரஸாதத்துடன் இரண்டிரண்டு இலைகளைப் போட்டு, "த்வாரபோபஸ்ப்ருச" முதலிய நான்கு மந்த்ரங்களைக் கூறவும்.

---

*255 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 239*

*256 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 241*

*7.* ஓதனபிண்டம் .... .... ஆஸஜதி

இரண்டு கைகளாலும் அன்னத்தைப் பிண்டமாகப் பிடித்து "நமோ நிஷங்கிண" எனும் மந்த்ரத்தால், தொன்னையில் வைத்து மரத்தின்மேல் தொங்கவிடவேண்டும்.

*8.* அத ருத்ராந் ஜபேத்

"நமஸ்தே ருத்ர" எனும் ருத்ர ப்ரச்னத்தை ஜபிக்கவேண்டும்.

குறிப்பு:- ருத்ர ப்ரச்னம் ஜபம் செய்யும்போது, 11வது அநுவாகத்தின் முடிவிலுள்ள பத்து மந்த்ரங்களிலும் ''तेषाँसहस्रयोजने'' என்று அநுஷங்கத்துடன் ஜபிக்கவேண்டும். கடைசி மூன்று மந்த்ரங்களிலும் ''नमो रुद्रेभ्यो ये पृथिव्यां'', ''नमो रुद्रेभ्यो ये अन्तरिक्षे ...'', ''नमो रुद्रेभ्यो ये दिवि येषां वर्षमिषवः'' முதலிய அநுஷங்கங்களையும் சொல்லவேண்டும்.[257]

*9.* ப்ரதமோத்தமௌ வா

அல்லது முதல் மற்றும் கடைசீ அநுவாகத்தை ஜபிக்கவும்.

*10.* அபித ஏதமக்நிம் ... .. ப்ராப்நுயாத்

ப்ரதான ஹோம புகை, பசுக்களை வந்தடையும் விதமாக, பசுக்களை அக்னிக்குச் சமீபமாக கட்டவேண்டும்.

குறிப்பு:- இக்கர்மாவை "கோ சாந்தி" என்று சிலர் கூறுவர். பசுக்களுக்கு சந்தனம் பூசி, ஒரு முஷ்டி தர்பங்களை எடுத்து, ஜலத்தில் நனைத்து பசுக்கள் மீது அந்த ஜலத்தால் ப்ரோக்ஷிக்க வேண்டும். காளைமாட்டின் மீது முன்னதாக ஜலத்தை ப்ரோக்ஷிக்க வேண்டும். दर्भग्रुमुष्टिना – दर्भाणां गुरुमुष्टिः दर्भग्रुमुष्टि। என்பதால் ப்ரோக்ஷிக்கவேண்டும்.[258]

*11.* கவாம் ... ... பதிம் யஜதே

मार्गे – मार्गे, छान्दसः ह्रस्वः। அக்னி இல்லாமலேயே க்ஷேத்ர பலிக்காக பசுக்களின் வழியில் தரையில் பலிப்ரதானம் செய்யவும்.[259]

---

*257 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 243*

*258 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 244*

*259 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 244*

*12. ஈசாநவதாவாஹனம்*

आ त्वा वहन्तु என்ற மந்த்ரத்தால் க்ஷேத்ரபதி தேவதையையும் ஈசான தேவதையைப் போலவே ஆவாஹனம் செய்யவேண்டும்.

*13. சதுஷு ... ..... ததாதி*

ஆவாஹன அர்க்யாதிகளைச் செய்து ஸ்தாலீபாக ப்ரஸாதத்தில் நெய் சேர்த்து क्षेत्रपत्यस्थालीपाकात्। ஓதனம் எடுத்து நான்கு அல்லது ஏழு இலைகளைப் பூமியில் சேர்க்கவேண்டும். நாம நிர்தேசம் சதுர்த்யந்தமாக இருக்கவும். உதாஹரணமாக ''क्षेत्रस्य पतये त्वां ददामि'' इति दधाति, ''क्षेत्रस्य पतये स्वाहेति दधाति''[260]

*14. க்ஷிப்ரம் யஜதே பாகோ தேவ:*

க்ஷேத்ரபதி குழந்தையைப்போல எப்பொழுதும் கமநசீலனாகவே இருப்பவன் ஆகையால், க்ஷேத்ரபதிக்கான பலியை வெகு துரிதமாகச் செய்யவேண்டும்.

குறிப்பு:- க்ஷேத்ரபதி குழந்தையைப்போல அலைபாயும் குணம் உள்ளவன் என்பதால், அவனுக்குச் சீக்ரமாக பலியை அர்ப்பணம் செய்யவும். पाको देवः என்பதில் அர்த்த வேறுபாடு காணப்படுகிறது. சிலர் पाकः देवः என்பதற்கு अल्पः देवः என்று அர்த்தம் கொள்ளுகிறார்கள்.[261]

*15. உத்தராப்யாமுபதிஷ்டதே*

"க்ஷேத்ரஸ்ய" எனும் இரு மந்த்ரங்களால் உபஸ்தானம்.

*16. ஸ்தாலீபாகம் ப்ராஹ்மணான் போஜயேத்*

ப்ராஹ்மண போஜனத்தை ஈசான ஸ்தாலீபாக சேஷத்தால் செய்துவைக்கவேண்டும்.

*17. க்ஷேத்ரபத்யம் ... ...ஸநாபயோ பவந்தி*

सनाभयः – समानयोनयः पुत्राः, पौत्राः, भ्रातरश्च க்ஷைத்ரபத்ய ஸ்தாலீபாக சேஷ அன்னத்தை கர்த்தாவினுடைய ஞாதிகள் சாப்பிடவேண்டும்

---

*260 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 245*

*261 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 245*

என்று விதிக்கப்பட்டுள்ளது.[262]

*18.* யதா வைஷாம் குலதர்ம: ஸ்யாத்

கர்த்தாவின் குலவழக்கம் எப்படியோ, அதன்படியும் போஜனம் செய்விக்கலாம்.

குறிப்பு:- தன் குலத்தைச் சேர்ந்த, ஸஹோதரி உட்பட அனைவருக்கும் போஜனம் செய்விக்கலாம்.[263]

262 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 246

263 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 247

# இயல் - 9

## க்ருஹ்ய ஸூத்ரம் படலம் -8

(பித்ரு கர்மாக்களான மாஸி ச்ராத்தம், அமா ச்ராத்தம், அஷ்டகா, அந்வஷ்டகா போன்றவையும், வ்யாபார அபிவ்ருத்தி, சத்ருவை ஜெயிக்க போன்ற சில பரிஹார கர்மாக்களும் சொல்லப்பட்டுள்ளன.)

**8வது படலம் – 21வது கண்டம்**

1. மாஸிச்ராத்தஸ்ய .... .... காலா:

மாஸிச்ராத்தம் என்பது பித்ரு கர்மா ஆகும். ஒவ்வொரு மாதமும் க்ருஷ்ண பக்ஷத்தில் மாஸிச்ராத்தம் செய்யவேண்டும்.

குறிப்பு:- பித்ருக்களுக்காகச் செய்யப்படும் மாஸி ச்ராத்தத்தை ஒவ்வொரு மாதமும் க்ருஷ்ணபக்ஷத்தில் செய்யவேண்டும் என்று விதி உள்ளது. सर्वेष्वेवापर पक्षस्याहस्सु क्रियमाणे पितृन् प्रीणाति என்று ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் உள்ளிட்ட ஸூத்ரங்களில் சொல்லப்பட்டுள்ளது. कर्तुस्तु कालाभिनियमात् फल विशेषः என்றும் கூறப்பட்டுள்ளது. अपरपक्षे पित्र्याणि முதல் முதலாக மாஸி ச்ராத்தத்தை அபர பக்ஷத்தில் எந்த திதியில் செய்ய ஆரம்பிக்கப்படுகிறதோ, அதே திதியில் ஒவ்வொரு மாஸமும் செய்யவேண்டும் என்பது நியமமல்ல. மற்ற திதிகளிலும் செய்யலாம்.[264]

2. சுசீன் மந்த்ரவதோ ... .... போஜயேத்

தாயார் மற்றும் தகப்பனாரின் கோத்ரத்தைச் சேராத, மற்றும் மாமனார், ஆசார்யன், சிஷ்யன் போன்ற யோநி ஸம்பந்தம், மந்த்ர ஸம்பந்தம் உள்ளவர்களையும் தவிர்த்து, நன்கு வேதாத்யயனம் செய்தவர்களான, ப்ரயோஜனத்தை எதிர்பார்க்காதவர்களான, குறைந்தது மூன்று ஸத்ப்ராஹ்மணர்களுக்கு ச்ராத்த போஜநம் செய்விக்கவேண்டும்.

குறிப்பு:- ப்ராம்மணர்கள் மந்த்ர ஜ்ஞாதாவாகவும், வேதாத்யயன ஸம்பந்நர்களாகவும், பவித்ரமானவர்களாகவும் இருக்கவேண்டும். குறைந்தது மூன்று பேருக்கும், ஸத்ப்ராஹ்மணர்கள் கிடைக்காத பக்ஷத்தில், ஒரு ப்ராம்மணருக்காவது போஜனம் செய்விக்கலாம். மாமா, மாமனார் முதலியோர் யோநி ஸம்பந்தம் உள்ளவர்கள். பெரிய, சிறிய தகப்பனார்கள் மற்றும் அவர்களின் புதல்வர்கள் மற்றும் தனது கோத்ரத்தைச் சேர்ந்தவர்களையும் தவிர்க்கவேண்டும். ஆசார்யன், சிஷ்யன், யஜமானன், யாகம் செய்விப்பவன், அத்யயனம் செய்பவன், அத்யயனம் செய்விப்பவன் ஆகியோர் மந்த்ர ஸம்பந்தம்

264 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 248

உள்ளவர்களாகின்றனர் எனவே இவர்களையும் தவிர்க்கவேண்டும்.[265]

ஸுதர்சனாசார்யர் விஷ்ணு ஸ்ம்ருதி, விஷ்ணு புராணம், யாஜ்ஞுவல்க்ய ஸ்ம்ருதிகளிலிருந்து வசனங்களை உதாஹரித்து, மாதா முதலியோர் பிண்டதானம் செய்தாலும், தனியாக போஜனம் செய்விக்க முடியாது என்றும், மாதாமஹ ச்ராத்த விஷயத்தையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

3. அந்நஸ்யோத்தராபிர்ஜுஹோதி

"யந்மே மாதா" முதலிய மந்த்ரங்களைச் சொல்லி அன்னத்தை ஹோமம் செய்து, ப்ராஹ்மணர்களுக்கு இடவும்.

குறிப்பு:- अमुष्मै என்னும் இடத்தில் பிதாவின் பெயரைச் சொல்லவேண்டும். இறுதியில் ஸ்வாஹா சப்தம் சேர்க்கவேண்டும். மாதாமஹனுக்காகவும் ஹோமவிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகப்பனார் ஜீவித்திருந்தால், தகப்பனாருக்குப் பிறகு உள்ள பித்ருக்கள் மூவரின் பெயர்களைச் சொல்லவேண்டும். ஒருவேளை பிதாமஹன் இருந்து பிதா இல்லாதிருந்தால், பித்ரு, ப்ரபிதாமஹ, ப்ரப்ரபிதாமஹர்களின் பெயர்களைச் சொல்லவேண்டும்.[266]

4. ஆஜ்யாஹுதீருத்தரா:

நெய்யினால் ஆறு ஆஜ்யாஹுதிகள் செய்யவும்.

குறிப்பு:- "யந்மே மாதா" தொடங்கி 7 அந்நாஹுகிகளுக்குப் பிறகு, பித்ரே ஸ்வாஹா, ஸ்வாஹா பித்ரே என்பவை இரு முறையும், ஸ்வதா ஸ்வாஹா, அக்னயே கவ்ய வாஹனாய என 6 ஆஜ்யாஹூதிகள் செய்யவேண்டும். மாஸி ச்ராத்தத்தில் ப்ராம்மண போஜனம்தான் ப்ரதான கர்மாவாகும். ஆனால் சிலரின் கருத்துப்படி ச்ராத்தத்தில் மூன்று ப்ரதானங்கள் உள்ளன.[267]

5. ஏதத்வா விபரீதம்

"யந்மே மாதா" முதலியவற்றால் ஆஜ்யாஹுதிகளும் "ஸ்வாஹா பித்ரே" முதலியவற்றால் அந்நாஹுதிகளையும் செய்யவேண்டும்

265 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 249

266 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 252

267 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 254

என்று சிலர் கருதுகிறார்கள்.

குறிப்பு:- श्वः श्राद्धं भविष्यति என்று முதல்நாள் இரவு போஜனம் முடித்த ப்ராஹ்மணர்களிடம் விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். अद्य श्राद्धं भविता என்று மாஸி ச்ராத்தத்தன்று காலை மீண்டும் சொல்லவேண்டும். அவர்களுக்கு எண்ணெய் ஸ்நாநம் செய்துவைத்து, श्राद्धं भवति என்று மூன்றாவது ஆமந்த்ரணமாக மீண்டும் அவர்களை ச்ராத்த போஜனத்திற்காக அழைக்கவேண்டும்.[268]

6. ஸர்வமுத்தரைரபிம்ருசேத்

ஹோமம் செய்து மிகுந்துள்ள, ப்ராஹ்மணர்களுக்கு போஜனத்திற்காக உள்ள அன்னத்தை, "ஏஷதே ததா" முதலிய மூன்று மந்த்ரங்களால் ஸ்பர்சிக்கவும்.

குறிப்பு:- 7 அந்நாஹுதிகள், 6 ஆஜ்யாஹுதிகள் ஆகிய ப்ரதான ஆஹுதிகள் செய்தவுடன், "அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா" என்று ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்யவும்.[269]

இதன்பின் ஜயாதி ஆஹுதிகளைச் செய்யவேண்டும் என்றும், ஜயாதி செய்யவேண்டாம் என்றும் இருவித அபிப்ராயங்கள் நிலவுகின்றன.

இந்தக் கர்மாவில் அனைத்தையும் ப்ராசீனாவீதியில்தான் செய்யவேண்டும். சிலர் ஜயாதி மற்றும் ப்ராயச்சித்தாஹுதிகளுக்கு ப்ராசீனாவீதி கிடையாது என்கின்றனர். ஸுதர்சனாசார்யரும் தன்னுடைய தாத்பர்ய தர்சன வ்யாக்யானத்தில் ஜயாதியைக் குறிப்பிடவில்லை. एष ते मधुमान् ... ... यजूँषि ते महिमा। ஆகிய மூன்று மந்த்ரங்களால் ப்ராஹ்மண போஜன அன்னத்தைத் தொடவும்.

7. க்ளுப்தாந்வா ப்ரதி பூருஷம்

ஒவ்வொரு ப்ராஹ்மணருக்கும் போஜன பாத்ரத்தில் பரிமாறப்பட்டுள்ள அன்னத்தை, ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லித் தொடவும்.

---

268 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 254

269 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 255

குறிப்பு:- ஒவ்வொரு ப்ராஹ்மணருக்கும் பரிமாறப்பட்ட போஜனத்தையும் ஒவ்வொன்றாகத் தொட்டு, ஒவ்வொருவருக்கு ஒரு மந்த்ரம் என மூவருக்கும் மூன்று மந்த்ரங்களைச் சொல்லவும். மந்த்ரத்தில் வரும் ஸ்த்ரீ, புருஷ லிங்க வித்யாஸத்திற்கு ஏற்றபடி, ஜபத்தில் மாறுதல் செய்யவும். பிதா முதலியோருக்கு தனித்தனி ப்ராம்மணர்களை வரித்திருந்தால், ஒவ்வொருவருக்கும் உரிய மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்யவும்.[270]

*8.* உத்தரேண யஜுஷோபஸ்பர்சயித்வா

"ப்ருதிவீ தே பாத்ரம்" என்னும் யஜுஸ்ஸால், ப்ராம்மணர்களை அந்நத்தைத் தொடச் செய்து போஜனம் செய்விக்கவும்.

குறிப்பு:- அபிச்ரவணமாக, ரக்ஷோக்னம், பித்ர்யம், வைஷ்ணவ்யம், தர்மம் நிறைந்த மந்த்ரங்கள் முதலியவற்றையும், தர்ம சாஸ்த்ரம், இதிஹாஸம், புராணங்கள் முதலியவற்றையும், ப்ராம்மணர்கள் போஜனம்செய்யும்போது கேட்கும்படியாகச் சொல்லவேண்டும்.[271]

அவர்கள் த்ருப்தர்களாகிறார்கள் என்று தெரிந்துகொண்டு, மதுமதீ மந்த்ரங்களைச் சொல்லவேண்டும். मधुवाता ऋतायते முதலியவை. பிறகு பூமியில் அன்னத்தை இறைக்கவும்.

விச்வேதேவருக்கு முன்பாக *:* विश्वे देवाः – असोमपाश्च .... वैश्वदेविकम्।
பித்ரு ப்ராஹ்மணருக்கு முன்பாக*:* पितृ – असंस्कृत ... पैतृकम्।
விஷ்ணு இலைக்கு எதிரில்*:* विष्णुः – असंशयो ... वैष्णवम्॥

ஆகிய மந்த்ரங்களால் விகிராந்நத்தை இறைக்கவேண்டும்.

ஆசமனம் செய்த பிறகு மறுபடியும் ஜலம் கொடுத்து பித்ருக்களை 'ஸ்வதிதம்' என்றும், விச்வேதேவர்களை 'ரோசதே' என்றும் சொல்ல வைக்கவேண்டும். இவ்வாறு ஹரதத்தரின் அபிப்ராயம். ச்ரத்தையைப் பொறுத்து தக்ஷிணை கொடுக்கவும். மிகுதியான அன்னத்திலிருந்து பிண்டப்ரதானத்திற்காகவும், ப்ராசனத்திற்காகவும் எடுத்துவிட்டு, மிகுதியை அவர்கள் எதிரில் வைத்துக் கேட்கவும். 'अन्न शेषः किं क्रियताम्' என்று. 'इष्टैस्सह भुज्यताम्' -

*270 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 256*

*271 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 257*

விருப்பமுள்ள பந்துக்களுடன் சாப்பிடலாம் என ப்ராம்மணர்கள் பதில் சொல்வார்கள்.

*9. புக்தவதோ ... .... ப்ராச்நீயாத்*

ப்ராம்மணர்கள் போஜனம் முடித்துச் செல்லும்போது கர்தா அவர்கள் பின்னால் போகவும். ப்ரதக்ஷிணம் செய்யவும். திரும்பி வந்து ப்ராசீனாவீதியுடன் பிண்டப்ரதானம்.

*10. யா மாத்யா: .... ... தாமேகாஷ்டகேத்யாசக்ஷதே*

அஷ்டகா ச்ராத்தம், மாசி மாத க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியில் செய்யப்படுகிறது. இது ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்துடன் அஷ்டமீ வரும்போது செய்யவேண்டும். இதை ஏகாஷ்டகா என்று சொல்லப்படுகிறது. அஷ்டகா ச்ராத்தம் மாஸி ச்ராத்தத்தைப் போன்று மற்றொரு பித்ரு கர்மாவாகும். இந்த கர்மா ஒவ்வொரு வருஷமும் செய்யப்படும்.

குறிப்பு:- மாசி மாதத்தின் க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியன்று கேட்டை நக்ஷத்ரம் இருந்தால், அன்றைய தினம் அஷ்டகா ச்ராத்தம் அநுஷ்டிக்கப்படும். பௌர்ணமிக்குப் பிறகு எப்பொழுது அஷ்டமி கேட்டை நக்ஷத்திரத்துடன் சேருகின்றதோ அதற்கு ஏகாஷ்டகா என்று பெயர். ஏகாஷ்டகாவில் வபாஹோமம் ப்ரதானம்.[272]

*11.தஸ்யா ஸாயமௌபகார்யம் 12. அபூபம் சதுச்சராவம் ச்ரவபயதி*

அஷ்டகா ச்ராத்தத்தின் அங்கமான நான்கு ச்ராவ அளவுள்ள அரிசியினால் அபூபம் தயாரித்தல் முதலிய ஆரம்ப கர்மாவை, முன்தினம் ஸந்த்யா காலத்தில் செய்யவும்.

குறிப்பு:- उप समीपे क्रियत इत्युपकारः, तत्र भवं औपकार्यम्। ஔபகார்ய கர்மாவான அபூபம் மற்றும் ஹவிஸ் தயாரிக்கும் க்ரியைகள், ஸப்தமி (அதாவது அஷ்டகைக்கு முதல்நாள்) ஸூர்ய அஸ்தமனம் ஆனபிறகு ஆரம்பமாகிறது. அஷ்டமியன்று வபா ஹோமம் முதலிய கர்மாக்கள் ப்ரதானமாகும்.[273]

*272 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 264*

*273 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 265*

*13. அஷ்டாகபால இத்யேகே*

இந்த அபூபங்கள் 8 பாத்ரங்களில் (கபாலங்களில்) புரோடாசம் போல் செய்யவேண்டும் என்பது சில ஆசார்யர்களின் கருத்து.

குறிப்பு:-இந்தக் கர்மா செய்யும்போது ப்ராசீனாவீதி கிடையாது. अष्टसु कपालेषु संस्कृतः पुरोडाशः अष्टकपालः, सः श्रपयितव्यः इत्येके। **ஔபாஸன** அக்னியில் ச்ரபணம் செய்யவேண்டும்.[274]

**22ம் கண்டம்**

*1. பார்வணவதா ....அபூபாஜ்ஜுஹோதி*

பார்வண யஜ்ஞம் போலவே ஆஜ்யபாகம்வரை செய்து, "யாம் ஜநா:" என்னும் மந்த்ரத்தால் அபூப புரோடாசத்தை கைகளால் எடுத்து ஹோமம் செய்யவேண்டும்.

குறிப்பு:- இந்தக் கர்மா பித்ர்யம் அல்ல. அக்னிப்ரதிஷ்டை முதல், ஆஜ்யபாகம் வரை செய்தபிறகு, வேறொருவரால் உபஸ்தரண, அவதான, அபிகரணங்கள் செய்யப்பட்டு, "यां जनाः प्रतिनन्दन्ति" என்னும் மந்த்ரத்தினால், அபூபத்திலிருந்து ஒரு பாகத்தை எடுத்து, கைகளினால் ஹோமம் செய்யப்படுகிறது. ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தை கைகளினால் செய்யாமல் தர்வியினால் செய்யவேண்டும்.[275]

*2. ஸித்த ... ....ப்ராம்மணேப்யோ உபஹரதி*

மறுநாள் போஜனம் செய்யவிருக்கும் ப்ராஹ்மணர்களுக்குத் தெரியப்படுத்திவிட்டு, உபவாஸம் இருக்கவும். சேஷ: என்பதற்கு, ஹரதத்தர் 'शेष विधि' என்கிறார். ஆனால் ஸுதர்சனாசார்யரோ, சேஷ: என்பதற்கு 'शेष अपूपः' என்கிறார். மீதி உள்ள அபூபங்களை எட்டு பாகமாகச் செய்து நெய் சேர்த்து ப்ராஹ்மணர்கள் சாப்பிடத் தயாராக வைக்கவும். ஸ்விஷ்டக்ருத் ஹோமம் கைகளால் செய்யப்படாமல் தர்வியினால் செய்யப்படவேண்டும்.

*3. ச்வோ பூதே ... ....ஜுஷ்டாமுபாகரோமிதி*

---

*274 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 266*

*275 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 267*

குறிப்பு:- இந்தக் கர்மாவிலும் கூட, மாஸி ச்ராத்தம்போல் ப்ராம்மண போஜனம் உண்டு. (முக்யமாகக் கலியில் வபா ஹோமம் நிஷேதம் செய்யப்பட்டுள்ளது) அஷ்டமியன்று, முதல்நாள் போஜனத்திற்காக வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட ப்ராஹ்மணர்கள் வந்ததும், முகாந்தம் வரை மாஸி ச்ராத்தம்போல் செய்து, "பித்ருக்களுக்குப் பிரியமான உன்னை, (பித்ருக்களுக்காகத்) தொடுகிறேன்" என்ற பொருளில் ஒரு தர்பத்தால் "பித்ருப்யஸ்த்வா" என்று தொடவும்.[276]

*4. தூஷ்ணீம் ... ....பர்ணேநோத்தரயா ஜுஹோதி*

மந்திரமின்றி ஐந்து ஆஹுதிகளைச் செய்து, அக்னியில் பசுவின் வபையை ச்ரபணம் செய்து, நெய்யைக் கீழும் மேலும் தடவி, நடு பலாச இலையால் அல்லது ஒரே இலையினால் அந்த வபையை "வஹ வபாம்" (वह वपां) என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்யவும்.

குறிப்பு:- பசுவின் வபையைச் ச்ரபணம் செய்யும் முறை தெரிவிக்கப்பட்டுள்ளது. வபாச்ரவணமானது மற்றொரு அக்னியில் செய்யவேண்டும். उपाकृत्य पञ्च जुहोति என்பது வேதம். எனவே ஆஜ்யபாக ஆஹுதியின் முடிவில் பசுவின் உபாகரணம் உண்டு. ஸம்ஜ்ஞபந கர்மாவும், மௌனமாகவும், மந்த்ரமில்லாமலும் செய்யவேண்டும். அதை ஔபாஸன அக்னியில் ச்ரபணம் செய்து, நெய் சேர்த்து, பலாச இலையினால் ஹோமம் செய்யப்படவேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. (முக்கியமாக கலியில் வபாஹோமம் நிஷேதிக்கப்பட்டுள்ளது).[277]

*5. மாம்ஸௌதந ... ....*

"*யாம் ஜநா:*" (यां जनाः) முதலிய *7* மந்த்ரங்களால் மாம்ஸம் கலந்த அன்னத்தை அக்னியில் ஹோமம் செய்யவும்.

குறிப்பு:-இந்தக் கர்மாவில், *18* மந்த்ரங்களால் ஹோமம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் *10* ருக்குகளும், *8* யஜுஸ்ஸுகளும்

*276 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 268*

*277 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 269*

அடங்கும். முதல் ருக் அபூபத்திற்காகவும், அதன் பின் வருபவை வபாஹோமங்களுக்காகவும் உள்ளன. ஏழு ருக்குகளால் மாம்ஸௌதன ஹோமங்கள் செய்யப்படுகின்றன. மாம்ஸம் கலந்த ஓதனத்திற்கு மாம்ஸோதனம் என்று பெயர். இவ்விரண்டையும் ஒன்றாகப் பக்குவம் செய்வது கடினம், அப்படிப் பக்குவம் செய்யவும் கூடாது. இவ்விரண்டையும் ஹோமத்தின்போதுதான் கலக்கவேண்டும். गवालंभनத்திற்கு முன்பே, ஹோமத்திற்காக அன்னம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சாதமும், மாம்ஸமும் ஒன்றாகப் பக்வம் செய்வதற்கு வாய்ப்பில்லை.[278]

*6. பிஷ்டாந்நமுத்தரயா*

அன்னாஹுதிகளை *"உக்த்யச்ச"* (उक्थ्यश्च)என்னும் ருக்குகளால் செய்யவும்.

குறிப்பு:- பலாச இலையின் ப்ரயோகம், வபா ஹோமத்திற்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது. ப்ராஹ்மண போஜனத்திற்கு பிஷ்டான்னம் அவச்யம் தயார் செய்ப்படவேண்டும். பிஷ்டான்னம் பாலில் தயார் செய்யப்படுகிறது.[279]

*7. ஆஜ்யாஹுதீருத்தரா:*

*"பூ: ப்ருதிவ்யக்நி"* (भू पृधिव्यग्नि) முதலிய எட்டு மந்த்ரங்களால் ஆஜ்யாஹுதி செய்யவும்.

*8. ஸ்விஷ்டக்ருத்.. ... ....பிண்ட நிதாநாத்*

மாம்ஸோதனத்திலிருந்தும், பிஷ்டான்னத்திலிருந்தும் எடுத்துக்கொண்டு, ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்யவேண்டும். மற்றபடி அனைத்தும் ச்ராத்தம் போலவே ஸ்விஷ்டக்ருத் ஆரம்பித்து பிண்ட ப்ரதானம் வரை செய்யவும்.

*9. அந்வஷ்டகாயா .... .... நிதானமுபதிசந்தி*

அஷ்டகை அன்று பிண்டதானம் விதிக்கப்படவில்லை. எனவே பிண்டதானத்தை அஷ்டகைக்கு மறுநாள் அந்வஷ்டகையன்று

---

*278 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 270*

*279 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 270*

செய்யவேண்டும் என்று, சில ஆசார்யர்கள் விதித்துள்ளனர்.

குறிப்பு:- மாம்ஸௌதன ஹோமம், ஆஜ்ய ஹோமம், பிஷ்டான்ன ஹோமம், ததிஹோமம், ஆகார ஹோமம் இவற்றில் உபவீதியும் மற்ற இடங்களில் ப்ராசீனாவீதியும் என்கிறார் ஸுதர்சனாசார்யர். அத்துடன் கூட, கலியில் பசுவதை நிஷித்தமானபடியால், மாம்ஸமின்றி ஓதனம் மட்டுமே ஹவிஸ் என்கிறார். அன்வஷ்டகா அன்றே பிண்டப்ரதானம் செய்யவேண்டும் என்றும் அஷ்டகா அன்று செய்யக்கூடாது என்றும் சிலர் கருத்து. பாஷ்யகாரர், தர்மஜ்ஞர்களின் நிஷேதத்தைச் ச்ருதி நிஷேதத்திற்குச் ஸமமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். ''क्वचित् श्रुतिनिषेधिका, क्वचित् धर्मज्ञ, उभय इति'' धर्मज्ञ समयोऽपि वेदवत्प्रमाणम् இல்லாவிட்டால் வபா அல்லது மாம்ஸத்தின் இடத்தில் (ஆண்) ஆட்டின் வதமாவது இருக்கவேண்டும் என பரத்வாஜ ஸூத்ரத்தில் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் கலியில் ததி ஹோமம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஸுதர்சனாசார்யரின் தீர்மானம். ''प्रमाणन्तु त्रैविद्यवृद्धाः शिष्टा एवम्''[280]

*10. அதைத்பரம் .... ....ஜுஹோதி யதாபூபம்*

"*யாம் ஜநா:*" மந்த்ரத்தாலேயே ததி ஹோமமும் செய்யலாம் என மற்றொரு விதி உள்ளது.

குறிப்பு:- இது கௌண விதியாகும். அஷ்டமியன்று காலை ஔபாஸன அக்னியில் உபஸமாதானம் செய்து, பரிஸ்தரணம் போட்டு, மந்த்ரமின்றி பரிஷேசனம் செய்து, கைகளால் தயிரை எடுத்து ஹோமம் செய்யவேண்டும். ஸ்விஷ்டக்ருத் ஹோமம் கிடையாது. உண்டு என்பது சிலர் கருத்து. மந்த்ரமின்றி மறுபடியும் பரிஷேசனம் செய்யவேண்டும். ஜயாதியை விதிக்கவில்லை. ப்ராம்மண போஜனமும், பிண்டப்ரதானமும் உண்டு. இந்த தத்யஞ்ஜலி ஹோமம் அஷ்டமியன்று முற்பகலில் செய்யவேண்டும். இந்த ஹோமம் செய்தால் அந்வஷ்டகா ச்ராத்தம் செய்யத் தேவையில்லை என்று கூறுவது அடிப்படையற்றது. தத்யஞ்ஜலி ஹோமம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அந்வஷ்டகா ச்ராத்தம்

---

*280 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 271*

நவமியன்று செய்யப்படவேண்டும்.[281]

*11. அத ஏவ ... .... அந்வஷ்டகாம்*

அஷ்டகையன்று, மறுநாளைய தேவைக்குத் தகுந்தவாறு, பசுவின் மாம்ஸத்தை சேஷம் வைத்து, அதைக்கொண்டு நவமியன்று அந்வஷ்டகா கர்மாவைச் செய்யவும்.

*12. தஸ்யா மாஸி .... .... கல்போ வ்யாக்யாத:*

மாஸி ச்ராத்த விதிகளில் இந்தக் கர்மாவுக்கான விதிகள் சொல்லப்பட்டன.

குறிப்பு:- மாதா மாதம் க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியில் மாஸி ச்ராத்தம் செய்யப்பட்டவாறே, த்ரவ்யம், தேவதை உட்பட அனைத்தும் அந்வஷ்டகா ச்ராத்தமும் தை மாதத்திற்குப் பிறகு வரும் க்ருஷ்ணபக்ஷ நவமியில் செய்யப்படவேண்டும். எங்கு மாஸி ச்ராத்தத்தில் மாம்ஸஹோமம் செய்யப்படுகிறதோ, அங்கு அந்வஷ்டகாவிலும் மாம்ஸஹோமம் செய்யவேண்டும். சிலர் தத்யஞ்ஜலி ஹோமம் செய்யப்படுகிற பக்ஷத்திலும்கூட அந்வஷ்டகா கர்மாவை விதிக்கிறார்கள்.[282]

ஏகோதிஷ்டம் ச்ராத்தமானது, இறந்தவர் ஒருவரை உத்தேசித்துச் செய்யப்படுகிறது.

ஒற்றைப்படையில் ப்ராஹ்மண வரணம், அக்னி கார்யம் இல்லை, ப்ராஹ்மணர்களை முன்னதாக அழைப்பதில்லை. தூபம், தீபம், ஸ்வதா, நமஸ்காரம் ஆகியவையும் கிடையாது.

வடக்கு நோக்கி போஜனம். அபிச்ரவணம் இல்லை. 'प्रेताय अमुष्मै यमाय च स्वाहा'। என போஜன ஸ்தானத்தில் பிண்டதானம் செய்யப்படுகிறது. இக்கர்மா எல்லா வர்ணத்தாருக்கும் உரியது.

நவச்ராத்தம் :- நவச்ராத்தமும் எல்லா வர்ணத்தாருக்கும் உண்டு. இதன் கால நிர்ணயத்தில் மட்டும் கருத்துவேறுபாடு இருக்கிறது. नव श्राद्धं 45 நாட்களுக்குள், அல்லது ஆறு மாதத்திற்குள்

---

*281 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 271*

*282 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 276*

அல்லது ஒரு வருஷத்திற்குள் ஒரு முறை செய்யப்படுகிறது. எது முதலில் செய்யப்படுகிறதோ, அதற்கு நவச்ராத்தம் என்று பெயர். அதன் காலம் விளக்கப்படுகிறது. ''चतुर्थपञ्चमे चैव नवमैकादशे तथा। यदत्र दीयते जन्तोः तन्नवश्राद्धमुच्यते।।''

*13. ஸநிமித்வோத்தரான் ஜபித்வா அர்த்தம்ப்ரூயாத்*

எந்த தான்யம் தன்னிடம் இல்லையோ, அதை பிறரிடம் யாசிக்க "அந்நமிவ தே" எனும் ஏழு மந்த்ரங்களைச் சொல்லி தனக்கு விருப்பமான பொருளைக் கேட்கவும்.

குறிப்பு:- தான தர்மத்தின் மூலம் பெற்ற பொருளுக்கு 'सनिं' என்று பெயர். இதற்கான மந்த்ரத்தில் असौ என்கிற இடத்தில் दाता கொடுப்பவரின் பெயரை, ஸம்புத்யந்தமாகச் சொல்லவேண்டும்.[283] ''भिक्षणे निमित्तमाचार्यो विवाहो, यज्ञो, मातापित्रोर्बुभूषार्हतश्च नियम विलोपः तत्रगुणान् समीक्ष्य यथा शक्ति देयम् भिक्षा''[284] பிக்ஷா காரணங்களில் ப்ரதானமான காரணம் விவாஹம்தான். மந்த்ரத்தை ஜபித்துவிட்டு, எந்தப் பொருளுக்காக வந்தோம் என்பதை தாதாவ ஸம்புத்யந்தமாகச் சொல்லவேண்டும். ஒருக்கால் யாசகத்தால் ரதம் முதலியவை கிடைத்ததெனில், அதை எவ்வாறு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அடுத்துவரும் விதிகளில் சொல்கிறார்.

*14. ரதம் லப்த்வா ... .... பக்ஷஸீ வா*

தானமாக ரதம் கிடைத்தால் அதில் காளைகள், அல்லது குதிரைகளைப் பூட்டி, கிழக்கு முகமாக நிற்கச்செய்து "அங்கௌ" என்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டே, ரதத்தின் இரு சக்கரங்களையும் தொடவேண்டும்.

குறிப்பு:- நேமி, அச்சு அல்லது சக்கரங்களை இரு கைகளாலும் தொடவேண்டும். ''रथमारोप्यन्नाना पाणिभ्यां चक्रे अभिमृशेत्'' என்று ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.[285]

*15. உத்தரேண .. ... .... யதார்த்தம் யாயாத்*

---

283 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 278

284 "வர்ணாச்ரம தர்மகாண்டம்" – பக்கம் – 147

285 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 278

செல்லவேண்டிய காரியத்தை உத்தேசித்து ரதத்தில் ஏறும்போது, "அத்வநாம்" என்னும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு ரதத்தில் ஏறவும். ''अयं वामश्विनौ रथः'' என்னும் மந்த்ரத்துடன் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி ரதத்தைச் செலுத்தவேண்டும்.

[286]குறிப்பு:- இம்மந்திரங்களின் விஷயத்தில் ஹரதத்தருக்கும், ஸுதர்சனாசார்யருக்கும் அபிப்ராய பேதம் உள்ளது. யானை, குதிரை போன்றவற்றை யாசித்துப் பெற்றாலும், விலைக்கு வாங்கினாலும் இந்த ப்ரயோகத்தைச் செய்யவேண்டும் என்று ஹரதத்தரும், யாசித்துப் பெற்றவைக்கே இது பொருந்தும் என்று ஸுதர்சனாசார்யரும் கருதுகின்றனர். अधीरुह्य என்பதில் சாந்தஸ பாடம் உள்ளது.

*16. அச்வமுத்தரைர்ரோஹேத்*

குதிரை தானமாகக் கிடைத்தால் "அச்வோஸி" முதலிய 11 மந்த்ரங்களைச் சொல்லி குதிரையின்மேல் ஏறவும். अश्वोऽसि, हयोऽसि, अत्योऽसि, नरोऽसि, अर्वोऽसि, सप्तिरसि, वाज्यसि, वृषाऽसि, नृमणा असि, ययुर्नामाऽसि, आदित्यानां पत्वान्विहि.

*17. ஹஸ்திநமுத்தரயா*

யானை தானமாகக் கிடைத்த சமயத்தில், "ஹஸ்தியஸ்ச" என்னும் ருக்கைச் சொல்லி யானையின்மேல் ஏறவும்.

குறிப்பு:- असौ என்கிற இடத்தில் யானையினுடைய பெயரைச் சொல்லவேண்டும். யானையின் பெயர் ஐராவதம் எனில், அஸௌ என்னும் இடத்தில் "ஐராவத:" என்று சொல்லவும். - ''वज्रैणाभिनिदधाम्यसौ'' என்ற இடத்தில் அங்குசத்தின் அபிதானம் சொல்லப்படுகிறது.[287]

*18. தாப்யாம் ரேஷணே .. ... ....ப்ருத்வீமபிம்ருசேத்*

யானை குதிரை போன்ற ம்ருகங்களால் காயம் ஏற்பட்டால் "ஸ்யோநா, படித்தா" எனும் இரண்டு மந்த்ரங்களைச் சொல்லி பூமியைத் தொடவும்.

---

*286 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 279*

*287 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 279*

குறிப்பு:- விலங்குகள் பூட்டிய வாகனத்திலிருந்து விழுந்தால் காயம் ஏற்படலாம். அப்போது, "ஸ்யோநா, படித்தா" எனும் இரு மந்த்ரங்களால் பூமியைத் தொடவேண்டும். रेषणे என்பதற்கு ஹரதத்தர், சரீரகாயம் என அபிப்ராயப்படுகிறார். ஓரளவுக்கு ஸுதர்சனாசார்யரும் இதை ஏற்றுக்கொள்கிறார்.[288]

*19.* ஸம்வாதமேஷ்யன் .... ....தண்டம்சாதத்தே

குடை, கைத்தடி இவற்றை பணம் கொடுக்கல் வாங்கல் விஷயமாகப் போகும்போது எடுத்துப்போகவேண்டும்.

குறிப்பு:- கடன் கொடுப்பது, கடன் வாங்குவது ஸம்பந்தமாக பேசுவதை, ஸம்வாதம் என்று 'வழக்கு' என்னும் பொருளில் கூறப்பட்டுள்ளது. வெற்றியை உத்தேசித்து இந்தக் கர்மா செய்யப்படுகிறது. இடது கையில் குடையையும், தடியையும் வைத்துக்கொண்டு, வலது கையால் பலீகரண ஹோமம் செய்யப்படுகிறது.[289]

---

*288 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 280*

*289 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 280*

**23ம் கண்டம்**

1. தக்ஷிணேந ... ... கத்வோத்தராம் ஜபேத்

எதிராளியை வெல்ல, "அவஜிஹ்வக" என்னும் ருக்கைச் சொல்லி, ஒரு கை உமியினால் அக்னியில் ஹோமம் செய்யவும். பின்னர் எதிராளியிடம் சென்று, "அதேவாசமாஸ்யாம்" என்னும் மந்த்ரத்தை அவனுக்கெதிரில் ஜபம் செய்யவும்.

குறிப்பு:- வலது கையினால் உமியை எடுத்து அக்னியில் ஹோமம் செய்யும்போது, "அவஜிஹ்வக" எனும் மந்த்திரத்தில் அசௌ என்கிற இடத்தில், எதிராளியின் பெயரை ப்ரதமா விபக்தியில் கூறி ஹோமம் செய்யவேண்டும்.[290]

2. க்ருத்தமுத்தரயா .... .... ....பவதி

"யா த ஏஷா" முதலிய இரு மந்த்ரங்களை கோபத்துடன் இருக்கும் எதிரியின் முன்னிலையில் ஜபித்தால் அவன் சாந்தமாகிவிடுவான்.

குறிப்பு:-ஸுதர்சனாசார்யரின் அபிப்ராயத்தில் இந்த மந்த்ர ப்ரயோகத்தை எதிராளி ஆண், பெண் யாராயினும் ப்ரயோகிக்கலாம் என்கிறார். இந்தப் ப்ரயோகம் பெண்கள் ஸம்பந்தமாக மட்டுமே என்பது மற்றும் சிலர் கருத்து.[291]

3. அஸம்பவேப்... .... ஸுப்தாயாஸ்ஸம்பாத ஏவ.

4. ஸித்யர்த்தே ... ப்ரக்ஷாளயித

5. ஸித்யர்த்தே யதஸ்ய ... .... உத்தரயா ஜுஹுயாத்

தொழில் மற்றும் வ்யாபாரத்தில் வெற்றியடைய, விற்பனைக்கு உள்ள பொருட்களிலிருந்து, சிறிது, சிறிது எடுத்துக்கொண்டு, "யதஹம் தநேந" என்னும் ருக்கைச் சொல்லி ஹோமம் செய்யவும்.

---

290 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 281

291 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 282

குறிப்பு:- வயலில் விளையும் பொருட்களைத் தவிர, மற்றவற்றில் விற்பனை முதலியவை அதிகரிக்க, லாபம்பெற, இந்த கர்மாவைச் செய்யலாம். உப்பு, காரம் உள்ளிட்ட பதார்த்தங்களும் ஹோமம் செய்யலாம். கையினால் எடுத்து ஹோமம் செய்ய இயலாத திரவ பதார்த்தங்களை தர்வியினால் செய்யவேண்டும், மற்றவற்றை கையினாலேயே ஹோமம் செய்யலாம். கர்த்தாவோ, அவனுக்காக வேறொருவரோ இந்த ஹோமத்தைச் செய்யலாம். மற்றவர் செய்தாலும் மந்த்திரத்தில் எந்த மாற்றமும் தேவையில்லை.[292]

6. யம் காமயேத ... ... ... பரிஷிஞ்சேத்

தன்னை விட்டு ஒருவர் விலகி ஓடாமல் இருக்க, ஏதாவது உயிருள்ள விலங்கின் கொம்பை எடுத்து, அதில் தன் சிறுநீரைக்கொண்டு நிரப்பி, "பரித்வா கிரே:" முதலிய இரு மந்த்ரங்களை ஜபித்து அந்த நபர் தூங்கும்போது, அப்ரதக்ஷிணமாகச் சுற்றி விடவேண்டும்.

குறிப்பு:- பொதுவாக, வீட்டு வேலைக்காரர்கள் விட்டுவிட்டு ஓடாமல் இருப்பதற்காக இந்தப்ரயோகம் மேற்கொள்ளப்படுகிறது. மந்த்ரத்தில் பரிஷீத: என்று வருவதால் இது ஆண் வேலைக்காரர்களுக்காகச் சொல்லப்பட்டது என்று தெரிய வருகிறது.[293]

7. யேந யதா ... ... ஆஹுதீர் ஜுஹுயாத்

ஓடிய வேலைக்காரன் திரும்பி வரவேண்டுமானால், அவர்கள் ஓடிய பாதையில், ஹோம பாத்ரங்களை பிடிக்கும் இண்வங்களை (இடுக்கி) சூடாக்கி வைத்துவிட்டு, "ஆவர்தன வர்தய" முதலிய நான்கு மந்த்ரங்களைச் சொல்லி ஹோமம் செய்யவேண்டும்.

---

292 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 283

293 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 282

குறிப்பு:-ஸூத்ரத்தில் दासकर्मकराः என பன்மையில் கூறப்பட்டிருந்தாலும், ஒருவர், இருவர் என எத்தனை வேலைக்காரர்கள் ஓடியிருந்தாலும், அவர்களைத் திரும்பி வரச்செய்வதற்காக இந்த ப்ரயோகத்தைச் செய்யலாம் என அறியப்படுகிறது.[294]

8. யத்யேநம் ... ... யதாலிங்கம் ப்ரக்ஷாளயித

வெளியில் செல்கையில் பறவை எச்சம், நீர்த்துளி விழுதல், மரத்தின் பழம் விழுதல் போன்றவற்றால் ஏற்படும் தோஷம் மற்றும் சகுனத் தடையை நிவர்த்தி செய்ய, "யதி வ்ருக்ஷாத்" எனும் மூன்று மந்த்ரங்களைச் சொல்லி அவற்றைத் துடைத்துவிடவும்.

9. ஆகாரஸ்தூ... .... ஜயாதி ப்ரதிபத்யதே

வீட்டுத் தூண்களில் செடி முளைத்தல், தேனீ தேன்கூடு கட்டுதல், சமையலறையில் புறாக்களின் தடம், அபூர்வமான நிகழ்வு, அபசகுனங்கள் இவற்றிலிருந்து விடுதலை பெற, அமாவாஸையன்று நடு இரவில், எந்த இடத்தில் பாத்ரத்தில் தண்ணீர் கொண்டு வந்தால் சப்தம் கேட்காதோ, அந்த இடத்தில் அக்னிருபஸமாதானம் செய்து, ஆஜ்யபாகம் வரை செய்து "இமம்மே வருண, தத்வாயாமி" முதலிய 11 ஹோமங்கள் செய்து ஜயாதி செய்யவும்.

குறிப்பு:- अमा सह वसन्तीत्यमात्याः एकपात्र भोजना पुत्र भ्रात्रादयः तेषां बहूनां सन्ततं शरीर रेषणे शरीरे नाशने मरण इत्यर्थः வீட்டின் நடுவில் புற்று ஏற்படுவது போன்றவை அற்புதக் காட்சிகளில் ஒன்று. அமாவாஸ்யா அன்று, யாவரும் நன்கு தூங்கும் வேளையான நடுநிசியில் தீர்த்தம் நிறைந்த குடங்கள் எடுத்துப்போனால் யாவருக்கும் நீர் ததும்பும்

294 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 284

சப்தம் கேட்காது. ''यत्रापां वहन्तीनां शब्दं न शृणुयात्|'' அப்படிப்பட்ட சமயத்தில் ஜலபாத்ரத்திலிருந்து சப்தம் வருமேயானால் அந்த இடத்தில் இந்த ப்ரயோகத்தைச் செய்யவேண்டும்.[295]

*10.பரிஷேசநாந்தம் .... ... ததாதி*

இறந்தவர்கள், ஆவிகளால் பயம் ஏற்படுமானால், அதைப்போக்க, பரிஷேசனம் வரைக்கும் உள்ளவற்றைச் செய்து, "இமம் ஜீவேப்ய:" என்னும் மந்த்ரத்தைச் சொல்லி, யாருக்கு மரணம் ஏற்பட்டதோ அவர்களிடமிருந்து ம்ருத்யு பயத்தைப் போக்க, தெற்குப் பக்கம் ஒரு எல்லையை நிர்ணயித்து அங்கு கல்லை நட்டு விடவேண்டும்.

295 "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்– சின்னஸ்வாமி சாஸ்த்ரி–வ்யா" – பக்கம் – 287

# இயல் - 10

## பொதுவான விஷயங்கள்

(இவ்வியலில் பொதுவாக அறிந்திருக்கவேண்டிய, ஸங்கல்பங்கள், பூர்வாங்க-உத்தராங்க காரிகைகள் போன்ற அடிப்படை விஷயங்கள் சற்று விரிவாக வழங்கப்பட்டுள்ளன.)

**பொதுவாக அறியவேண்டிய அடிப்படை விஷயங்கள்**

குறிப்பு:- இந்த அத்யாயத்தில் வைதிக கர்மாவை அநுஷ்டிப்பவன் அவசியம் அறிந்திருக்க வேண்டிய சாஸ்திர, ஸம்ப்ரதாயங்கள் பற்றிய விளக்கங்கள், அநுஜ்ஜை, விஷ்வக்ஸேந ஆராதனம், ஸங்கல்பம், ஸங்கல்பத்தில் உபயோகிக்கக்கூடிய வருடம், அயனம், ருது, மாஸம், பக்ஷம், திதி, வாரம், நக்ஷத்ரம் போன்ற அனைத்து அடிப்படை விஷயங்களின் விபரங்கள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கர்மாக்களில் அங்கமாக வரக்கூடிய உதகசாந்தி, அங்குரம், ப்ரதிசரம், அக்நிஸந்தானம், ஔபாஸனம், அநாஜ்ஞாத ஆஹுதிகள், ஜயாதி ஹோமம் போன்றவையும், வெகுவாக அனைத்துக் கர்மாக்களுக்கும் உபயோகப்படக்கூடிய க்ரியைகள், மந்திரங்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

**சாஸ்த்ரமும் ஸம்ப்ரதாயமும்**

"சாசநாத் சாஸ்த்ரம்" - கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களை கட்டளையிட்டு சாசனமாகக் கூறுவதால் இதற்கு சாஸ்த்ரம் என்று பெயர். சாஸ்த்ரங்கள் எண்ணிறந்தவை.

"அமையாயிவையென்னும் ஆசையினால் அறுமூன்றுலகில்"[296] - என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் "உலகு" என்னும் பதத்தினால் சாஸ்த்ரங்களைக் குறிப்பிட்டு, அடிப்படை சாஸ்த்ரங்கள் 18 என்கிறார்.

வேதம் விதித்த வழியில் வாழவேண்டியதே மனிதனின் கடமையாகும். வேதத்தை ஆழ்ந்து அறிந்து, உலகோர் அறியும் வண்ணம் அவற்றை எளிமைப்படுத்தி வழங்கும் கைங்கர்யம் ரிஷிகள் காலம் தொடங்கி இன்றளவும் நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ம்ருதிகளே ஆதி மற்றும் அடிப்படை சாஸ்த்ரங்கள். ஸ்ம்ருதிகளை மேலும் மேலும் எளிமைப்படுத்துவதற்காக ஏற்பட்டவையே இதிகாஸ, புராணாதிகள் அனைத்தும். எனவே ஆதாரப்பூர்வமானது என்பது வேதம்தான், வேதத்திற்கு அடுத்த நிலையில்வரும் ஸ்ம்ருதிகள், இதிகாச புராணங்களில்

296 "அதிகார ஸங்க்ரஹம்" – ஸ்ரீஸ்வாமி தேசிகன்

வழங்கப்பட்டுள்ள விஷயங்கள் வேதத்தோடு முரண்படுமானால் அவை ஏற்கப்படமாட்டா. அதுபோல் கீழே, கீழே உள்ளவற்றுக்கு அவற்றுக்கு மேலே, மேலே உள்ளவை ஆதாரமும், அடிப்படையும் ஆகும்.

சாஸ்த்ரம் வேறு, ஸம்ப்ரதாயம் வேறு:

சாஸ்த்ரங்கள் வர்ணாச்ரம தர்மத்துக்குத் தக்கபடி சரீரத்தினால் செய்யப்படவேண்டிய கர்மாக்கள் மற்றும் அநுஷ்டானங்களைப் பற்றி மட்டுமே விதிக்கும். ஆனால் ஸம்ப்ரதாயம் என்பது, சாஸ்த்திரத்தின் வரையரையை மீறாமல், சரீரத்துடன் தொடர்புடைய பந்துக்களைப் பேணுதல், மரபுகளையும், மரபுகளை ஏற்படுத்தி உபதேசித்துப் பேணிக் காத்துவரும் ஆசார்ய பரம்பரை, முன்னோர்கள், பெரியோர்கள் போன்றோரிடத்தில் செலுத்தும் பக்தியையும், மோக்ஷ மார்க்கத்தை அநுஷ்டித்து சரீரத்துடன், ஆன்மாவையும் ரக்ஷிக்கும் தலையாய பணியைச் செய்கிறது.

சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யும்போது, சாஸ்த்ரங்கள், ஸூத்திரங்களில் அறிய இயலாத, சூக்ஷ்மமான விஷயங்களும், நடைமுறையில், சூழலுக்கு ஏற்றவாறும், ஆன்மாவை நற்கதியடையச்செய்யும் தத்துவார்த்த விஷயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுடன், அவற்றுக்கு முரண்பாடற்ற வகையிலும், பகவத், பாகவத, ஆசார்ய, பந்து மித்ராதிகளை நன்கு பேணுவதற்குத் தேவையான கலாச்சார, பண்பாட்டு விஷயங்களிலும், பரம்பரை பரம்பரையாக ஒரு சீர்மையை வகுத்துப் பேணி வருவதே ஸம்ப்ரதாயம் ஆகும்.

ஸம்ப்ரதாயத்தின் பயன்கள்:

முதலாவதாக மற்றும் முதன்மையானதாக - சாஸ்த்திரத்தை அனைவராலும் கற்றுத் தெளிவடைய முடியாது. ஆனால், ஒவ்வொரு குடும்பத்திலும் அநுஷ்டிக்கப்பட்டு வரும் ஸம்ப்ரதாயங்களை இம்மியும் மாறாமல் கர்மாக்களைச் செய்துவந்தால், அது முற்றிலும் சாஸ்த்ர ஸம்மதமானதாக அமைந்துவிடும்.

மேலும், சாஸ்த்திரத்தால் விதிக்கப்பட்ட கடமைகளை, கர்மாக்களை, கடமைக்காகச் செய்யாமல், மிகுந்த அக்கறையுடனும், ஆர்வத்துடனும், பெற்றார், உற்றோர், உறவினராகிய பந்து மித்ரர்களுடன் கூடியிருந்து, குளிர்ந்து உவகை பெறச்செய்ய பேருதவியாக இருப்பது ஸம்ப்ரதாயம் ஆகும். ஸம்ப்ரதாயத்தைப் பேணுவதாலேயே சாஸ்த்ரங்களில் பற்றுதலும், ஆர்வமும் ஏற்படுகிறது.

"சாஸ்த்ரமும் ஸம்ப்ராயமும்" என முகவுரையில் விரிவாக வழங்கப்பட்டுள்ள தகவல்களையும் கருத்தில் கொள்ளவும்.

## பவித்ரம்

பூர்வம் என்னும் சுப கர்மாக்களை அநுஷ்டிக்க இரண்டு தர்பங்களாலான பவித்திரத்தை, வலது கை மோதிர விரலில் போட்டுக்கொண்டு செய்யவேண்டும் என்பது விதி.

ஒரு முழத்திற்கும் சற்று குறைவான, ஈரமான இரு தர்பங்களை எடுத்துக்கொண்டு, நுனிகளை இடது கையால் பிடித்துக்கொண்டு, வலது கையால் அடியில் ப்ரதக்ஷிணமாக முறுக்கி, நடுவில் மடித்து, விரல்விட துவாரம் வைத்து மீதியை சற்று ப்ரதக்ஷிணமாக முறுக்கி, நடுவில் இரண்டு அல்லது மூன்றுமுறை சுற்றி முடிந்துவிட்டால் அது பவித்ரமாகும்.

## கூர்ச்சம்

சுமார், ஒரு அடி அளவுள்ள 21 ஈர தர்பங்களை எடுத்துககொண்டு, இடது கையால் நுனிகளைப் பிடித்துக் கொண்டு, அடியை ப்ரதக்ஷிணமாக வலது கையால் நன்கு முறுக்கேற்றி, நுனியிலிருந்து 3 அங்குலம் விட்டு மடித்து, ஒரு சிறு வளையம் ஏற்படுத்தி, வளயத்தை மட்டும் 3 தரம் ப்ரதக்ஷிணமாக முறுக்கி, நுனியை வளையம் வழியாக விட்டு வெளியில் இழுத்து இறுக்கினால் கூர்ச்சம் தயார்.

பின்னர் மேலும் இரு தர்பங்களை எடுத்து, வளையத்திற்குள் விட்டு, அதன் நுனிகளை அடிப்பக்கம் மடக்கிப் பிடித்து, அடியில்

நீண்டுள்ள இரு தர்பங்களால் கூர்ச்சத்தின் அடிப்பகுதியை சரிவாகச் சுற்றிக்கொண்டே வந்து, அடிப் பகுதியில் ஒரு முடிச்சுப் போட்டு விட்டால் கூர்ச்சம் நல்ல உறுதியாக இருக்கும்.

## க்ருஹ அலங்காரம்

சுபகாரியங்களில் கிரஹத்தை ஒட்டடை முதலானவைகளை நீக்கி, வெள்ளை அல்லது கரி 1பங்கு, கோமயம் 2 பங்கு கலந்து, சுவர் முதலானவைகளை மெழுக வேண்டும். வாசல், உள் தாழ்வாரம், இவைகளில் பந்தல்கள் போடவேணும். வாசல் பந்தலில் தார்போட்ட வாழை மரங்கள், மாவிலைத்தோரணங்கள் மற்றும் அவரவர் சக்திக்கு ஏற்றவைகளால் அலங்கரிக்கவேண்டும். மாவிலை தோரணம், வாசல் படியிலுள்ள மாவிலை தண்டிகளில் கட்டவேண்டும். வாசல் முற்றம் இவைகளில் களி மண்ணால் நல்ல சுப முஹூர்த்தத்தில், வயது முதிர்ந்த சுமங்கலியைக் கொண்டு படிகள் (ஹோம விதானம்) போடச் செய்யவும். 4 பலகைகளுக்கும், மற்றும் கிரஹம் முழுவதும், மாக்கோலம் போடவும். படியில் கோமயத்தால் சதுரமாக ஸ்தலசுத்தி செய்து, கையினால் படிக்கோலம் போடவும். கோலக்குழாயால் போடுவது ஆசாரக் குறைவு.[297]

## சுபகாரியங்களுக்குத் தேவையானவை

முனை முறியாத முழு பச்சை அரிசி, முத்திய தேங்காய்களுக்கு வயதான சுமங்கலிகளைக் கொண்டு மஞ்சள் பூசிவைக்க வேண்டியது. புத்து மண், ஔபாஸன பாத்திரம் 1, பெரிய மடக்கு--2, சின்ன மடக்கு-4, பாலிகைகள்-5, மாவிலை கொத்துக்கள், கால் அலம்பி ஆசமனம் செய்ய சொம்பு, குளபாத்திரம், படிக்கு தனியாக சொம்பு, குளபாத்திரம் இவைகளை கேஸவாதி மந்திரங்களுடன் 32 தரம் சுத்தி செய்து, தீர்த்தத்துடன் ஸ்தலசுத்தி செய்த இடத்தில் கொண்டுவந்து வைக்க வேண்டியது. மற்றும், சந்தனம், புஷ்பம், பழம், வெற்றிலை பாக்கு, சோபனாக்ஷதை, மஞ்சள்படுத்தின தேங்காய்கள்,

297 ப்ரயோகசந்திரிகை – தமிழ் – க்ருபாஸமுத்ராசாரியார்

தாம்பாளங்கள், பசு அல்லது எருமை நெய், நெல், நல்ல தரமான அரிசி, மற்றும் வாத்யார் லிஸ்ட்படி எடுத்து பங்கிடாக வைக்கவேண்டியது.

தம்பதிகள்/புத்ரன்/புத்ரி, சுபகாரியத்தின் ஆரம்பத்தன்று காலையில் எண்ணை தேய்து ஸ்நானம் செய்யவேணும். புத்ரன்/ புத்ரிக்கு லக்ஷ்மி கல்யாணம் சொல்லி, வாத்திய ஸஹிதம் நலங்கு இடுவதும் வழக்கம்.

## காலங்கள்

ஒவ்வொரு வைதீக கர்மாவும் ஸங்கல்பம் செய்து கொண்டு (பகவத் ப்ரீதிக்காகச்) செய்யப்படவேண்டும். அப்படி ஸங்கல்பம் செய்யும்போது இப்புவி மண்டலத்தில் பூகோள ரீதியாக எந்தக் குறிப்பிட்ட பகுதியில் இருந்து கொண்டு எந்த ப்ரஹ்மாவின் காலத்தில், எந்த பரார்த்தத்தில், எந்தக் கல்பத்தில், எந்த மந்வந்தரத்தில், எந்த யுகத்தில், எத்தனாவது பாதத்தில், எந்தத் தீவில், எந்தநாட்டில், எந்தப்பகுதியில், நடந்து கொண்டிருக்கும் யுகத்தில் ப்ரபவ முதலான வருடங்களில் எந்தவருடத்தில், எந்த அயனத்தில், எந்தருதுவில், எந்தமாதம், எந்தபக்ஷம், எந்தத்திதி, எந்தக்கிழமை, எந்தநக்ஷத்திரம் உள்ள தினத்தில் என அனைத்து விபரங்களையும் கூறி பின் தன்னுடைய பிறந்த நக்ஷத்திரம், அதன் ராசி, தன்கோத்திரம், தனக்கு நாமகரணம் செய்யப்பட்ட சர்மா (இதனூடே தான் ஆணா பெண்ணா எனும் விபரம்) மற்றும் தான் செய்ய உத்தேசித்துள்ள கர்மா, அதனால் அடையவிரும்பும் பயன் ஆகியவற்றையும் தெரிவித்து ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். எனவே மேற்கண்ட அனைத்து விஷயங்களையும் ஸம்ஸ்க்ருதத்தில் எப்படிக் கூறவேண்டும் என்பதை அறிந்திருந்தால் மட்டுமே ஸங்கல்பம் முழுமையடையும்.

## பூகோள விபரம்

பூமி - அதல, விதல, ஸுதல, தலாதல, ரஸாதல, மஹாதல, பாதால ஆகிய 7 கீழ் லோகங்களுக்கு மேலேயும்; புவர்லோக, ஸுவர்லோக, மஹர்லோக, ஜநோலோக, தபோலோக, ஸத்யலோகம் ஆகிய 6 மேல் லோகங்களுக்கு கீழேயும் உள்ளது பூமி. 50 கோடி யோஜனை விஸ்தீர்ணம் உடையது.[298]

| | | |
|---|---|---|
| 3 நெல் நீளம் | - | ஒரு அங்குலம் |
| 12 அங்குலம் | - | ஒரு விதஸ்தி |
| 2 விதஸ்தி | - | ஒரு அரத்னி |
| 2 அரத்னி | - | ஒரு கிஷ்கு |
| 2 கிஷ்கு | - | ஒரு தனுசு |
| 2000 தனுசு | - | ஒரு குரோசம் |
| 4 குரோசம் | - | ஒரு யோஜனை |

அதாவது 12 மைல், 213 கஜம், 1 அடி அளவுள்ளது 1 யோஜனை.

ஸமுத்ரங்கள் 7 - "லவண, இக்ஷு, ஸுரா, ஸர்ப, ததி, க்ஷீர, சுத்தோதக" ஆகிய 7.

த்வீபங்கள் 7 - "ஜம்பூ, ப்ளக்ஷ, குச, க்ரௌஞ்ச, சாக, சால்மலி, புஷ்கராக்ய".

வருஷங்கள் 9 - "பாரத, கிம்புருஷ, ஹரி, இளாவ்ருத, பத்ராச்வ, கேதுமால, ஹிரண்யக, ரமணக, குரு" ஆக 9.

கண்டங்கள் 9 - இந்த்ர, கசேரு, தாம்ர, பகஸ்தி, புந்நாக, கந்தர்வ, ஸௌம்ய, வருண, பரத

கல்பங்கள் 7 - பார்த்திவ, கூர்ம, ப்ரளய, ஆநந்த, ஸ்வேதவராஹ, ப்ராஹ்ம, ஸாவித்ரி

மந்வந்தரங்கள் 7 - ஸ்வாயம்புவ, ஸ்வாரேசிஷ்ட, உத்தம, தாமஸ, ரைவத, சாக்ஷுஷ, வைவஸ்வத ஆக 7 மந்வந்தரங்கள்.

---

298 ஆபஸ்தம்பீய உபாகர்மா ப்ரயோகம் – க்ரந்தம் – பக்கம் –13.

## ௬௦ தமிழ் வருடங்கள்

ப்ரபவ, விபவ, சுக்ல, ப்ரமோதூத, ப்ரஜோத்பத்தி, ஆங்கிரஸ, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈச்வர, வெஹுதான்ய, ப்ரமாதி, விக்ரம, விஷு, சித்ரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, ஸர்வஜித், ஸர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, ஹேவிளம்பி, விளம்பி, விகாரி, ஸார்வரி, பிலவ, சுபக்ருது, சோபக்ருது, குரோதி, விச்வாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌம்ய, சாதாரண, விரோதிக்ருது, பரிதாபி, ப்ரமாதீச, ஆனந்த, ராக்ஷஸ, நள, பிங்கள, காளயுத்தி, சித்தார்த்தி, ரௌத்ரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரத்தாக்ஷி, குரோதன, அக்ஷய இவற்றுடன் "நாம ஸம்வத்ஸரே" என்று சேர்த்து ஸங்கல்பத்தில் உபயோகிக்க வேண்டும்.[299]

## அயனங்கள், ருதுக்கள்

தை 1 முதல் ஆனி கடைசி தேதிவரை உத்தராயணம்.

ஆடி 1 முதல் மார்கழி கடைசி தேதிவரை தக்ஷிணாயனம்.

| | | |
|---|---|---|
| சித்திரை, வைகாசி | - | வஸந்த ருது |
| ஆனி, ஆடி | - | க்ரீஷ்ம ருது |
| ஆவணி, புரட்டாசி | - | சரத் ருது |
| ஐப்பசி, கார்த்திகை | - | வருஷ ருது |
| மார்கழி, தை | - | ஹேமந்த ருது |
| மாசி, பங்குனி | - | சிசிர ருது |

## பக்ஷங்கள்

அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் பௌர்ணமி வரை சுக்ல பக்ஷம், பௌர்ணமிக்கு அடுத்த நாள் முதல் அமாவாசை வரை க்ருஷ்ண பக்ஷம்.

---

299 ஜோதிட கிரக சிந்தாமணி–பெரிய வருஷாதி நூல் – தமிழ் – பக்கம் – 279

## நக்ஷத்திரங்கள் – 27

| | | |
|---|---|---|
| அஸ்விநி | அபபரணி | க்ருத்திகா |
| ரோஹிணீ | ம்ருகசிரோ | ஆர்த்ரா |
| புனர்வசு | புஷ்ய | ஆச்லேஷா |
| மகா | பூர்வபல்குனி | உத்ரபல்குனி |
| ஹஸ்த | சித்ரா | ஸ்வாதீ |
| விசாகா | அநுராதா | ஜ்யேஷ்டா |
| மூலா | பூர்வாஷாடா | உத்ராஷாடா |
| ச்ரவண | ச்ரவிஷ்டா | சதபிஷக் |
| பூர்வப்ரோஷ்டபதா | உத்ரப்ரோஷ்டபதா | ரேவதீ |

ஸம்ஸ்கருத பெயர்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன அப்படியே சொல்லி "நக்ஷத்ர யுக்தாயாம்" என்று சொல்லிக் கொள்ளவேண்டியது.

## பரிபாஷா

எல்லாக் கர்மாக்களுக்கும் கர்மாவை அநுஷ்டிக்கிற யஜமானன் அடிப்படையாகக் கொள்ளவேண்டியதை இங்கு தெரிவிக்கப்படுகிறது.

सर्वत्र कर्मणामादौ कार्यकर्ता यजमानः स्नातः धृताचार धौतवस्त्रः, सोर्ध्वपुण्ड्रः कृत सन्ध्यौपासनः, अनुष्ठित ब्रह्मयज्ञः (सिद्धाग्निकश्चेत्) कृतौपासनश्च प्रकृतं कर्मऽऽरभेत।[300]

சுபகாரியங்களிலும் படிக்கு வரும் பொழுது தீர்த்தாமாடி, உலர்ந்த வஸ்திரம் உடுத்தி, தலையை (சிகையை) முடிந்துகொண்டும், திருமண் காப்புக்கள் இட்டுக் கொண்டும், ஸந்த்யாவந்தனம், ப்ரஹ்மயஜ்ஞம், ஸமிதாதானம் அல்லது ஔபாஸனாதிகளான ஆச்ரம நியமாநுஷ்டானங்களையும் முடித்துக்கொண்டு, கால்கைகளை அலம்பிக்கொண்டு, ஆத்து பெரியவாளை ஸேவித்துவிட்டு வந்து நடக்கவேண்டிய கர்மா பண்ண தயாரிக்கப்பட்டுள்ள மேடையில்/படியில் ஸேவித்து உட்கார வேணும்.

सर्व कर्मसु आदौ पादप्रक्षालनं द्विराचमनं च कार्यम्। तथा अवसाने च आचमनं कार्यम्।

300 ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வப்ரயோகஃ – வடுவூர் தேசிகாசார்யர்–சான்ஸ்–தமிழ்–பக்கம்–1

எல்லா கர்மாக்களிலுமே ஆரம்பத்தில் தன்னுடைய கால்களை அலம்பிக்கொண்டு இரண்டு ஆசமனம் செய்து கொள்ளவேண்டும். அவ்விதமே கர்மா முடிவிலும் இரு ஆசமனம் செய்யவேண்டும்.

शुभ कर्मसु दर्भद्वयकृतं पवित्रंच धार्यम्। ब्राह्मणानुज्ञापूर्वकं कर्म कर्तव्यम्।

சுப கர்மாக்களில் இரண்டு தர்பங்களால் செய்யப்பட்ட பவித்திரத்தை பவித்ர விரலில் தரித்து(போட்டு)க் கொள்ளவேண்டும். எல்லா க்ரியைகளையும் ப்ராஹ்மண அநுஜ்ஞை பூர்வகம் செய்வது நல்லது.

शुभानां कर्मणां सङ्कल्पात्पूर्वं आरफ्स्यमानस्य कर्मणः (कर्मणांवा) अविघ्नेनपरिसमाप्तये

विष्वक्सेनं समाराध्य सङ्कल्पात्परं तत्प्रसादश्च स्वीकर्तव्यः।

சுப கர்ம அநுஷ்டானத்தில் ஸங்கல்பத்திற்கு முன்னதாக நிர்விக்னமாக முடிவடைவதற்காக விஷ்வக்ஸேந ஆராதனம் செய்துகொண்டு ஸங்கல்பம் முடிந்ததும் விஷ்வக்ஸேந ப்ராஸாதம் ஸ்வீகரித்துக்ககொள்ளவேண்டும்.

## அநுஜ்ஞை

சுப காரியங்களை ஆரம்பிக்கும்போது அந்தக் கர்மாவின் உத்தேசம் என்ன, யாருக்காக பண்ணப்படுகிறது என்பன போன்ற விஷயங்களை ஸபையில் அனுபவம் உள்ள வயது முதிர்ந்த, பெரியவர்களிடமும், வைதிகர்களிடமும் முடிந்த தக்ஷிணையை ஸமர்ப்பித்து, இந்தக் கர்மாவை அநுஷ்டிக்க அடியேனுக்கு யோக்யதை இருப்பதாக பெரியவர்கள் அநுக்ரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதே அனுஜ்ஞை ஆகும்.

உதாராணமாக உபநயன அநுஜ்ஞை:

..... நக்ஷத்ரே ....ராசௌ ஜாதஸ்ய, .......கோத்ரஸ்ய ...... சர்மண: மம குமாரஸ்ய ச்ரௌத ஸ்மார்த்த விதி விஹித நித்ய கர்ம அநுஷ்டான யோக்யதா ஸித்யர்த்தம், ப்ரஹ்ம தேஜ: அபிவ்ருத்யர்த்தம் யஜ்ஞோபவீதம் தாரயிதும் யோக்யதா ஸித்திம் அநுக்ரஹாண.

அநுஜ்ஞை பண்ணும்போது கையில் ஒரு தாம்பாளத்தில்,

தாம்பூலம், புஷ்பம், தக்ஷிணை இவைகளை வைத்துக்கொண்டு மங்கள வாத்யம் முழக்கத்துடன் செய்வது வழக்கம்.

## விஷ்வக்ஸேந ஆராதனம்

இரண்டு தர்ப்ப ஆஸனம், 2-தர்ப்ப பவித்ரம், 2-தர்பங்கள் விரலில் இடுக்கிக்கொண்டு, ப்ராணாயாமம் செய்து "ததேவ லக்னம் ஸுதிநம்ததேவ தாராபலம் சந்த்ரபலம்ததேவ வித்யாபலம் தைவபலம் ததேவ லக்ஷ்மீபதே: அங்க்ரியுகம் ஸ்மராமி, ஓம் அஸ்மத் குருப்யோ நம: ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: ..... சுக்லாம்பரதரம் விஷ்ணும் ....... யஸ்யத்விரத வக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்சதம் விக்னம் நிக்நந்தி சததம் விஷ்வக்ஸேநம் தமாஶ்ரயே. கரிஷ்யமாணஸ்ய கர்மண: நிர்விக்நேந பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ விஷ்வக்ஸேந ஆராதனம் கரிஷ்யே, ஆதௌ விஷ்வக்ஸேந ஆராதனம் கரிஷ்யே" என்று 2தரம் சொல்லி இடுக்கு தர்ப்பங்களை வடக்கே சேர்க்கவும். தாம்பாளத்தில் இரண்டு தர்ப்பத்தால் செய்த, ஆயாமதம் சேர்த்து அதில் "யஸ்யத்விரத வக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்சதம் விக்னம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேனம் தமாஶ்ரயே, அஸ்மிந்கூர்சே ஸபரிவாரம் விஷ்வக்ஸேநம் த்யாயாமி ஆவாஹயாமி" என்று கூறி, இரண்டு தர்ப்பங்களை "ஆஸனம் ஸமர்ப்பயாமி" என்று சேர்க்கிறது. "பாதயோ: பாத்யம் ஸமர்ப்பயாமி" என்று கூர்ச்ச நுனியால் தீர்த்தம் எடுத்து தாம்பாளத்தில் ஆவாஹனம் செய்திருக்கிற விஷ்வக்ஸேனருக்குக் காண்பித்து வேறு ஒரு பாத்திரத்தில் ஜலம் சேர்க்கிறது. "அர்க்யம் ஸமர்ப்பயாமி" (முன்போல தீர்த்தம் காண்பித்து அருகிலுள்ள கிண்ணத்தில் சேர்க்கவும்) "ஆசமனம் ஸமர்ப்பயாமி ஸ்நாபயாமி, ஸ்நாநந்தரம் ஆசமனம் ஸமர்ப்பயாமி" "வஸ்த்ரார்த்தம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி" சிறிது அக்ஷதை சேர்க்கிறது, "கந்தாந்தாராயாமி" (என்று கெட்டி சந்தனம் சேர்க்கிறது) "புஷ்பாணி ஸமர்ப்பயாமி" என்று மாலைகளையும், புஷ்பங்களையும் சேர்க்க வேண்டியது. "ஏதே கந்தாக்ஷத புஷ்ப துாபதீப உத்தரீய ஆபரணாதி

அத்யலங்காரா: ஸர்பேவாபசாரா: ஸர்வோபசாராந் ஸமர்ப்பயாமி" என்று ஹோபனாக்ஷதை சேர்க்கவும். "ஓம் பூர்புவஸ்ஸுவ:" என்று வெல்லம் அல்லது பழம் இதை ப்ரோக்ஷித்து "ஸத்யம்துவர்த்தேன பரிஷிஞ்சாமி, அமிர்தோபஸ்தரணமஸி, ப்ராணாய ஸ்வாஹா: அபானாய ஸ்வாஹா, வ்யானாய ஸ்வாஹா, உதானாய ஸ்வாஹா, ஸமானாய ஸ்வாஹா, ப்ரம்ஹணே ஸ்வாஹா, விஷ்வக்ஸே நாய நம: கதலீபலம் (வாழைப்பழம் அல்லது) குளோபகாரம் (வெல்லம்) ஸமர்ப்பயாமி, அமிர்தாபிதாநமஸி, ஆசமனீயம் ஸமர்ப்பயாமி, ஓம் பூர்புவஸ்ஸுவ:" என்று வெற்றிலை பாக்குகளை ப்ரோக்ஷித்து "பூகீபல ஸமாயுக்த்தம் தாம்பூலம் ப்ரதிக்ருக்யதாம் கற்பூர தாம்பூலம் ஸமர்ப்பயாமி, ஸுவர்ண புஷ்ப்பம் ஸமர்ப்பயாமி, மந்த்ர புஷ்ப்பம் ஸமர்ப்பயாமி", என்று அக்ஷதையை சேர்க்கிறது. "ஸர்வோபசாராந் ஸமர்ப்பயாமி".

இரண்டு தர்ப்பத்தை பவித்திர விரலில் இடுக்கிக்கொண்டு "ஸ்ரீ கோவிந்தேத்யாதி - சுபதிதௌ ஸ்ரீ பகவதாக்ஞயா பகவத் கைங்கர்யம்/ ஸ்ரீமந்நாராயண ப்ரீத்யர்த்தம் ........................... கரிஷ்யே. என்று (2 தரம் அந்த அந்த கர்மாக்களைச் சொல்லி) இடுக்கு தர்ப்பத்தை வடபுறம் சேர்த்து விடவும்.

கையில் சிறிது அக்ஷதை எடுத்துக்கொண்டு, "யஸ்யத் விரத வக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்சதம், விக்நம் நிக்நந்தி சததம் விஷ்வக்ஸேநம் தமாச்ரயே அஸ்மாத் கூர்ச்சாத் ஸபரிவாரம் விஷ்வக்ஸேனம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி" என்று கூர்சத்தின்மேல் சேர்க்கவேண்டியது.

"ஹோபநார்தே க்ஷேமாய புந: ஆகமநாயச" என்று சொல்லவும். கூர்ச்சத்தில் சேர்த்த சந்தனத்தை, சந்தன பேலாவில் சேர்த்துக் கரைத்து, பெரியோர்களுக்கு சந்தனம் கொடுத்து, பவித்திரத்தை கழற்றி காதில் வைத்துக்கொள்ளச் சொல்லி, (புத்ரர்கள், புத்ரிகள் படியில் உட்கார்ந்தவர்களுக்கு கொடுத்து, பத்னிக்கு கொடுத்து, பிறகு புருஷன் பூசிக்கொள்ளவேண்டியது. (எதையும் தெற்கில் ஆரம்பித்து வடக்கில் முடிக்கவேண்டும் என்கிற ஸம்பிரதாயம்)

ஆயாமதத்தை முடிச்சை அவிழ்த்துப்போட்டுவிட்டு, புஷ்பம் மாலைகளை தரிக்கச்செய்து பவித்திரத்தை போட்டுக்கச்சொல்லி மேற்கேயிருந்து கிழக்கில் சோபனாக்ஷதையை பெரியோர்களுக்கு கொடுத்து தம்பதிகளின்மீது சேர்க்கச்சொல்லவும். "ருத்யாஸ்ம ஹவ்யைர் நமஸோபஸத்ய, மித்ரம்தேவம், மித்ரதேயந்நோஅஸ்து அநூராதாந் ஹவிஷாவர்த்தயந்த: ஶதம்ஜீவேமசரதஸ்ஸவீரா:" என்ற பஞ்சாதியுடன் "விஷ்வக்ஸேந ப்ரஸாத ஸித்திரஸ்து" என்று ஶோபனாக்ஷதையை தம்பதிகளின்மேல் சேர்த்து அனுக்ரஹம் செய்கிறது.

"கர்மாரம்ப முஹூர்த்த: ஸுமுகூர்த்தோ அஸ்த்விதி பவந்த: மஹாந்த: அனுக்ருண்ணந்து" என்று கேட்க,

"ததாஸ்து ஸுமுஹூர்த்தோஸ்து"

என்று பெரியோர்கள் அனுக்ரஹம் செய்யவேண்டியது.

## பொது ஸங்கல்பம்

கிழக்கு முகமாக அமர்ந்து 2 ஆசமனம் பண்ணி 2 தர்பம் ஆசனம், 2 இடுக்குப் பில்லுடன் 2பில் பவித்திரம் அணிந்து ப்ராணாயாமம் பண்ணவேண்டும். கை கூப்பிக்கொண்டு-

*வடகலையார் மட்டும் :* ஓம் அஸ்மத் குருப்யோ நம: ஸ்ரீமான் வேங்கட நாதார்ய: கவிதார்கிககேசரி வேதாந்தாசார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி குருப்ய: தத்குருப்யஸ்ச்ச நமோவாகம் அதீமஹே வ்ருணீமஹேச தத்ராத்யௌ தம்பதி ஜகதாம்பதி ஸ்வசேஷ பூதேநமயா ஸ்வீயை: ஸர்வபரிச்சதை: விதாதும் ப்ரீதமாத்மாநம் தேவ:ப்ரக்ரமதே ஸ்வயம்.

*தென்கலை-வடகலை இருகலையாரும் :* சுக்லாம்பரதரம் விஷ்ணும் சஶிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்னவதனம் த்யாயேது ஸர்வவிக்னோபசாந்தயே யஸ்யத்விரத வக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்சதம் விக்னம் நிக்னந்தி சததம் விஷ்வக்ஸேனம் தமாச்ரயே. (வலது தொடையில் திறந்த இடதுகைமேல், வலது கையைக் கவிழ்த்து வைத்து)

## ஹரிரோம்தத்

ஸ்ரீ கோவிந்தா கோவிந்த கோவிந்தா அஸ்யஸ்ரீ பகவத: மஹாபுருஷஸ்ய விஷ்ணோராஜ்ஞயா ப்ரவர்த்தமானஸ்ய அத்ய ப்ரஹ்மண: த்விதீயபரார்த்தே ஸ்ரீஸ்வேதவராஹகல்பே வைவஸ்வத மன்வந்தரே கலியுகே ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதக்கண்டே சகாப்தே மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே அஸ்மின் வர்தமானே வ்யவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே

............ நாம ஸம்வத்ஸரே .......... அயனே

................ருதௌ ........... மாஸே

........... பக்ஷே ........... சுப திதௌ

............. வாஸர யுக்தாயாம் ......... நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணு யோக ஸ்ரீ விஷ்ணு கரண ஏவங்குண விசேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் .................... சுப திதௌ

(கோடிட்ட இடங்களில் அன்றைய தினத்திற்கான திதி, வார, நக்ஷத்ர நாமாக்களை நிறப்பிக்கொண்டு சொல்லவேண்டும்.)

மேற்படி ஸங்கல்பத்தை சாதாரண நாட்களில் யஜ்ஞோபவீதம் தீட்டு அல்லது பின்னமான காரணத்திற்காக மாற்றிக் கொள்வதிலிருந்து, உபாகர்மா உள்ளிட்ட அனைத்துவித சுப காரியங்களுக்கும் உபயோகித்துக் கொள்ளலாம்.

பொது ஸங்கல்பம் என்று குறிப்பிட்டுள்ள இடங்களில் இதை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

### விசேஷ ஸங்கல்பம்

மேற்படி பொது ஸங்கல்பத்தைத் தொடர்ந்து, அந்தந்த கர்மாவை செய்பவரின் நக்ஷத்ரம், ராசி, கோத்ரம், சர்மா மற்றும் எந்தப் பலனுக்காக எந்தக் கர்மா செய்யப்படுகிறது என்கிற விபரத்தைக் கூறுவது விசேஷ ஸங்கல்பமாகும்.

அடுத்த தலைப்பில், ஒரு கர்மாவுக்கு யாருக்கு தாராபலன் உள்ள நாளில் பண்ணவேண்டும் என்பது பற்றி குறிப்பிடப்படுகிறது.

**தாரா பலன்**

தாராபலன் என்பது ஒரு குறிப்பிட்ட கர்மாவை பண்ணும் ஒரு குறிப்பிட்ட நபருடைய நக்ஷத்திரத்திற்கும், கர்மா பண்ணும் நாளுக்கும் பொருத்தம் உள்ளதா அல்லது பலன் தருமா என்பதை நோக்குவதே தாரா பலன் ஆகும்.

தேவையான நபரின் பிறந்த (ஜென்ம) நக்ஷத்திரம் முதல், பண்ண உத்தேசித்துள்ள தினத்தின் நக்ஷத்திரம் வரையில் எண்ணி வந்ததொகையை 9ஆல் வகுத்துக் கண்ட மீதி 2, 4, 6, 8 அல்லது 9 இவைகளில் ஒன்றாக அமைந்தால் அன்றைய தினம் தாரா பலன் உள்ள தினம் ஆகும் என்பது பஞ்சாங்க சாஸ்திரம்.

கர்மாவில் முக்கிய நபர் யாரோ அவர் ஒருவருக்கு மட்டும் தாராபலன் பார்த்தால் போதும். ஆண், பெண் இருவர் சேர்ந்து பண்ணும் கர்மாக்களிலும் உரியவருக்கு பார்த்து மற்றவருக்கு சந்த்ராஷ்டமம் இல்லாமல் பார்த்துக்கொண்டால் போதும்.[301]

| | | |
|---|---|---|
| விவாஹத்தில் | - | மணப்பெண்ணுக்கு |
| க்ருஹப்ரவேசத்தில் | - | பெண்ணுக்கு |
| ஸீமந்தத்தில் | - | பெண்ணுக்கு |
| உபநயனத்தில் | - | உபநயன பையனுக்கு |
| காதுகுத்த | - | குழந்தைக்கு |
| வித்யாரம்பம் | - | குழந்தைக்கு |
| தொழில் தொடங்க | - | உரிமையாளருக்கு |
| சிகிச்சை | - | நோயாளிக்கு |
| ப்ரயாணம் | - | தலைமைதாங்குபவருக்கு |
| தொட்டிலிட | - | குழந்தைக்கு |
| முடியிறக்க | - | முடியிறக்கவேண்டியவருக்கு |
| வாசற்கால் வைக்க | - | வீட்டு உரிமையாளருக்கு |

---

*301 இந்து சுத்தவாக்கிய பஞ்சாங்கம் – 2003 – தமிழ்– பக்கம்–9*

**யஜ்ஞோபவீத தாரணம்**

ஆசமனம், பவித்ரம் மற்றும் ப்ராணாயாமம் இத்யாதிகளுடன் பொது ஸங்கல்பம் ...

*விசேஷ ஸங்கல்பம் :-*

ச்ரௌத ஸ்மார்த்த விதி விஹித நித்ய கர்ம அநுஷ்டான யோக்யதா ஸித்யர்த்தம் யஜ்ஞோபவீத தாரணம் கரிஷ்யே. என்று சொல்லி இடுக்கு தர்பங்களை வடக்கே போடவேண்டும்.

சுப காரியங்களில் யஜ்ஞோபவீதத்தில் மஞ்சள் அல்லது சந்தனம் தடவி பின் தரித்துக்கொள்ளவேண்டும். வைதிக கார்யங்கள் பண்ண விரலுக்கு பவித்ரம் அணிந்து கொள்வதுபோல, நித்ய கர்மங்கள், ஆச்ரம தர்மங்களை அநுஷ்டிக்க யஜ்ஞோபவீதம் உடலுக்குப் பவித்ரமாகும்.

சிரசு (தலை)யைத் தொட்டுக்கொண்டு - யஜ்ஞோபவீத தாரண மந்த்ரஸ்ய ப்ரஹ்மா ருஷி:

மூக்கைத் தொட்டுக்கொண்டு - த்ருஷ்டுப் சந்த:

மார்பைத் தொட்டுக்கொண்டு - த்ரயீ வித்யா தேவதா

இருகையாலும் மார்பின் உட்புறமாகத் திருப்பி - யஜ்ஞோபவீத தாரணே விநியோக:

யஜ்ஞோபவீதத்திலுள்ள முடிச்சின் முகம்போன்ற பகுதி கட்டைவிரல் பக்கம் பார்க்கும்படி வலது உள்ளங்கையில் வைத்து மேல்பக்கம் பார்த்துப் பிடித்துக்கொண்டு, இடது கையை யஜ்ஞோபவீதத்தின் உள்பக்கம் விட்டு கீழ்நோக்கி தளர்வின்றி பிடித்துக்கொண்டு பின் வரும் மந்திரத்தின் முடிவில் போட்டுக் கொள்ளவேண்டியது.

யஜ்ஞோபவீதம் பரமம், பவித்ரம், ப்ரஜாபதே:, யத்ஸஹஜம், புரஸ்தாத், ஆயுஷ்யம், அக்ரியம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ:

க்ருஹஸ்தர்கள் பவித்திரத்தை காதில் வைத்து ஆசமனம் பண்ணி, பவித்திரத்தைப் போட்டுக்கொண்டு ப்ராணாயாமம்

பண்ணி ஸ்ரீபகவதாஜ்ஞயா ...... க்ரஹஸ்த ஆஶ்ரமார்த்தம் த்விதீய யஜ்ஞோபவீத தாரணம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக் கொண்டு.

சிரசை (தலை)யைத் தொட்டுக்கொண்டு -

யஜ்ஞோபவீத தாரண மந்த்ரஸ்ய ப்ரஹ்மா ருஷி:

மூக்கைத் தொட்டுக்கொண்டு - த்ருஷ்டுப் சந்த:

மார்பைத் தொட்டுக்கொண்டு - த்ரயீ வித்யா தேவதா

இருகையாலும் மார்பின் உட்புறமாகத் திருப்பி -

யஜ்ஞோபவீத தாரணே விநியோக:

முன்பு போலவே யஜ்ஞோபவீதத்தை பிடித்துக்கொண்டு.

யஜ்ஞோபவீதம் பரமம், பவித்ரம், ப்ரஜாபதே:, யத்ஸஹஜம், புரஸ்தாத், ஆயுஷ்யம், அக்ரியம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ:

என்று போட்டுக்கொண்டு தொடர்ந்து வைதிக கார்யம் இல்லாத பக்ஷத்தில் பவித்திரத்தைப் பிரித்துப்போட்டு ஆசமனம் பண்ணிவிடவேண்டும்.

**ஸாத்விக த்யாகம்**

இது வடகலையாருக்கு மட்டுமே பொருந்தும். கர்மாக்களுக்கு உரியவனும், கர்மங்களை செய்பவனும் (செய்விப்பவனும்) கர்மாக்களின் பலன்களை அடைபவனும், அனைத்தும் ஸ்ரீமந்நாராயணனே என்பதை அறிந்தவனாய், கர்மாக்களின் பலன்களாலேயே ஜன்மங்கள் ஏற்பட்டு ஸம்சாரத்தில் உழல்கிறோம், கர்மாவை நமக்காகச் செய்யாமல் ஸ்ரீமந் நாராயணனின் ப்ரீதிக்காகச் செய்தால் ஸம்சாரத்திலிருந்து மிக உயர்ந்த கதியான மோக்ஷம் ஸித்திக்கும் என்பதை நன்கு உணர்ந்தவனாய் அனைத்து கர்மாக்களின் தொடக்கத்திலும் இக்கர்மாவை பகவான் என்னை கருவியாகக்கொண்டு இதை நடத்துகிறான் என்றும், முடிவில் நடத்திக்கொண்டான் என்றும் கர்மாவின் மூன்று அங்கங்களையும் பகவானுக்கு அர்பணிப்பதே ஸாத்விக த்யாகமாகும்.

பகவாநேவ ஸ்வநியாம்ய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி ஸ்வசேஷதா ஏகரஸேந அநேந ஆத்மநா கர்த்ரா ஸ்வகீயைச்ச உபகரணை: ஸ்வாராதநைக ப்ரயோஜநாய பரமபுருஷ: ஸர்வசேஷி ஸர்வேஸ்வர: ஶ்ரீய:பதி: ஸ்வசேஷ பூதமிதம் .................. கர்மாக்யம் ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே பகவாந் ஸ்வயேமவ காரயதி

என்று ஒவ்வொரு கர்மாவுக்கும் ஸங்கல்பம் செய்துகொண்ட உடனேயும் (ஆரம்பத்திலும்) ஸ்வயமேவ காரிதவாந் என்று ஒவ்வொரு கர்மாவின் முடிவிலும் சொல்லவேண்டியது.

கோடிட்ட இடத்தில் கர்மாவின் பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டியது.

குறிப்பு:- ஒவ்வொரு கர்மாவின் முடிவிலும், "காயேந வாசா மநஸே இந்த்ரியைர்வா புத்யா ஆத்மநாவா ப்ரஹ்ருதே: ஸ்வபாவாத் கரோமி யத்யத் ஸகலம்பரஸ்மை ஶ்ரீமந் நாராயணாயேதி ஸமர்ப்பயாமி" என்ற ஶ்லோகத்தினால் த்ரிகரணங்களாலும் பண்ணப்பட்ட அனைத்துக் கர்மாவின் பலனையும் க்ருஷ்ணார்ப்பணம் என்று ஸமர்ப்பிக்கும் வழக்கம் தென்னாச்சார்ய ஸம்ப்ரதாயத்தில் கடைபிடிக்கப்படுகிறது. இதன் பொருளை சரியானபடி உணர்ந்துகொண்டு இதை அநுஷ்டித்தால், ஸாத்விக த்யாகத்திற்கு இணையானது என்பதை உணரலாம்.

## க்ருஹ ப்ரீதி

பீஜதான, கர்ப்பாதான, பும்ஸவன, ஸீமந்த, யக்ஞோபவீத ப்ரஹ்மோபதேச, மாங்கல்யதாரண பாணிக்ரஹண, ஔபாஸன ஆரம்ப, தாம்பூலசர்வண என்று எந்த கர்மாவோ, அந்தக்கர்மாவின் பெயரைச்சொல்லி, முஹூர்த்த லக்னாபேக்ஷயா, ஆதித்யாதீனாம் நவானாம் க்ரஹாணாம் சுபம் ஆனுகூல்ய ஸித்யர்த்தம் யே யே கிரஹா: சுப இதர ஸ்தானேஷு ஸ்திதா: தேஷாம் கிரஹாணாம் சுபம் ஆநுகூல்ய ஸித்யர்த்தம் யே யே க்ரஹா: சுபஸ்தாபனேஷு ஸ்திதா: தேஷாம் க்ரஹாணாம் அத்யந்த அதிசய சுபபல ப்ராதாத்ருத்வ ஸித்யார்த்தம் ஆதித்யாதி நவக்ரஹ தேவதா: ப்ரீதி த்வாரா பகவத் ப்ரீத்யர்த்தம் யத்கிஞ்சித் ஹிரண்யதானம், கரிஷ்யே.

தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு தக்ஷிணை. சோபனாக்ஷதை, புஷ்பம், (கொஞ்சம் தீர்த்தம் பத்னியைக் கொண்டு சேர்க்கச் சொல்லி) ஹிரண்யகர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: அனந்த புண்ய பலதம் அதஶ்சாந்திம் ப்ரயச்சமே, ...... முஹூர்த்த லக்னாபேக்ஷயா ஆதித்யானாம் நவானாம் க்ரஹாணாம் ................ .............. நவக்ரஹ தேவதா: ப்ரீதி த்வாரா பகவத் ப்ரீத்யர்த்தம் யத்கிஞ்சித்இதம் ஹிரண்யம் ஸ்ரீவைஷ்ணவவாய துப்யமஹம் ஸம்ப்ரததே நம: நமம அச்சுத: ப்ரியதாம் என்று பணத்தையும் ஜலத்தையும் பூமியில் சேர்த்து பிறகு மேற்படி பணத்தையும் வெற்றிலை பாக்குடன் ஸ்ரீ வைஷ்ணவருக்கு கொடுக்கவும்.

இது முஹூர்த்த நேரங்களில் உள்ள எல்லாவித தோஷங்களுக்கும் பரிஹாரமாக அமையும்.

## நாந்தி

ஸ்ரீ பகவதாஜ்ஞயா பகவத் கைங்கர்யரூபம் (ஸ்ரீபகவதாக்ஞா கைங்கர்ய ரூபம், ஸ்ரீபகவதாக்ஞா ஸ்ரீமந்நாராயண ப்ரீத்யர்த்தம்) அவர் அவர்கள் ஆசரணைப்படி சொல்லிக் கொண்டு கோத்ராயா: நாம்நியா: (பாரத்வாஜ கோத்ராயா: லெக்ஷ்மி நாம்நியா:) (கணவராயிருந்தால் "மம தர்மபத்னியா:" என்றும் பிறர் ஆயின் "அஸ்யா:" என்றும்) சொல்லி (அந்தந்த கர்மாங்கம் -- கர்ப்பதான கர்மாங்கம் அப்யுதயம் ஹிரண்ய ரூபேண கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்ய வேண்டியது). கர்மாங்கபூதே, அஸ்மின் அப்யூதயே ஸத்யவசு ஸம்கிகானாம் விஸ்வேஷாம் தேவானாம் இதம் ஆஸனம் என்று இரண்டு தர்ப்பங்களை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உட்காரும் இடத்தில் சேர்க்கவும். இமே கந்தா: என்று சந்தனம் பூசிக்கச் செய்து, பிறகு ஸகலாராதனை: சோபனம் என்று சோபனாக்ஷதையை மேல் சேர்க்கவும் இதுபோல் விஶ்வேதேவர் ஸ்தானத்தில் இரண்டு பேரை வரிக்கவும்.

ப்ரபிதாமஹி, பிதாமஹி மாத்ரூணாம் (தாய் ஜீவித்திருந்தால் "ஜனகஸ்ய" என்று சேர்த்துக்கொள்ளவும்) என்று 2 பேர்,

ப்ரபிதாமஹ பிதாமஹ பித்ரூணாம் (தகப்பனார் ஜீவித்திருந்தால்

"ஜனகஸ்ய" என்று சேர்த்துக்கொள்ளவும்) என்று 2 பேர்,

ஸபத்னீக மாது: ப்ரபிதாமஹ பிதாமஹ பித்ரூணாம் என்று 2பேர்,

நாந்தி ஸம்ரக்ஷக ஸ்ரீமஹாவிஷ்ணோ: என்று ஒருவர் ஆக ஒன்பது பேருக்கும், ஒவ்வொருவருக்கும் இதம் தே ஆஸனம், இமே கந்தா: ஸகலாராதனை: சோபனம் என்றும் வரிக்க வேண்டியது.

மஹாவிஷ்ணு உள்பட 9 பேரையும் வரிக்கும் போது ஒவ்வொருவருக்கும் "கோத்ராயா: முதல் அப்யூதயே" என்கிற வரையில் சொல்லவேணும்.

தகப்பனார் - பிள்ளை, ஸகோதரர்கள் போன்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவருக்கு மேற்பட்டவர்களை வரிக்கக்கூடாது என்பது பெரியோர்கள் அபிப்பிராயம். விவாஹம் முதலிய தீக்ஷையுள்ளவர்கள், முதல்நாள் ப்ராம்ஹணார்த்தம் சாப்பிட்டவர்கள். அன்று சாப்பிடப் போகிறவர்கள், மற்றும் சாஸ்திரத்தில் விலக்கப்பட்டவர்களையும் வரிப்பது உசிதமில்லை. மாதாமகர் இருந்தால் அந்த வர்க்கம் வரணம் 2 பேரை நீக்கிவிடவேணும். பிதா, மாதா முதலானவர்கள் இருந்தால் "ஜனகஸ்ய" என்பதைச் சேர்த்தும், ஊகித்தும் சொல்ல வேண்டும்.

உபநயனத்தில் தகப்பனார் இல்லாமல் மற்றவர் உபநயனம் செய்தால், உபநயனம் செய்யும் பையன் பித்ராதிகளுக்கும், வ்ரத ஸமாவர்த்தனத்தில், தகப்பனார் இல்லாமல் அன்ய ஆசார்ய விஷயத்தில் ஆசாரியனுடைய பித்ராதிகளுக்கும், ஸீமந்தத்தில் பர்த்தா இல்லாமல் வேறு மனுஷ்யாள் செய்யும்படி நேர்ந்தால் ஸ்திரீயின் பர்த்தாவின் பித்ராதிகளுக்கும் நாந்தி செய்யவேணும் என்று பெரியோர்கள் ஸம்ப்ரதாயம்.

தாம்பாளத்தில் வெற்றிலைபாக்கு ஒன்பது பேருக்கும் தக்ஷிணை (வேஷ்டியும், இருந்தால் அதுவும்) பழம், சோபனாக்ஷதை புஷ்பம் இவைகளை எடுத்துக் கொண்டு, "ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்த்தம் ஹேமபீஜம், விபாவஸோ: அனந்த புண்ய பலதம் அதஶ்சாந்திம் ப்ரயச்சமே (பத்னியைக் கொண்டு தீர்த்தம் ப்ரோக்ஷிக்கச்செய்து) கோத்ராயா: நாம்நியா: (மம) தர்மபத்நியா:

கர்ப்பாதான கர்மாங்கபூதே அஸ்மின் அப்யூதயே ஸத்யவஸு ஸம்கிகேப்ய: விஸ்வேப்யோதேவேப்ய: ஸத்யவஸு ஸம்கிகேப்ய: விஸ்வேப்யோ தேவேப்ய:, நாந்திமுகாப்ய: ப்ரபிதாமஹி பிதாமஹி மாத்ருப்ய:, நாந்திமுகாப்ய: ப்ரபிதாமஹி பிதாமஹி மாத்ருப்ய:, நாந்திமுகேப்ய: ப்ரபிதாமஹ பிதாமஹா பித்ருப்ய:, நாந்திமுகேப்ய: ப்ரபிதாமஹ பிதாமஹா பித்ருப்ய:, நாந்தி முகேப்ய: ஸபத்நீக மாது: ப்ரபிதாமஹ மாது: பிதாமஹ மாதாமஹேப்ய: ஸபத்நீக மாது: ப்ரபிதாமஹ பிதாமஹ பித்ருப்பய:, ஸபத்நீக மாது: ப்ரபிதாமஹ பிதாமஹ பித்ருப்பய:, நாந்தி ஸம்ரக்ஷக ஸ்ரீமஹாவிஷ்ணவேச இதம் இதம் ஆக்னேயம் ஹிரண்யம் நாந்திமுக சோபந தேவதா: (ஜனகஸ்ய)பிதர: ப்ரியந்தாம்" என்று பணத்தையும் (தக்ஷிணையை), தீர்த்தத்தையும் பூமியில் சேர்க்கவும். பிறகு பணத்தைத் தொட்டுக்கொண்டு பின்வரும் மந்திரத்தைச் சொல்லவும்.

"இயம்ச வ்ருத்தி: இடாதேவஹூ: மனுர்யக்ஞநீ: ப்ருஹஸ்பதி: உக்தாமதாநி ஸகும்சிஷத் விச்வேதேவா: ஸூக்தவாச: ப்ருதிவீமாத: மாமாஹிகும்ஸீ: மதுமநுஷ்யே மதுஜனிஷ்யே மதுவக்ஷ்யாமி மதுவதிஷ்யாமி மதுமதீம் தேவேப்ய: வாசமுத்யாஸம் சுச்ரூஷேண்யாம் மனுஷ்யேப்ய: தம்மாதேவா: அவந்து சோபாயை பிதரோநுமதந்து இடயேஹி அதிதயேஹி ஸரஸ்வத்யேஹி சோபநம் சோபநம் சோபனம்" என்று சொல்லி வெற்றிலை பாக்கு தக்ஷிணை, வேஷ்டி இவைகளை விஸ்வேதேவர் முதல் ஸ்ரீமஹாவிஷ்ணு ஆகிய ஒன்பதுபேருக்கும், வரணம் செய்த க்ரமத்தில் கொடுக்கவும்.

ப்ராணாயாமம் செய்து ஸ்ரீபகவதாக்ஞயா கைங்கர்யம் ததங்கம் புண்யாகவாசனம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து கொண்டு புண்யாகவாசனம் செய்யவும். இதில் "அப்யுதய கர்மணே புண்யாகம் பவந்தோ ப்ருவந்து என்றும், அப்யுத கர்மணே ஸ்வஸ்தி பவந்தோ ப்ருவ்நது" என்றும் 2 தடவை சொல்லி "அப்யுத கர்மணே ஸ்வஸ்தி" என்று ப்ரதிவசனம்

பெரியோர்கள் சொல்லவேணும். "அப்யுதய கர்மணே ருத்திம் பவந்தோ ப்ருவந்து" என்று 2 தரம் சொல்லி, "ரித்தி:" என்று பெரியோர்கள் சொல்ல வேண்டியது. மற்றவை புண்யாகவாசனம் போல் செய்து, ஜபம் செய்து மேற்படி கும்ப ஜலத்தால் தம்பதிகளை ப்ரோக்ஷிக்கவேண்டும்.

ப்ரோக்ஷண மந்த்ரம் - "த்ருபதா திவேந் முமுசாந: ஸ்வின்ன ஸ்நாத்வி மலாதிவா பூதம் பவித்ரணேவாஜ்யம் ஆபச்சுந்தந்து மைநஸ: பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவ:" என்று ப்ரோக்ஷிக்கவேண்டும். இது எல்லா புண்யாஹவாசனத்திலும் தம்பதிகளை, குமாரர்கள், குமாரத்திகள், மற்ற த்ரவ்யங்களையும் ப்ரோக்ஷிக்க உபயோகிக்கும் மந்த்ரம்.

## அனாக்ஞாத ஆஹுதிகள்

01. அனாக்ஞாதம் யதாக்ஞாதம் யக்ஞஸ்ய க்ரியதேமிது அக்நே ததஸ்ய கல்பய த்வகும்ஹிவேத்த யதாததம் ஸ்வாஹா.

அக்நய இதம் நமம.

02. புருஷஸம்மித: யக்ஞோயக்ஞ: புருஷஸம்மித: அக்னே ததஸ்ய கல்பய த்வகும்ஹி வேத்தா யதாததம் ஸ்வாஹா।

அக்னய இதம் நமம।

03. யத்பாகத்ரா: மநஸா தீநதக்ஷாண யக்ஞஸ்ய மந்வதே மர்த்தாஸ: அக்நிஷ்டத்தோதா க்ரதுவித் விஜாநந் யஜிஷ்ட: தேவாந் ருதுச: யஜாதி ஸ்வாஹா।

அக்னய இதம் நமம।

04. த்வந்நோ அக்னே வருணஸ்ய வித்வாந் தேவஸ்ய ஹேட: அவயாஸிஸீஷ்டா: யஜிஷ்ட: வஹ்நிதம: சோசுசாந: விச்வா த்வேஷாகும்ஸி ப்ரமுமுக்தி அஸ்மத் ஸ்வாஹா।

அக்னி வருணாப்யாம் இதம் நமம.

05. ஸத்வந்ந: அக்னே அவம: பவோதீ, நேதிஷ்ட: அஸ்யா: உஷஸ: வ்யுஷ்டௌ அவயக்ஷ்வண: வருணம் ரராண: வீஹி ம்ருடீகம் ஸுஹவோ நஏதி ஸ்வாஹா

அக்னிவருணாப்யாம்இதம் நமம.

06. ஆபிர்கீர்பி: யததோந: ஊநம் ஆப்யாயய ஹரிவ: வர்த்மாந: யதா ஸ்தோத்ருப்ய: மஹிகோர்த்ரா ருஜாஸி பூயிஷ்டபாஜ: அததேஸ்யாம ஸ்வாஹா,

இந்த்ராய ஹரிவதே இதம் நமம.

07. இதம்விஷ்ணு: விசக்ரமே த்ரேதா நிததேபதம் ஸமூடமஸ்ய பாகும்ஸூரே ஸ்வாஹா,

விஷ்ணவ இதம் நமம:

08. ஓம்பூ: ஸ்வாஹா, அக்னய இதம் நமம.

09. ஓம் புவஸ்ஸ்வாஹா - வாயவ இதம் நமம.

10. ஓம் ஸுவஸ்ஸ்வாஹா - ஸூர்யாய இதம் நமம.

11. ஓம்பூர்புவஸ்ஸுவ:ஸ்வாஹா- ப்ரஜாபதய இதம் நமம.

ஸ்ரீபகவதாக்ஞயா கைங்கர்யம் கர்ம ஸாத்குண்யார்த்தம் கேசவாதி ஹோமம் கரிஷ்யே

ஓம் கேசவாய ஸ்வாஹா,

கேசவாய இதம் நமம.

ஓம் நாராயணாய ஸ்வாஹா,

நாரயணாய இதம் நமம.

ஓம் மாதவாய ஸ்வாஹா,

மாதவாய இதம் நமம.

ஓம் கோவிந்தாய ஸ்வாஹா

கோவிந்தாய இதம் நமம.

ஓம் விஷ்ணவே ஸ்வாஹா

விஷ்ணவே இதம் நமம.

ஓம் மதுசூதநாய ஸ்வாஹா

மதுசூதநாய இதம் நமம.

ஓம் த்ரிவிக்ரமாய ஸ்வாஹா

த்ரிவிக்ரமாய இதம் நமம.

ஓம் வாமநாய ஸ்வாஹா

வாமநாய இதம் நமம.

ஓம் ஸ்ரீதராய ஸ்வாஹா

ஸ்ரீதராய இதம் நமம.

ஓம் ருஷீகேஸாய ஸ்வாஹா

ருஷீகேஸாய இதம் நமம.

ஓம் பத்மநாபாய ஸ்வாஹா

பத்மநாபாய இதம் நமம.

ஓம் தாமோதராய ஸ்வாஹா

தாமோதராய இதம் நமம.

ஸர்வம் ஸ்ரீவிஷ்ணவே ஸ்வாஹா

ஸ்ரீவிஷ்ணவே பரமாத்மன இதம் நமம

என்று நெய் பாத்திரத்துடன் எடுத்துக்கொண்டு தர்வி (இலை) வழியாக எல்லா நெய்யையும் அக்னியில் சேர்க்கவேண்டும்.

இதற்குப் பூர்ணாஹூதி என்று பெயர். நெய் பாத்திரத்தையும், தர்விகளையும் வடபுறம் வைக்கவேண்டியது.

(தீர்த்தத்தைத் தொட்டு ப்ராணாயாமம்)

## ஜயாதி ஹோம மந்திரங்கள்

1. ஓம் சித்தஞ்ச ஸ்வாஹா - சித்தாய இதம் நமம

(நமம - எல்லாவற்றுக்கும் உண்டு)

2. ஓம் சித்திச்ச ஸ்வாஹா சித்யாய இதம்
3. ஓம் ஆகூதஞ்ச ஸ்வாஹா ஆகூதாய இதம்
4. ஓம் ஆகூதிஸ்ச்ச ஸ்வாஹா ஆகூத்யாய இதம்
5. ஓம் விஜ்ஞாதஞ்ச ஸ்வாஹா விஜ்ஞாதாய இதம்
6. ஓம் விஜ்ஞாநஞ்ச ஸ்வாஹா விஜ்ஞாநாய இதம்
7. ஓம் மநஸ்ச்ச ஸ்வாஹா மநஸ இதம்

8. ஓம் சக்வரீஸ்ச்ச ஸ்வாஹா சக்வரீப்ய இதம்

9. ஓம் தர்ஸஸ்ச்ச ஸ்வாஹா தர்சாய இதம்

10. ஓம் பூர்ணமாசஸ்ச்ச ஸ்வாஹா பூர்ணமாஸாய இதம்

11. ஓம் ப்ருஹஸ்ச்ச ஸ்வாஹா ப்ருஹத இதம்

12. ஓம் ரதந்தரஞ்ச ஸ்வாஹா ரதந்தராய இதம்

13. ப்ரஜாபதி: ஜயாநு இந்த்ராய விஷ்ணே ப்ராயச்சது உக்ர: ப்ரதநாஜ்யேஷு தஸ்மைவிச: ஸமநமந்த ஸர்வா: ஸஉக்ர: ஸஹிஹவ்ய: பபூவ ஸ்வாஹா ப்ரஜாபதய இதம்

14. அக்நி: பூதாநாம் அதிபதி: ஸமாவது அஸ்மிந் ப்ரஹ்மண்ணு அஸ்மிந்க்ஷத்ரே அஸ்யாம் ஆசிஷி அஸ்யாம் புரோதாயம் அஸ்மிந் கர்மண்ணு அஸ்யாம் தேவஹூத்யாம் ஸ்வாஹா

அக்நயே இதம்

15. இந்த்ர: ஜ்யேஷ்டானாம் அதிபதி: ஸமாவது ... தேவஹூத்யாம் ஸ்வாஹா இந்தராய இதம்

16. யம:ப்ரதிவ்யா: அதிபதி: ஸமாவது ....தேவஹூத்யாம் ஸ்வாஹா யமாய இதம்

17. வாயு: அந்தரிக்ஷஸ்ய அதிபதி: ஸமாவது ....தேவஹூத்யாம் ஸ்வாஹா வாயவே இதம்

18. ஸூர்யோதிவ: அதிபதி: ஸமாவது ....தேவஹூத்யாம் ஸ்வாஹா ஸூர்யாய இதம்

19. சந்த்ரமா: நக்ஷத்ராணாம் அதிபதி: ஸமாவது ....தேவஹூத்யாம் ஸ்வாஹா சந்த்ரமஸ இதம்

20. ப்ருஹஸ்பதி: ப்ரஹ்மண: அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா ப்ருஹஸ்பதய இதம்

21. மித்ர: ஸத்யானாம் அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா மித்ராய இதம்

22. வருணோபாம் அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா வருணாய இதம்

23. ஸமுத்ர: ச்ரோத்யானாம் அதிபதி: ஸமாவது ....தேவஹூத்யாம் ஸ்வாஹா ஸமுத்ராய இதம்

24. அந்நம் ஸாம்ப்ராஜ்யானாம் அதிபதி தந்மாவது ... தேவஹூத்யாம் ஸ்வாஹா அந்நாய இதம்

25. ஸோம: ஓஷதீநாம் அதிபதி: ஸமாவது ... தேவஹூத்யாம் ஸ்வாஹா ஸோமாய இதம்

26. ஸவிதா ப்ரஸவானாம் அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா ஸவித்ரே இதம்

27. ருத்ர:பசூநாம் அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா ருத்ராய பசுபதயே இதம் (அப உப ஸ்ப்ருச்ய)

28. துவஷ்டா ரூபாணாம் அதிபதி: ஸமாவது ... தேவஹூத்யாம் ஸ்வாஹா துவஷ்ட்ரே இதம்

29. விஷ்ணு: பர்வதாநாம் அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா விஷ்ணவே இதம்

30. மருத: கணாநாம் அதிபதி: ஸமாவது .... தேவஹூத்யாம் ஸ்வாஹா மருத்ப்ய: இதம்

31. பிதர: பிதாமஹா: பரேவரே ததா: ததாமஹா: இஹமாவத அஸ்மிந் ப்ரஹ்மண்ணு அஸ்மிந் க்ஷத்ரே அஸ்யாம் ஆசிஷி அஸ்யாம் புரோதாயம் அஸ்மிந் கர்மண்ணு அஸ்யாம் தேவஹூத்யாம் ஸ்வாஹா மந்த்ரோக்த தேவதாப்ய: இதம் (அப உப ஸ்பருச்ய)

32. ருதாஷாட் ருததாமா அக்நி: கந்தர்வ: தஸ்ய ஓஷதய: அப்ஸரஸ: ஊர்ஜோ நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா

அக்நயே கந்தர்வாய இதம்

33. தாப்ய: ஸ்வாஹா

ஓஷதீப்ய: அப்ஸரோப்ய: இதம்

34. ஸகும்ஹித: விஶ்வஸாமா சூர்யோ கந்தர்வ: தஸ்ய மரீசய: அப்ஸரஸ: ஆயுவோநாமா ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா

ஸூர்யாய கந்தர்வாய இதம்

35. தாப்ய: ஸ்வாஹா

மரீசிப்ய: அப்ஸரோப்ய: இதம்

36. ஸுஷும்ந: சூர்யரஸ்மி: சந்த்ரமா: கந்தர்வ: தஸ்ய நக்ஷத்ராணி அப்ஸரஸ: பேகுரயோ நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா

சந்த்ரமஸே கந்தர்வாய இதம்

37. தாப்ய: ஸ்வாஹா

நக்ஷத்ரேப்யோ அப்ஸரோப்ய: இதம்

38. புஜ்யு: ஸுபர்ண: யஜ்ஞோ கந்தர்வ: தஸ்ய தக்ஷிணா: அப்ஸரஸ: ஸ்தவா நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா யஜ்ஞாய கந்தர்வாய இதம்

39. தாப்ய: ஸ்வாஹா தக்ஷிணாப்ய: அப்ஸரோப்ய: இதம்

40. ப்ராஜாபதி: விஶ்வகர்மா மநோகாந்தர்வ: தஸ்ய ருக்ஸாமாநி அப்ஸரஸ: வஹ்நயோ நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா

மநஸே கந்தர்வாய இதம்

41. தாப்ய: ஸ்வாஹா

ருக்ஸாமேப்ய: அப்ஸரோப்ய: இதம்

42. இஷிர: விஶ்வவ்யசா: வாதோகந்தர்வ: தஸ்யாப: அப்ஸரஸ: முதாநாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா வாதாய கந்தர்வாய இதம்

43. தாப்ய: ஸ்வாஹா

அத்ப்ய: அப்ஸரோப்ய: இதம்

44. புவநஸ்யபதே யஸ்யதே உபரிக்ருஹா: இஹச ஸந: ராஸ்வா அஜ்யாநிம் ராயஸ்போஷம் ஸுவீர்யம் ஸம்வத்ஸரீணாம் ஸ்வஸ்திம் ஸ்வாஹா புவநஸ்யபத்யை இதம்

45. பரமேஷ்டி அதிபதி: ம்ருத்யு: கந்தர்வ: தஸ்ய விஶ்வம்

அப்ஸரஸ: புவோ நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா ம்ருத்யவே கந்தர்வாய இதம்

46. தாப்ய: ஸ்வாஹா

விஸ்வஸ்மை அப்ஸரோப்ய: இதம்

47. ஸுக்ஷுதி: ஸுபூதி: பர்ஜந்ய: கந்தர்வ: தஸ்ய வித்யுத: அப்ஸரஸ: ருசோ நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா பர்ஜந்யாய கந்தர்வாய இதம்

48. தாப்ய: ஸ்வாஹா

வித்யுத்ப்ய: அப்சரோப்ய: இதம்

49. தூரேஹேதி: அம்ருடய: ம்ருத்யு: கந்தர்வ: தஸ்ய ப்ரஜா: அப்ஸரஸ: பீருவோ நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா

ம்ருத்யவே கந்தர்வாய இதம்

50. தாப்ய: ஸ்வாஹா

ப்ராஜாப்யோ அப்ஸரோப்ய: இதம்

51. சாரு: க்ருபணகாசி காமோகந்தர்வ: தஸ்யாதய: அப்ஸரஸ: சோசயந்தீர் நாம ஸஇதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாது தா: இதம் ப்ரஹ்மக்ஷத்ரம் பாந்து தஸ்மை ஸ்வாஹா

காமாய கந்தர்வாய இதம்

52. தாப்ய: ஸ்வாஹா ஆதிப்ய: அப்ஸரோப்ய: இதம்

53. ஸந: புவநஸ்யபதே யஸ்யதே உபரி க்ருஹா: இஹச உரு ப்ரஹ்மணே அஸ்மை க்ஷத்ராய மஹிசர்மயஸ்ச்ச ஸ்வாஹா -

புவநஸ்யபத்யை ப்ரஹ்மணே இதம்

54. ப்ராஜாபதே நத்வது ஏதாநி அந்ய: விஶ்வா ஜாதாநி பரிதா பபூவ யத்காமாஸ்தே ஜுஹுமஹ தந்நோ அஸ்து வயக்குஸ்யாம பதய: ரயீணாம் ஸ்வாஹா ப்ரஜாபதயே இதம்

55. ஓம் பூ:ஸ்வாஹா அக்நயே இதம்

56. ஓம் புவ:ஸ்வாஹா வாயவே இதம்

57. ஓகும் ஸுவ: ஸ்வாஹா ஸூர்யாய இதம்

58. யதஸ்ய கர்மண: அத்யரீரிசம் யத்வாந்யூநம் இஹாகரம் அக்நிஷ்டது ஸ்விஷ்டக்ருது வித்வாந் ஸர்வம் ஸ்விஷ்டம் ஸுஹுதம் கரோது ஸ்வாஹா அக்நயே ஸ்விஷ்ட க்ருத இதம் நமம.

(இது ஜயாதி ஹோமம் 58 ஆஹுதிகள்)

## பலதானம்.

"ஆவயோ: உசிதகாலே ஆயுஷ்மத் ஸ்வரூப ஸுகுண ஸுபுத்ரா: அவாப்த்யர்த்தம் ஸத்ஸந்தான ஸம்ருத்யர்த்தம் பலதான தாம்பூல தான ஹிரண்ய தாநாநிச கர்த்தும் யோக்யதாஸித்திம் அனுக்ரஹாணா" என்று அநுஜ்ஞை.

ததாஸ்து என்று பெரியோர்கள் அனுக்ரஹம் பெற்று, ப்ராணாயாமம் செய்து "ஸ்ரீபகவதாக்ஞா கைங்கர்யம் ஆவயோ: உசிதகாலே ஆயஷ்மத் ஸ்வரூப ஸுகுண ஸுபுத்ரா அவாப்த்யர்த்தம் ஸத்ஸந்தான ஸம்ருத்யர்த்தம் பலதான தாம்பூலதாந ஹிரண்ய தாநாநிசகரிஷ்யே" என்று ஸங்கல்பம் செய்து கொள்ளவும். இரண்டு ஆவர்த்தி சொல்லி இடுக்கு தர்ப்பத்தை வடபுறம் சேர்க்கவேண்டும்.

இது விவாஹ சேஷ ஹோமத்திற்குப் பிறகும் கர்ப்பாதானத்துக்கு முந்தியும் செய்யவேண்டும்.

ஸ்ரீமாஹாவிஷ்ணு ஸ்வரூபஸ்ய ஸ்ரீவைஷ்ணவஸ்ய இதமாஸனம் என்று 2தர்ப்பத்தை மாமனாருக்கு ஆஸனம் என்று சேர்த்து, சந்தனம் பூசிக்கொள்ள கொடுக்கவும். ஸகலாராதனை: சோபனம் என்று சோபனாக்ஷதையை அவர்மீது சேர்க்கவேண்டும்.

தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம், தக்ஷிணை, சோபனாக்ஷதை வைத்துக்கொண்டு (ஜலம் பத்நியைக்கொண்டு சேர்க்கச் சொல்லவும்.) "பலம் மனோரதபலம் ப்ரததாதிஸதாந்ரூணாம் புத்ரபௌத்ர அபிவ்ருத்யர்த்தம் அதச்சாந்திம் ப்ரயச்சமே ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: அனந்தபுண்ய பலதம் அதச்சாந்திம் ப்ரயச்சமே இதம்பலம் ஸத்ஸந்தானஸம்ருத்திம் காம்யமானா: துப்யமஹம் ஸம்ப்ரததே நம: நமம, அச்சுதப்ரியதாம்" என்று தக்ஷிணையையும், தீர்த்தத்தையும் பூமியில் சேர்த்து, பழம், தக்ஷிணை, தாம்பூலம் இவைகளை

மாமனாருக்கு கொடுத்து தம்பதிகள் ஸேவிக்கவேண்டியது.

அவர்கள் சோபனாக்ஷதையை புதுமண தம்பதிகளின்மேல் சேர்த்து, "ஸத்ஸந்தான ஸம்ருத்தி: அஸ்து" என்று ஆசீர்வதிக்கவேண்டும். பிறகு பந்துக்களுக்கு பலதானம் இம்மாதிரி செய்கிறது வழக்கம், ஸ்த்ரீகளுக்கு மந்திரமில்லாமலும், சுமங்கலிகளுக்கு சந்தனம் கொடுத்து வெற்றிலை பாக்கு, பழம் மஞ்சள், தக்ஷிணை, புஷ்பத்துடன் கொடுக்கவேண்டும்.

## பந்தல்கால் முஹூர்த்தம்

கைகால்களை அலம்பிக்கொண்டு இரண்டு தரம் ஆசமனம் செய்து தம்பதிகள், உபநயன அல்லது விவாஹம் ஆகவேண்டிய பையன், பெண் இவர்கள் படிக்கு வந்து ஸேவிக்கவேண்டியது, அந்த ஸமயத்தில் பின்வரும் வாக்கியங்கள் சொல்லவேண்டியது.[302]

"த்ருவம் தே ராஜா வருணோ த்ருவம் தேவோ ப்ருஹஸ்பதி: ..... பர்வத இவா விசாசலி: இந்திர இவேஹ த்ருவஸ்திஷ்ட இஹராஷ்ட்ரமுதாரய, அபிதிஷ்ட ப்ருதந்யத: அதரேஸந்து சத்ரவ: இந்திர இவவ்ருத்ரஹாதிஷ்ட"

வாத்யார் கொடுக்கும் பவித்திரத்தை பவித்திர விரலில் போட்டுக் கொள்ளவேண்டும்.

சோபனாக்ஷதையை பெரியோர்களுக்கு கொடுத்து தம்பதிகளையும் குழந்தைகளையும் ஸேவிக்கச்சொல்லி, அக்ஷதையை தம்பதிகள், குழந்தைகள் தலையில் சேர்க்க வேண்டியது.

"ருத்யாஸம ஹவ்யைர்நம ஸோபஸத்ய, மித்ரம் தேவம், மித்ரதேயந்நோ அஸ்து, அநுராதாந், ஹவிஷா வர்த்தயந்த: சதம்ஜீவேம, சரத:ஸவீரா: தீர்காயுஷ்யமஸ்து"

தாம்பாளத்தில் மஞ்சள்படுத்தின தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு தக்ஷிணை இவை எடுத்துக்கொண்டு, இடது கையில் வைத்துக்கொண்டு வலது கையில் சோபனாக்ஷதையை எடுத்து, கீழ்வரும் மந்திரத்தைச் சொல்லி அக்ஷதையை ஸதஸிலுள்ளவர்களின்மீது சேர்க்கவேண்டும்.

---

302 ப்ரயோகசந்த்ரிகை–க்ருபாஸமுத்ராச்சாரி – தமிழ் – பக்கம் – 23

"ஹரி: ஓம் ................................ஸ்வீக்ருத்ய"

என்று தக்ஷிணையை பெரியோர்களுக்கு ஸமர்ப்பிக்கவும்.

"....நக்ஷத்திரே ....ராசௌ ஜாதஸ்ய (மம என்று சொல்லி குமாரஸ்ய அல்லது நக்ஷத்திரே ராசௌ ஜாதயா: மம (என்று சொல்லி) குமார்யா: உபநயன/விவாஹ கர்மாங்கம் மண்டபஸ்தாபனம் அலங்காரம்ச (அல்லது உபநயன விவாஹ முஹூர்த்த கல்யாண மண்டப நிர்மாணார்த்தம் ஸ்தம்ப ப்ரதிஷ்டாபனம்) கர்த்தும் யோக்யதா ஸித்திம் அனுக்ரஹாணா"

என்று ப்ரார்த்திக்கறது.

"ததாஸ்து யோக்யாதா ஸித்திரஸ்து" என்று ப்ரதி வசனம். படியில் உட்கார்ந்து கொண்டு விஷ்வக்ஸேந ஆராதனம் (முன்னர் விவரித்தபடி) செய்து, ஸ்தம்பபூஜை செய்யவேண்டியது.

இரண்டு (தற்போது ஒன்று) கம்பங்களுக்கு வர்ணம் அடித்து நுனியில் மாவிலை, புஷ்பம், வேஷ்டி (அல்லது ரவிக்கைத் துணி), தர்ப்பம் இவைகளைக்கட்ட வேண்டும்.

3 அல்லது 5 சுமங்கலிகளைக் கொண்டு மஞ்சள் பூசச்செய்து, சந்தனம் தடவி, குங்குமம் வைக்கச் சொல்கிறது.

க்ரஹப்ரீதி (முன் விவரிக்கப்பட்டபடி செய்து) ஸ்தம்பராஜாய நம: த்யாயாமி ஆவாஹயாமி முதல் நைவேத்யம் வரையில் செய்து ஈசான்ய திக்கில் முற்றத்தில் ஒரு காலும் (இப்போது முற்றம் இல்லாததால் வாசலில் மட்டும்) வாசலில் ஒருகாலும் "த்ருவம் தே ராஜா வருணோ த்ருவம் தேவோ ப்ருஹஸ்பதி: த்ருவந்த இந்த்ரச்சாக்னிச்ச ராஷ்ட்ரம் தாரயதாம் த்ருவம்" என்று சொல்லிக்கொண்டு நடுகிறது. ஸ்தம்பத்திற்கு கற்பூர ஹாரத்தி பண்ணி, அனைவரையும் வாசலில் கோலத்தில் கிழக்குப் பார்க்க நிற்கச் சொல்லி ஹாரத்தி எடுத்து சிதறு தேங்காய் சுற்றி உடைத்து உள்ளே வந்து பிறகு ஆசீர்வாதம், ஹாரத்தி எடுத்து படிகளையவேண்டும். படியை விட்டு எழுந்தவுடன் பெரியோர்களை ஸேவிக்க வேண்டும்.

படியைவிட்டு எழுந்திருக்கும்போது சொல்ல வேண்டிய

வேத வாக்யம்.

"ஸந்தவாஸிஞ்சாமி யஜுஷா ப்ரஜாம் ஆயுர்தனம்ச ரோஜநோ ரோஜமானஸ் சோபன சோபமான கல்யாண:".

## அக்ஷராப்யாஸம்

கைகால்கள் அலம்பிக்கொண்டு இரண்டு தரம் ஆசமனம் செய்து படியில் வந்து ஸேவித்து உட்காரவும். படியில் நெல் சேர்க்க வேண்டியது. 1 மரக்கால் இருந்தால்தான், எழுத்துக்கள், குழந்தை விரல்களால் எழுத வசதியாக இருக்கும். எழுத்துக்கள் எழுதினதை அழிக்காமல் மேலே மேலே எழுதுவது சௌகர்யம். அழித்து எழுதுவது வழக்கமில்லை.

பவித்திரம் தரித்துக்கொண்டு நமஸதஸே - ஸ்ரீ வைஷ்ணவேப்யோ நம: என்று சோபனாக்ஷதையை ஸதஸிலுள்ளவர்கள் மேல் சேர்த்து அசேஷே ஆரம்பித்து ஸ்வீக்ருத்ய வரையில் சொல்லி தக்ஷிணை ஸமர்பித்து நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய (மம) குமாரஸ்ய அக்ஷராப்யாஸம் கர்த்தும் யோக்யதா ஸித்திம் அனுக்ரஹாணா என்று ப்ரார்த்திக்கிறது.

அனுக்ரஹம் பெற்று படியில் உட்கார்ந்து விஷ்வக்ஸேன ஆராதனம் செய்து, ஸ்ரீகோவிந்தேத்யாதி சுபதிதௌ (மம) குமாரஸ்ய அக்ஷராப்யாஸம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து, விஷ்வக்ஸேநரை யதாஸ்தானம் செய்து சந்தனம், புஷ்பம் முதலியன தரித்து சோபனாக்ஷதையால் பெரியோர்கள் அனுக்ரஹம் பெறவேண்டும்.

ஓலைச் சுவடியை தான்யத்தின் மேல் (நெல்லின்மேல்) வைத்து "ஞானாநந்த மயம்தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே" என்று ஓலைச்சுவடியில் ஹயக்ரீவரை ஆவாஹனம் செய்து, ஆஸனாதி ஸர்வ உபசாரங்களும் செய்து, க்ரஹ ப்ரீதி செய்து, அக்ஷரங்களை சொல்லி வைத்து, நெல்லில் எழுதச் சொல்லி, பிறகு மறுபடியும் சொல்லச்செய்யவேண்டும்.

முதலில் ஹரி: ஓம், இந்த, மம்மோ, நந்நா, ரர்ரா, யய்யா, ணண்ணா, யய்யா, ஸிஸ்ஸி, இத்தம் என்று சொல்லுவது வழக்கம். பதத்தைச் சேர்த்துச்சொல்லுகிற வழக்கமில்லை.

அ, ஆ முதல் க்ஷ, ஷப, அம், இதி: வரையில் சொல்லிக்கொடுத்து எழுதச் செய்யவேண்டும். பிறகு ஆசீர்வாதம், ஓதியிடல், ஸ்வஸ்திவாசனம், ப்ருஹஸ்பதி ஸம்பாவனை, ஸதஸ்ஸம்பாவனை செய்து, ஹாரத்தி ஆனபிறகு பையனை பள்ளிக்கூடம் அனுப்வேண்டும். ஆசமனம், பவித்ரம் அவிழ்த்து ஆசமனம். (ஹயக்ரீவரை யதாஸ்தானம் செய்கிற வழக்கமில்லை.)

## புண்யாஹவாசனம்

கை கால் சுத்தம் செய்து இரு முறை ஆசமனம் பண்ணி படியில் கிழக்கு முகமாக உட்கார்ந்து இரண்டு இலைகளைக் கிழக்குமுகமாகப் போட்டு அதன்மேல் அரிசியைப் பரப்பி அதன்மேல் சில தர்ப்பங்களை ஆஸனமாகப் போட்டு அதன்மேல் தீர்த்தம் நிரம்பிய வெள்ளிச்சொம்பினை நடுவில் வைத்து, சொம்பினுள் மாவிலைகளைக் கொத்தாக வைத்து அதன்மேல் மஞ்சள் படுத்தியோ - சாதாரணமாகவோ தேங்காயை வைத்து, அதன்மேல் சிறிது புஷ்பம் வைத்து, சொம்பின் நான்கு புறத்திலும் சந்தனம் வைத்து அதன்மேல் சிறிது அக்ஷதையையும் இடவேண்டியது.

இரண்டு தர்பங்களால் செய்யப்பட்ட ஒரு பவித்திரத்தைப் போட்டுக்கொண்டு, இரண்டு தர்ப்பங்களை ஆசனமாகப் போட்டுக்கொண்டு இரண்டு தர்பங்களைப் பவித்திரத்துடன் இடுக்கிக்கொண்டு ப்ராணாயாமம் பண்ணவேண்டியது. முன்னர் விவரித்தபடி, அஸ்மத் குருப்யோ நம:, சுக்லாம்பரதரம் இவை ஆரம்பித்துச் சொல்லவேண்டியது. அல்லது அத்ய பூர்வோக்த ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் ................... சுப திதௌ ஸ்ரீபகவதாஜ்ஞயா......................ம் வரைச் சொல்லி,

அஸ்மின்னு க்ருஹ சுத்யர்த்தம் ஸ்தல சுத்யர்த்தம்

பாண்ட சுத்யர்த்தம் கூப சுத்யர்த்தம் மம சரீர சுத்யர்த்தம் (உடன்பிறந்தோர் இருந்தால் மம ப்ராத்ரூணாம்ஞ்ச சரீர சுத்யர்த்தம்)

[1.ச்ராத்தத்திற்கு : கோத்ரஸ்ய சர்மண: மம பிது: ப்ரத்யாப்தீக ச்ராத்த உபகரண சுத்யர்த்தம்.

2.மற்றவற்றிற்கு : அந்தந்த காரியத்தின் பெயரைச் சொல்லி உதாரணமாக அமிர்தபலவல்லி ஸமேத ஸ்ரீபக்தவத்சல ஸ்வாமிந: ஆராதன த்ரவ்ய உபகரண சுத்யர்த்தம் அல்லது ஸ்ரீவிஜயவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீமஹாஸுதர்ஸன ஹோம த்ரவ்ய உபகரண சுத்யர்த்தம் இதுபோல் தேவைக்கு ஏற்ப சொல்லிக்கொள்ளவேண்டியது]

புண்யாஹவாசனம் கரிஷ்யே.

(பெரும்பாலும் ப்ரதிவசனம் சொல்லத் தெரிந்த ஸ்வாமிகள் அருகில் இருப்பது துர்லபமான காலமாகி விட்டபடியால் ப்ரதிவசனங்கள் முடிந்தவரை தவிர்க்கப்படுகிறது.)

ஸ்வாமிந: மந: ஸமாதீயதாம்

ப்ரஸீதந்து பவந்த: பவத்பி: அநுஜ்ஞாத: புண்யாஹம் வாசயிஷ்யே. சுத்தி புண்யாகம் பவந்தோப்ருவந்து

புண்யாஹே ஸ்வஸ்தி: பவந்த: ப்ருவந்து

புண்யாஹே ருத்திம் பவந்த: ப்ருவந்து

ருத்தி ஸம்ருத்தி: சுபம் (சிவம்) கர்மாஸ்து

ப்ராஜாபதி: ப்ரீயதாம்

பகவான் ப்ரஜாபதி:

(பின்வரும் மந்திரங்களைச் சொல்லும் போது ஒவ்வொரு மந்திரத்திற்கும் கும்பத்திலிருந்து மாவிலையால் தீர்த்தம் எடுத்து ஒரு தொன்னை அல்லது வட்டிலில் சிறிது சிறிதாகச் சேர்த்துக்கொண்டு வந்து கடைசியில் சாந்தி: என்று மூன்று தரம் சொல்லி முடியும்போது மீண்டும் இந்த ஜலத்தைக் கும்பத்தினுள் இரண்டு கைகளாலும் சேர்த்துவிடவேண்டியது.)

ஓம் சாந்தி: அஸ்து துஷ்டி: அஸ்து

புஷ்டி: அஸ்து ருத்தி: அஸ்து

அவிக்நம் அஸ்து ஆயுஷ்யம் அஸ்து

ஆரோக்யம் அஸ்து

தநதாந்ய ஸம்ருத்தி: அஸ்து

கோ ப்ராம்மணேப்ய: சுபம் பவது

அரிஷ்ட நிரசனம் அஸ்து

யத்பாபம் தத் ப்ரதிஹதம் அஸ்து

ஸர்வசோபனம் அஸ்து

ஸர்வா: ஸம்பத: ஸந்து

ஓம் சாந்தி சாந்தி சாந்தி: (தீர்த்தத்தைக் கும்பத்தில் சேர்த்துவிடவேண்டியது)

ஒரு வேளை தேங்காய் மாவிலைக்கொத்து எடுத்து வெளியில் வைத்திருந்தால் மீண்டும் இவற்றை முன்போல் கும்பத்தில் வைத்துவிட்டு 7அல்லது 11 அல்லது 21 தர்பங்களால் பண்ணப்பட்ட கூர்ச்சத்தை கும்பத்தினுள் வடக்குப்பக்கமாக நுனி வெளியில் இருக்கும்படி வைக்கவேண்டியது.

கையில் கொஞ்சம் அக்ஷதை எடுத்துக்கொண்டு

"இமம்மே வருண ச்ருதீஹவம் அத்யாச்சம்ருடயா த்வாம் அவச்யு: ஆசகே தத்வாயாமி ப்ருஹ்மணா வந்தமான:

தது ஆசாஸ்தே யஜமான: ஹவிர்பி: அஹேடமான: வருணா இஹபோதி உருசகும்சமான: ஆயு: ப்ரமோக்ஷீ:"

என்ற மந்திரத்தைச் சொல்லி கும்பத்தில் அக்ஷதையைச் சேர்த்து "அஸ்மின் கும்பே ஸகல தீர்த்தாதிபதிம், புண்டரீகாக்ஷம், பகவந்தம் வருணம் த்யாயாமி ஆவாஹாயாமி" என்று சொல்லவேண்டியது.

ஆஸனம் ஸமர்ப்பயாமி அர்க்யம் ஸமர்ப்பயாமி

ஆசமனீயம் ஸமர்ப்பயாமி அக்ஷதான் ஸமர்ப்பயாமி

கந்தான் தாராயாமி புஷ்பாணி ஸமர்ப்பயாமி

தூப தீபார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி

ஆபரணார்த்தம் அலங்காரார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி

வஸ்த்ரார்த்தம் உபவீதார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி

ஸமஸ்த உபசாரார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி

அருகிலுள்ள வெத்திலை பாக்கு பழங்களை கூர்ச்சத்தால் ப்ரோக்ஷித்து அமுது செய்து வைக்கவேண்டியது.

ஓம் பூர்புவஸ்ஸுவ: என்று ப்ரோக்ஷித்து

தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்யதீமஹி த்யோயோந: ப்ரசோதயாத் என்று அபிமந்திரித்து

தேவஸவித: ப்ரஸுவா என்று தீர்த்தத்தால் ப்ரதக்ஷிணமாக சுற்றி விட்டு

அம்ருத உபஸ்தரணமஸி என்று தீர்த்தம் எடுத்து கும்பத்திற்கு காமித்து, அருகிலுள்ள பாத்திரத்தில் அல்லது தரையில் விடவேண்டியது.

பழங்களை கிள்ளியோ (அப்படியே பூர்ணமாகவோ) க்ராஸ முத்திரையினால் ப்ராணாஹுதிகள் சொல்லி அமுது பண்ணி வைக்கவேண்டியது.

ஓம் ப்ராணாய ஸ்வாஹா ஓம் அபாநாய ஸ்வாஹா

ஓம் வ்யாநாய ஸ்வாஹா ஓம் உதாநாய ஸ்வாஹா

ஓம் ஸமாநாய ஸ்வாஹா ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா

ப்ரஹ்மணிமே ஆத்மா அம்ருதத்வாயா

வருணாய நம: கதலீ பலம் நிவேதயாமி

அம்ருதாபிதானமஸி ஆசமனீயம் ஸமர்ப்பயாமி

பானீயம் ஸமர்ப்பயாமி கற்பூர தாம்பூலம் ஸமர்ப்பயாமி

ஸுவர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி

மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி

ஸமஸ்த உபசாரார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி

அருகில் புண்யாஹம் ஜபிக்க வைதீகாள் இருந்தால் (இல்லாவிட்டாலும்) கொஞ்சம்அக்ஷதையை எடுத்து அவர்கள் மேல் படும்படி புண்யாஹவாசன ஜபகர்மணி ஸர்வேப்ய: ஶ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்று இறைக்கவேண்டியது.

புண்யாஹவாசன மந்த்ரங்களை ஜபிக்கவேண்டியது.

......... ........... ஓம்சாந்தி:சாந்தி: சாந்தி:‌।

(ஜபம் ஆனதும்) சிறிது அக்ஷதையைக் கையில் எடுத்துக்கொண்டு "தத்வாயாமி ப்ரஹ்மணா வந்தமாந: தது ஆசாஸ்தே யஜமாந: ஹவிர்பி: அஹேடமாந: வருணா இஹபோதி உருசகும்ச மாந: ஆயு: ப்ரமோஷீ:" என்று சொல்லி அக்ஷதையைக் கும்பத்தில் சேர்த்து அஸ்மாது கும்பாது பகவந்தம் வருணம் யதாசுகம் யதாஸ்தாநம் ப்ரதிஷ்டாபயாமி என்று சொல்லவேண்டியது.

கும்பத்தின் மீதுள்ள தேங்காயை எடுத்து அருகில் வைத்துவிட்டு மாவிலையினால் தீர்த்தம் எடுத்து பெரியவாளைக்கொண்டு தேவஸ்யத்வா ஸவிது: ப்ரசவே .... ..... பூர்புவஸ்ஸுவோ, பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவ:। என்கிற மந்திரங்களினால் ப்ரோக்ஷித்துக்கொள்ளவேண்டியது.

த்ரவ்யங்கள் மற்றும் இடங்களை (அறைகளைப்) ப்ரோக்ஷிக்க மந்த்ரம்:

வாஸ்தோஷ்பதே .... ..... ..... சிவகும் சிவம்.

பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவ:।

## பீஜதானம்

புண்ணியாகவாசனம் ஆகி, தன்னையும் ப்ரஸவித்த ஸ்திரீ, குழந்தை, க்ரஹம் முதலியவைகளை புண்ணியாகவாசன ஜலத்தால் ப்ரோக்ஷித்த பிறகு, "ஓம் நமஸதஸே ஆரம்பித்து, ஸ்வீக்ருத்ய" வரையில் சொல்லி, (நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய அல்லது ஜாதாயா: (மம என்று சொல்லச் சொல்லி) "சிசோ: தந்மாதா பித்ரோச்ச மாதுலஸ்ய மாதாமஹாதீனாம்ச ஆயு: அபிவ்ருத்யர்த்தம் ஸர்வாரிஷ்ட சாந்தியர்த்தம்

ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம் ஸமஸ்த ரோகபீடாபரிஹாரார்த்தம் சதாயு: ஸம்பூர்ணதா ஸித்யார்த்தம் வேதோக்த தீர்காயு: அபிவிருத்தியர்த்தம் ஏபி: ஸ்ரீவைஷ்ணவைஸ்ஸஹ பீஜதானம் கர்த்தும் யோக்கியதா ஸித்திம் அநுக்ரஹாணா" "ததாஸ்து யோக்கியதாஸித்திரஸ்து" என்று ப்ரதிவசனம் பெற்று, படியில் உட்கார்ந்து கொண்டு, விஷ்வக்ஸேன ஆராதனம் செய்து, ஸ்ரீகோவிந்தேத் யாதி ஆரம்பித்து வேதோக்த்த ஆயு: அபிவிருத்யர்த்தம் வரை மேலே உள்ளபடி சொல்லி (2 முறை) "பீஜாதானம் கரிஷ்யே" என்று ஸங்கல்பம் செய்து இடுக்கு தர்பங்களை வடக்கே சேர்க்கவும். விஷ்வக்ஸேனரை யதாஸ்தானம் செய்து, பெரியோர்கள் அனுக்ரஹம் பெற்று, க்ரஹப்ரீதி தானம் செய்யவும்.

விரைக்கு வைத்திருக்கும் நெல், வெற்றிலை பாக்கு, தக்ஷிணை எல்லாம் தாம்பாளத்தில் எடுத்துக்கொண்டு,

"தன்யம் கரோதி தாதாரம் இஹலோகே பரத்ருச ப்ராணிநாம் ஜீவனம்தான்யம் அதச்சாந்திம் ப்ரயச்சமே. ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: அனந்த புண்ய பலதம் அதச்சாந்திம் ப்ரயச்சமே."

நக்ஷத்ரே ஆரம்பித்து பீஜதானம் வரையில் சொல்லி யத்கிஞ்சித் ஹிரண்யஸஹிதம் இமாநி பீஜாநி நாநாகோத்ரேப்ய: ஸ்ரீவைஷ்ணவேப்ய: தேப்ய: தேப்ய: ஸம்ப்ரததே நம: நமம அச்சுத ப்ரியதாம் என்று சொல்லி, நெல்லில் பணத்தைப் போட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டியது.

மேல் உத்திரியத்தில் மேற்படி தான்யத்தைவாங்கி பூமியில் நெல்லையும் பணத்தையும் சேர்த்து, பணத்தைத் தேடி எடுக்கிற ஸம்பிரதாயம், ஆசீர்வாதம் செய்து, வேஷ்டி ஓதிவிட்டு ஸதஸ்ஸுக்கு தாம்பூலம் தக்ஷிணை ஸமர்ப்பிவித்து, ப்ருஹஸ்பதி ஸம்பாவனை செய்து மஞ்சள் நீர் ஹாரத்தியெடுத்து படி களையவேண்டியது, ஆசமனம் பவித்திரம் முடிச்சு அவிழ்த்து

ஆசமனம் செய்து பெரியோர்களை ஸேவிக்கிறது வழக்கம்.

ப்ரஸவத்தில் சாஸ்த்ரம்:

வ்ருத்தியில் (ப்ரஸவத்தில்) தீட்டுக் கால விபரம் :

மணமாகாத ஆண்/பெண்களுக்கு எந்தத்தீட்டும் இல்லை. ஜனன தீட்டு 10 நாளுக்குப்பின் எவருக்கும் கிடையாது. குழந்தை பெண் ஆனாலும் ஸகோதரர், அப்பா, தாத்தா, கொள்தாத்தா முன்சொன்னோரின் ஸகோதரர்கள், அவர்களின் மனைவிகள் உள்ளிட்ட அனைவருக்கும் 10 நாள் தீட்டு.

குழந்தையின் தாயைப் பெற்றோருக்கு 3 நாள் தீட்டு.

ப்ரஸவித்த ஸ்த்ரீக்கு புருஷப்ரஜைக்கு 30வது நாளிலும், ஸ்த்ரீ ப்ரஜைக்கு 40 நாளிலும் பஞ்சகவ்யம் சேர்த்துக் கொடுத்து பெருமாளுக்கு திருவாராதனம் செய்து, பெருமாள் தீர்த்தம் ஆசாரியன் பாதுகை அல்லது பெரியோர்கள் ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்துக்கொடுத்து, பாண்டஸ்பர்சம் (சட்டி தொடுகிறது) செய்துவைப்பது பெரியோர்கள் ஸம்ப்ரதாயம். அதுவரையில் ப்ரஸவித்தவள் தளிகைசெய்யக்கூடாது. பிறருக்கு எதுவும் கொடுக்கக்கூடாது. அவர்களுக்கு மேற்படி காலம் வரையில் ப்ரஸவ தீட்டு உண்டு.

## உதகசாந்தி

வெள்ளி அல்லது செப்புக்குடம், (மற்ற குடம் உசிதம் இல்லை) மந்திரங்களால் 32 ஆவர்த்தி சுத்தி செய்து, ஜலத்தை துடைத்து, ஷண்ணவதி (முறுக்காத பூணல்) கொண்டு மேற்படி குடத்தின் மேல், ப்ரதக்ஷிணமாக சுற்றி, கொஞ்சம் அக்நியில் சாம்ப்ராணி போட்டு அதன் புகையை குடத்தில் க்ரஹித்து, மஞ்சள்படுத்தின தேங்காயால் குடத்தின் வாயை நன்றாக புகை வெளியில் போகாமல் மூடி, படியில் கொண்டு வந்து வைத்துக் கொள்ளவும். படியில் நெல் சேர்த்து, அதன் மேல் இரண்டு நுனியிலையை நுனி கிழக்காகச் சேர்த்து, அதன் மேல் பச்சை அமுந்திரி (அரிசி) சேர்த்து வைக்கவும்.

ஸ்நாநம், வஸ்த்ர தாரணம், புண்ட்ர தாரணம் முதலியவைகள் செய்து படிக்கு தம்பதிகள் (உபநயனமானால் குமாரனுடன்) வந்து உட்காரவும். சூரியன் உதயம் ஆன பிறகு, ஸந்த்யாவந்தனம் உபஸ்தானம் காலையில் செய்யவேண்டியதாலும் அதற்குப் பிறகு ஔபாஸனம் செய்யவேண்டியதாலும் (இவைகள் முக்கிய கர்மாவானதால்) எல்லா சுபகாரியங்களும் சூரிய உதயத்திற்கு பிறகுதான் செய்ய வேணும். தவிர, உதகசாந்தி கர்மா சாந்தி கர்மாவானதால், காப்பிகூட சாப்பிடாமல் செய்யவேண்டியது. காலையில்தான் செய்யவேண்டும் என்பது பெரியோர்கள் ஆசாரம். கைகால் அலம்பிக்கொண்டு 2 தடவை ஆசமனம் செய்து, 2 தர்ப்ப பவித்ரம் போட்டுக்கொண்டு. தாம்பாளத்தில் மங்கள த்ரவ்யங்கள் தக்ஷிணையையும் கையில் வைத்துக்கொண்டு வலது கையில் சோபனாக்ஷதையையும் எடுத்துக்கொண்டு,

ஓம்நமஸ்ஸதஸே துவங்கி - ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்று அக்ஷதையைச் சேர்த்து, ஸேவித்து அசேஷே ஆரம்பித்து ஸ்வீக்ருத்யா என்று தக்ஷிணையை ஸ்வாமிகளுக்கு ஸமர்ப்பிவித்து, "நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய அஸ்ய (மம) குமாரஸ்ய (உதகசாந்தி முதல்நாள் செய்தால் - ஸ்வ: கரிஷ்யமாண என்றும், அன்று செய்தால் கரிஷ்யமாண என்றும் சொல்லவேண்டும்) ஜாதகர்ம நாமகரண அந்நப்ராசந சௌள உபநயந கர்மணாம் முஹூர்த்தலக்ன ஸாத்குண்யார்த்தம் யேபி: ஸ்ரீவைஷ்ணவை: ஸஹ போதாயனோ உக்தப்ரகாரேண உதகசாந்தி ஜபகர்ம கர்த்தும் யோக்யதா ஸித்திம் அனுக்ரஹாணா.

[கோத்ராயா: நாம்நீயா: அஸ்யா: (மம) தர்மபத்நியா: ப்ரதம ரஜஸ: ப்ராதுர்பாவகாலே திதிவார நக்ஷத்ர லக்னயோக கரணை: யோதோஷ: ஸமஜநி தத்தோஷ பரிஹாரார்த்தம் என்று ருதுசாந்தி கல்யாணத்திலும்,

கோத்ராயா: நாம்நீயா: அஸ்யா: (மம) தர்மபத்நியா: பும்ஸவந ஸீமந்தோந்நயன கர்மணோ: லக்னஸாத்குண்யார்த்தம் என்று பும்ஸவந ஸீமந்தத்திலும்,

நக்ஷத்திரே ராசௌ ஜாதஸ்ய கோத்ரஸ்ய சர்மண: (மம) ஸபத்நீகஸ்யச ஜந்மாப்தே ஜந்மமாஸே ஜந்மநக்ஷத்ரே ஷஷ்டியப்தே அதீதே யோதோஷ: ஸமஜநி தத்தோஷ பரிஹாரார்த்தம் ஸர்வாரிஷ்ட சாந்தியர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம் சரீரே வர்த்தமான வர்த்திஷ்யமான ஸமஸ்த ரோக பீடாபரிஹாரார்த்தம் சதாயு: ஸம்பூர்ணதாஸீத்யர்த்தம் அஷ்ட ஐஸ்வர்யாவாப்த்யர்த்தம், வேதோக்த தீர்காயு: அபிவ்ருத்தியர்த்தம் என்று ஷஷ்டியப்த பூர்த்தியிலும் சொல்லிக்கொள்ளவேண்டும்.]

ததாஸ்து யோக்யதாஸித்திரஸ்து என்று அனுக்ரஹம் பெறவும்.

எப்பொழுதும் காலையிலோ அல்லது மாலையிலே ஒரு சுபகர்மா ஆரம்பித்தால், விஷ்வக்ஸேன ஆராதனம் செய்து இரண்டு தர்ப்பம் ஆஸனம், இரண்டு தர்ப்பம் இடுக்கிக்கொண்டு ஸ்ரீகோவிந்தேத்யாதி சுபதிதௌ வரை சொல்லி, அனுஜ்ஞையில் உள்ளபடி "நக்ஷத்ரே ராசௌ முதல் .... உதகசாந்தி ஜபகர்ம கரிஷ்யாமி" என்று இரண்டு முறை சொல்லி இடுக்கு தர்ப்பங்களை வடக்கே சேர்க்கவேண்டும். பிறகு விஷ்வக்ஸேந யதாஸ்தாநம் பண்ணி, பெரியவாளிடம் அக்ஷதை கொடுத்து அநுக்ரஹம் பெற்றுக்கொள்ளவும்.

இரண்டு நுனி தர்ப்பங்களை கையில் எடுத்துக்கொண்டு தர்ப்பத்தின் அடியால் மேற்படி படியிலுள்ள (அரிசி) அக்ஷதையில் நடுமத்தியில்

ப்ரஹ்ம ஜஜ்ஞானம் ப்ரதமம் புரஸ்தாத் விஸீமத: ஸுருச: வேநஆவஹ ஸபுத்நியா: உபமா: அஸ்யவிஷ்டா: ஸதச்சயோநிம் அஸதச்சவிவ:

என்று மேற்கிலிருந்து கிழக்கே கோடு கிழிக்கவும்.

நாகேஸுபர்ணம் உபயத் பதந்தம் ஹ்ருதாவேநந்த: அப்யசக்ஷ தத்வா ஹிரண்யபக்ஷம் வருணஸ்யதூதம் யமஸ்யயோநௌ சகுநம் புரண்யும்

என்று சற்றுமுன் கிழித்த கோட்டிற்க்குத் தெற்கே - வலதுபுறம்

முன்போல் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிக் கோடு கிழிக்கவும் .

ஆப்யாயஸ்வ ஸமேதுதே விஸ்வத: ஸோமவ்ருஷ்ணியம் பவாவாஜஸ்ய ஸங்கதே

என்று நடுக்கோட்டிற்கு இடதுபுறம்-வடக்கே முன்போல் மேற்கிலிருந்து கிழக்குக்கு கோடு கிழிக்கவும்.

குறிப்பு:- மேற்படி ரேகைகளை பூமியில் கிழித்து பிறகு நெல் முதலியன சேர்க்கவேண்டுமென்றும் சிலர் அபிப்ராயம். ஆனால் தற்காலத்தில் அரிசியில்தான் கிழிக்கப்படுகிறது.

யோருத்ர: அக்நௌ யோஅப்ஸு யஓஷதீஷு யோருத்ர: விஸ்வா புவனா ஆவிவேச தஸ்மைருத்ராய நமோ அஸ்து

என்று அரிசியின் மத்தியில் தெற்கிலிருந்து வடக்குக்கு ஒரு கோடு கிழிக்கவும்.

ஜலத்தை ஸ்பர்சித்துவிட்டு மறுபடியும் தர்பத்தை எடுத்துக்கொண்டு

இதம் விஷ்ணு: விசக்ரமே த்ரேதா நிததேபதம் ஸமூடமஸ்ய பாகும்ஸுரே என்று நடுவில் கிழித்த கோட்டிற்கு மேற்கே, தெற்கிலிருந்து வடக்குக்கு கோடு கிழிக்கவும்.

இந்த்ரம் விஸ்வா அவீவ்ருதந் ஸமுத்ரவ்யசஸம் கிர: ரதீதமம் ரதீநாம் வாஜாநாம் ஸத்பதிம் பதிம் என்று நடுக்கோட்டுக்குக் கிழக்கில் தெற்கேயிருந்து வடக்கே ஒரு கோடு கிழிக்கவும். கோடு கிழிக்க உபயோகித்த தர்பங்களை அக்ஷதையின் மேல் சேர்த்து தீர்த்தத்தால் ப்ரோக்ஷித்து, வடக்கே சேர்க்கவும். பிறகு சில தர்ப்பங்களை அக்ஷதையின் மத்தியில் கிழக்கு நுனியாகச் சேர்க்கவும்.

பிறகு அலங்காரம் செய்து வைத்திருக்கும் குடத்தை,

ப்ரஹ்மஜக்ஞானம் ப்ரதமம் புரஸ்த்தாத் விஸீமத: ஸுருச: வேநஆவஹ ஸபுத்நியா: உபமா: அஸ்யவிஷ்டா: ஸதச்சயோநிம் அஸதச்சவிவ: என்று அக்ஷதையின் மத்தியில் வைக்கவும். தேங்காயை கீழே வைக்கவும். ஒரு ஓட்டை (சுமார் 9 அங்குலம்) நீளமுள்ள ஆயாமதத்தை இடதுகை பவித்திர

விரல், கட்டை விரல்களால் நுனியையும், வலதுகை பவித்ரவிரல் கட்டைவிரல்களால், அடியையும் குடத்தின் வாயில் பிடித்துக்கொண்டு, கீழ்வரும் மந்த்ரத்தைச் சொல்லவும்.

இரண்டு சுமங்கலிகள், கும்பத்தின் அளவுக்குச் சமமமான அளவுள்ள மற்றொரு குடத்தில் நிரப்பி வைக்கப்பட்டுள்ள, காவேரி முதலான புண்ய நதிகளின் தீர்த்தத்தை, இருவருமாகப் பிடித்துக்கொண்டு, மெதுவாக பின்வரும் மந்த்ரம் முடியும் வரையில், கீழே சிந்தாமல் கும்பத்தின் கழுத்து அளவிற்குச், சேர்க்கவேண்டியது. தீர்த்தம் சேர்த்தபிறகு, சந்தனம், வெற்றிலைபாக்கு, பழம் பெற்றுக்கொண்டு போகவேணும்.

**கும்பத்தில் தீர்த்தம் சேர்க்க மந்த்ரம்:**

ஆபோவா இதகும்ஸர்வம் விச்வா பூதாநி ஆப: ப்ரணவ ஆப: பசவஆப: அம்ருதம் ஆப: அந்நமாப: ஸம்ராடாப: விராடாப: ஸ்வராடாப: சந்தாகும்ஸ்யாப: ஜ்யோதிகும்ஷ்யாப: யஜுகும்ஷி ஆப: ஸத்யமாப: ஸர்வா: தேவதா: ஆப: பூர்புவஸ்ஸுவராப:ஓம்.

பிறகு கையிலுள்ள ஆயாமத பவித்திரத்தால் மேற்கேயிருந்து கிழக்குக்கு மூன்று முறை தீர்த்தத்தை தள்ளும்போது கீழுள்ள மந்திரம் ஜபிக்கப்படவேண்டும்.

தேவோவ: ஸவிதா உத்புநாது அச்சித்ரேண பவித்ரேண வஸோ: ஸூர்யஸ்ய ரஸ்மிபி:

மேற்படி ஆயாமதத்தின் முடிச்சை அவிழ்த்து குடத்தில் சேர்க்கவும்.

கூர்ச்சாக்ரை: ராக்ஷஸாந் கோராந் சிந்தி கர்மவிகாதிந: த்வாமர்ப்பயாமி கும்பேஸ்மிந் ஸாபல்யம் குருகர்மஸு வ்ருக்ஷ்ராஜ ஸமுத்பூதா: சாகாயா: பல்லவத்வஜ: யுஷ்மாந் கும்பேஷு அர்ப்பயாமி ஸர்வபாப அபநுத்தயே நாளிகேர ஸமுத்பூத த்ரிணேத்ர ஹரச்ஸம்மத சிகயா துரிதம் ஸர்வம் பாபம் பீடாம்சமேநுத ஸஹிரத்நாநி தாசுஷே ஸுவாசி ஸவிதாபக:, தம்பாகம் சித்ரமீமஹே.

கங்கேச, யமுநேசைவ கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதே, ஸிந்து, காவேரி ஜலே அஸ்மிந் ஸந்நிதிம் குரு என்று கும்பத்தில் பொன் அல்லது வெள்ளி அல்லது செப்புக்காசு சேர்க்கவும்.

கும்பத்தில் வருணனை ஆவாஹனம் செய்ய:

கும்பத்தில் "இமம்வேவருண ஆரம்பித்து ப்ரமோஷீ:" மந்திரத்தால் வருணனை ஆவாஹனம் செய்து ஸர்வ உபசாரங்கரளையும் செய்யவேண்டியது.

கும்பத்தில் 28 தர்ப்பத்தால் செய்த கூர்ச்சம் சேர்க்கிறது. வாஸனை த்ரவ்யம் சேர்க்கிறது. மாவிலைக்கொத்து, தேங்காய் அதன்மேல் வைத்து புஷ்பம் சாற்றி, நாலு பக்கமும் சந்தனம் சோபனாக்ஷதை முதலியவைகளால் அலங்கரித்து, ஒரு கூர்ச்சத்தின் நுனி மேல் புறமும் அதன் அடிதர்ப்ங்கள் நாலா பக்கங்களிலும் கும்பத்தை மூடுவது போல் வைக்கவும். வேஷ்டி அல்லது புதிய வஸ்த்ரத்தைக் கும்பத்தைச் சுற்றி வைக்கவும்.

உதகசாந்தி ஜபிக்கவுள்ள ருத்விக்குகளுக்கு, இரண்டிரண்டு தர்பங்களைக் கொடுத்து, ப்ராச்யாம் திசி, தக்ஷிணஸ்யாம் திசி, ப்ரதீச்யாம் திசி, உதீச்யாம் திசி ஜபகர்தாரம் என்று அந்தந்த திசைகளைக் கூறி த்வாம் வ்ருணே என்று வரிக்கவேண்டும்.

உதகசாந்தி ஜபகர்மணி ஸர்வேப்யோ ப்ராஹ்மணேப்யோ/ ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்று சோபனாக்ஷதையை ஸ்வாமிகள் பேரில் சேர்க்கவும்.

கும்பத்தை தர்பமுஷ்டியால் தொட்டுக்கொண்டு

"ஓம்பூ: தத்ஸவிதுர்வரேண்யம்

ஓம்புவ: பர்கோ தேவஸ்யதீமஹி

ஓம்ஸுவ: தியோயோந: ப்ரசோதயாத்

ஓம்பூ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி

ஓம்புவ: தியோயோந: ப்ரசோதயாத்

ஓம்ஸுவ: தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோதேவஸ்யம்தீமஹி தியோயோந: ப்ரசோதயாத்

ஓம்பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோதயாத்”

என்று மூன்று முறை சொல்லவேண்டும்.

“உதகசாந்தி ஜபகர்ம குருத்வம்” என்று ப்ரார்த்திக்க

“வயம் குர்ம:” என்று பதில் சொல்லி, வயதிலும், அநுபவத்திலும் பெரியவர் “ஹரி:ஓம் அக்நிமீளே ப்ரோஹிதம்...” என்று உதகசாந்தி ஜபம் ஆரம்பிப்பார்.

கர்த்தா உதகசாந்தி ஜபம் தெரியாதவராயின், யோகவேஷ்டியாக போட்டு மூடிக்கொண்டு காயத்திரி ஜபம் செய்யவேண்யது. உதகசாந்தி ஜபம் தெரிந்தால் ஸ்வாமிகளுடன் ஜபிக்கலாம்.

உதகசாந்தி ஜபிக்கவேண்டிய க்ரமப்படி ஜபம் செய்யவேண்டும்.

பிறகு உத்திரியத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு கும்பத்தை தர்ப்பமுஷ்டியால் அல்லது கையினால் தொட்டுக்கொண்டு பின்வரும் மந்திரத்தை மூன்று ஆவர்த்தி ஜபிக்கவும்.

“ஓம்நமோ ப்ரம்ஹணே நமோஅஸ்து அக்நயே நம: ப்ருதிவ்யை நமஓஷதீப்ய: நமோவாசே நமோவாசஸ்பதயே நமோவிஷ்ணவே ப்ருஹதே கரோமி” - மூன்று தரம்.

வருணனுக்கு புனர்பூஜை செய்வது சிலர் பழக்கம்.

தத்வாயாமி ஆரம்பித்து ஆயு: ப்ரமோஷீ: வரையில் சொல்லி அஸ்மாத்கும்பாத் வருணம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி என்று சோபனாக்ஷதையை கும்பத்தில் சேர்க்கிறது.

“சோபனார்த்தே க்ஷேமாய புனராகமனாயச”

என்று சொல்ல வேண்டும். கும்பத்திலிருந்து கொஞ்சம் தீர்த்தம் ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும். பிறகு கும்ப ஜலத்தை மாவிலை, கூர்ச்சம் இவைகளால் ஜபம்செய்த ஸ்வாமிகளைக்கொண்டு குமாரன் மற்றும் தம்பதிகளை ப்ரோக்ஷிக்கச் செய்கிறது.

ஜலம் ப்ரோக்ஷிக்க மந்த்ரம்:

தேவஸ்யத்வாஸவிது: ப்ரஸவே அச்விநோ: பாஹுப்யாம் பூஷ்ணேஹஸ்தாப்யாம் அச்விநோர்பைஷஜ்யேந தேஜஸே ப்ரம்ஹவர்சஸா யாபிஷிஞ்சாமி

தேவஸ்யத்வாஸவிது: ப்ரஸவே அஸ்விநோர்பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம் ஸரஸ்வத்யை பைஷஜ்யேந வீர்யாயாந்நாத்யா யாபிஷிஞ்சாமி,

தேவஸ்யத்வா ஸவிது: ப்ரஸவே அஸ்விநோ: பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம் இந்த்ரஸ்யேந்த்ரியேண ச்ரியை யசஸே பலாயாபிஷிஞ்சாமி

த்ருபதாதிவேந்முமுசாந: ஸ்விந்நஸ்ஸ்நாத்வீமலாதிவ பூதம் பவித்ரேணவாஜ்யம் ஆபச்சுந்தந்துமைநஸ: பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவ: என்று ப்ரோக்ஷிக்கிறது.

தீர்த்தமாடும் இடத்தில் கோலம் போட்டு அதன் மேல் கோலம் போட்ட பலகையில் குமாரனை அல்லது பத்னியை (அல்லது தம்பதிகளை) கிழக்கு முகமாக உட்காரச்சொல்லி, கும்பஜலத்தை வடக்கே பார்க்கநின்று கொண்டு, முன்பு கும்பத்தில் தீர்த்தம் சேர்க்கும்போது சொல்லப்பட்ட மந்திரமான "ஆபோவா" மந்த்ரம் சொல்லி தீர்த்தம் கொஞ்சம் கொஞ்சமாக சேர்க்கவும். மூச்சு திணறும்படி சேர்க்கக்கூடாது.

பிறகு உலர்ந்த வேஷ்டி-புடவை உடுத்திக்கொண்டு திருமண் இட்டுக்கொண்டு படிக்கு வந்தவுடன், முன்பு எடுத்து வைத்திருந்த கும்ப ஜலத்தை, பின்வரும் மந்த்ரத்தைச் சொல்லி 1 தரமும் மந்த்ரம் இல்லாமல் இரண்டு தடவையும் கொடுத்து சாப்பிடச் செய்யவும்.

"ஆபஇது வாஉ பேஷஜீ: ஆப: அமீவசாதநீ:

ஆப: ஸர்வஸ்ய பேஷஜீ:

தாஸ்தே க்ருண்வந்து பேஷஜம்

பேஷஜம் ஏவாஸ்மை கரோதி ஸர்வமாயுரேதி".

ப்ராணாயாமம் செய்து அத்யபூர்வோக்த ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ ஸ்ரீ பகவதாக்ஞா கைங்கர்யம், உதகசாந்தி ஜபகர்ம கர்த்ருப்ய: தத்பல ஸ்வீகரணார்த்தம் யக்கிஞ்சித் ஹிரண்யதானம் கரிஷ்யே என்று சொல்லி, தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு, பழம் வகையறா தக்ஷிணை எடுத்துக்கொண்டு ஹிரண்யகர்ப்ப கர்ப்பஸ்தம் ஆரம்பித்து - அதச்சாந்திம் ப்ரயச்சமே வரையில் சொல்லி, தீர்த்தம் பத்னியைக் கொண்டு சேர்க்கச்சொல்லி, அச்விநி நக்ஷத்ரே மேஷ ராசௌ ஜாதஸ்ய (ஸ்ரீவத்ஸகோத்ரஸ்ய ஸ்ரீக்ருஷ்ணசர்மண:) அஸ்ய (மம) குமாரஸ்ய உதகசாந்தி ஜபகர்ம கர்த்ருப்ய: தத்பல ஸ்வீகரணார்த்தம் யத்கிஞ்சித் இதம் ஹிரண்யம் நாநாகோத்ரேப்ய: ஸ்ரீவைஷ்ணவேப்ய: தேப்ய: தேப்ய: துப்யமஹம் ஸம்ப்ரததே நம: நமம அச்சுத ப்ரியதாம் என்று பணத்தையும், தீர்த்தத்தையும் பூமியில் சேர்த்து, வரித்த ப்ரகாரம் ஸ்வாமிகளுக்கு தக்ஷிணை வகையறாவை ஸமர்ப்பிக்கவும்.

## அங்குரார்பணம்

சௌளம், உபநயனம், விவாஹம் இம்மூன்று கர்மாக்களில் மட்டும் அங்குரம் செய்யவேணடும். சௌளமும், உபநயனமும் சேர்ந்தாற்போலத்தான் தற்காலம் நடக்கிறது. சௌளம் தனியாகச் செய்தால் அங்குரம்செய்துதான் சௌளம் செய்யவேண்டும்.

ப்ராணாயாமம் செய்து, முன் விவரித்துள்ளபடி பொது ஸங்கல்ப விபரங்களை சுப திதௌ வரைச் சொல்லி ஸ்ரீபகவதாக்ஞயா கைங்கர்யம், நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய கோத்ரஸ்ய சர்மண: (மம) குமாரஸ்ய சௌளோபநயன கர்மாங்கம் அங்குரார்ப்பண கர்ம கரிஷ்யாமி என்றும் (விவாஹத்தில் - கோத்ரஸ்ய சர்மண: வரஸ்ய கோத்ராய: நாம்நீயா: கன்னிகாயாச்ச உபயோ: உத்வாஹகர்மாங்கம் அங்குரார்பண கர்ம கரிஷ்யாமி என்றும்), இரண்டு முறை சொல்லி ததங்கம் புண்யாகவாசனம் ச கரிஷ்யே என்று சொல்லி இடுக்கு தர்ப்பத்தை வடக்கே சேர்க்கவும்.

புண்ணியாகவாசனம் முன்னர் விவரித்துள்ளபடி செய்யவும். படியில் நெல்லில் கிழக்கு நுனியாக இரண்டு தர்ப்பம் நடுவில் சேர்த்து பிறகு வடக்கு நுனியாக இரண்டு தர்ப்பம் சேர்த்து, 5 பாலிகை மடக்குகளுக்கும் சந்தனம் பூசி, அதன் துவாரத்தில் தேங்காய்நார் கொண்டு அடைத்து, அதன்மேல் அரசு, புரசு, மாவிலைகளை கிழக்கு நுனியாக சேர்த்து, புத்து மண்ணும் சேர்த்து, சந்தனம், புஷ்பம், சோபனாக்ஷதையும் சேர்த்து, நடுவில்-1, கிழக்கில்-1, தெற்கில்-1, மேற்கில்-1, வடக்கில்-1 என குறுக்கு நெடுக்காக போடப்பட்டுள்ள தர்ப்பங்களில் வைக்கவேண்டும்.

முதல்நாளே நெல், [303]யவ (வழக்கத்தில் இல்லை) நெல், உளுந்து, எள், பயறு, கடுகு இவைகளை ஊறவைக்கவேண்டும். இவற்றைப் பசும் பாலில் கலந்து பெரிய மடக்கில் வைத்துக்கொள்ளவும். புண்ணியாகவாசன தீர்த்தத்தால் 5 பாலிகைகள் மற்றும் பாலில் கலந்த மடக்கிலுள்ள ஓஷதி த்ரவ்யம் இவைகளை ப்ரோக்ஷிக்கவும்.

கூர்ச்சத்தை வலது கையிலும், இடது கையில் சோபன அக்ஷதையையும் வைத்துக் கொள்ளவும்.

(1)நடு பாலிகயையில் ஓம் பூ: ப்ரஹ்மாணம் ஆவாஹயாமி, ஓம்புவ: ப்ரஜாபதிம் ஆவர்ஹயாமி, ஓம்ஸுவ: சதுர்முகம் ஆவாஹயாமி, ஓம்பூர்புவஸ்ஸுவ: ஹிரண்யகர்ப்பம் ஆவாஹயாமி, ப்ரம்ஹாதிப்யோ நம: ப்ரம்ஹாதீநாம் இதம் ஆஸனம்.

(2) கிழக்கிலுள்ள பாலிகையில் ஓம்பூ: இந்த்ரம் ஆவாஹயாமி, ஓம்புவ வஜ்ரிணம் ஆவாஹயாமி, ஓம்ஸுவ: சதக்ருதும் ஆவாஹயாமி, ஓம்பூர்புவஸ்ஸுவ: சசீபதீம் ஆவாஹயாமி, இந்த்ராதிப்யோநம: இந்த்ராதீனாம் இதமாஸனம்.

(3) தெற்கே உள்ள பாலிகையில், ஓம்பூ: யமம் ஆவாஹயமி, ஓம் புவ: வைவஸ்வதம் ஆவாஹயாமி, ஓம் ஸுவ: பித்ருபதிம் ஆவாஹயாமி ஓம்பூர்புவஸ்ஸுவ: தர்மராஜம்

303 யவம் என்பது வால்கோதுமை எனவும், நெல்லில் ஒருவிதம் எனவும் அபிப்ராயங்கள் தென்படுகின்றன. ஆனால் தற்காலத்தில் அந்த தான்யம் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஆவாஹயாமி, யமாதிப்யோ நம: யமாதீனாம் இதமாஸனம்

(4) மேற்கேயுள்ள பாலிகையில் ஓம்பூ: வருணம் ஆவாஹயாமி, ஓம்புவ: ப்ரசேதஸம் ஆவாஹயாமி, ஓம்ஸுவ: ஸுரூபிணம் ஆவாஹயாமி, ஓம்பூர்புவஸ்ஸுவ: அபாம்பதிம் ஆவாஹயாமி வருணாதிப்யோ நம: வருணாதீனாம் இதம் ஆஸனம்.

(5) வடக்கே உள்ள பாலிகையில் ஓம்பூ: ஸோமம் ஆவாஹயாமி, ஓம்புவ: இந்தும் ஆவாஹயாமி, ஓம்ஸுவ: நிசாகரம் ஆவாஹயாமி, ஓம்பூர்புவஸ்ஸுவ: ஓஷதீசம் ஆவாஹயாமி, ஸோமாதிப்யோ நம: ஸோமாதீனாம் இதமாஸனம்.

ப்ரம்ஹேந்த்ர யமவருண ஸோமாதிகள் ஒவ்வொருவருக்கும் ஆஸனம் முதல் எல்லாவித உபசாரங்களும் வேஷ்டி உட்பட சாத்தி (நிவேதன தாம்பூலம், ஸுவர்ண புஷ்பம், மந்த்ர புஷ்பம் முதலியவைகள் செய்து) மடக்கிலுள்ள 'பால் கலந்த ஓஷதி த்ரவ்யங்களின்மேல்'[304] கூர்ச்சத்தை வைத்துக்கொண்டு, மடக்கை எடுத்துக்கொண்டு நின்று கொண்டு பின்வரும் வாக்கியங்களைச் சொல்லவும்.

திசாம்பதீந் நமஸ்யாமி ஸர்வகாமபலப்ரதாந் குர்வந்து ஸபலம் கர்ம குர்வந்து ஸததம் சுபம்

ஓஷதீஸூக்த ஜபகர்மணி ஸர்வேப்யோ ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்று சோபனாக்ஷதையை ஸ்வாமிகள் பேரில் சேர்க்கவும்.

உட்கார்ந்து கொண்டு மடக்கிலுள்ள பாலிகை சாமான்களை கூர்ச்சத்துடன் தொட்டு கொண்டிருக்கவேண்டும்.

"யாஜாதா ஓஷதயோ ... தகும்ராஜந் பாரயாமஸி" என்கிற ஓஷதி ஸூக்தத்தை ஸ்வாமிகள் ஜபித்து முடிந்ததும், வாத்யார்

பீஜாவாபந முஹூர்த்தஸ் ஸுமுஹூர்த்தோஸ்து

இதிபவந்த: மஹாந்த: அனுக்ருண்ணந்து

என்று ப்ரார்த்திக்க "ஸுமுஹூர்த்தோஸ்து" என்று ஸ்வாமிகள் பதில் கூறுவார்கள். ஜபதக்ஷிணை கொடுக்கவேண்டும்.

---

*304 வ்ரீஹி யவ மாஷ தில முத்க ஸர்ஷபாந் மிச்ரீ க்ருத்ய, க்ஷீரேண ப்ரக்ஷாள்ய என்று ஸூத்ரம்.*

ஒருதரம் மந்திரத்துடனும் இரண்டு தடவை மந்திரமில்லாமலும், மடக்கிலுள்ள ஓஷதீ த்ரவ்யத்தை கூர்ச்ச ஸஹிதம் 5 பாலிகைகளிலும் அந்தந்த தேவதைகளுக்குரிய மந்திரத்தைச் சொல்லிச் சேர்க்கவேண்டும்.

(1) நடுபாலிகையில்

ப்ரும்ஹஜக்ஞாநம் ப்ரதமம் புரஸ்தாத் விஸீமத: ஸுருச: வேநஆவ: ஸபுத்நியா: உபாமா: அஸ்யவிஷ்டா: ஸதச்சயோநிம் அஸதச்சவிவ: பிதாவிராஜாம் ருஷபோராயீணாம் அந்தரிக்ஷம் விச்வரூப ஆவிவேச தமர்கை: அப்யர்சந்தி வத்ஸம் ப்ரம்ஹ ஸந்தம் ப்ரம்ஹணாவர்த்தயந்த: ப்ரம்ஹாதிப்யோ நம: அயம்பீஜாவபாப: ஸக்ருந்மந்தரேண த்வி:தூஷ்ணீம்.

(2) கிழக்குப்பாலிகையில்

யதஇந்த்ர பயாமஹே ததோநோ அபயம்க்ருதி மகவந்சக்தி தவதந்த ஊதயே வித்விஷோவிம்ருதோஜஹி ஸ்வஸ்திதா: விசஸ்பதி: வ்ருத்ரஹ விம்ருதோவசீ வ்ருஷேந்த்ர: புரயேதுந: ஸ்வஸ்திதா: அபயம்கர: இந்த்ராதிப்யோநம: அயந்பீஜா வாப: ஸக்ருமந்த்ரேண த்வி:தூஷ்ணீம்.

(3) தெற்குப் பாலிகையில்

யோஸ்யகௌஷட்ய ஜகத: பார்த்திவஸ்ய ஏக: இத்வசீ யமம் பங்யச்ரவ: காயா யோராஜா அநபரோத்ய: யமம்காய பங்க்யச்ரவ: யோராஜா அநபரோத்ய: யேநாப: நத்யோதந்வாநி யேநத்யௌ: ப்ருத்வீத்ருடா யமாதிப்யோ நம: அயம் பீஜாவாப: ஸக்ருந்மந்த்ரணே த்வி:தூஷ்ணீம்.

(4) மேற்குப்பாலிகையில்

இமம்மேவருண ச்ருதீஹவம் அத்யாசம்ருடய த்வாமவஸ்யு: ஆசகே தத்வயாயாமி ப்ரம்ஹணா வந்தமாந: ததாசாஸ்தே யஜமாந: ஹவிர்பி: அஹேடமாந: வருணேஹபோதி உருசகும்ஸமாந: ஆயு:ப்ரமோஷீ: வருணாதிப்யோநம: அயம்பீஜாவாப: ஸக்ருந்மந்த்ரேண த்வி:தூஷ்ணீம்.

## (5) வடக்கு பாலிகையில்

ஸோமோதேநும் ஸோம: அர்வந்தமாசும் ஸோமோவீரம் கர்மண்யம் ததாது ஸாதந்யம் விதத்யம் ஸபேயம் பிதுச்ரவணம் யோததாசதஸ்மை ஆப்யாயஸ்வ ஸமேதுதே விச்வத: ஸோமவ்ருஷ்ணியம் பவாவாஜஸ்ய ஸங்கதே ஸோமாதிப்யோநம: அயம் பீஜாவாப. ஸக்ருந்மந்த்ரேண த்வி:தூஷ்ணீம்.

பிறகு *1* முதல் *5* பாலிகைகளையும் கூர்ச்சம் கையில் வைத்துக்கொண்டு, வரிசைக்ரமமாகச் தொட்டு ஓம் ஓம் என்று சொல்லவும். பாலிகைகளை வேறு இடத்திற்கு மாற்றி, *3* அல்லது ஐந்து சுமங்கலிகளைக்கொண்டு, *1* முதல் *5* பாலிகைகளிலும் வரிசை க்ரமமாக மடக்கிலிருந்து கூர்சத்துடன் ஜலம் மும்மூன்று தடவை சேர்க்கச் செய்து, ஆத்திலுள்ள பெருமாள் சன்னதிக்கருகில் ஸ்தலசுத்தி செய்து கோலம் போட்டு அதன்மேல் கொஞ்சம் நெல் சேர்த்து இந்த *5* பாலிகைகளிலும் கொஞ்சம் மண் சேர்த்து அங்கு வைத்து *4* நாள் (கல்யாணம் முடியும் வரையில்) காலையிலும் மாலையிலும் தளிகை ஸமர்ப்பித்து, தீர்த்தம் கொஞ்சம் சேர்க்கிறது வழக்கம். மெழுகாத கூடையால் மூடி வைக்கிறதும் வழக்கம். நான்கு நாட்களுக்குப் பிறகு மேற்படி பாலிகைகளிலுள்ள பயிர்களை, நதியிலோ தடாகங்களிலோ சேர்த்துவிடுவது வழக்கம். காலியான *5* பாலிகை மடக்குகளையும் க்ருஹத்தில் ஒரு கயிற்றில் கோத்து மாட்டுக்கொட்டிலில் அல்லது வேறு தகுந்த இடத்திலோ கட்டிவைப்பது வழக்கம்.

## ப்ரதிஸரம்

ப்ரதிஸர அவசிய கர்மாக்கள்: அந்நப்ராசன, சௌள, உபநயன, பும்ஸவன, ஸீமந்த, விவாஹங்களில் கங்கணம் கட்டிக் கொள்ளும்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்நப்ராசன சௌள உபநயந பும்ஸவன ஸீமந்தம் இவற்றை வெவ்வேறு தினங்களில் தனித்தனியாகச் செய்தால், ஒவ்வொரு முறையும் ப்ரதிஸரத்தையும் தனித்தனியாகச் செய்யவேண்டும்.

ப்ராணாயாமம் செய்து, ஸ்ரீபகவதாக்ஞா கைங்கர்யம் வரையில் சொல்லிக்கொண்டு, நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய கோத்ரஸ்ய சர்மண: அஸ்ய (மம) குமாரஸ்ய கரிஷ்யமாண அன்னப்ராசன சௌள உபநயந கர்மாங்கம் ப்ரதிஸரபந்த கர்மகரிஷ்யாமி என்று இரண்டு முறை சொல்லி, இடுக்கு தர்ப்பத்தை வடக்கே சேர்க்கவும்.

பிறகு உதகசாந்தியில் சொல்லப்பட்ட முறையிலேயே உல்லேகனம் என்னும் கோடு கிழிப்பது முதல் ஜபம் ஆரம்பிப்பதற்கு முன் வரை உள்ளவற்றை அதே முறையில் செய்யவும். இங்கே "உதசாந்தி ஜபகர்ம குருத்வம்" என்பதற்கு பதில் "ப்ரதிஸரபந்த ஜபகர்ம குருத்வம்" என்பது மட்டுமே மாறுதல் ஆகும். பிறகு ஜபம் ஆரம்பிக்கவேண்டும். ஒன்பது இழையுள்ள நூல் கையில் கட்டக்கூடிய அளவு கொஞ்சம் மஞ்சள்பொடி முதலியவற்றையும் கும்பத்துக்கு அருகில் வைக்கவேண்டும்.

ப்ரதிஸர ஜப மந்த்ரங்கள்: ஸாவித்ரி, வேதாதி, க்ருணுஷ்வபாஜ:, அக்நேயஸஸ்விந், ஹி, பவமான:, வாருண்ய, ரௌத்ரா, ப்ரஹ்ம, விஷ்ணு, துர்கா, ஸ்ரீயசாபி நம உக்த மந்த்ரா:॥[305]

மேற்படி மந்த்ரங்களும் ஸூக்தங்களும் ஜபம் ஆனதும், நமோ ப்ரம்ஹண ஆரம்பித்து ப்ருஹதே கரோமி வரையிலும் 3தரம் சொல்லி, தத்வாயாமி மந்த்ரத்தால் வருணனை யதாஸ்தானம் செய்து, கும்ப தீர்த்தத்தால் ஸூத்ரம் (கங்கண சரடு) ஹஸ்தம்ச (குமாரனுடைய அல்லது தம்பதிகளுடைய கையையும்) ப்ரோக்ஷிக்கிறது.

வாமஹஸ்தே ஸூத்ரம் க்ருஹீத்வா வாஸுகிம் த்யாத்வா தக்ஷிணஹஸ்தேந (இடதுகை கட்டைவிரலால், ஸூத்ரம் (கங்கணசரடை) ஒரு நுனியை அழுத்திக்கொண்டு, வலது கை பவித்தவிரல் கட்டைவிரல் இவைகளால் மஞ்சள்பொடியை தொட்டு சரட்டினுடைய அடிமுதல் நுனிவரையில் மூன்று தடவை

305 ஆபஸ்தம்பீய பூர்வப்ரயோக: – வடுவூர் தேசிகாசார்யார் – பக்கம் –21.

தடவவேண்டும். ஒருதடவை மந்திரத்துடனும் இரண்டு தடவை மந்திரம் இல்லாமலும் தடவவேண்டும்.

கங்கண சரட்டில் மஞ்சள் தடவும்போது - "த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம் உர்வாருகமிவ பந்தநாத் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்" என்கிற மந்த்ரத்தை ஸக்ருந்மந்த்ரணே த்வி: தூஷ்ணீம் என்கிற விதியில் ஒரு முறை மட்டும் சொல்லி மற்ற இருமுறை மந்த்ரமில்லாமல் தடவவேண்டியது.

குமாரனுடைய (வது அல்லது வரனுடைய) இரண்டு கையிலும் தாம்பாளத்தில் வெற்றிலைபாக்கு, தேங்காய், பழம், தக்ஷிணை, சோபனாக்ஷதை, புஷ்பம் இவைகளை வைத்துக் குமாரனுடைய வலது கையை, ஆசார்யன் தனது வலது கையினால் தொட்டுக்கொண்டு பின்வரும் மந்த்ரத்தை ஜபிக்கவும்.

அக்நிராயுஷ்மாந் ஸவநஸ்பதிபி: ஆயுஷ்மாந் தேநத்வா ஆயுஷா ஆயுஷ்மந்தம் கரோமி, ஸோம ஆயுஷ்மாந் ஸஓஷதீபி: ஆயுஷ்மாந் தேநத்வா ஆயுஷா ஆயுஷ்மந்தம்கரோமி, யஜ்ஞ ஆயுஷ்மாந் ஸதக்ஷிணாபி: ஆயுஷ்மாந் தேநத்வா ஆயுஷா ஆயுஷ்மந்தம் கரோமி, ப்ரம்ஹாயுஷ்மத் தத்ப்ராம்ஹணை: ஆயுஷ்மத் தேநத்வா ஆயுஷா ஆயுஷ்மந்தம்கரோமி, தேவா ஆயுஷ்மந்த: தேஅம்ருதேந ஆயுஷ்மந்த: தேநத்வா ஆயுஷா ஆயுஷ்மந்தம் கரோமி என்று ஜபிக்கவும்.

பிறகு குமாரனுடைய வலதுகையில் "ப்ருஹத்ஸாம க்ஷத்ரப்ருத் வ்ருத்தவ்ருஷ்ணியம் த்ருஷ்டுபௌஜ: சுபிதம் உக்ரவீரம் இந்த்ரஸ்தோமேந பஞ்சதசேந மத்யமிதம் வாதேந ஸஹரேணரக்ஷ" என்று ஸூத்ரத்தை ப்ரதக்ஷிணமாக கட்டி மூன்று முடிச்சுகள் போடவும்.

ஆயுஷ்ய ஸூக்தம் ஜபிக்கவும்.

"யோப்ரம்ஹா..... அக்க்ஷிதம்" என்று ஜபித்து சோபனாக்ஷதையை பெரியோர்கள் குமாரன் மீது சேர்க்கவும். ரக்ஷாபந்தன முகூர்த்தஸ் ஸுமுகூர்த்தோஸ்து இதிபவந்த: மஹாந்த: அநுக்ருண்ணந்து.

"ஸுமுஹூர்த்தோஸ்து" என்று பெரியோர்கள் சொல்லவேண்டும்.

கர்மா முடிந்த பிறகு (பந்தன மந்த்ரேண) முடிச்சை அவிழ்த்து சாயம் சந்திக்கு பிறகு ஸூத்திரத்தை கீழே சேர்க்கவேண்டும் என்று க்ரந்தத்தில் இருக்கிறது. ஆனால் அதுவாக ஜீர்ணமாய் அவிழ்ந்துபோகவிடுவது வழக்கத்தில் இருக்கிறது.

## காலாதீத ப்ராயச்சித்தம்

ஜாதகர்ம நாமகர்ண அந்நப்ராசன சௌள உபநயன (5) கர்மாக்களுக்கும் கால வரையரை சொல்லப்பட்டிருக்கிறது. அவை உரிய காலத்தில் செய்தால் ப்ராயசித்தம் வேண்டியதில்லை. அனைத்தையும் சேர்த்துச் செய்கிற பழக்கமானபடியால் இந்த ப்ராயச்சித்த கர்மாவைச் செய்யவேண்டும். ஜாதகர்மா பிறந்த உடனும், நாமகரணம் 11வது தினமும், 6-மாதத்தில் அன்னப்ராசனமும், 3-வருஷத்தில் சௌளமும், கர்பாஷ்டமத்தில் உபநயமும் செய்யவேண்டும் என்று சாஸ்த்ரத்தில் உள்ளது.

"ஹரி: ஓம் நமஸதஸே என்று ஆரம்பித்து ஸர்வேப்யோ ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம:" என்று சோபனாக்ஷதையை சேர்த்து, ஸேவித்து, அசேஷே ஆரம்பித்து ஸ்வீக்ருத்ய என்று தக்ஷிணை ஸமர்ப்பிவித்து, "நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய அஸ்ய (மம) குமாரஸ்ய கரிஷ்யமாண ஜாதகர்ம நாமகர்ண அன்னப்ராசன சௌள உபநயந கர்மணாம் ஸ்வஸ்வ முக்ய காலாதீத ப்ராயச்சித்தார்த்தம் பாஹித்ரயோதச ஹோமம் கர்த்தும் யோக்யதா ஸித்திம் அநுக்ரஹாணா" என்று கேட்க, "ததாஸ்து யோக்யதா ஸித்திரஸ்து" என்று பெரியோர்கள் சொல்லவேண்டும்.

பிறகு ப்ராணாயாமம் செய்து, அத்யபூர்வோக்த ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ நக்ஷத்ரே ராசௌ (அக்வினிநக்ஷத்ரே மேஷராசௌ) ஜாதஸ்ய அஸ்ய (மம) குமாரஸ்ய ஜாதகர்ம நாமகர்ண அன்னப்ராசன சௌள உபநயந கர்மணாம் ஸ்வஸ்வமுக்ய காலாதீத ப்ராயச்சித்தார்த்தம் ப்ரஜாபத்ய க்ருச்ரப்ரத்யாம்நாயம் யத்கிஞ்சித் ஹிரண்ய தானம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து,

தாம்பாளத்தில் தக்ஷிணை முதலியவற்றை எடுத்துக்கொண்டு பத்நியைக்கொண்டு தீர்த்தம் சேர்க்கச் சொல்லி, ஹிரண்யகர்ப்ப கர்ப்பஸ்தம் ஆரம்பித்து அதச்சாந்திம் ப்ரயச்சமே வரையில் சொல்லி நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய [306]அஸ்ய (மம) குமாரஸ்ய ஜாதகர்ம நாமகர்ண அன்னப்ராசன சௌள உபநயந கர்மணாம் ஸ்வஸ்வ முக்யகாலாதீத ப்ராயச்சித்தார்த்தம் ப்ராஜாபத்ய க்ருச்ர ப்ரத்யாம்நாயம் யத்கிஞ்சித் இதம் ஹிரண்யம் நாநாகோத்ரேப்ய: ஸ்ரீவைஷ்ணவேப்ய: தேப்ய: தேப்ய: ஸம்ப்ரததே நம: நமம அச்சுத: ப்ரியதாம் என்று தத்தம் செய்து, பணத்தையும் ஜலத்தையும் பூமியில் சேர்த்து, அந்தப் பணத்தை ஸ்வாமிகளுக்கு வெற்றிலைபாக்கு தக்ஷிணையுடன் ஸமர்ப்பிக்கிறது.

முன்சொல்லியபடி லௌகீக அக்நியை ப்ரதிஷ்டை செய்து, அக்நிக்கு வடக்கில், பாத்ரஸாதன தர்ப்பத்தில் தர்வீம், ஆஜ்யஸ்தாலீம், ப்ரோக்ஷணீம், இதரதர்வீம்ச ஸாதயித்வா. ஆயாமதப்பரீமாணம் முதல் அக்நியை பரிஷேசனம் [307] செய்கிறவரையில் முன்னர் விவரித்துள்ளபடி செய்து,

1.ஓம்பூ ஸ்வாஹா அக்நயஇதம்,

2.ஓம்புவ: ஸ்வாஹா வாயவஇதம்

3.ஓம்ஸுவ: ஸ்வாஹா ஸூர்யாயஇதம்,

4.ஓம்பூர்புவஸ்ஸுவஸ் ஸ்வாஹா ப்ரஜாபதயஇதம்

5.பாஹிந: அக்நஏநஸே ஸ்வாஹா அக்நய இதம்

6.பாஹிந: விச்வவேதஸே ஸ்வாஹா விச்வவேதஸ இதம்

7.யக்ஞம்பாஹிவிபாவஸோ ஸ்வாஹா விபாவஸவ இதம்,

8.ஸர்வம்பாஹி சதக்ரதோஸ்வாஹா சதக்ருதவ இதம்:

9.பாஹிந: அக்நஏகயா பாஹ்யுத த்விதீயயா பாஹ்யூர்ஜம்

---

306 தன்னுடைய குமாரனுக்கு எனில் "மம" என்றும் வேறொருவருடைய புத்ரன் எனில் "அஸ்ய" என்றும் கூறிக்கொள்ளவேண்டும் என்பது விதி.

307 எப்போது பரிஷேசனம் செய்தாலும் அக்னியில் தீர்த்தம் படக்கூடாது என்றும், அவ்வாறு படநேர்ந்தால் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என்று விதி உள்ளது.

த்ருதீயயா பாஹி கீர்பி: திஸ்ருபி: ஊர்ஜாம்பதே பாஹி சதஸ்ருபி: வஸோ ஸ்வாஹா அக்நயஇதம்

*10.*ஓம்பூ:ஸ்வாஹா அக்நய இதம்,

*11.*ஓம்புவ: ஸ்வாஹா வாயவஇதம்,

*12.*ஓம்ஸுவ: ஸ்வாஹா ஸூர்யாய இதம்,

*13.*ஓம்பூர்புவஸ்ஸுவஸ் ஸ்வாஹா ப்ரஜாபதய இதம்

இந்த பதிமூன்று ஆஹுதிகளையும் நான்கு முறை செய்து,

த்வந்நோ அக்நே வருணஸ்ய வித்வாந் தேவஸ்ய ஹேட: அவயாஸிஸீஷ்டா: யஜிஷ்ட: வந்ஹிதம: சோசுசாந: விச்வா த்வேஷாகும்ஸி ப்ரமுமுக்தி அஸ்மத் ஸ்வாஹா அக்நீவருணாம்ப்யாம் இதம்

ஸத்வந்நோ அக்நே அவம: பவோதி நேதிஷ்ட: அஸ்யா: உஷஸ: வ்யுஷெள அவயக்ஷ்வண: வருணம் ரராண: வீஹி ம்ருடீகம் ஸுஹவோநயேதி ஸ்வாஹா அக்நீவருணாம்யாம் இதம்

த்வமக்நே அயாஸீ அயாஸந் ஹவ்யம் ஊஹிஷே அயாநோதேஹி பேஷஜம் ஸ்வாஹா அக்நயே அயஸ இதம்

உதுத்தமம் வருண பாசம் அஸ்மத் அவாதமம், விமத்யமம் ச்ரதாய அதாவயமாதித்ய வ்ரதேதவ அநாகஸ: அதிதயேஸ்யாம ஸ்வாஹா வருணாய இதம்

யேதேசதம் வருண யேஸஹஸ்ரம் யக்ஞியா: பாசா: விததா: புருத்ரா தேப்யோந: இந்த்ர: ஸவிதா உதவிஷ்ணு: விஸ்வேதேவா: முஞ்சந்து மருத: ஸ்வஸ்த்யா: ஸ்வாஹா

வருணேந்த்ரஸவித்ரு விஷ்ணு விச்வேதேவ மருத்ப்ய: இதம்

ஆகிய ஹோமங்களையும் ஒவ்வொரு முறை செய்து, தீர்த்தத்தைத் தொட்டு ப்ராணாயாமம் செய்து, ஸ்ரீபகவதாக்ஞா கைங்கர்யம் அஸ்மிந் பாஹிதரயேதச ஹோமகர்மணி மத்யே ஸம்பாவித மந்த்ர தந்த்ர ஸ்வரவர்ண விதிவிபர்யாஸ ந்யூநாதிரிக்த ப்ராயசித்தார்த்தம் ப்ராயச்சித்தாஹுதீர் ஹோஷ்யாமி என்று ஸங்கல்பம் செய்துகொண்டு,

ஓம்பூர்புவஸ்ஸுவ: ஸ்வாஹா ப்ரஜாபதய, இதம் மற்றும் அனாக்ஞாத ஆஹுதிகளையும் செய்து அக்னி பரிஷேசனம் உபஸ்தானம் செய்யவும். இந்த அக்நியை படியைவிட்டு எடுத்துவிடவும்.

❖❖❖❖❖❖

"பொதுவாக அறிந்திருக்கவேண்டியவை" என்கிற தலைப்பில் இதுவரை வழங்கப்பட்டுள்ள விஷயங்கள் பெரும்பாலும் க்ருஹ்ய ஸூத்ரத்தில் விதிக்கப்பட்டுள்ள கர்மாக்களின் அங்கமாக (ஒரு பகுதியாகச்) செய்யப்படவேண்டியவை ஆகும்.

பந்தல்கால் முஹூர்த்தம், அக்ஷராப்யாஸம் போன்றவை க்ருஹ்ய ஸூத்ரத்தில் இல்லாதவை. ஆனால் அநுஷ்டானத்தில் அதாவது பயன்பாட்டில் ஒரு அங்கம்போலவே வழக்கத்தில் உள்ளவை.

இந்த இயலில் வழங்கப்பட்டுள்ள பொதுவான விஷயங்களை, ஸூத்திரத்தில் அந்தந்தக் கர்மாவில் மிகச்சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும்.

உதாரணமாக "ஜயாதி ஹோமங்கள்" என்கிற தலைப்பில் சுமார் 58மந்திரங்கள் அடங்கிய ஹோமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஜயாதி ஹோமங்களைச் செய்யவேண்டிய இடத்தில் "ஜயாதி ப்ரதிபத்யதே" என்று கூறி "ப்ரணீதா மோக்ஷணாந்தம் க்ருத்வா" என்று கூறப்பட்டிருக்கும். இதன் பொருளாவது: 58 ஆஹுதிகளைக் கொண்ட ஜயாதிஹோமங்களைச் செய்து முடித்து, பரிதிகளை நெய் தடவி அக்நியில் சேர்ப்பது அல்லது ஜலத்தில் தோய்த்து அப்புறப்படுத்துவது என்பதைச் செய்து, ப்ராணாயாமம் செய்து, எந்தக் கர்மாவோ அந்தக் கர்மாவுக்குண்டான ப்ரதான ஹோமங்களில் கூடுதல், குறைவு, ஸ்வர வர்ண பேதங்கள் இவற்றுக்கான ப்ராயச்சித்தங்களை ஸம்ப்ரதாயப்படி பண்ணி, முடிவு பரிசேஷணத்தையும் பண்ணி, ப்ரணீதி பாத்திரத்தில்

வேறு ஜலம் சேர்த்து கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திசைகளில் தீர்த்தம் தெளித்து கிழக்கே பூமியில் சரிந்துள்ள ஜலத்தை வலது கையினால் தொட்டுக்கொண்டு "ஸமுத்ரம்வ: ... மத்பய:" என்கிற மந்த்ரம் ஜபித்து தனக்கு ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும் என்பதுவரை செய்யவேண்டிய விஷயத்தை "ப்ரணீதா மோக்ஷணாந்தம் க்ருத்வா" என்கிற சிறு ஸூத்ரத்தால் குறிப்பிடப்பட்டிருக்கும்.

எனவே இதுவரை வழங்கப்பட்டுள்ள விஷயங்களுக்கான உபயோகம் ப்ரயோகத்தில் - ஸூத்ர வாக்யமாக கொடுக்கப்பட்டிருக்கும், அவற்றை உணர்ந்து ஆங்காங்கே பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மேலும் இந்த இயலில் உள்ள விஷயங்களை ஒருவர் நன்கு கற்றுக்கொண்டு அப்யாஸம் செய்து கொண்டால் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் விதிக்கப்பட்டுள்ள அனைத்துக் கர்மாக்களையும் ப்ரயோகங்களையும் மிக எளிதாகச் செய்ய இயலும்.

# இயல் - 11

## முடிவுரை

(இவ்வியலில் - ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், மற்றும் பயன்கள் தொகுத்துச் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.)

## முடிவுரை

"அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர்
வாழ்மின் என்றென்றருள்கொடுக்கும்
படிக்கீழில்லாப் பெருமானைப்
பழனக்குருகூர் சடகோபன்
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்
திருவேங்கடத்துக்கிவை பத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து
பெரியவானுள் நிலாவுவரே!"

என்கிற ஆழ்வாரின் அருளிச்செயலுக்கிணங்க, முயன்றானை முடிக்கவைத்து அருளிய எம்பெருமானுக்கும், ஆசார்ய, ஆசிரிய, வழிகாட்டி, வழித்துணை புரிந்தோர் அனைவருக்கும் க்ருதைஜ்ஞதைகளைச் ஸமர்ப்பித்துக்கொள்கிறேன்.

"வேதாத்சாஸ்த்ரம் பரம்நாஸ்தி" - வேதத்திற்கு மிஞ்சிய சாஸ்த்ரமில்லை என்பது 'த்வைத', 'அத்வைத', 'விசிஷ்டாத்வைத' அனைத்து ஸித்தாந்திகளும் ஒப்புக்கொள்ளும் விஷயமாகும். அப்படிப்பட்ட வேதத்தைக் கொண்டு ஸித்தாந்திகள் பரமாத்மாவையும், அந்த பரமாத்மாவை அடைவதற்கான யோகங்களையும்-மார்கங்களையும் நிர்தாரணம்செய்து அருளியுள்ளனர். பேதச்ருதி, அபேதச்ருதி, கடகச்ருதி என ச்ருதிகளுக்குள் பேதத்தை அறிந்து தங்கள் தங்கள் ஸித்தாந்தங்களை நிர்ணயித்துள்ளனர். ஸித்தாந்திகளுக்குள் ஸித்தாந்தங்களில் கருத்துவேறுபாடு நிலவினாலும், பூலோகவாஸியான ஜீவாத்மா-சேதனன் பரகதியை அடையும்வரை, அதாவது இந்த பூலோகத்தில் உள்ளவரை வேதத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஸ்ம்ருதிகள் எனும் சாஸ்த்ரங்களின்படி வர்ணத்துக்கும், ஆச்ரமத்துக்கும் தக்கபடி விதிக்கப்பட்டுள்ள நித்ய, நைமித்திக

கர்மாக்களை அவசியம் அநுஷ்டித்தேயாகவேண்டும் என்பதில் மட்டும் இவர்களுக்குள் கருத்துவேறுபாடு இல்லை.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்த புருஷரான ஸ்ரீமத்ராமாநுஜர் தாம் உபஹரித்த 9 நூல்களில், ஒரு ஸ்ரீவைஷ்ணவன் தினந்தோறும் அநுஷ்டிக்க வேண்டிய நித்ய, நைமித்திக கர்மாக்களை அநுஷ்டிக்கவேண்டிய விதம்பற்றி மிகவும் விபரமாக "நித்யம்" என்ற பெயரிலேயே ஒரு நூல் அருளிச்செய்துள்ளார் என்பதைக் கொண்டே, அனைத்தையும் எம்பெருமான் வசம்விட்ட சரணாகதன்-ப்ரபந்நன் - க்ருதக்ருத்யன் ஆயினும், சரீரத்துக்கென விதிக்கப்பட்ட நித்ய கர்மாக்களை மட்டும் விடவேகூடாது என்பது மிகமிக ஊர்ஜிதம் ஆகிறது.

வர்ணாச்ரம தர்மங்களைக் கைவிட்டு, பகவத் பாகவத கைங்கர்யங்கள் எத்தனை உயர்வாகச் செய்தாலும் எம்பெருமான் அவற்றை ஏற்பதில்லை என்பதை, எத்தனையோ மஹான்கள் அநேக க்ரந்தங்களில் தெளிவுபடுத்தியுள்ளமையும், மஹாவித்வான்கள் உபந்யாஸத்தினூடே அறிவுறுத்தியிருப்பதையும் கொண்டு அறியலாம்.

ஸ்ரீஸ்வாமி தேசிகனும், 'ப்ரதானசதகம்' எனும் க்ரந்தத்தில் சேதனன் அநுஷ்டித்தே தீரவேண்டிய ஆஜ்ஞா, அநுஜ்ஞா கைங்கர்யங்களைப்பற்றி மிகமிக விரிவாகவும், தெளிவாகவும் அருளிச்செய்துள்ளார். செயல்வடிவான கைங்கர்யங்கள், அறிவு வளர்ச்சிக்கான கைங்கர்யங்கள் என இருவகையான அநுஜ்ஞா கைங்கர்யங்களில், அறிவு வளர்ச்சிக்கான அநுஜ்ஞா கைங்கர்யங்களே சிறந்தவை என்று அருளிச்செய்துள்ளார்.

எனவே அறிவுவளர்ச்சிக்கான கைங்கர்யம் செய்யும் திறனுடன் கர்ண களேபரங்களை எம்பெருமான் க்ருபைசெய்து, அதற்கான

வாய்ப்பையும், வழிகாட்டியையும், ஆசார்யர்களையும் அருளிச் செய்துள்ளமையால், இக்கைங்கர்யத்தில் அடியேன் ஈடுபடலாயிற்று.

ஸூத்ரம் என்பது ஒருவகை இலக்கியம் ஆகும். அல்ஜீப்ரா போன்ற கடினமான கணிதங்களுக்கு வழங்கப்படும் சுருக்கமான ஸூத்திரம் போலவே, மிகநீண்ட க்ரியைகளைக் கொண்ட, வைதிக கர்மாக்களின் க்ரியா க்ரமங்களை - காரிகைகளை - நளினமான ஒலிநயத்துடன், மிகஎளிதாக நினைவில் வைத்துக்கொள்ளும் வகையில் உருவாக்கப்படுவதே இதன் தனிச்சிறப்பாகும்.

ஸூத்திரங்கள் ப்ரஹ்மஸூத்ரம், கல்பஸூத்ரம், சுல்பஸூத்ரம், ச்ரௌதஸூத்ரம், தர்மஸூத்ரம், க்ருஹ்யஸூத்ரம் என பலவகைப்படும்.

“க்ருஹ” என்பதின் பொருள் வீடும் மனைவியும் ஆகும். வீட்டில் மனைவியுடன் வஸிப்பவன் க்ருஹஸ்தன் ஆவான். க்ருஹஸ்தன் அவசியம் அநுஷ்டிக்கவேண்டிய ஸம்ஸ்கார கர்மாக்கள் 40 ஆகும். இவை ஸ்ம்ருதிகளால் விதிக்கப்பட்டவை என்பதால் இவற்றுக்கு ஸ்மார்த்த கர்மாக்கள் என்று பெயர். க்ருஹஸ்தனால் க்ருஹத்தில் செய்யப்படும் ஸ்மார்த்த கர்மாக்களை தெளிவாகவும், சுருக்கமாகவும் விளக்கும் நூலே க்ருஹ்ய ஸூத்ரமாகும்.

ருக், யஜுர், ஸாமம், அதர்வம் என்கிற நான்கு வேதங்களும் அதன் சாகைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு ரிஷிகள் வெவ்வேறு க்ருஹ்ய ஸூத்ரங்களை அருளிச்செய்துள்ளனர். அவற்றில் பெரும்பான்மையினரால் அநுஷ்டிக்கப்படும் க்ருஹ்ய ஸூத்ரம் ஆபஸ்தம்ப மஹரிஷியினால் அருளிச்செய்யப்பட்ட “ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம்” ஆகும்.

இந்த "ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம்" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வெவ்வேறுபட்ட கர்மாக்களை விளக்கி எட்டு படலங்களாக ஸூத்ரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில், மிகமிக விரிவாகவும், மிகமிக நுணுக்கமாகவும் பரசீலிக்கப்பட்டு எண்ணிறந்த மஹா வித்வான்களால் நிறைய புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அவை யாவுமே ஒன்று க்ரந்தலிபியிலோ அல்லது தேவநாகரியிலோ ஸம்ஸ்க்ருத பாஷையில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் க்ரந்தம் வாஸிக்கத் தெரிந்தவர்கள் அரிதிலும் அரிதாகவே காணப்படுகின்றனர். தேவநாகரியில் வாஸிக்கத் தெரிந்தாலும், அவற்றைப் பொருள் உணர்ந்து பயன்படுத்தத் தெரிந்தோர் இல்லை. எனவே, ஸம்ஸ்க்ருதம் அறவே அறியாதோருக்கும் பயன்படும்விதத்தில், பல்வேறு விற்பன்னர்களால் விவாதிக்கப்பட்டு, எண்ணிறந்த ப்ரமாணங்களுடன் வழங்கப்பட்டுள்ள, விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ஏற்புடைய, அரிதான, நுணுக்கமான விபரங்கள் அனைத்தையும் தமிழ் மொழியில் ஆய்ந்து அளிக்கப்பட்டுள்ளதே இவ்வாய்வேட்டின் சிறப்பம்சம் ஆகும்.

இவ்வாய்வேட்டில், க்ருஹ்ய கர்மாக்களின் வகைகள், அவற்றில் பூர்வ கர்மாக்கள் மற்றும் அபர கர்மாக்களுக்கும் விதிகள் சொல்லப்பட்டு, ஐயம்திரிபற விளக்கப்பட்டுள்ளன.

அக்னி குண்டத்தை அமைப்பது, பரிஸ்தரண தர்பங்களை பரப்புவது, உபயோகிக்கும் பாத்திரங்களை சுத்தம் செய்வது போன்ற அடிப்படை விஷயங்களும், ஆஜ்ய பாகம், அக்நி முகாந்தம் என அக்னி தயாரிக்கும் முறைகளும், கன்னிகையின் லக்ஷணங்கள், வரனின் யோக்யதைகளும் விளக்கப்பட்டுள்ளன.

விவாஹத்தின் விரிவான ப்ரயோகங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆய்வேட்டின் விதிகளுக்குட்பட்டு விரிவுக்கஞ்சி, விவாஹ கர்மாக்களுக்கு மட்டும் சுருக்கமாகவும், தெளிவாகவும்

தாத்பர்யங்கள், மந்திரங்கள், மந்திரத்தின் பொருள், சில ஐதிஹ்யங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

விவாஹம், உபாகர்மா, வேத அத்யயனம் செய்பவனின் வ்ரதங்கள், உபநயனம், ஸீமந்தம் போன்ற க்ருஹ்ய கர்மாக்களில் அடங்கும் அனைத்து விஷயங்களும் மிககவனமாகப் பரிசீலிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர, மாஸி ச்ராத்தம், பார்வண ச்ராத்தம் போன்ற பித்ரு கர்மாக்களும், ஸ்தாலீபாகம், ஈசானபலி, ஸர்ப்பபலி போன்ற கர்மாக்களும், மேலும் விசேஷமாக கணவனின் அன்பைப்பெற, வ்யாபாரம் விரிவடைய, வேலைக்காரர்கள் ஓடிவிடாமல் இருக்க போன்ற பலவகை சூழ்நிலைகளுக்கேற்ற பரிஹாரங்களும் சொல்லப்பட்டுள்ளன.

“அநாகுலா” என்ற பெயரில் ஹரதத்தர் என்கிற மஹானும், “தாத்பர்ய தர்சனம்” என்ற பெயரில் ஸ்ரீசுதர்சனாசார்யார் என்கிற மஹானும் ஸம்ஸ்க்ருதத்தில் உரை அருளிச்செய்துள்ளனர். அவ்வுரைகளை மேலும் எளிமைப்படுத்தி தற்கால க்ருஹஸ்தர்களுக்கு எளிதில் புரியக்கூடிய வகையில் மேற்பார்வையாளரின் உதவியுடன், கடின பதங்களை நீக்கி, எளிமையான தமிழ்ப்பதங்களுடன், தேவையான விளக்கங்கள், உதாஹரணங்கள், பல்வேறு நூல்களில் இருந்து மேற்கோள்கள், எடுத்துக்காட்டுகளுடன் இவ்வாய்வேடு திறனாய்வு செய்வதற்காக ஸமர்ப்பிக்கப்படுகிறது.

ஆழ்வார், எம்பெருமானார் ஆசார்யன் திருவடிகளே சரணம்.

◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊◊

# இயல் - 12

## பின்னிணைப்புகள்

(இவ்வியலில் - ஆய்விற்காக பரிசீலிக்கப்பட்ட மற்றும் ஆய்வில் மேற்கோள்கள் வழங்கப்பட்ட நூல்களின் பட்டியல், ஆய்வின் மூலநூல் ஸூத்ரங்கள் ஸம்ஸ்க்ருதத்திலும் மற்றும் ஆய்வேட்டிற்கு துணைபுரியக்கூடிய முக்கியமான தகவல்கள் ஆகியவையும் இணைக்கப்பட்டுள்ளன.)

# துணைநூற்பட்டியல்

பயன்படுத்தப்பட்ட சில நூலகங்கள்

1. அடையார் லைப்ரரி அண்ட் ரிசர்ச் சென்டர் - அடையார், சென்னை.

2. கவர்ண்மென்ட் ஓரியண்டல் மேநுஸ்க்ரிப்ட் லைப்ரரி, சென்னை.

3. ராஜா முத்தையா ரிசர்ச் லைப்ரரி, தரமணி, சென்னை - 600113.

4. இன்டர்நெட் - இணையதள நூலகங்கள். டிஜிட்டல் லைப்ரரி ஆப் இன்டியா - http://www.dli.ernet.in/

5. டிஜிட்டல் லைப்ரரி ஆப் ப்ரீபுக்ஸ் https://www.archive.org/

6. சான்ஸ்க்ரிட் டாகுமென்ட்ஸ் ஆன்லைன் http://sanskritdocuments.org/scannedbooks/

பரிசீலிக்கப்பட்ட சில நூல்கள்

1. ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரா - டி.எம்.நாராயண சாஸ்த்ரி - க்ரந்த லிபி - சாரத விலாஸ ப்ரஸ் - கும்பகோணம் - 1917.

2. ப்ரயோக சந்த்ரிகா - ஆசிரியர் தெரியவில்லை - க்ரந்த லிபி - மிகப் பழமையானது.

3. ஆபஸ்தம்ப க்ருஹ்ய ப்ரயோக ஸாரம் - கல்யாண சுந்தர சாஸ்த்ரி - க்ரந்தம் - கோமளா ப்ரஸ் - கும்பகோணம் - 1925.

4. கண்டபூஷணம் (க்ருஹ்ய ரத்னம்) - வைதீகசார்வபௌமர் வெங்கடாச்சாரி - க்ரந்தம் - கோபாலவிலாஸ் ப்ரஸ் - கும்பகோணம் -1912.

5. ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம் - பண்டிட் சின்னஸ்வாமி சாஸ்த்ரி - (அநாகுலா, தாத்பர்ய தர்சன வ்யாக்யானத்துடன்) -

ஸம்ஸ்க்ருதம் - க்ருஷ்ணதாஸ் ஹரிதாஸ் குப்தா வித்யா விலாஸ் ப்ரஸ் - பநாரஸ் - 1928.

6. ப்ரயோக சந்த்ரிகா - க்ருபாஸமுத்ராச்சாரி - தமிழ் - கும்பகோணம் - 1969.

6. ஸ்ரீமதாபஸ்தம்பீய பூர்வ ப்ரயோக: - வடுவூர் வீரவல்லி கனபாடி தேசிகாசாரியார் - ஸம்ஸ்க்ருதம், தமிழ் - 1996.

7. யாஜுஷ மந்த்ர ரத்னாகரம் - க்ரந்தம் - ஹெரிடேஜ் இந்தியா எஜுகேஷணல் டிரஸ்ட் - சென்னை-4 - 2008.

8. சோதிட கிரக சிந்தாமணி என்னும் பெரிய வருஷாதி நூல் - இராமலிங்க குருக்கள் - தமிழ் - வருடம் தெரியவில்லை.

9. வைத்யநாததீக்ஷிதரின் - வர்ணாச்ரம தர்மகாண்டம் - டி.எம். நாராயண சாஸ்த்ரி - தமிழ் - சாரதாவிலாஸ அச்சுக்கூடம் - கும்பகோணம் - 1939.

10. ஆபஸ்தம்பீய உபாகர்மா ப்ரயோகம் - க்ரந்தம் - வருடம், அச்சக விபரம் தெரியவில்லை.

# ஆயுஷ்ய ஹோமம்

பாதௌ ப்ரக்ஷாள்ய, ஆசம்ய, பவித்ரம் த்ருத்வா. ஓம் நமஸ்ஸதஸே - ஸ்வீக்ருத்ய। ...நக்ஷத்ரே ...ராசௌ ...ஜாதஸ்ய (மம) குமாரஸ்ய/(குமார்யா:) ப்ரதம வயஸி ஸம்பூர்ணே, த்விதிய வர்ஷ ப்ராரம்பே, ஜந்ம மாஸே, ஜந்மரிக்க்ஷே யோதோஷ: ஸமஜநி தத்தோஷ பரிஹாரார்த்தம், ஜனனகாலே ஜன்ம லக்னாபேக்ஷயா, சந்த்ரலக்னா பேக்ஷயாச யோதோஷ: ஸமஜநி தத்தோஷ பரிஹாரார்த்தம் ச, சதாயு: சம்பூர்ணதா ஸித்யர்த்தம், போதாயனோக்த ப்ரகாரேண அப்தபூர்த்தி ஆயுஷ்ய ஹோமம் கர்த்தும் யோக்யதா ஸித்திம் அனுக்ரஹாணா.

ததாஸ்து என்று அனுக்ரஹம் பெற்று, 2 தர்ப்ப ஆஸநம், 2 தர்ப்பம் இடுக்கிக்கொண்டு ப்ராணாயாமம் செய்து, விஷ்வக்ஸேந ஆராதனம், ப்ராணாயாமம் செய்து, ஸ்ரீகோவிந்தா முதல் ஸ்ரீபகவதாக்ஞா கைங்கர்யம்வரை சொல்லி, அநுஜ்ஞைப்படி .... போதாயனோக்த ப்ரகாரேண அப்தபூர்த்தி ஆயுஷ்யஹோமம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து, விஷ்வக்ஸேநரை யதாஸ்தானம் செய்து, அனுக்ரஹம் பெறவேண்டியது.

"அஸ்மிந் (மம) குமாரஸ்ய/(குமார்யா:) ஆயுஷ்யஹோம ஜபகர்மணி ரித்விஜம் த்வாம் வ்ருணே" என்று சிலரை வரிக்கவும். அஸ்மிந் ஆயுஷ்ய ஹோம கர்மணி ப்ரம்ஹாணம் த்வாம் வ்ருணே என்று ஒருவரை வரிக்கவும்.

ஸ்தண்டிலம் கல்பயித்வா முதல் அக்நிப்ரதிஷ்டை - அக்நி முகாந்தம் செய்து, அக்நிக்கு வடபுறம் ஈசாந்ய திக்கில் கும்பம் வைத்து, அதில் வருணன், ஈசான தேவதை, ஆயுர் தேவதைகளை ஆவாஹனம் செய்து பூஜை செய்யவும்.

இரண்டு பாத்திரத்தில் ப்ரசாதம் கொண்டுவந்து அக்நிக்கு மேற்கு வடக்கு பரிஸ்தரண தர்ப்பங்கள், சேரும் இடத்தில் அக்நிசரு மேல்புறமும், ப்ராணசரு கீழ்புறமும் வைத்து கூர்ச்சத்தின் நுனியால் அக்நி சருவை தொட்டுக்கொண்டு, அக்நயே ஆயுஷ்மதேத்வா ஜுஷ்டம் நிர்வபாமி (3தரம்)

அக்நய ஆயுஷ்மதேத்வா ஜுஷ்டம் ப்ரோக்ஷாமி (3தரம்) ப்ராணசருவை ப்ராணாயத்வா ஜுஷ்டம் நிர்வபாமி (3தரம்) ப்ராணயாத்வா ஜுஷ்டம் ப்ரோக்ஷாமி (3தரம்) அக்நயே ஆயுஷ்மதேத்வா ஜுஷ்டம் அபிகாரயாமி (3தரம்) ப்ராணாயத்வா ஜுஷ்டம் அபிகாராயாமி (3தரம்) ப்ரதான தர்வியில் நெய் சேர்த்துக்கொண்டு அக்நிசருவிலிருந்து 2 தரம் (வத்ஸ, ஜமதக்நிகள் 3தரம்) ப்ரஸாதம் எடுத்து வைத்துக்கொண்டு அக்நிசரு பாத்திரத்தில் வடபுறம் நெய் சேர்த்து தர்வியிலுள்ள ப்ரஸாதத்தில் நெய் சேர்த்து வலது கையில் வாங்கிகொண்டு "ஆயுஷ்டே விச்வதோததத் அயமக்நிர் வரேண்ய: புநஸ்தே ப்ராண ஆயதி பராயக்ஷ்மம் ஸ்வாமிதோம் ஆயுர்தா அக்நே ஹவிஷ: ஜுஷாண: க்ருதப்ரதீக: க்ருதயோநிரேதி க்ருதம்பீத்வா மதுசாருகவ்யம் பிதேவபுத்ரம் அபிரக்ஷதாமிமம் ஸ்வாஹா". ஆயுர்தே அக்நய இதம்நமம என்று சருவை மட்டும் அக்னியில் ஹோமம் செய்து, மீண்டும் இதே மந்த்ரத்தால் ஆஜ்ய ஆஹுதி செய்து "ஆயுர்தே அக்நய இதம் நமம" என்று சொல்லவும். தர்வியில் நெய் சேர்த்து அக்நிசரு பாத்திரத்திலிருந்து வடபுறமாக 1தரம் (வத்ஸ ஜகதக்னிகள் 2தரம்) ப்ரஸாதம் எடுத்து கீழே வைக்கவும். யோப்ரம்ஹா 8 ஆஹூதிகள் ஆயிரத்தெட்டு தடவைகள் நெய்யால் ரித்விக்குகள் ஆசாரியன் எல்லோரும் சேர்ந்து செய்து ஒவ்வொரு ஆஹூதி செய்தவுடன் நெய்சேஷத்தை ப்ராணசரு பாத்திரத்தில் சேர்க்கிறது. குழந்தையின் தகப்பனார் ஈசாநாய இதம் நமம என்று சொல்லிக்கொண்டிருக்கவேேடும். கடைசியில் "ஏபி: ரித்விக்பி: ஹுதம் ஆஜயத்ரவ்ய ஜாதம், ஸர்வத்ர ஈசாநாய இதம் நமம" என்று சொல்லவேண்டும்.

"விஷ்ணோத்வந்நோ அந்தமாச்சர்மயச்ச ஸஹந்த்ய ப்ரதேதாரா மதுச்சத: உத்சந்துஹ்ருதே அக்ஷிதம் ஸ்வாஹா" விஷ்ணவ இதம் நமம - என்று ஒரு ஆஹுதியும், நக்ஷத்ர அஷ்ட வாக்யம் சொல்லி 2 ஆஹூதிகளும் செய்யவேண்டும்.

நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய (ஜாதாயா:) அஸ்யகுமாரஸ்ய (குமார்யா:) "ம்ருத்யுர்நச்யத் ஆயுர்வர்த்ததாம்"-என்பதுடன் நான்கு வ்யாஹ்ருதிகளையும் சேர்த்து நான்கு ஹோமங்கள் செய்யவேண்டும்.

முன்பு எடுத்துவைத்த, ப்ரஸாதத்துடன் உள்ள தர்வியை எடுத்துக்கொண்டு 2தரம் நெய் சேர்த்துக் கொண்டு "ஹவ்யவாஹம், அபிமாதிஷாகம், ரக்ஷோஹணம், ப்ரதநாஸுஜிஷ்ணும், ஜ்யோதிஷ்மந்தம், தீத்யதம், புரந்திம் அக்நிக்கு ஸ்விஷ்க்ருதம் ஆஹுவேமோம், ஸவிஷ்டமக்நே அபிதத்ப்ருணாஹி விச்வாதேவ ப்ரதநாஅபிஷ்ய உருந்நப்பந்தாம் ப்ரதிசந்விபாஹி ஜ்யோதிஷ்மத்தேஹி அஜரந்ந ஆயு: ஸ்வாஹா" அக்நியில் வடகிழக்கு மூலையில் சேர்க்கவேண்டும். "அக்நயேஸ்விஷ்டக்ருத இதம் நமம" என்று உத்தேசத்யாகம். மீண்டும் இதே மந்த்ரத்தால் நெய்யினால் ஒரு ஹோமம் செய்யவேண்டும்.

ப்ராணாயாமம் "ஏதத்கர்ம ஸம்ருத்யர்த்தம் ஜயாதி ஹோமம் கரிஷ்யே" என்று ஜயாதி ஹோமங்களைக் செய்து பரித்யஞ்சநம் பரிதி: ப்ரஹரணம் (லேபகார்யம் பெரியோர்கள் செய்கிறதில்லை) ஸக்குஸ்ராவம். ப்ராயச்சித்தஹோமம் அனாக்ஞாதஹோமங்கள் செய்து, பரிஷேசநம் ப்ரம்ஹ உத்வாஸநம், அக்நி உபஸ்தானம் செய்யவேண்டும். வருணஸூக்தம் ஆயுஷ்யஸூக்தம், நக்ஷத்திர தேவதை அஷ்டவாக்யம் ம்ருத்யுஸூக்தம் இவைளை ஜபித்து கும்பத்தில் ஆவாஹனம் செய்த தேவதைகளை யதாஸ்தானம்செய்யவேண்டும்.

ஈசான்ய திக்கில் அருகம்பில் வைத்து அதில் சோபன அக்ஷதையும் தீர்த்தமும் சேர்க்கவேண்டும். அக்நிசரு பாத்திரத்திலிருந்து ப்ரஸாதம் எடுத்து அருகம்பில்மேல் வைக்கவேண்டும். "மாநஸ்தோகே .... மதோம்" என்று சொல்லி, ருத்ராய, ஈசானாய, தேவதாய, பலிம்ததாமி (பணம்) ஹிரண்யம் ததாமி, மறுபடியும் கொஞ்சம் சோபனாக்ஷதையுடன் ஜலம் சேர்த்து கும்பஜலத்தால் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

சிலர் நாந்தி புண்யாகவாசனம் செய்யவேண்டும் என்கின்றனர். வழக்கமில்லை. குழந்தையை மடியில் உட்காரவைத்துக்கொண்டு கும்ப ஜலத்தில் கொஞ்சம் சாப்பிடக் கொடுத்து ஹோமசேஷ நெய்சேர்ந்த ப்ராணசருவியிலிருந்து (சர்க்கரையை கலந்து ஒரு நாணயத்தால்) ப்ரஸாதம் எடுத்து குழந்தைக்கு கொடுக்கவேண்டும். ஆயுரஸி விச்வாயுரஸி ஸர்வாயுரஸி ஸர்வமாயுரஸி ஸர்மர்யுர்பூயாத் ஸர்வமாயு: கேஷம்" என்று கும்பதீர்த்தத்தை கொடுக்கவும். நாபியை "யதஇந்த்ரபயாமஹே ததோந: அபயம்க்ருதி மகவந்சக்தி தவதந்ந ஊதயே வித்விஷ: விம்ருதோஜஹி, ஸ்வஸ்திதா: விசஸ்பதி: வ்ருத்ரஹா விம்ருதோவசி வ்ருஷேந்த்ர: புரஏதுந: ஸ்வஸ்திதா: அபயம்கர:" என்று தடவவேண்டும்.

ப்ராணாயாமம் செய்து ஸ்ரீபகவதாக்ஞா கைங்கர்யம் அஸ்ய குமாரஸ்ய/குமார்யா: அப்தபூர்த்தி சாந்தி ஜபஹோம கர்த்ருப்ய: தத்பல ஸ்வீகரணார்த்தம் யத்கிஞ்த் ஹிரண்யதானம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் செய்து, ஹிரண்யகர்ப்ப ஆரம்பித்து அதச்சாந்திம் ப்ரயச்சமே அஸ்யகுமாரஸ்ய ஆரம்பித்து யத்கிஞ்சித் ஹிரண்யம் நாநாகோத்ரேப்ய: ஸம்ப்ரததே நம: நமம அச்சுத: ப்ரிதாம் என்று தத்தம் செய்து ரித்விக்குகளுக்கு[1] வழங்கவும்.

## காது குத்துதல்

"ஓம்நமஸ்ஸதஸே ... ஸ்வீக்ருத்ய நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய அஸ்ய குமாரஸ்ய கர்ணபூஷண தாரணம் கர்த்தும் யோக்யதா ஸித்திம் அனுக்ரஹாணா" என்று அனுக்ரஹம் பெற்று படியில் உட்கார்ந்து ப்ராணாயாமம் செய்து "நக்ஷத்ரே ராசௌ ஜாதம் அஸ்ய/(மம) குமாரம்(குமாரீம்) கர்ணபூஷ்ண தாரணம் கரிஷ்யே" என்று ஸங்கல்பம் செய்து, க்ரஹப்ரீதி செய்து, காதுகுத்திய பிறகு ஸதஸிலுள்ளவர்களுக்கு சந்தனம்கொடுத்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவேண்டும். ஸம்பந்திக்கு பாக்கு வெற்றிலை வாத்யார் ஸம்பாவனை ஸதஸிலுள்ளவர்களுக்கு பாக்கு வெற்றிலை சர்க்கரை முதலியன கொடுத்து ஹாரத்தி எடுத்து படிகளைய வேண்டும்.

---

1 பிறருக்காக வேதபாராயணம் – ஜபம், ஹோமம் செய்பவர்

பிறந்த குழந்தை தொப்புள்கொடி கழுத்தில் சுற்றிக்கொண்டு பிறந்தால் அதற்கு நாளவேஷ்டின சாந்தி என்னும் பரிஹாரகர்மா விதிக்கப்பட்டுள்ளது.

ஆண் குழந்தை இல்லாதவர்களுக்காக புத்ரஸ்வீகாரம் என்னும் பரிஹாரகர்மா வழங்கப்பட்டுள்ளது.

ஷஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் போன்றவையும் பெரும்பாலும் அநுஷ்டானத்தில் உள்ள கர்மாக்களாகும்.

ஆனால் இவை யாவும் அநுஷ்டித்தேயாகவேண்டும் என்று சாஸ்த்ரத்தால் விதிக்கப்பட்ட நித்ய அல்லது நைமித்திக கர்மா வகையைச் சாராதவை என்பதாலும், விரிவுக்கஞ்சியும் இவற்றிற்கு இங்கு முழுமையான ப்ரயோகம் வழங்கப்படவில்லை.

## கர்மாக்களில் சாஸ்த்ர சந்தேஹ விளக்கங்கள் – கேள்வி – பதில்

1. ஸூத்ரங்கள் எத்தனை விவரிக்கவும்.

ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் என வேதங்கள் நான்கு. அவற்றில் முதலாவது ருக்வேதத்திற்கு ஆஸ்வலாயனம், கௌஷீதகம் என்று ஸூத்ரங்கள் இரண்டு. இரண்டாவது யஜுர் வேதமானது கிருஷ்ண யஜுர் வேதம் சுக்ல யஜுர் வேதம் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு போதாயனம், ஆபஸ்தம்பம், பாரத்வாஜம், ஸத்யாஷாடம், வைகானஸம் என்று ஐந்து ஸூத்ரங்களும், சுக்ல யஜுர் வேதத்திற்கு காத்யாயனம் என்று ஒரே ஸூத்ரமும் ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவதான ஸாமவேதத்திற்கு: த்ராஹ்யாயனம், ஜைமினீயம் என்று இரண்டு ஸூத்ரங்கள்.

2. வர்ணங்கள் என்ற வார்த்தை எதைக் குறிப்பிடுகிறது?

வர்ணங்கள் என்பது இங்கு நிறத்தைக் குறிப்பிடவில்லை.

ப்ரஹ்ம்ம - அறிவு சார்ந்த தொழில் புரிவோர்

க்ஷத்ரிய - நாட்டைப் பாதுகாக்கும் தொழில் புரிவோர்.

வைச்ய - வர்த்தகத்தில் ஈடுபடுவோர்

சதுர்த்த - மேற்படி மூன்று தொழில்களிலும் ஈடுபடுவோருக்குத் தேவையான உதவிகளைச் செய்வோர் என்ற பிரிவுகளை குறிக்கும் சொல் வர்ணம் ஆகும்.

*3. யுகங்கள் எத்தனை? ச்ருதி, ஸ்ம்ருதி, சாஸ்த்ரம் இவைபற்றி விளக்கவும்.*

க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என நான்கு. ச்ருதி என்பது வேதம் ஆகும். வேதம் என்பது, பரம்பொருளின் ஜ்ஞானம் அல்லது அறிவு ஆகும். தவவலிமை மிக்க ரிஷிகளால் அவை உணரப்பட்டு அல்லது அறியப்பட்டு உலகோருக்கு கர்ணபரம்பரை எனப்படும் செவிவழியாகவே பராமரிக்கப்பட்டு வருவதால் அதற்கு ச்ருதி என்று பெயர். ஸ்ம்ருதி என்பதை வேதத்தின் பொழிப்புரை என புரிதலுக்காகக் கூறலாம். வேதத்தை விளக்கி ரிஷிகளால் இயற்றப்பட்டது ச்ருதியாகும். கலியுகத்தில் பராசரஸ்மிருதியே முக்கியமானது. வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை சுருக்கமாகவோ, விவரித்தோ, உதாரணப்படுத்தியோ எழுதப்பட்டுள்ள அனைத்துமே சாஸ்த்ரங்கள்தான். ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம், ஸ்ரீமத்பகவத் கீதை போன்ற அனைத்தும் சாஸ்த்ரங்களே. ஆனால் அவற்றில் உள்ள கருத்துக்கள் எவையேனும் வேதத்திலிருந்து முரண்படுமேயானால், அந்தக் கருத்துக்கள் மட்டும் தள்ளத்தக்கவையாகும்.

*4. கலியுகத்தில் செய்யத் தகாதவையாக சாஸ்த்ரம் எவ்வெவற்றைக் குறிப்பிடுகிறது?*

ஒரு ப்ராஹ்மணன் பன்னிரண்டு வருஷம் கிணற்றிலேயே ஸ்நாநம் செய்து வருவானேயானால் அவன் ப்ராஹ்மண்யத்தை இழந்துவிடுவான்.

ஜ்யேஷ்டபாகம் கொடுத்தல், ஸந்யாஸம் செய்து கொள்ளல்,

ஆசௌசத்தைக் குறைத்தல், ப்ரஹ்மச்சாரியாக வெகுகாலமிருத்தல், கிருஹஸ்தன் தூரதேசத்திற்கு தீர்த்தயாத்திரை செய்தல், யதிகள் சாயங்காலத்தில் வீட்டில் இருத்தல், ப்ராஹ்மணர்கள் தூரதேசத்திற்கு செல்லுதல், கடல்கடந்து யாத்திரை செய்தல் இவைகள் கூடாது.

*5. கர்மாக்கள் செய்யவேண்டிய திசை மற்றும் விதம் தெரியாவிட்டால் என்ன செய்வது?*

ஒரு கர்மாவுக்கு திக்கு நியமம் சொல்லாதபோதோ, தெரியாவிட்டாலோ, கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இவைகளில் ஒன்றை உபயோகிக்கலாம். இன்னவிதத்தில் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்காவிட்டால் உட்கார்ந்து கொண்டு செய்யவேண்டியது.

*6. ப்ராஹ்மணன் ஆற்றவேண்டிய முக்கிய கடமைகள் யாவை?*

ப்ராஹ்மணனுக்குரிய கர்மங்கள் 6.

1. அத்யயனம் செய்வது 2.அத்யயனம் செய்விப்பது. 3.யாகம் செய்வது 4.யாகம் செய்விப்பது 5.தானம் கொடுப்பது 6.தானம் வாங்குவது.

*7. அக்னி ஹோத்ரம் செய்ய என்ன தகுதி வேண்டும்?*

தகப்பன் தமையன் இவர்கள் அக்னிஹோத்ரம் செய்யாதவர்களாய் இருந்தால், ஒருவனுக்கும் அக்னிஹோத்ரம் செய்ய அதிகாரம் இல்லை. தமயன் அனுமதி கொடுத்தால் செய்யலாம். தகப்பன் அனுமதி கொடுத்தாலும் செய்யக்கூடாது.

*10. தன் சொந்த வேதத்தை விட்டு வேறு வேதத்தை அத்யயனம் செய்யலாமா?*

அ) தன் வேதத்ததை விட்டுவிட்டு இதர வேதத்தை அத்யயனம் செய்யக் கூடாது. தன் வேதத்தை அத்யயனம் செய்து முடித்துவிட்டு மற்ற வேதத்தை அத்யயனம் செய்யலாம்.

ஆ) விடியற்காலையில் எழுந்து அத்யயனம் செய்த பிறகு தூங்கக்கூடாது. வேதத்திற்கு அதிகாரமில்லாதரவர்கள் காதில் விழும்படி அத்யயனம் பண்ணக்கூடாது.

*11.* உபாகர்மா தொடர்பான நியமங்களை விளக்கவும்.

அ) க்ரஹணத்திலும், ஸங்க்ரமணத்திலும் உபாகர்மம் செய்யக்கூடாது. யஜுர்வேதிகள் உதயவ்யாபியான பர்வத்திலும். (காலை நேரத்தில் பௌர்ணமி இருக்கவேண்டும்). ருக்வேதிகள் உதயவ்யாபியான ச்ரவணத்திலும் (காலை நேரத்தில் திருவோண நக்ஷத்திரம் இருக்க வேண்டும்) ஸாமவேதிகளுக்கு ச்ரவண நக்ஷத்திரம் இருக்கக்கூடிய காலத்திலும் உபாகர்மா பண்ண வேண்டியது.

ஆ) உபநயனமானபின் 6 மாதம் வரை க்ஷவரம் செய்து கொள்ளக்கூடாது. உபாகர்மத்தில் செய்து கொள்ள வேண்டியது.

இ) உபாகர்மா தினத்தில் ச்ராத்தம் பண்ணவேண்டி வந்தால் உபாகர்மாவை முடித்துவிட்டு ச்ராத்தம் பண்ண வேண்டியது என சிலரும் ச்ராத்தம் பண்ணிய பிறகே உபாகர்மா பண்ணவேண்டும் என பலரது கொள்கையாக உள்ளது. (எனவே உசிதம்போல் செய்து கொள்ளவேண்டியது).

*10.* அனத்யயனம் பற்றி விளக்கவும்?

வேத அத்யயனம் செய்யக்கூடாத காலங்கள் அனத்யயனம் ஆகும். ப்ரதமை, அஷ்டமி, சதுர்தசி, அமாவாசை, பௌர்ணமி, இந்தத் திதிகளிலும், மேற்படி திதிகளுக்கு முந்தைய இரவிலும் அத்யயனம் பண்ணக்கூடாது. க்ரஹணம் ருதுஸந்திகள் இவைகளிலும், நிமிந்தரணம் (ப்ராம்மணார்த்தம்) சாப்பிட்ட தினங்களிலும், ப்ரதிக்ரஹம் செய்த தினங்களிலும் அத்யயனம் பண்ணக் கூடாது. அந்தந்த ஊரில் கோயில்களில் கொடி ஏறுகிற தினத்திலும், இறங்குகிற தினத்திலும் கூடாது. க்ரஸ்த அஸ்தமன க்ரஹண விஷயத்தில் 3 நாட்களுக்கு கூடாது. ஸாமவேத த்வனி கேட்கும்போது ருக் மற்றும் யஜுர் வேதங்களை அத்யயனம் செய்யக்கூடாது. மஹாநவமி, ச்ரவண துவாதசி, அக்ஷயத்ருதியை, ரதஸப்தமி, மஹாபரணீ இவைகளிலும் மன்வாதி, யுகாதிகளிலும் கூடாது.

*11. வேதம் சார்ந்த தொழிலுக்கு வாய்பில்லாதபோது, ப்ராம்மணர்கள் வேறு எந்தத் தொழிலை மேற்கொள்ளலாம்? எந்த வயதுவரை திருமணம் செய்துகொள்ளலாம்?*

பிழைக்க வேறு வழியில்லதபோது ப்ராம்மணர்கள் உழவுத்தொழிலை மேற்கொள்ளலாம்.

அ) உழவு காளைகளை ஒரு பகலின் பாதிக்காலம் வரையில் உழவுசெய்ய உபயோகிக்கலாம். உழவு முடிந்தவுடன் அவைகளைக் குளிப்பாட்டவேண்டியது அவசியம்.

ஆ) புருஷர்கள் 50 வயதிற்குமேல் திருமணம் செய்துகொள்ளவே கூடாது. நிமிந்தரணமும் சாப்பிடக் கூடாது.

*12. சாஸ்த்ரப்படி ப்ராம்மணர்களுக்கான ஸம்ஸ்காரங்கள் யாவை?*

ப்ராம்மணர்களுக்கு அவரவர்கள் ஸூத்திரத்தில் கூறியுள்ளபடி 40 ஸம்ஸ்காரங்களும் அதற்கு அதிகமாயும் உண்டு. அவைகளில் உபநயனம் வரை உள்ள ஸம்ஸ்காரங்கள் மிகவும் அவசியம். அதற்கு மேற்பட்டவைகள் அவ்வளவு முக்கியமானதல்ல. செய்தால் விசேஷம். ஏனென்றால் ப்ரம்மச்சரியத்திலிருந்து ஸந்யாஸம் பெறலாம் என்ற விதியிருப்பதால் உபநயனத்திற்கு மேற்பட்ட ஸம்ஸ்காரங்கள் அதிகாரத்தைப் பொருத்தவைகளென்று ஏற்படுகிறது.

நாற்பது ஸம்ஸ்காரங்களின் பட்டியல் முகவுரையில் தரப்பட்டுள்ளது.

ஸ்மார்த்த கர்மாவில் நிஷ்க்ரமணம் அதாவது சந்த்ர தர்சனம், சூர்ய தர்சனம் இவை இரண்டையும் சேர்த்து 16 கர்மங்களென்று சிலர் அபிப்ராயம். இந்த இரண்டையும் விலக்கி ப்ரேத கர்மம், ஸபிண்டீகரணம் இந்த இரண்டையும் சேர்த்து 16 என்று சிலரும், இந்த நாலையும் சேர்த்து 18 என்று சிலரும் அபிப்ராயப்படுகிறார்கள். ஆக ஸ்மார்த்த ச்ரௌத கர்மங்கள் 44 என்று சிலர் கூற்று.

*13.* ருது காலம் என்கிறார்களே அது என்ன? அதன் முக்கியத்துவம் என்ன?

ருதுவான (பெண் தூரமான) தினம் முதல் 16 தினங்கள் வரையில் ருது காலமென்று பெயர். அதில் முதலில் நான்கு தினங்கள் நீங்கலாகவும், பிறகுள்ள தினங்களில் அஷ்டமி, ஏகாதசி, திரயோதசி, சதுர்தசி, அமாவாஸை, பௌர்ணமி, சதுர்த்தி, சஷ்டி இந்த திதிகள் நீங்கலாகவும் ஸ்த்ரீகளைக் கூடலாம். வியாழன் சனி இந்தக் கிழமைகளும், திருவோணம், ரோஹிணி, ஹஸ்தம், அனுஷம், ஸ்வாதி, ரேவதி, மூலம், உத்திரம், சதயம் இந்த நக்ஷத்திரங்களும் வ்ருஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த லக்னங்களும் நிஷேகத்திற்கு (சாந்தி முஹூர்த்தத்திற்கு) உத்தமம். கேட்டை, மிருகசீர்ஷம், புனர்பூசம் இவை மத்தியமம். ருது காலத்தில் இரட்டித்த தினமானால் புத்ரனும், ஒற்றைப்படை தினமானால் பெண் குழந்தையும் உண்டாகும். ருது காலங்களில் பத்தினியைக் கூடாவிடில் மஹாதோஷமுண்டு.

*14.* பும்ஸவனம் எப்போது செய்யவேண்டும்?

ஸ்த்ரீகளின் கர்பமானது நன்றாய்த் தெரியும்போது அதாவது 3 அல்லது 4வது மாதத்தில் பூச நக்ஷத்திரத்தில் பும்ஸவனம் செய்யவேண்டியது. கர்பத்திலிருக்கும் சிசு புரள்வதற்கு முன் ஹஸ்தம், மூலம், ச்ரவணம், புனர்பூசம், பூசம், மிருகசீர்ஷம் இந்த நக்ஷத்திரங்கள் புருஷ நக்ஷத்திரங்கள் ஆகையால் இவைகளில் பும்ஸவனம் செய்யவேண்டியது. இதை கர்பம்தோறும் செய்யவேண்டும். முதல் கர்பத்திற்கு செய்வது போதுமென்று சிலர் கொள்கை. ஆனால் இந்த கர்ப்பம் புருஷப்ரஜையாகப் பிறக்கவேண்டும் என்று அபேக்ஷிக்கின்றவன் (விரும்புகிறவன்) ஒவ்வொரு கர்பத்திலும் பும்ஸவனம் செய்யவேண்டியது.

*15.* ஸீமந்தம் முதல் பிறந்த குழந்தைக்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களையும் அவற்றுக்கான காலத்தையும் குறிப்பிடவும்.

குழந்தைகளின் செயலுக்கு தோஷம் உண்டா?

*15-1.* ஸீமந்தம்

கர்பத்தின் 4, 6, 8வது மாதத்தில் ஸீமந்தம் செய்யவேண்டியது. 6வது மாதம் முதல் ப்ரஸவம் வரையிலும் செய்யலாம். இந்த ஸம்ஸ்காரம் ஸ்த்ரீகளுக்கு சுத்தியைத் தருவதால் முதல் கர்பத்திற்கே போதுமானது. அன்றியும் சிசுவிற்கும் சுத்தியைக் கொடுக்குமாதலால் ஒவ்வொரு கர்பத்திற்கும் செய்யவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஸீமந்தம் என்ற ஸம்ஸ்காரம் ஸ்த்ரீகளுக்கு மிகவும் அவசியம் ஆதலால் புருஷன் தேசாந்திரம் (வெளியூர்) சென்றிருந்தாலும், இறந்திருந்தாலும் மைத்துனன், குரு, நெருங்கிய பங்காளி இவர்களைக் கொண்டாவது இந்த கர்மாவை அவசியம் செய்யவேண்டும். சிலர் ஸீமந்தம் செய்யும் வழக்கமில்லை என்பது சாஸ்த்ர விரோதமாகும்.

*15-2.* ஜாதகர்மம்

ஒருவனுக்கு (பத்னிக்கு) சிசு பிறந்தால் உடனே ஸ்நாநம் செய்து தானம் முதலியவைகளைச் செய்யவேண்டும். புத்திர ஜனன தினம் முழுமையும் அவன் சுத்தனாகையால் அவன் தானம் செய்வதும் அவனிடம் தானம் வாங்குவதும் குற்றமாகாது. மரணத்தீட்டின் இடையில் பிள்ளை பிறந்தால் தீட்டுப் போனபின் ஜாதகர்மம் செய்யவேண்டும். பிறப்புத் தீட்டு மத்தியில் புத்ரன் பிறந்தால் உடனே முறைப்படி ஜாதகர்மம் செய்யலாம். பிறப்புத்தீட்டு நேரிட்டுள்ள சமயங்களில் புத்ரன் பிறந்தால் ஜனகன் (குழந்தையின் தந்தை) அச்சமயம் தீட்டிலிருந்து விடுபட்டு சுத்தியைப் பெறுகிறான்.

*15-3.* நாமகரணம்

பிறந்தது முதல் 11வது தினத்திலாவது, முதல் வருஷ முடிவிலாவது பிறந்த குழந்தைக்குப் பெயர் வைக்கவேண்டும். குலதைவத்தின் பெயரையும் முன்னோர்களின் பெயரையும் வைப்பது ச்லாக்யம். (நல்லது).

*15-4.* காது குத்தல்

சித்திரை, கார்த்திகை, தை, பங்குனி இந்த மாதங்களில் சுக்லபக்ஷத்தில் நல்ல தினம் பார்த்து பல் முளைத்தவுடனும், தாயின் மடியில் ஏறி இறங்க திறமை வந்தபோதும், ஊசியில் பட்டைக் கோர்த்து அதைச் சமமாய் இரட்டையாகச் சேர்த்து குத்தவேண்டும்.

*15-5.* சூர்ய, சந்த்ர தர்சன காலம்.

மூன்றாவது மாதத்தில் குழந்தையை அறை, கூடம், தொட்டில் இவைகளின்று எடுத்து சூரியனுக்குக் காட்டவேண்டும். அதாவது சூர்ய தர்சனம் செய்து வைக்கவேண்டியது. அவ்விதமே நான்காவது மாதத்தில் சந்திர தர்சனமும் செய்து வைக்க வேண்டியது.

*15-6.* அன்னப்ராசனம்

6 வது மாதத்தில் அன்னப்ராசனம் செய்யவேண்டும். அமுதூட்டுதல் விதிமுறைப்படி நடத்தவேண்டும். அன்னத்துடன் தயிர், நெய், தேன் இவைகளைச் சேர்த்து ப்ராசனம் (ஊட்டுவது) செய்து வைக்கவேண்டும்.

*15-7.* சௌளம்

மூன்றாவது வயதில் விதிப்படி குடுமி வைத்துவிடவேண்டியது. தாயார் கர்ப்பவதியாய் இருந்தால் கூடாது. ஞாயிறு, செவ்வாய், சனி, ப்ரதமை, சதுர்த்தி, நவமி, ஷஷ்டி, சதுர்தசி, கார்த்திகை, பூரட்டாதி, உத்திரட்டாதி இவைகள் கூடாது. அஸ்விநி, திருவோணம், ஸ்வாதி, சித்திரை, பூசம், புனர்பூசம், அவிட்டம் இவைகளில் செய்யலாம். ஜந்ம நக்ஷத்திரம் கூடாது.

ஸ்த்ரீகளுக்கு விவாஹமே உபநயன ஸ்தானீயம் (உபநயனத்திற்குச் சமம்). அதற்கு முந்திய எல்லா ஸம்ஸ்காரங்களும் உண்டு.

அவைகளை மந்திரமில்லாமல் செய்யவேண்டியது. ஸ்வகாலத்தில் (உரிய காலத்தில்) செய்யாவிட்டால் ப்ராயச்சித்தமும் உண்டு.

15-8. அக்ஷராப்யாஸம்

5வது வயது வந்த பிறகு விஷ்ணு முழித்திருக்கும் மாதங்களில் அக்ஷராப்யாஸம் செய்து வைக்கவேண்டியது. உத்தராயணம் ச்லாக்யம். மாசி மாதம் கூடாது. ஆடி மாதம் நலம். செவ்வாய் சனி கூடாது. திருவோணம், ஹஸ்தம், பூசம், மிருகசீர்ஷம், அவிட்டம், ஸ்வாதி, சதயம், அனுஷம், கேட்டை, சித்திரை இந்த நக்ஷத்திரங்கள் ச்லாக்யம். ஹரி, லக்ஷ்மி, பார்வதி, சரஸ்வதி, மஹரிஷி, வித்யை இவைகளை பூஜித்து ஆஜ்யாஹுதி செய்யவேண்டியது. பிறகு ப்ராஹ்மண பூஜை செய்யவேண்டியது. குமாரன் மேற்கு முகமாயும், குரு கிழக்கு முகமாயும் உட்கார்ந்து கொண்டு அக்ஷராப்யாஸம் செய்வித்தல் வேண்டும். ப்ரதமை, அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி இவை அனத்யயன (வேதம் சொல்லக்கூடாத அல்லது படிக்கக் கூடாத) நாட்களாதலால் இவைகளில் ஒரு போதும் படிக்கக்கூடாது.

உபநயனம் ஏற்படுவதற்கு முன் குழந்தைகளுக்கு விதி நிஷேதங்கள் (செய்யத் தக்கவை - தகாதவை என்ற நியமம்) கிடையாது. ஆனால் கள் குடிப்பது போன்ற மஹா பாதகங்களை செய்யவிடக்கூடாது.

ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்களை அவரவர் இஷ்டப்படி செய்யவிடாமல் ஆச்ரமத்திற்குத் தக்கவாறு நடத்தப் பெற்றோர்கள் முயலவேண்டும். ஆறு வயதிற்கு உட்பட்டவர்களை சண்டாளன், ரஜஸ்வலை (தீட்டு ஸ்த்ரீ) இவர்கள் தொடுவதனால் அசுத்தி ஏற்படாது. உபநயனத்திற்கு முன் நியமமில்லை.

16.உபநயனம் தொடர்பான சாஸ்த்ர விஷயங்களை வழங்கவும்.

16-1. கர்பத்தில் இருந்து எட்டாவது வயதில் ப்ராஹ்மணர்களுக்கு உபநயனம் செய்யவேண்டும். வஸந்த காலம் உத்தமம். தை,

மாசி, பங்குனி மாதங்கள் நல்லது. அனத்யாயதினமும், ஸங்க்ரமணமும் (மாதப் பிறப்பு தினம்) கூடாது. நிமித்தம் பற்றி வருவதை அனத்யயன தினத்திலும் செய்யலாம். ஜ்யேஷ்ட்ட மாதத்தில் (ஆனி) ஜ்யேஷ்ட புத்ரனுக்கு உபநயனம் செய்யக் கூடாது. சந்த்ரன் குறைவுபடும்போதும் (க்ருஷ்ண பக்ஷம்), சுக்ரன் எட்டாவது இடத்தில் இருக்கும்போதும், சூரியன் ராசியின் முதல்பாகத்தில் (மாத ஆரம்பத்தில்) இருக்கும்போதும், அனத்யனங்களிலும், திரயோதசி, சதுர்தசி, பௌர்ணமி, ப்ரதமை, சதுர்த்தி, ஸப்தமி, அஷ்டமி, நவமி, ஏகாதசி இவைகளிலும், [2]சாகாதீசனுடைய அஸ்தமன காலத்திலும் உபநயனம் செய்யக்கூடாது. ருக்வேதத்திற்கு ப்ருஹஸ்பதியும், யஜுர்வேதத்திற்கு சுக்ரனும், ஸாமவேதத்திற்கு அங்காரகனும் (செவ்வாய்) அதர்வவேதத்திற்கு புதனும் அதிபதிகள். தன் சாகையதிபனுடைய கிழமையில் உபநயனம் செய்வது மெத்த நல்லது. தன்சாகாதிபன் வலுத்த கேந்திரத்தில் இருக்கும்போது, அதாவது லக்னத்திற்கு 4, 7, 10மிடங்களில் இருக்கும்போது உபநயனம் செய்தல் சுகத்தைக் கொடுக்கும்.

உபநயனத்திற்கு 16 வயதுவரையில் கௌண காலமானாலும் (அதிகபட்ச காலக்கெடுவானாலும்) எட்டு வயதிற்கு மேல் ப்ராயச்சித்தங்களை செய்தே உபநயனம் செய்யவேண்டும். 16 வயதிற்குள் உபநயனம் செய்யாவிட்டால் அவனுக்கு ப்ராஹ்மணனாகும் தகுதியில்லை. அத்யயனம் செய்வது முதலான ஒரு வைதீக கர்மத்திற்கும், தான ப்ரதிக்ரஹங்களுக்கும் அவன் அர்ஹனல்ல.

*17.* பூநூல் நூற்க பெண்களுக்கு அதிகாரம் உண்டா?

சுமங்கலி, கன்னிகை, அல்லது விதவை இவர்கள் பருத்தியினால் பூநூல் நூற்கலாம்.

---

2 சாகாதீசன் என்றால் அவரவர் வேத சாகைக்கு அதிபதி. தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளது.

*18.* யஜ்ஞோபவீதம் தயாரிக்கும் முறையை விளக்கவும்.

சுத்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு வலது கையின் நாலு விரல்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு அதில் பூநூலுக்கான நூல் இழைகளை மூன்று இழைகளாக 96 தடவை சுற்றினால் அது பூநூலாகும். அதற்குத்தான் ஷண்ணவதி என்று பெயர். அதை தீர்த்தத்தால் சுத்தி செய்து முறுக்கி மூன்றாக மடித்து, முறுக்கி, பின் முறுக்கை விடுவித்து எடுத்தால் ஒன்பது தந்துக்களுடன் ஓர் ஸரமாகும். அதை மூன்று வளையமாகச் செய்து வலம்புரியாய் முடிபோடவேண்டும். அதற்குத்தான் யக்ஞோபவீதம் என்று பெயர். அது தொப்புள் வரையிலும் நீளமுள்ளதாய் இருக்கவேண்டும். அதற்குக் குறைந்தால் ஆயுஸ்ஸைக் குறைக்கும். அதிகமாயிருந்தால் செய்யும் கர்மங்கள் நஷ்டமாகும். இதனை நேரிடையாக ஒருவரிடம் கற்றறியவேண்டும்.

*19.* சிலர் 3 பூநூல் அணிகிறார்களே ஏன்? பூநூல் அறுந்துபோனாலோ, அசுத்தமானாலோ என்ன செய்யவேண்டும்?

க்ருஹஸ்தன் மூன்றாவது வஸ்திரம் தரிக்கவேண்டும். சௌகர்யப்படாவிட்டால் அதற்குப்பதிலாக மூன்றாவது பூநூலைத் தரிக்கலாம். இரண்டில் ஒன்று இல்லாமல் இருக்கவே கூடாது. அப்படி இருப்பவன் ப்ராஹ்மணத் தன்மையை இழந்துவிடுவான். கோபத்தால் பூநூலை அறுத்துக்கொண்டால் மூன்று அல்லது ஒன்றாவது க்ருச்ரம் செய்து உடனே பூநூலைத் தரிக்கவேண்டும். யக்ஞோபவீதத்தில் உரோமம் அல்லது அசுத்தம் இருந்தால் உடனே அதை எடுத்து எறிந்துவிட்டு, பத்துத் தடவை காயத்ரியை உச்சரித்து தீர்த்தத்தினால் அலம்பவேண்டும். பூநூலுக்கு முடி போடும்போது ஹரி ஹர ப்ரம்மாதிகளை நமஸ்கரிக்கிறேன் என்று சொல்லவேண்டும். பூநூலின் 96 சுற்றுக்களில் ஒவ்வொன்றும் 4 அங்குலம் இருக்கவேண்டும்.

*20.* தண்டத்தின் உயரம் எவ்வளவு, எந்த மரத்தின் தண்டத்தை உபயோகிக்கவேண்டும்?

பில்வம், புரசு, உதும்பரம் (அத்தி), அச்வத்தம் இவைகளை தண்டத்திற்கு உபயோகிக்கலாம். தண்டம் அவரவர்களின் தலைமட்டம் இருக்கவேண்டும்.

அஜினம், மௌஞ்ஜீ இவை பற்றி விளக்கவும்.

அஜினம்:- ப்ரஹ்மச்சாரிகள் கிருஷ்ண ம்ருகத்தின் (மான்) தோலை உபவீதமாகத் தரிக்கவேண்டும். கோவின் சர்மாவையும் (பசுவின் தோலையும்) உபயோகிக்கலாம்.

மௌஞ்ஜீ :- ப்ரஹ்மச்சாரிகள் முஞ்சிக்கயிற்றை மூன்று சுற்றாக இடுப்பில் தரிக்கவேண்டும். அதில் கௌபீனம் (கோமணம்) கட்டிக்கொள்ளக்கூடாது. முஞ்சிப்பில் கிடைக்காவிட்டால் நாணலை உபயோகப்படுத்தலாம்.

*21.* உபநயன ஆனவுடன் கடைப்பிடிக்கவேண்டியவை என்னென்ன?

உபநயன காலத்திற்கு முன், பட்டுத்தரித்து உபநயன காலத்தில் வெண்மையான வஸ்திரம் புதிதாகத் தரிக்கவேண்டும். கௌபீனமும் தரிக்கவேண்டும். 4வது தினத்தில் எல்லாவற்றையும் விஸர்ஜனம் செய்துவிட்டு மறுபடியும் கௌபீனம் முதல் புதிதாக தரிக்கவேண்டியது. கௌபீனமில்லாமல் ஒருபோதும் இருக்கவே கூடாது. ப்ரஹ்மச்சாரிகளுக்கு சாயவஸ்திரம் (நிறமேற்றப்பட்ட வஸ்த்ரம்) கூடாது.

க்ருஹஸ்தனுக்கும் கடிஸூத்ரம் (கோவணம்) அவசியம். அதில்லாமல் செய்யப்படும் கர்மங்கள் நிஷ்ப்ரயோஜனங்கள். (பலனற்றவை). அவன் நக்னன் (நிர்வாணன்) என்று சொல்லப்படுவான்.

*22.* உபநயனத்தில் யார் யார் பிக்ஷை சேர்க்கலாம்?

முதலில் தாய், ஸஹோதரி, தாயுடன் பிறந்தவர்கள், தகப்பனுடன் பிறந்தவர்கள், அன்பான பந்துக்கள் இந்த வரிசையில் (பிக்ஷை) சேர்க்கவேண்டும். விதவை, கர்பிணி இவர்கள் சேர்க்கக்கூடாது.

23. ப்ரஹ்மசாரிக்கு அன்னம் போன்றவை பிக்ஷையில் நியமங்கள் யாவை?

அன்ன பிக்ஷை எடுக்கும் ப்ரஹ்மச்சாரியை அதட்டிக் கடிந்து பேசக்கூடாது. பிக்ஷை எடுப்பவன் தன் ஆகாரத்திற்கு மிஞ்சி எடுக்கக்கூடாது. அப்படி எடுத்து மீந்துவிட்டால் அதை பூமியில் புதைத்து விடவேண்டியது. அல்லது தண்ணீரில் கரைத்துவிடவேண்டும். குரு, அவர் தாயாதி, தன் தாயாதி, அம்மான் முதலிய பந்துக்கள் வீட்டில் பிக்ஷை எடுக்கக்கூடாது. பிக்ஷை, ஊறுகாய், கறி இவைகளை உபபாத்திரமின்றி கையினால் கொடுப்பது கூடாது.

24. ப்ரம்மயக்ஞம், ஸமிதாதானம் இவை எப்போதிலிருந்து செய்யவேண்டும்?

உபநயன தினம் முதல் மறுநாள் அல்லது நாலாவது நாளிலிருந்து ஸந்தியாவந்தனத்தைப் போலவே ப்ரஹ்ம யக்ஞத்தையும் நித்யம் செய்யவேண்டியது.

அதுபோல் இரு ஸந்த்யா காலங்களிலும் ஸமிதாதானம் செய்யவேண்டியது.

25. காலாதீத ப்ராயச்சித்தம் பற்றி விளக்கவும்.

ஒவ்வொரு கர்மாவும் அததற்கேற்பட்ட காலத்தில் செய்யப்படாவிட்டால் ப்ராயச்சித்த பூர்வகம் (ப்ராயச்சித்தம் பண்ணி) மேற்படி கர்மாவைச் செய்துவிட்டு அடுத்த கர்மாவை செய்யவேண்டும். சௌளத்தில் 50 ப்ராஹ்மணர்களுக்கும், உபநயனத்தில் 100 ப்ராஹ்மணர்களுக்கும், விவாஹத்தில் சக்திக்குத் தக்கபடியும், ஆதானத்தில் 100 பேருக்கும், ருதுசாந்தியில் 10 அல்லது 12 பேருக்கும், பும்ஸவன ஸீமந்தங்களில் நிறைய பேர்களுக்கும் அன்னமிடவேண்டியது. கர்பானத்தில் இரண்டு ப்ராஹ்மணர்களுக்கு அன்னமிட்டு பத்தினியைக் கூடவேண்டியது.

*26.* பத்னி மாதவிலக்காய் இருக்கும்போது நாந்தி செய்யலாமா? பத்னி ரஜஸ்வலையாய் இருந்தால் நாந்தி செய்யக் கூடாது.

*27.* சௌளாதி கர்மாக்கள் செய்யக் கூடாத காலம் எவை? தாயார் (சௌளம் செய்பவனின் தாயார்) ரஜஸ்வலையாக இருந்தாலும், அல்லது *5* மாதத்திற்கு மேல் கர்ப்பமாக இருந்தாலும், சௌளம், உபநயனம், விவாஹம் ஒன்றும் செய்யக் கூடாது. உபநயனம் செய்து வைக்கிறவனுடைய பாரியாள் 6 மாதத்திற்குமேல் கர்ப்பவதியாய் இருந்தாலும் செய்யக்கூடாது.

*28.* உபநயனம் செய்துவைக்கத் தகுந்தவர்கள் யார் யார்? தகப்பன், பாட்டன், ஸஹோதரன், ஜ்ஞாதிகள், ஸமான ப்ரவரமுள்ள ஸகோத்ரர்கள் இவர்கள் உபநயனம் செய்விக்கலாம். முன் சொன்னவர்களில்லாவிடில் ஸ்வஸூத்ர (தன் ஸூத்ர) காரர்களும், நெருங்கிய பந்துக்களும் செய்யலாம். மனைவியை இழந்தவன் உபநயனம் செய்து வைக்க அருகதையற்றவனாவான்.

*29.* இரட்டையாய் பிறந்தவர்களுக்கு ஜாதகர்மாதி விதி என்ன? ஒரே தாயின் வயிற்றில் இரட்டையாகப் பிறந்த பிள்ளைகளுக்கு (யமளோத்பவர்கள் என்று பெயர்) ஒரே லக்னத்தில் ஒரே வேதியில் (ஒரே அக்நியில்) ஒரே ஆச்சார்யனால் ஜாதகர்மம் முதல் உபநயனம்வரையில் செய்யப்படவேண்டும். இரண்டும் பிள்ளையானாலும் பெண்ணாக இருந்தாலும், ஒன்று பெண்ணும் ஒன்று ஆணாக இருந்தாலும் வைதீகங்கள் ஒரே வேதிகையில் ஒரே ஆச்சார்யனால் செய்யப்படவேண்டியது.

ஒருவனுக்கு இரண்டு பார்யைகளிடத்தில் ஒரே லக்னத்தில் ஜனித்த குழந்தைகளுக்கும் ஒரே லக்னத்தில் செய்வேண்டியதிருந்தால் இரண்டு வேதிகைகளில் இரண்டு ஆச்சார்யர்கள் செய்யவேண்டியது. நாந்தியையும் தனித்தனியாகவே செய்யவேண்டியது.

*30.* நமஸ்காரம் செய்யத் தகாதவர்கள் யார் யார்?

வயதில் சிறியவர்களான சிறிய தகப்பன், மாமன், மாமனார் இவர்களை நமஸ்காரம் செய்யக் கூடாது. ஆனால் எழுந்து மரியாதை செய்யவேண்டும்.

*31.* விவாஹத்தில் விலக்கவேண்டிய கன்னிகையின் லக்ஷணங்கள் யாவை?

செம்பட்டை மயிருள்ளவள், புருஷனைக் காட்டிலும் பருமனுள்ளவள், தேகம் முழுவதும் உரோமம் உள்ளவள், தலைமயிர் அதிகமில்லாதவள், பூனைக்கண்ணுடையவள், தலைமயிர்போல் கருமையான நிறம் உடையவள், நக்ஷத்திரம், நதி, வருஷம், மலை இவைகளின் பெயருடையவள், சாதாரண உயரத்திற்குமேல் நெட்டையாகவோ, மிகக் குட்டையாகவோ இருப்பவள், மீசையுடையவள். கரகரகுரல் உடையவள், காக்கைபோன்ற குரல் உடையவள், வட்டமான கண்களை உடையவள், தேகமெங்கும் துர்நாற்றம் உடையவள், முறுக்கிக் கோணலாயுள்ள பற்களை உடையவள், புருவங்கள் ஒன்றாய்க் கூடியிருப்பவள், கால் அல்லது கையில் ஆறு விரல்களைக் கொண்டவள் போன்ற அவலக்ஷணங்களை உடைய கன்னிகைகள் விவாஹத்திற்குக் கூடாது.

பிள்ளையின் வயதிற்கு பெண்ணின் வயது ஒன்றாவது குறைந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் சாஸ்திர சம்மதமில்லை.

*32.* கன்யகாதானம் யார் யார் செய்துகொடுக்கலாம்?

தகப்பன், பிதாமஹன், ஸஹோதரன், தகப்பனுடன் பிறந்தவர்கள், மாதாமஹன், மாமன், ஸகோத்ரன், பந்து இவர்களுள் ஒருவன் கன்யகையை தானம் செய்ய அதிகாரமுள்ளவனாவான். இவர்களில்லாவிடில் ஸ்வஸூத்ரிகளும், நெருங்கிய பந்துக்களும் செய்யலாம்.

ரோகமுள்ளவன், பைத்தியக்காரன் இவர்கள் தானம் செய்யக்கூடாது.

*33.* சுபகாலங்களில் யார் யாருக்கு அவசியம் புதிய வஸ்த்ரம் வாங்கவேண்டும்?

வீடுகளில் சுபம் நடந்தால் பெண்கள், ஸஹோதரிகள் முதலானவர்களுக்கு புடவை வாங்கிக் கொடுக்கவேண்டும். பெண்ணிற்குச் சொந்தமான புடவையை தாயார் ஒரு போதும் உபயோகிக்கக் கூடாது.

*34.* ஒரே சமயத்தில் இரு சுபங்களைச் செய்யலாமா?

ஒரே காலத்தில் இரண்டு சோபனங்கள் செய்யக் கூடாது. புத்ரனுக்கு விவாஹம், புத்ரிக்கு விவாஹமும் ஒரே ஸமயத்தில் செய்யக்கூடாது. ஒரே வருஷத்தில் இரண்டு பெண்களுக்கு விவாஹம் செய்யக் கூடாது. *6* அல்லது *3* மாதங்களாவது சென்றபின் செய்யலாம்.

புத்ரனுக்கு விவாஹம் செய்தால் *6* மாதத்திற்குப் பிறகுதான் பெண்ணிற்கு விவாஹம் செய்யவேண்டும். புத்ரியின் விவாஹத்திற்கு பிறகு புத்ரனுக்கு உபநயனம் செய்யக்கூடாது. இரண்டு புத்ரர்களுக்கும் சேர்த்து உபநயனம் செய்யக்கூடாது. பொதுவாக ஒரு சோபனத்துடன் மற்றொரு சோபனம் செய்யக்கூடாது.

எந்தக் காரணத்தினாலாவது இரண்டு சோபனம் செய்ய நேர்ந்தால் ஆச்சார்யர்கள் வெவ்வேறாக இருக்கவேண்டும்.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த புத்ரன் புத்ரிகளுக்கு ஒரே தினத்தில் விவாஹம் செய்யும்படி நேர்ந்தால் வேறு க்ராமத்திலாவது அல்லது வேறு மண்டபத்திலாவது வேறு லக்கினத்திலாவது செய்யவேண்டியது.

# ஸம்ப்ரதாய விஷயங்கள்

குறிப்பு:- ஒவ்வொரு சுப கர்மாவின் இறுதியிலும் கீழ்க்கண்ட சில ஸம்ப்ரதாய விஷயங்கள் காலம் காலமாகத் தவறாமல் அநுஷ்டிக்கப்படுகின்றன.

1. சீர் ஓதியிடுதல்
2. வேத ஆசீர்வாதம், ஸ்வஸ்தி
3. அம்மான் ஆசீர்வாதம், பந்துக்கள் ஆசீர்வாதம்
4. பெருமாள் ஸம்பாவனை
5. ஆழ்வாராச்சார்ய ஸம்பாவனை
6. ப்ருஹஸ்பதி மற்ற சில ஸம்பாவனைகள்.

## சீர் ஓதியிடுதல்

பெண்ணைக் கொடுத்தவர்கள் பிறந்தகத்திலிருந்து, பெண் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு சுப நிகழ்ச்சிக்கும் தவறாமல் சீர் செய்வது என்பது வழக்கத்தில் உள்ளது. இந்த வழக்கம் எதற்காக ஏற்பட்டது என்பதை ஆராய்ந்ததில், இது ஒரு மிக அற்புதமான ஏற்பாடாகத் தெரியவந்தது.

அதாவது, ஒருவன் தனது பிள்ளைகளுக்குக் கொடுப்பதுபோல பெண்களுக்கும் சொத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து, சகோதரர்களிடமிருந்து சகோதரிகளைப் பிரித்துவிடாமல் இருக்கச் செய்யவே காலம் முழுவதும் சகோதரிகளுக்கு விசேஷங்களில் சீர் என்ற பெயரில் பொருட்களையும் தனங்களையும் வழங்குவது கடமையாகவும் கட்டாயமாகவும் ஆக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது சிறிது சிறிதாக கொடுக்கப்படுவதால் கொடுப்பவர்களுக்கு அது ஒரு சுமையாகத் தோன்றாமல் இன்ப அநுபவமாகவே விளங்குகிறது. அதுபோல் பெற்றுக்கொள்ளும் பெண்ணுக்கும், தன் பங்கிற்கும் மேலான அளவு நிதி வந்து சேர்வதுடன், காலம் முழுவதும் சகோதரர்களின் பாதுகாப்பும் அரவணைப்பும் கிடைப்பது மஹத்தானதாகும்.

## வேத ஆசீர்வாதம்

"அஸ்மேதேவா ...." "ஆயுஷ்மந்தம் வர்சஸ்வந்தம்" போன்ற வேதத்தின் மிகப் பொருள்பொதிந்த பகுதிகளை ஆசீர்வாதத்திற்காகத் தேர்ந்தெடுத்து வேதவித்வான்கள் சோபன அக்ஷதை கொண்டு ஆசீர்வதிக்கிறார்கள்.

அக்ஷதை என்பதற்கான பொருள்:- 'க்ஷத' என்றால் குத்துவது, 'அக்ஷத' என்றால் குத்துப்படாத என்று பொருள். அதாவது, நல்ல முதிர்ந்த, தரமான நெல்தான்யத்தை, அவற்றின் முனைகள் முறிந்துவிடாதவாறு கைகளால் உரித்துத் தயாரிக்கப்படுவதற்கே "அக்ஷதை" என்று பெயர். இப்படிப்பட்ட முழுமையான அரிசியினால் செய்யப்பட்ட அக்ஷதையைக் கொண்டு ஆசீர்வதிப்பதனால், அவர்கள் முழுமையான பலனை அடைவார்கள் என்பது ஐதிஹ்யமாகும்.

## ஸ்வஸ்திவாசனம்

ஸ்வஸ்தி வாசனம் என்பது ஒரு மிகமிகச் சிறப்பான விஷயமாகும். ஸு-அஸ்தி - ஸ்வஸ்தி. ஸு என்றால் மங்களம் - ஸௌபாக்யம். அஸ்தி என்றால் இருப்பது. ஒருவர் தன் வாழ்க்கையில் என்னென்ன ஏற்றங்கள், வசதிகள், நிகழ்வுகள் ஏற்பட்டால் அவர் ஸௌபாக்யமாக இருப்பாரோ, மகிழ்ச்சியாக இருப்பாரோ, அதற்கான அனைத்துக் கோரிக்கைகளையும் உள்ளடக்கிய, மிக நளினமாக, சிறந்த த்வனியில் உருவாக்கப்பட்ட கட்டியங்களே ஸ்வஸ்தியாகும். இவை ஒவ்வொரு சுபநிகழ்ச்சிக்கும் தக்கபடி தயாரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கோரிக்கை வாக்கியத்தையும் ப்ருஹஸ்பதி சொல்லி முடிவில் கூட்டத்தினர், இந்த விண்ணப்பம் இவர்களுக்கு பலிதமாகவேண்டும் என்று அநுக்ரஹம் செய்யுங்கள் என்று வேண்டுவார். ஸபையோர் ஒவ்வொரு கோரிக்கைக்கும் "ததாஸ்து" என்று அநுக்ரஹத்து சிறிது அக்ஷதையைச் சேர்த்தவண்ணம் இருப்பார்கள். உதாரணத்திற்குச் சில வாக்கியங்கள் இங்கே

வழங்கப்பட்டுள்ளன.

*1.* ஸ்வாமிந: ஸ்வஸ்திமந்ராா்ந்தா: ஸத்யாஸ் ஸபலாஸ்ஸந்த்விதி பவந்தோ மஹாந்த: அனுக்ருண்ணந்து.

*2.* புண்யாஹவாசந முகூர்தஸ்ஸுமுஹூர்த்தோஸ்த்விதி

*3.* பீஜாதான

*4.* ஜாதகர்ம

*5.* நாமகர்ண

*6.* அந்நப்ராசன

*7.* சௌள

*8.* உபநயந

*9.* அந்யவஸ்த்ர பரிதாபந

*10.* அக்ஷராப்யாஸ

*11.* உத்வாஹ

*12.* ப்ரவிச்யஹோம

*13.* ஆக்நேயஸ்தாலீபாக

*14.* தர்சஸ்தாலீபாக

*15.* ஸமிதாதாந

*16.* பூர்ணமாஸ ஸ்தாலீபாக

*17.* ஔபாஸந ஆரம்ப

*18.* சேஷஹோம

*19.* தாம்பூலசர்வண

*20.* பலதான

*21.* வதூக்ரஹப்ரவேச

*22.* நூதனக்ரஹப்ரவேச

*23.* கர்ப்பதான

*24.* பும்ஸுவன ஸீமந்தோந்நயந

*25.* ஆயுஷ்யஹோம

26. கர்ணபூஷணதாரண

27. நாளவேஷ்டிந

28. ஷஷ்டியப்தபூர்த்தி

29. புத்ரஸ்வீகார

30. ச்ராவண ஹோம

என்கிறதுபோல் அந்த அந்த சுபத்தைச் சொல்லிக்கொள்ளவும்.

31. தல்லக்னாபேக்ஷயா ஆதித்யாநாம் நவாநாம் க்ரஹாணாம் ஆனுகூல்ய ஸித்திம் பூயாதிதி ...

32. யேயேக்ரஹா: சுபேதரஸ்ராநேஷுஸ்திதா: தேஷாம்க்ரஹாணாம் ஆநுகூல்யம் ...

33. யேயேக்ரஹா: சுபஸ்தாநேஷுஸ்திதா: தேஷாம் க்ரஹாணாம் அத்யந்த அதிசய சுபபலப்ரதாத்ருத்வ ஸித்திர்...

34. அஸ்மிந்க்ருஹே மகாலக்ஷமியாஸ்தைர்யம்

35. ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து

36. ஸமஸ்தஸந்மங்களாநி ஸந்து

37. உத்தரோத்தராபிவ்ருத்திரஸ்து

38. ஸகலகல்யாண ஸம்ருத்திரஸ்து

## அம்மான், பந்துக்கள் ஆசீர்வாதம்

முன்னர் சீர் ஓதியிடுதலில் விவரித்ததுபோல, பெண்ணின் உடன் பிறந்தவர்களே ஆசீர்வாதத்தை முதலில் வழங்கி ஆரம்பித்து வைப்பதை உரிமையாக வைத்துள்ளார்கள். இதன் பிறகு, பந்துக்கள் அனைவரும் தங்களால் இயன்ற பொருளையோ பணத்தையோ வழங்கி தங்கள் ஆதரவைத் தெரிவிக்கின்றனர். இந்த ஆசீர்வாதங்களை வழங்குவதற்கெனவே வேதத்தில் சில பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசீர்வாத பஞ்சாதிகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

## பெருமாள் ஸம்பாவனை

“தத்விஷ்ணோ: பரமம் பதம் ...விஷணோர்யத் பரமம்பதம்” ஸ்ரீரெங்கநாச்சியார் பெரியபெருமாள் ஸம்பாவனை என்று இதிலும் ஒரு க்ரமம் கடைப்பிடிக்கப்படுகிறது. கோயில் - திருமலை - பெருமாள் கோயில் என ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம் பெருமாள்களுக்கு முதலில் ஸம்பாவனைகள் செய்யப்பட்டு, பிறகு அவரவர் பிறந்த திவ்யதேச எம்பெருமான்களுக்கு ஸம்பாவனைகள் செய்யப்படுகின்றன.

## ஆழ்வார் ஸம்பாவனை

“வேதாஹம்மேதம் ... ஸந்திதேவா:” என்று ஸ்ரீமத்வேத - உபய வேதாந்தாசார்யராய் எழுந்தருளியிருக்கும் ப்ரபன்ன ஜனகூடஸ்தரான நம்மாழ்வார் ஸம்பாவனா.

## எம்பெருமானார் ஸம்பாவனை

“நகர்மணாந ப்ரஜயாததேந .... ய: பரஸ்வமஹேச்வர:” தர்சன ஸ்தாபகரான எம்பெருமானார் ஸம்பாவனை.

## மணவாள மாமுனிகள் ஸம்பாவனை

“நகர்மணா - மஹேச்வர:” ஸ்ரீமத் ... உபயவேதாந்த சாரியராய் எழுந்தருளியிருக்கும் ஈட்டு ப்ரவர்தகரான கோயில் மணவாள மாமுனிகள் ஸம்பாவனை.

ஆசார்ய ஸம்பாவனை:- க்ருஹஸ்தாளாக இருந்தால் “வேதாஹமேதம் - ஸந்திதேவா:” ஸ்ரீமத் .... ... எழுந்தருளியிருக்கும் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸம்பாவனா என்றும், ஸந்நியாஸியாகயிருந்தால் “நகர்மணா - மஹேச்வர:” என்று சொல்லி வானவாமலை ஜீயர் ஸம்பாவனை என்றும் சொல்லவேண்டும்.

## வடகலை ஸம்ப்ரதாயம்

மேற்சொன்னதுபோலவே வடகலையார் ஆழ்வார், எம்பெருமானாருக்குப் பிறகு ஸ்ரீவேதாந்ததேசிகனுக்கும் அதன்பிறகு ஸ்ரீமடம் (அஹோபிலமடம்) ஸம்ப்ரதாயம், ஸ்ரீமுனித்ரய ஸம்ப்ரதாயம், ஸ்ரீபரகாலமடம், ஸ்ரீபௌண்டரீகபுரம் என மேலும் பல ஸம்ப்ரதாயங்களுக்குத் தக்கபடி ஆசார்யர்களின் வரிசைக் க்ரமத்துக்குத் தக்கபடி ஸம்பாவனைகள் செய்வது வழக்கம்.

ஸேவித்து ஆசாரியர் வந்திருந்தால் அவரிடம் ஸமர்ப்பிவிக்கிறது. இல்லாவிட்டால் உத்திரியத்தில் வாங்கிக் கொண்டு அவருக்கு அனுப்பிவைக்கிற பழக்கம். பெருமாள் ஸம்பாவனை முதல் ஆசாரிய ஸம்பாவனை வரையில் தம்பதிகளெல்லோரும் உட்கார்ந்து தான் இருக்கிற வழக்கம். எந்த ஆசாரியனுக்கு ஸம்பாவனை செய்கிறார்களோ அந்த ஆசாரியனுடைய ஸதஸிலுள்ள சிஷ்யர்கள் நின்றுகொண்டு முடிவில் ஸேவிப்பதும் பழக்கம். பெருமாள் ஸம்பாவனை முதல் ஆசாரிய ஸம்பாவனை முடிய ஸதஸிலுள்ளவர்கள் நின்று கொண்டிருப்பது சிலர் வழக்கம்.

## ப்ருஹஸ்பதி ஸம்பாவனை

“ப்ருஹஸ்பதே ஸவித: ... ... அநுமதந்து தேவா:” ப்ருஹஸ்பதி ஸம்பாவனா என்று சொல்லி வெற்றிலை பாக்கு தக்ஷிணை முதலியன கொடுத்து ஸேவிக்க வாத்யார் சோபனாக்ஷிதையால் அனுக்ரகம் செய்யவேண்டும்.

## வித்வத் ஸம்பாவனை

“யேஅர்வாந்....” என்கிற பஞ்சாதியையோ “அக்நேநய சுபதா ...” என்கிற பஞ்சாதியையோ சொல்லி அனைத்து வித்வான்களுக்கும் வித்வத் ஸம்பாவனை செய்யவேண்டும்.

## வைச்வதேவ (ஸம்பந்தி ப்ரதி) ஸம்பாவனை

"அதக்ருஹ மேதின மாப்நோதி ... வைச்வதேவத்வம்" என்ற ஸம்பாவனை சொல்லி ஸம்பந்தி ப்ரதி ஸம்பாவனை, வைச்வதேவ ஸம்பாவனை என்று ஸம்பந்திகளுக்கு சந்தனம், சர்க்கரை, குங்கும் கொடுத்து, அவர்களுக்காக வாங்கி வைத்துள்ள புடவை வேஷ்டியை தேங்காய் வெத்திலை, பாக்கு பழத்துடன் கொடுத்து அடுத்த விசேஷம் வரும்வரை எழுந்தருளியிருந்து பெருமாள் அமிசை செய்யவேணும் என்று ப்ரார்த்தித்துக்கொள்வதும் வழக்கம்.

## ஹாரத்தி

ஒவ்வொரு சுபகார்யமும் ஹாரத்தி எடுத்தல் என்னும் ஸம்ப்ரதாயத்துடன் முடித்து வைக்கப்படுகிறது. இதுவும் ஒருவகை த்ருஷ்டி கழித்தல் செய்கையே ஆகும்.

த்ருஷ்டி என்றால் பார்வையாகும். பார்வையிலேயே நவரச பாவங்களையும் வெளிப்படுத்த இயலும் என்பது கண்கூடு. இப்படி ஒரு பெரும்திரள் முன்னிலையில் நடந்த இந்த சுப நிகழ்ச்சியானது எப்படிப்பட்ட த்ருஷ்டிகள் பதிந்திருந்தாலும், அவை அனைத்தையும் இறுதியில் சுபத்ருஷ்டியாக மாற்றச் செய்வதற்காக இந்த மங்களஹாரத்தி ஸம்ப்ரதாயம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ப்ரஹ்மன், இந்த்ரன், யமன், வருணன், ஸோமன் ஆகிய திக்தேவதைகளை பாலிகையில் ஆவாஹனம் செய்து ஆராதிக்கும் வைபவங்களான விவாஹம் மற்றும் உபநயனங்களில் மட்டும், ஐந்துமுகம் கொண்ட தீபம் ஏற்றப்பட்டு முத்துஹாரத்தி என்று எடுக்கப்படுவது அதன் சிறப்பாகும்.

*ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து! ஸமஸ்தஸந்மங்களாநி ஸந்து!!*

❖❖❖❖❖❖❖❖❖❖